

இ NOV 1984
இ DEC 1984

# தமிழரசு


தமிழரசு
-11-1984 75 பை





சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் சிகிச்சை பெறறு வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்திக்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் (16-10-1984ல்) வருகை புரிதல்.



தோற்றம் : 19-11-1917 மறைவு : 31-10-1984

பிரதமர் படுகொலை—செய்திகள் 46, 47ஆம் பக்கங்களில்

# நலம் பெற வேண்டும் நமது முதல்வர்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சிகிச்சை பெறுவதற்காக அக்டோபர் 5-ஆம் நாள் இரவு சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

செய்தியை அறிந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் ''விரைவில் குணம் அடைய வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கிறேன்'' என்று அக்டோபர் 8-ஆம் நாளன்று தந்தியின் மூலம் செய்தி அனுப்பியிருந்தார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தொலைபேசியின்மூலம் தொடர்பு கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நலம் குறித்து விசாரித்து அறிந்ததுடன், விரைவில் குணமடைய வாழ்த்துவதாகத் தெரிவித்தார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் முதல்வர் விரைவில் குணம் அடைய வாழ்த்தி மலர்ச் செண்டு அனுப்பி வைத்தார்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சித் தலைவர்களும் முதல்வர் விரைவில் நலம் பெற வேண்டும் என வாழ்த்துத் தந்திகள் அனுப்பினர்.

''முதல்வர் அவர்களின் உடல் நிலை துரிதமாக முன்னேறி வருகிறது; நாளை, முதல்வர் அவர்களுக்குப் பல்வேறு வைத்தியப் பரிசோதனை செய்யப்படும்'' என்று அப்பல்லோ மருத்துவமனை டாக்டர் திரு பிரதாப் சி. ரெட்டி அக்டோபர் 9-ஆம் நாளன்று அறிவித்தார்.

அக்டோபர் 13-ஆம் நாளன்று மேதகு ஆளுநர் எஸ். எல். குரானா அவர்கள் தமது மனைவியாருடன் மருத்துவமனைக்குச் சென்று முதல்வரைச் சந்தித்து நலம் விசாரித்தார். மருத்துவமனைத் தலைமை டாக்டர் பிரதாப் சி.ரெட்டியிடமும் முதல்வரின் துணைவியார் அவர்களிடமும் முதல்வரின் உடல்நிலை பற்றிக் கேட்டறிந்தார்.

சென்னைச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், காஞ்சிபுரத்திற்குச்சென்று சங்கராச்சாரியார் அவர்களைச் சந்தித்து ''எனது நண்பர் தமிழக முதல்வர் எம்.ஜி ஆர். உடல் நலம் பெற அருள் செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். அவர் அருளாசி வழங்கினார்.

அக்டோபர் 15ஆம் நாளன்று தமிழகச் சட்டமன்றத்திலும் மேலவையிலும் முதல்வர் அவர்கள் விரைவில் குணம் அடைய வேண்டும் என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், இரு அவைகளும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டன.

அக்டோபர் 16-ஆம் நாளன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் தமிழக ஆளுநர் அவர்களுக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்:

''எம். ஜி. ஆர். உடல்நிலை குறித்து நான் மிகுந்த வேதனை அடைகிறேன். அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக வெளிநாட்டு நிபுணர்களை வரவழைப்பதாக இருந்தாலும் சரி, அல்லது டாக்டர்களின் ஆலோசனைப்படி அவரை அமெரிக்காவுக்கோ வேறு நாட்டுக்கோ அனுப்புவதாக இருந்தாலும் அதற்குத் தேவையான உதவி செய்யத் தயாராக இருக்கிறேன்.

''எம். ஜி. ஆர். விரைவில் குணமடைய வாழ்த்துத் தெரிவிப்பதுடன் இறைவனையும் பிரார்த்திக்கிறேன்.''

இந்தச் செய்தியை மேதகு ஆளுநரின் மனைவியார் அவர்கள் முதல்வரின் மனைவியாரிடம் நேரில் சென்று தெரிவித்தார்,

அக்டோபர் 17-ஆம் நாளன்று, தனி விமானத்தில் புறப்பட்டு பிற்பகல் 4 மணி அளவில் சென்னை வந்து சேர்ந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், அப்பல்லோ மருத்துவ மனைக்குச் சென்று முதல்வர் அவர்களைப் பார்த்தார்.

''எல்லா டாக்டர்களும் உங்களுக்குச் சிறந்த சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த நாடே நீங்கள் விரைவில் நலம் பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறது'' என்று பிரதமர் கூறினார்.

முதல்வரின் மனைவியாரிடம் முதல்வரின் உடல் நலம் குறித்து விசாரித்தார் பிரதமர். முதல்வருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகளை டாக்டர்களிடம் கேட்டறிந்தார். பின்னர், புறப்பட்டார்.



பிணிநீங்கப் பிரார்த்தனை

நேரிசை வெண்பா

மண்ணுபுகழ் எம்ஜி இராமசந்திரப்
புண்ணியன் நோய்நீங்கப் பூரணமாய — மண்ணுலகில்
வாழ அருள்புரிவாய் மாமயிலேறிவரும்
ஆழியர்க் கேலே அருள்

அன்பன்
இரா. [illegible]

அக்டோபர் 17ஆம் நாளன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

''முதல் அமைச்சரின் உடல் நிலை குறித்து யாரும் பீதி அடைய வேண்டாம். சிலர் தீக்குளித்தும் மற்றும் தங்களை மாய்த்துக் கொள்ளும் முடிவுக்கு வருவதாகத் தெரிகிறது. அருள் கூர்ந்து யாரும் இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட வேண்டாம்'' என்று அந்த அறிக்கையில் வேண்டி இருந்தார்.

அக்டோபர் 19ஆம் நாளன்று, மாண்புமிகு நிதி- அமைச்சர் தலைமையில் நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில், ''முதல்வர் விரைவில் முழுநலம் பெற்று வெளிவந்து எப்பொழுதும் போல் தலைமை ஏற்று வழி நடத்திச் செல்ல வேண்டும்'' என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனித்து வந்த துறைகளை. மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கவனிப்பார் என்றும் அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் அவரே தலைமை வகிப்பார் என்றும் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் அறிவித்துள்ளார்.

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் வானொலியில் வழங்கிய தீபாவளி வாழ்த்துச் செய்தியிலும்-பொதுமக்களுக்கு வழங்கிய ஆசிச் செய்தியிலும் 'முதல்வர் நலம் பெறப் பிரார்த்தனை செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள், 'எம்.ஜி. ஆர். பாரதத்தின் பொதுச் சொத்து, அவர் குணம் அடைய எல்லோரும் பிரார்த்தனை செய்யுங்கள்' என்று பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு என். டி. ராமராவ், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு ராமகிருஷ்ண ஹெக்டே, மேதகு கேரள ஆளுநர் திரு பா. ராமச்சந்திரன், இலங்கைத் தமிழர் தலைவர் திரு அமிர்தலிங்கம், இந்திய இராணுவத் தளபதி திரு வைத்யா, தென் பிராந்திய இராணுவத் தளபதி ஒப்ராய், கேரள அமைச்சர் திரு வயலார் மற்றும் பல பெருமக்கள் அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்று, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் உடல் நலம் குறித்து விசாரித்தறிந்தனர்.

தமிழகம் முழுவதும் பொது மக்களும், சமயத்தலைவர்களும், அரசு ஊழியர்களும், முதல்வர் நலம்பெற வேண்டும்; மீண்டும் அவர், பணிகளைத் தொடர வேண்டும்' என்று ஆலயங்களிலும் பொதுமேடைகளிலும் நாள்தோறும் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

கல் மனத்தையும் உருக்கும் திறன் உண்மையான பிரார்த்தனைக்கு உண்டு. கூட்டுப் பிரார்த்தனைக்கு வெற்றி கிடைப்பது உறுதி. அந்த நன்னாளைத் தமிழகமே-ஏன்-இந்தியத் துணைக் கண்டமே ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக அமெரிக்காவிலிருந்து (17-10-84ல்) வந்திருந்த நான்கு மருத்துவ நிபுணர்கள் கொண்ட குழுவையும், ஜப்பானிலிருந்து (20-10-84ல்) வந்த மருத்துவ நிபுணர் இருவர் கொண்ட குழுவையும் நான்காவது அட்டையில் காணலாம்.

4-வது அட்டையில்

அமெரிக்கக் குழுவில், டாக்டர் எலி.ஏ. ஃப்ரீடுமென் (குழுத்தலைவர்) மருந்தியல் துறைப் பேராசிரியர், டவுன் ஸ்டெட் மருத்துவமனை, புருக்லின், நியூயார்க், டாக்டர் டி.கே. ஸ்ரீபாதராவ் (இந்தியர்), [illegible] துறை இயக்குநர், டவுன்ஸ்டேட் [illegible], டாக்டர் கிறிஸ்தோபர் [illegible], மருந்தியல் துறைப் பேராசிரியர், வாஷிங்டன் பல்கலைக் கழகம், டாக்டர் ஜான் ஸ்டார்லின் மேயர், நரம்பியல் துறைப் பேராசிரியர், பெய்லர் மருந்தியல் கல்லூரி, ஹூஸ்டன் ஆகியோர் இடம் பெற்றனர்.

ஜப்பானியக் குழுவில் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் பேராசிரியர் [illegible], டாக்டர் நகமோரா ஆகியோர் இடம்பெற்றனர்.

## முதல்வர் நலம் பெற

# அனைத்துச் சமய வழிபாடு

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் நலிவு நீங்கி, நலம் பெற்று வாழ அனைத்துச் சமயப் பிரார்த்தனைக் கூட்டம்சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற (22-10-84) இக்கூட்டம் துவங்குமுன், மயிலை ஐக்கிய ஆலயப் பிரார்த்தனைக் குழுவினர் பக்திப் பாடல்களைப் பாடினார்கள்.

இக்கூட்டத்திற்கு வருகை தந்தோரை வரவேற்று சென்னை மாநகர முன்னாள் செரீப் டாக்டர் திரு பி. எம். ரெக்ஸ் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''எங்கணும் நிறைந்துள்ள அருட்பெருஞ்சோதியே, கருணையங் கடவுளே, இறைவனே, பேரருட் கடவுளே! இன்று தமிழக மக்கள் சாதி, சமய, கட்சி மாச்சரியங்களுக்கெல்லாம்' அப்பார்ந்பட்டு, நெஞ்சம் கசிந்து நெக்குருகி ஒரே ஒரு மனிதனுக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

''இந்துக்கள், இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்கள் எல்லாம் ஒன்றுபட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

''தமிழகத்தின முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆருக்காக எல்லோரும் பிராத்தனைசெய்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தின் முதல்வர் என்பதற்காக, அரசியல் மேதை என்பதற்காக மட்டும் பிரார்த்தனை செய்யவில்லை. நல்ல மனம் படைத்த மனிதன் என்பதற்காகவே அவருக்காகத் தமிழக மக்களெல்லாம் ஒருங்கிணைந்து பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**சட்டப் பேரவைத் தலைவர்:**

சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு க. இராசாராம் அவர்கள் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்த மதத்தினர், ஜைன மதத்தினர் எல்லோரும் ஒன்று கூடி இங்கே பிரார்த்தனை செலுத்துகிறோம்.

''உன்னை நம்பு, அதிலே நீ வெற்றி காணவில்லையானால் என்னை நம்பு என்பதைத் தான் எல்லா மதங்களும் போதிக்கின்றன. அந்த வகையில் நாம் இந்தப் பிரார்த்தனையைச் செலுத்துவதன் மூலமாகப் பொன்மனச் செம்மலாய் மக்கள் இதயத்திலே வீற்றிருக்கும் புரட்சித் தலைவர் நோய்வாய்ப்பட்டிருக்கிற இந்நேரத்தில்- ருத்துவர்கள் அரும்பாடுபட்டுப்பணியாற்றிக் கொண்டிருந்தாலும், நாம் பிரார்த்தனையைச் செலுத்துவதன் மூலமாக அவர்கள் விரைவிலே பூரண குணம் பெற்று நம்மிடையே வந்து நடமாட வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு தமிழகத்தில் மட்டுமின்றி, தமிழ்ச் சமுதாயம் வாழும் உலகத்தின் அத்தனைப் பகுதிகளிலும் இத்தகைய பிரார்த்தனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



''தமிழகத்தின் தலைசிறந்த மருத்துவர்கள், அமெரிக்க டாக்டர்கள், ஜப்பானிய டாக்டர்கள் எல்லாம் மிக நல்ல முறையிலே அவருக்குச் சிகிச்சை யளித்து வருகிறார்கள். தக்க மருந்துகளைத் தந்து அவர் விரைவில் குணம் பெறுவார் என்ற நல்ல செய்தியைச் - சொல்லிவிட்டுப் போனார்கள்.

''டாக்டர்கள் செய்ததற்கு மேலாக, இறையருளால் அவர் மிக வேகமாகக் குணம் பெற்று வருகிறார் என்பதையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

''எல்லா சமுதாயத்தார் மீதும் அவர் பற்றும் பாசமும் கொண்டு கடந்த ஏழாண்டுக் காலமாக நல்லாட்சி கண்டு வந்தவராவார். தக்காரை மதிப்பதில் அவர் தலைசிறந்தவர். நல்லதோர் வழிகாட்டியாக வாழ்ந்தவர்-வாழ்ந்து வருபவர். அப்படிப்பட்டவருக்காக நாமெல்லாம் செய்யும் பிரார்த்தனை மூலமாக அவர் மீண்டும் புத்துயிர் பெற்று நம்மிடத்திலே நடமாடி நல்ல பல பணிகளைச் செய்ய வேண்டும்.

''பொன்மனச் செம்மலாய்ப் பொலிந்திடும் புண்ணியன், தன் நலம் தகர்ந்துளான் தகவது அன்றுகாண்,கல்மனங் கரைந்திட கதறுவர் மக்களும், நன்நலம் அவர்பெறத் தொழுவோம் நாங்களே!''

**அருளப்பா:**

சென்னை -ஆர்ச் பிஷப் மறை திரு அருளப்பா அவர்கள் பேசியதாவது:

''ஒரு தனி மனிதர் நலம்பெற இத்தனை ஆயிரம் மக்கள் கூடுவது, நான் அறிந்தவரையில் இது தான் முதன்முறை என்று நினைக்கிறேன். ஆட்சியிலிருப்பவர்கள் நலம்பெற வேண்டுவது-பிரார்த்திப்பது கிறிஸ்தவர்களுக்குத் தொடக்க காலம் முதலே இருந்து வரும் கருத்தாகும்.

''சலனமில்லாத அமைதி வாழ்வு நடத்துமாறு நாம் அரசர்களுக்காகவும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம் என்று விவிலியமும் சொல்கிறது.

''இறைவா, உம்மைப்பற்றி நாம் பேசும்போதெல்லாம், எல்லாம் வல்ல இறைவன் என்று சொல்லுகிறோம். எந்த மனித சக்தியாலும் செய்ய முடியாததைச் செய்திடும் வல்லமை படைத்தவன் நீ. உன்னுடைய மக்களாகிய நாங்கள் எல்லோரும் எங்கள் இதயங்களைக் கவர்ந்த ஒருவரின் உடல் நலனுக்காக வேண்டுதல் செய்கிறோம். இந்த வேண்டுதலைக் கேட்டு, எங்கள் விண்ணப்பங்களை ஏற்று அருளக் கேட்டுக் கொள்கிறோம். எங்கள் முதல்வரை முழுமையாகக் குணப்படுத்தி எல்லாவிதத்திலும் அருள்புரிய உன்னைக் கெஞ்சி மன்றாடுகிறோம்!''

**ரத்னபாலா:**

மகாபோதி புத்த சமயத் தலைமைக் குரு திரு ரெவரண்ட் ரத்னபாலா பேசுகையில் ''பல்வேறு துன்பங்களுக்கும் வைசாலி மக்கள் ஆளானபோது, புத்த பெருமான் அவர்கள் துன்பங்கள் நீங்கிச் சுகம் காண அருள்பாலித்தார். பாதுகாத்தார். பகவான் ஆசி பெற்று நம் தமிழக முதல்வர் அவர்கள் அதிவிரைவில் சுகம் பெற்று மக்களுக்கு நிறைந்த தொண்டு புரிவாராக'' என்று குறிப்பிட்டார்.

**சகோதரர் தினகரன்:**

சகோதரர் ஜி. எஸ். தினகரன் அவர்கள் பேசும்போது.-''எல்லாக் கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் எந்த வேறுபாடுமின்றி, நம் அன்பு முதல்வர் செய்த உதவிகளை நினைத்து,அவர் நலம்பெற நன்றியுள்ள இருதயத்தோடு இறைவனைப் பிரார்த்திப்போம். இறைவனிடம் நாம் எல்லோரும் அவருடைய பிள்ளைகள் என்ற நினைவோடு சப்தமிட்டு, கண்ணீரோடு எப்படியும் எங்கள் பிரார்த்தனையைக் கேட்டே ஆகவேண்டும் என்று இங்கே பிரார்த்தனை செய்வோம்!'' என்றார்.

**சலாவுதீன்:**

இஸ்லாமிய போதகர், தலைமைக் காஜி திரு. சலாவுதீன் தமது உரையை அராபியமொழிப் பிரார்த்தனையோடு தொடங்கி உருக்கத்தோடு செய்தார்.

**அடிகளார்:**

தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேச்சு விவரம் வருமாறு:

''ஆற்றல் மிக்க அன்பால் அழுது அரற்றி இறைவனிடம் பிரார்த்திப்போமானால் நிச்சயம் பலன் கிட்டும். மனிதனுடைய இதயம் ஊமையாக இருந்தாலன்றிக் கடவுள் செவிடாக இருப்பதில்லை என்பார்கள்.

''அன்புகூர்ந்து ஆழ்மனத்தில் ஊறித் திளைத்து இறைவனைப் பிரார்த்தனை செய்யுங்கள்; இறைவா, சாகாவரம் பெற்ற தலைவா. எங்கள் தலைவனுக்கும் நீ சாகாவரம் தரவேண்டும் என்றுபிரார்த்திப்போம்.

''**பல கோடி உயிர்களைப் பாதுகாத்த பசிப்பிணி மருத்துவனைப் பாதுகாக்க - காலனைக் காலால் உதைத்த இறைவா! நீ மீண்டும் திருவடியைத் தூக்க வேண்டும் என்பது எமது பிரார்த்தனை! இன்னும் பல்லாண்டு அவர் நலமெலாம் பெற்று வாழ வேண்டுமென்று உங்கள் பிரார்த்தனையோடு எனது பிரார்த்தனையையும் இணைக்கின்றேன்.**''


—இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசினார்.

மாண்புமிகு முதல்வருக்காக நடத்தப்பட்ட இந்தப் பிரார்த்தனைக் கூட்ட முடிவில், சட்டப் பேரவைத் தலைவர் பின்வருமாறு உருக்கத்தோடு சொன்ன தீ꞉மான வாசகங்களைக் கூடியிருந்த பல்லாயிரவரும் திரும்பச் சொல்லிப் பிரார்த்தித்தனர்.

''இறைவா! எல்லையற்ற அருளுடைய ஆண்டவனே! மன்னுயிர்க்கு உற்ற துணையாகிய கடவுளே! பரம்பொருளே! நாங்களனைவரும் ஒருங்கு நின்று உன்னை மன்றாடுகின்றோம்! பிரார்த்திக்கின்றோம் - எங்கள் தலைவர், தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு வந்த நோயினை நீக்கி அருள்க! நீண்ட ஆயுளைத் தந்து அருள்க! இறைவா, அருள் செய்க!''

**—இல. இராசேந்திரன்**





## முதல்வர் நலம் பெற....
# சட்டப்பேரவை-மேலவை உறுப்பினர்கள் பிரார்த்தனை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலம் பெற்றெழச் சட்டப் பேரவை - மேலவை உறுப்பினர்கள் வழிபாடு நடத்தினர். சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள அருள்மிகு ஆலமர இயற்கை விநாயகர் ஆலயத்தில் இந்த வழிபாடு நடந்தது. கூட்டத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர் திரு டாக்டர் சமரசம் தலைமையில் தாங்கினார்.

அனைத்துக் கட்சியினரும், தாய்மார்கள், பொதுமக்கள், அனைத்துக் கல்லூரி மாணவ மாணவிகள் பலரும் இக்கூட்டத்தில் பங்கு கொண்டார்கள். அறங்காவலர் குழுத் தலைவர் திரு ஜி. கண்ணபிரான் வரவேற்புரை யாற்றினார்.

சிறப்பு வழிபாட்டுக்கு முன் டாக்டர் சமரசம் எம். எல். ஏ., பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற வகையில் செயல்பட்ட-அனாதையென இந்த நாட்டில் யாரும் இல்லை என்று சொல்லக்கூடிய விதத்தில் ஆட்சி செலுத்திய உத்தமர், பொற்காலம் கண்ட பொன்மனச் செம்மல் உடல்நலிவுற்று அப்போலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்; அவர்கள் உடல் நலம் பெற்று ஆட்சிப் பீடத்தில் எப்போதும் போல அமர்ந்து நாட்டு மக்களைக் காப்பாற்றக்கூடிய விதத்தில் மீண்டும் புதுப்பொலிவோடு செயல்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு நடக்கிறது இந்தப் பிரார்த்தனை.

''கட்சி வேறுபாடில்லாமல், சாதிமத மாறுபாடில்லாமல் நீதி வெல்லும் என்றபடி, விஞ்ஞானத்தின் எல்லைகூட மெய்ஞ்ஞானம் தான் என்பதனை எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் நலிவு நீங்கிப் பொலிவுடன் வந்து நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்பதே நம் எல்லோருடைய வழிபாடாகும்''

காந்தி-காமராஜ் தேசீய காங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன் எம். எல். ஏ. அவர்கள் இசைநிகழ்ச்சி முன்னுரையாகப் பேசியதாவது:

''ஏழிசையாய், இசைப்பயனாய், நாதமாய், நாதாந்த விந்துவாய் என்றெல்லாம் இறைவனை வாழ்த்துவார்கள். அத்தகைய இசையை எழுப்பி, இதயத்து உணர்ச்சிகளையெல்லாம் அதனோடு ஒட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பரிபூரணக் குணம் பெற்றெழ வேண்டுமென்ற கோரிக்கையை இறைவனின் பாதார விந்தங்களில் சமர்ப்பிப்பது நமது நோக்கம். எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் நமது நோக்கத்திற்குத் துணைபுரிய வேண்டுமென நாம் அனைவரும் விரும்புகின்றோம்.

''இறைவனுடைய நல்லாசியோடு விரைவிலே அவர் தொடர்ந்து ஆட்சிப் பணிக்கு வந்து, வழிகாட்டி, முதல்வராக வீற்றிருக்கும் கோலத்தை நாமெல்லாம் கண்ணாரக் காணுகின்ற நல்வாய்ப்பை இறைவன் நமக்குத் தரவேண்டும். நலிவு நீங்கித் தெளிவு பெற்று, அவர் தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் கோலாகலக் காட்சியைக் காண நம் கண்களெல்லாம் துடித்துக் கொண்டிருக்கின்றன.

''நம்முடைய பிரார்த்தனையாலே அவர் நலம் பெறுவார்.''

—இவ்வாறு அவர் பேசியபின் நவரசம் ஜி. கே. எஸ். குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திரு ஜி. கே. சுப்பிரமணியம் எம். எல். ஏ., டாக்டர் சமரசம் எம். எல். ஏ., திரு கிறிஸ்துராஜ், திரு அண்ணாதாசன், திரு கலையரசன், செல்வி மாலதி ஆகியோர் பங்கேற்றுப் பக்திப் பாடல்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலம் வேண்டி உருவாக்கப்பட்ட இசைப் பாடல்களையும் உருக்கமாகப் பாடினார்கள்.

''என்சக்திக் கிசைந்தபடி
இசைக்கின்றேன்
என்னுயிராம் தலைவரைக்
காத்தருள்வாய்
இறைவா! முருகா!..''

''கருநாக வடிவு கொண்டு
வேற் காடு அமர்ந்தவளே!
கலைமேவும் தலைவி என்று
தாம்பூலம் பெற்றவளே!
கலையுலக மன்னனையே
தமிழகத்து முதல்வனையே
கண்திறந்து பார்த்திடுவாய்
காலமெல்லாம் காத்திடுவாய்!'

''கொல்லூர் மூகாம்பிகே!
நீதான் எம் தலைவன்
நீஎங்கிருந்த போதும் உன்னை
எங்கள்கரம் வணங்கும்
எம்தலைவனுக்காக அம்மா!..''

''கண்கள் இரண்டும் இன்று
கண்ணீர் வெள்ளம் ஆனதே!
கணபதியே எங்கள்
தங்கம் தன்னைக் காத்திடு!''

''எம்தலைவன் நலம்பேணி
உலகமெல்லாம்தொழுதிடுதே!''

''தப்பறியா தேசமன்னா
அப்பாலோ சென்றஅண்ணா
எப்படிதான் இருக்கிறீங்க
தெரியலே—ஓங்க

திருமுகத்தைப் பார்ப்பதெப்போ
புரியலே!
எத்தனையோ சோதனைகள்
எத்தனையோ வேதனைகள்
அத்தனையும் தாங்கிநின்ற
தலைவனே!
எப்பதான் வருவீங்க
எதிர்பார்க்கிறோம்-நாங்க
இரவுபகல் அழுதுதொழுது
ஜெபிக்கிறோம்!..''

—என்பன போன்ற பல பாடல்கள் நவரசம் ஜி. கே. எஸ். குழுவினரால் உருக்கமாகப்பாடப்பட்டன. அந்த ஒவ்வொரு பாடலும் கூடியிருந்தோரின் நெஞ்சை உலுக்குவதாக இருந்தது.

இசை நிகழ்ச்சி முடிவில்-அருள்மிகு இயற்கை ஆலமர விநாயகருக்கு அர்ச்சனை நடைபெற்றது. வருகை தந்தோரெல்லாம் விழிநீர் பெருக உள்ளம் உருகித் தமது பிரார்த்தனையைச்செலுத்தினர்.

—பி.எல்.ஆர்.



# பிற மாநிலங்களிலும் பிரார்த்தனை

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முழுநலம் பெற வேண்டி, தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும் பல்வேறு சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஆலயங்களில் பிரார்த்தனைகள் செய்தும், சிறப்பு வழிபாடுகள் நடத்தியும் வருகிறார்கள்.

**புது தில்லியில்**

புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. தமிழ்நாடு இல்லத்தில் உள்ள ஊழியர்கள் உட்பட ஏராளமான தமிழர்கள் இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பிரார்த்தித்தனர். பிரார்த்தனைக் கூட்டத்திற்குத் தமிழக அரசின் தில்லி சிறப்பு ஆணையர் திரு பி.எஸ். சங்கரன் தலைமை தாங்கினார்.

**ஆந்திராவில்**

திருப்பதி அருள்மிகு ஏழுமலையான் ஆலயத்தில் அ.இ.அ.தி.மு.க.ஆந்திரக் கிளையின் சார்பில் விசேட அர்ச்சனை நடத்தப்பட்டன.

கபிலதீர்த்தத்திலுள்ள சிவாலயத்திலும், வேசலம்மா ஆலயத்திலும் இதேபோன்ற விசேட அர்ச்சனைகள் நடத்தப்பட்டது.

நாகலாபுரத்தில் உள்ள அருள்மிகு வேதநாராயண சுவாமி ஆலயத்திலும், அங்குள்ள மாதா கோவில், மசூதி அகியவற்றிலும் ஒரே சமயத்தில் விசேட பிரார்த்தனைகள் நடந்தன.

**கேரளத்தில்:**


தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். நலமடையவேண்டும் என்று கேரளத்திலும் வழிபாடுகள் நடைபெற்றன. திருச்சூரில் வடக்குநாதர் ஆலயத்திலுள்ள ஐயப்பன் சந்நிதிக்கு கூர்க்கஞ்சேரி பஞ்சாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் காவி உடை அணிந்து பக்திப் பாடல்களைப் பாடிய வண்ணம் கோவிலுக்கு வந்தனர். வடக்குநாதர் சந்நிதியில் பக்திப் பாடல்களைப் பாடிய வண்ணம் கோவிலுக்கு வந்து, புஷ்பாஞ்சலி செய்து நெய் விளக்கு ஏற்றினர்.

கேரள மாநிலத்திலுள்ள குருவாயூர் கோவிலில் நடத்தப்பட்ட சிறப்பு பூசைக்குப் பிறகு, பிரசாதங்களை அப்பல்லோ மருத்துவமனையில் முதல்வரின் துணைவியார் திருமதி ஜானகி அம்மையாரிடம் குருவாயூர் கோவில் நிர்வாகி திரு கே. வி. சுப்பிரமணியம் வழங்கினார்.

**கர்நாடகாவில்**

கர்நாடகத்தில் உள்ள மங்கள தேவி ஆலயத்தில் விசேட பூசை நடத்தப்பட்டது.

மங்களூர் நகர மேயர் திரு தனஞ்செயகுமார் எம். எல். ஏ. மற்றும் பலரும் இதில் கலந்து கொண்டனர். கர்நாடக மாநிலத்தில் உள்ள பல்வேறு கோயில்களில் மக்கள் விசேட பிரார்த்தனைகளைச் செய்தனர்.



**புதுவையில்**

புதுச்சேரியில் செயின்ட் அந்தோணி தேவாலயத்தில் சிறப்புப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

புதுச்சேரி மக்கள் முன்னணித் தலைவரும், முன்னாள் அ.இ.அ.தி.மு.க. முதலமைச்சருமான திரு எஸ். ராமசாமி, விரைவில் குணமடைய வேண்டுமென வாழ்த்தி தமிழ்நாடு முதலமைச்சருக்குச் செய்தி அனுப்பியுள்ளார். பாண்டிச்சேரியில் புகழ்பெற்ற மணக்குளம் விநாயகர் கோவிலில் முதல்வர் நலம் பெற பிரார்த்தனை இசை நிகழ்ச்சி நடந்தது. புதுவை மாநிலத்திலுள்ள எல்லா இசைக் கலைஞர்களும் வந்திருந்து முதல்வர் நலம் பெற இறைவனிடம் மனம் கசிந்துருகிப் பாடினார்கள்.

**உத்தரப்பிரதேசத்தில்:**

உத்தரப்பிரதேசத்தில் அயோத்தியா நகரில் உள்ள அநுமன் ஆலயத்தில் விசேடப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. அயோத்தியாவில் உள்ள தென்னிந்திய சமாஜம், இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

**இராஜஸ்தானத்தில்:**

இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் தமிழ்ச் சங்கத்தினர் கோவிந்த் மந்திரில் பிரார்த்தனை நடத்தினர். அமர் தேவி கோவிலிலும் வழிபாடு நடத்தப்பட்டது. இதில் ஏராள மானவர்கள் பங்கேற்றனர்.

**மெக்காவிலிருந்து புனிதநீர்**

மெக்காவிலிருந்து கொண்டு வந்த புனித நீர், முதல்வர் விரைவில் குணம் பெற வழங்கப்பட்டது.

**ஐ. நா. சபை இந்தியப் பிரதிநிதி**

மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். விரைவில் குணமடைய வேண்டும் என்று ஐ.நா. சபையில்உள்ள இந்தியப்பிரதிநிதி திரு என். கிருஷ்ணன் பிரார்த்தனை செய்வதாகக் கூறி மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களுக்குச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

''தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் உடல்நலம் குன்றியது அறிந்து, அதிர்ச்சியும் மிகவும் வேதனையும் அடைந்தேன். ஜனவரியில் தமிழகம் வந்தபோது நீங்கள் என்னை முதல்வரிடம்அழைத்துச் சென்றபோது, அவர் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்

ததை என்னால் மறக்கமுடியாது. அவர் விரைவில் குணமடைய என் பிரார்த்தனையை முதல்வ ரிடம் தெரியப்படுத்துங்கள்.''

**எகிப்து அதிபர்:**

மாண்புமிகு முதல்வர் விரைவில் குணம் பெற விருப்பம் தெரிவித்து எகிப்து நாட்டு அதிபர் புதுடில்லியிலுள்ள தமது தூதுவர் மூலமாகச் சட்டப்பேரவை உறுப்பினர் திரு கோ. சமரசம் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

**யாழ்ப்பாணத்தில்**

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இந்திய வமிசா வழியைச் சேர்ந்த தமிழர்கள் சுமார் 100 பேர் தொடர்ந்து இரண்டு நாளாக உண்ணாவிரதம் இருந்தனர். கைத்தடி பைரவன் ஆலயத்தில் விசேட பூசைகளும் நடத்தப்பட்டன.

இலங்கையின் வடக்கு யாழ்ப்பாண நகரில் வண்ணார்புன்னை பெருமாள் கோயிலில் பல்வேறு அரசியல் கட்சிகள், நிறுவனங்களின் கூட்டு ஆதரவில் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

அக்கூட்டுப் பிரார்த்தனையில் அனைத்து இலங்கை அண்ணா தி.மு.க., தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, யாழ்ப்பாண முனிசிபல் கவுன்சில் முதலியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி நகரத்தில் சுமார் 2000 மாணவர்கள் கந்தசாமி கோயிலுக்கு ஊர்வலமாகச் சென்று கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர்.

************************************

# சென்னை மாநகர செரீப் கூட்டிய கூட்டம்

**சே**ன்னை ராஜாஜி மண்டபத்தில் சர்வ சமய மகளிர் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று 24-10-84-ல் நடைபெற்றது. சென்னை மாநகர செரீப்திருமதி சரோஜினி வரதப்பன் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மகளிர் கலந்து கொண்டுப் பிரார்த்தனை நடத்தினர்.





இந்தக் கூட்டத்தில் சென்னையில் உள்ள 22 மகளிர் சங்கங்களைச் சேர்ந்த மகளிர், குழந்தைகள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

பகவத்கீதை, பைபிள், திருக்குர்ரான் ஆகிய வேத நூல்களில் உள்ள முக்கிய பகுதிகள் பிரார்த்தனைகளாகப் பாடப்பட்டன. பஞ்சாபிகள் சங்கத்தின் மகளிர் பிரிவினரும் இதில் கலந்து கொண்டு பிரார்த்தனைப் பாடல்களைப் பாடினர்.

பிரார்த்தனைக் கூட்டத்தில் முதலமைச்சர் விரைவில் குணமடையக் கோரும் தீர்மானத்தை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதிசீனிவாசன் அவர்கள் வாசிக்க, அது ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்களும் இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.



************************************

**த**மிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலமின்றி சென்னை 'அப்பல்லோ' மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். தமிழகத்திலுள்ள பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், திரைப்படத் துறையினர் மற்றும் எல்லா மதத்தினரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முழுநலம் பெற வேண்டி பிரார்த்தனைகள் செய்தனர் செய்து வருகின்றனர். இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும், பள்ளிவாசல்களிலும் சிறப்பு வழிபாடுகள், பிரார்த்தனைகள் நடந்த வண்ணமுள்ளன.



பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்ச்சிகளின் படங்கள் அடுத்து வரும் பக்கங்களில் இடம் பெறுகின்றன.

# முதல்வர் நலம் பெற மாநிலமெங்கும் பிரார்த்தனை



துணவு மையங்களில் பணியாற்றும் உதவியாளர்கள், ப்பாளர்கள் ஆகியோர் பேரூர் (கோவை மாவட்டம்) பட்டீஸ் ன் கோயிலில் சிறப்புப் பூசை நடத்தினர்.

கோவையில் உள்ள தண்டுமாரியம்மன் கோவிலிலும், கோணியம்மன் கோவிலிலும் சிறப்புப் பூசை நடத்துவதற்குத் திரண்டு சென்ற பொதுமக்கள்.






தஞ்சை நகரில் அண்ணா சிலையிலிருந்து பெரியகோயில் வரை இருபதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் தார் ரோட்டில் அங்கப் பிரதட்சணம் செய்து (21.10.84-ல்) வேண்டிக்கொண்டனர்.




தஞ்சை காவலர் பயிற்சித் திடலில் 21.10.84ல் நடைபெற்ற சர்வமதப் பிரார்த்தனை.



மானாமதுரை ஆனந்தவல்லியம்மன் கோயிலில் அக்டோபர் 17ஆம் நாளிலிருந்து 21ஆம் நாள் வரை லட்சார்ச்சனை நடத்தப் பெற்றது.



உதகமண்டலம் இருதய ஆண்டவர் ஆலயத்தில் 21.10.84ல், சிறப்பு வழிபாடு நடைபெற்றது.



திருவந்திபுரம் (தென் ஆர்க்காடு) தேவநாத சுவாமி கோயிலில் அரசு அலுவலர்கள் சார்பில் 20.10.84ல் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

தர்மபுரி மாவட்டம், பாலக்கோட்டிலிருந்து சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், இளைஞர் அணியினர், விவசாயிகள் ஆகியோர் 22 - 10 - '84 அன்று திருப்பதிக்குப் பாதயாத்திரை மேற்கொண்டனர்.





உதகமண்டலம் மாரியம்மன் கோயிலில் 22.10.84-ல் விசேஷ பூஜை நடத்தப்பெற்றது.




புதுக்கோட்டை இருதய ஆண்டவர் ஆலயத்தில் 21.10.84ல், சிறப்பு வழிபாடு நடைபெற்றது.



புதுக்கோட்டை நகர் மன்றத்தில் நடைபெற்ற சர்வ சமயப் பிரார்த்தனைக் கூட்டம்.




விராலிமலை முருகன் ஆலயத்திற்குப் புதுக்கோட்டையிலிருந்து 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதயாத்திரையாகச் சென்றனர் (19.10.84)



பெரியார் மாவட்டத் தலைநகரான ஈரோட்டில் 200க்கும் மேற்பட்ட மகளிர், 19.10.84 மாலையில் திருவிளக்கு பூசை நடத்தினர்.



வேலூர் ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில் 19.10.84ல் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.





இரத்னகிரி பாலமுருகன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது




குமரி மாவட்டப் பொதுமக்கள் புனிதத் தலங்களுக்குப் பாத யாத்திரை மேற்கொண்டனர் (17.10.84).



கோட்டாறு பாதல்மியா தர்கா முன்னர் உண்ணா நோன்பு மேற்கொண்ட பொதுமக்கள்.



திருச்சி மாவட்டம் திருவானைக்கோயில் அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பொதுமக்கள்.



திருவரங்கம் அரங்கநாதர் ஆலயத்தில் அகோபில மடம் ஜீயர் சுவாமிகள் சிறப்பு வழிபாடு நடத்தினார்.




பார்த்திபனூர் (இராமநாதபுரம் மாவட்டம்) பாலவிநாயகர் கோயிலில் பொதுமக்கள் வழிபாடு செய்தனர்.


பார்த்திபனூர் அரியசுவாமி கோயிலில் நடத்தப்பெற்ற சிறப்பு வழிபாடு.




மதுரை பொன்னுச்சாமி தெரு சங்கீத விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற இசைப் பிரார்த்தனை.



(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)



மதுரை தூய மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பிரார்த்தனை (17.10.84)



மருது



# ரூபாய் பத்து கட்டினால் முப்பத்தைந்தாயிரம்


மாதம் ரூ. 10 கட்டினால், ரூ. 33 ஆயிரத்து 500 பெறும் இன்சூரன்ஸ் கடன் இணைந்த ஓய்வு உதவிச்சிறப்புத் திட்டத்தை விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்காக தமிழக அரசு கொண்டு வந்துள்ளது.

விவசாய தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், பல்வேறுபட்ட தொழிலாளர்கள் ஆகியோர் பயன் அடையும் வகையில் விபத்து உதவித் திட்டம் இன்சூரன்சு கடன் இணைந்த ஓய்வு உதவி சிறப்புத் திட்டம் என்ற இரண்டு புதிய திட்டங்களை தமிழக அரசு கொண்டு வந்துள்ளது.

அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் தேதி முதல் இந்தத் திட்டங்கள் அமலுக்கு வந்துள்ளன.

தமிழ்நாட்டில் 3 கோடியே 25 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள், சிறிய மற்றும் சொற்ப நிலம் உள்ள விவசாயிகள், கைவினைஞர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். இவர்கள் வேலை செய்யும் போது விபத்தில் இறந்து விட்டால் அவரது குடும்பத்துக்கு ''விபத்து உதவி திட்டத்''தின் கீழ் அரசு ரூ. 5 ஆயிரம் வழங்கும். உடல் உறுப்புகளை இழந்தால், விபத்தின் தன்மையை பொறுத்து அவர்களுக்கு ரூ. 3 ஆயிரம் முதல் ரூ. 5 ஆயிரம் வரை அளிக்கப்படும்

அவர் இறந்து விட்டால் அவரது நியமனதாரருக்கு ரூ. 5 ஆயிரம் இன்ஷ்யூரன்சு தொகையாக இன்ஷ்யூரன்சு நிறுவனம் வழங்கும். அவர் உறுப்பினராக இருந்து எத்தனை மாதம் சந்தா செலுத்தினாரோ அந்தக் கால அளவு அடிப்படையில் ஒரு தொகையை ஓய்வு உதவி நிதியாக அரசு அளிக்கும்.



குறைந்த வருமானம் உள்ள விவசாய தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் கிராம கைவினைஞர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர், சரக்கு ஏற்றி இறக்கும் தொழிலாளர் ஆகியோருக்காக கொண்டு வரப்பட்டதுதான் இன்ஷ்யூரன்சுடன் இணைந்த ஓய்வு உதவிச் சிறப்புத் திட்டம்'

18 முதல் 58 வயதுள்ளோர் வரை இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேர மாதம் ரூ. 10 மட்டும் செலுத்தினால் போதும்.

58 வயது நிரம்பியவர் ஓய்வு பெறும் முன் பத்து ஆண்டுகள் மாதம்தோறும் ரூ. 10 வீதம் சந்தா செலுத்தி இருநதால் ரூ. 1,200-ம், 20 ஆண்டுகள் சந்தா செலுத்தி இருந்தால் ரூ. 4,300-ம், 25 ஆண்டுகள் சந்தா செலுத்தி இருந்தால் ரூ. 7,400-ம், 30 ஆண்டுகள் சந்தா செலுத்தி இருந்தால் ரூ.12 ஆயிரத்து 400-ம்,35 ஆண்டுகள் சந்தா செலுத்தி இருந்தால் ரூ. 20 ஆயிரத்து 400-ம், 40 ஆண்டுகள் சந்தா செலுத்தி இருந்தால் ரூ. 33 ஆயிரத்து 500-ம் பெறுவார்கள்.

இந்த இரண்டு திட்டங்களையும் செயல்படுத்த தனித் தாசில்தார்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்தில் இத்திட்டத்துக்காக ஒரு உதவி கலெக்டரும் ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒரு தனித் தாசில்தார் மற்றும் ஒரு தனி ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# பல மாடிக் கட்டடங்களுக்கு புதிய விதி முறைகள்

பலமாடிக் கட்டடங்கள் கட்டப்படுவது தொடர்பாக எழுந்த அனைத்து பிரச்சனைகளை தெளிவாக ஆராய்ந்து, புதிய விதிமுறைகளை தொகுத்து ஒப்புதல் அளிக்கும் பொருட்டு, சென்னையில் பல மாடிக்கட்டடங்கள் கட்டுவதற்கு, புது விதிமுறைகளை உருவாக்குவது தொடர்பாக கீழ்க் கண்ட முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன:

1. சென்னை நகரத்தில் பொதுவாக 15 மீட்டர்களுக்கு மேல் அல்லது 1 பிளஸ் 3 மாடிகளுக்கு மேல் பலமாடிக் கட்டடங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

2. இருப்பினும், நகரத்தில் சில பகுதிகளில், கட்டடங்களை பயன் படுத்தும் முறையில் பலமாடிக் கட்டடங்கள் அனுமதிக்கப்படுவதால் போக்குவரத்து பெருகும் பொழுது சாலைகளில் ஏற்படும் நெரிசல் தண்ணீர் வசதி, மின் வசதி ஆகியவைகளைக் கருத்திற் கொண்டு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (M.M.D.A.) மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வடிகால் வாரியம் (Madras Metropolitan Water Supply & Sewerage Board) இவைகளின் பரிந்துரையின் பேரில் அரசு பல மாடிக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கும்.

3. குடிநீர் வசதிகள், கழிவுநீர் குழாய்கள் மற்றும் மின்வசதிகள் குறித்து சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வடிகால் வாரியம் இவைகளால் நிர்ணயிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளையும் பலமாடிக் கட்டடம் கட்டுபவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவை தொடர்பான எல்லா செலவினங்களையும் பலமாடிக்கட்டடம் கட்டுபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. அரசால் விதிக்கப்படும் நிபந்தனைகள் ஏதும் இருக்குமானால் அவைகளை மீறாமல், ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடம் படியே கட்டடம் கட்டுவதை மாநகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வழங்கல் வாரியம் கவனித்துக் கொள்ள வேண்டும். இம்முடிவுகளுக்கேட்ப, இனி, சென்னை நகரில் பல மாடிக் கட்டடங்கள் கட்டப்படுவது மேலே குறிப்பிட்டுள்ளவாறு வரன்முறை படுத்த வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பலமாடிக் கட்டடங்கள் கட்ட அனுமதி கோரும் விண்ணப்பங்கள் அரசு அளவில் ,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையில் பரிசீலிக்கப்படும்.

தற்பொழுது ஆணைகளுக்கிணங்க மேம்பாட்டுத் திட்டவிதிகளை (Development Rules) மற்றும் பலமாடிக்கட்டட விதிகளை திருத்தி அமைக்கவும், நில பயன்முறைகளை (Multi-storeyed building Rules land use) மாற்றவும் தேவையான கருத்துக்களை அரசுக்கு அனுப்புமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

**தொகுப்பு: அ. மருதவிநாயகம்**



# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடு வளர்ப்பு


தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்ட சத்துத்திட்ட பொருளாதார வளர்ச்சி மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடு வளர்ப்பிற்காக அரசு மான்யமும் மற்றும் வங்கிக் கடனும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

இந்தச் சிறப்பு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை கோட்டத்தில் 150 அலகுகளும், அறந்தாங்கிக்கோட்டத்தில் 50 அலகுகளும் செயற்பட உள்ளத. இந்தத் திட்டத்திற்கு சமூக நலத்துறையைச் சார்ந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒரு நபருக்கு ரூ 4000 வழங்கப்படும். இத்திடடத்தின் கீழ் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திலும், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலும் ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 150 மகளிர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

மேலும், சிறப்பு மத்தியத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பிற்கான அறந்தாங்கிக் கோட்டத்தில் சிலட்டூர், கோட்டையூர் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மூலம 100 அலகுகள் செயற்பட உள்ளன் இந்தத் திட்டத்தின் கீழ் இந்து ஆதி திராவிடர்களைச் சார்ந்த 100 நபர்களுக்குத் தலா ரூ 4000 வழங்கப்படும்.மொத்தத்தில் ரூபாய் 12 இலட்சம் சிறப்புத் திட்டத்திற்கு செலவிடப்பட உள்ளது.



# பனை ஏறும் கருவி: படைத்தவர் இவர்!



பனைமரம் ஏறுவதைப் பார்த்திருக்கிறோம்.

கால்களில் கயிற்றைக் கட்டிக் கொண்டு, தத்தித் தத்தி கஷ்டப்பட்டு ஏறி வருவதற்குள் போதும் போதுமென்றாகி விடும்.

ஆனால் இன்று அந்தச் சிரமம் எல்லாம் இல்லாமல் எளிதில் பனை மரம் ஏறி இறங்குவதற்கான சாதனம் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. அதைக் கண்டு பிடித்தவர் திரு ஆர். தேவராஜ் என்னும் இளைஞர். இவர் ஒரு பி.எஸ்சி., பட்டதாரி, 29 வயதான இவர் பெரியார் மாவட்டம், கொளப்பலூர் கிராமத்தைச் சேர்ந்தவர்.

இவர் கண்டுபிடித்த இந்தக் கருவி கனம் இல்லாதது. ஆனால் உறுதி மிக்க உலோகக் குழாய்களால் உருவானது. பல முறை இது சோதனை செய்யப்பட்டு, பனை மரம் ஏறுவதற்கு ஏற்ற கருவிதான் எனக் கண்டறியப்பட்டது. எடையிலும், உருவிலும் சிறியது ஆனதும் இரு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளக்கூடியதுமான இக் கருவியை எளிதில் எடுத்துச் செல்லலாம்.

மரத்தைப் பிடிக்கும் பகுதிகள், பத்து சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, தேவையான கோணங்களுக்கு ஏற்ப மாறும்படி அமைக்கப்பட்டிருப்பதால், மரத்தின் உருவமும், பருமனும் மாறும்பொழுதும் மரத்தில் நன்கு பொருத்திக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறது. அதனால் கீழே விழும் வாய்ப்புகளோ இதனால் ஏற்படாது. இந்த நூதனக் கருவியைக் கொண்டு, மரத்தின் உச்சியில் நாலாபுறமும் சுற்றிச் சுழன்று வேலை செய்வது எளிதாகிறது. எளிதில் அதிகப்படியான மரங்களை ஏறி, அதிக லாபம் பெறுவதே இக்கருவி கண்டுபிடிப்பின் நோக்கமாகும்.



1977-ஆம் ஆண்டில் மாயவரம் பனைப் பண்ணை பனை உற்பத்தியாளர் சங்கத் தனி அலுவலர் திரு சம்பந்தம், முன்னிலையில் இக்கருவி இயக்கிக் காட்டப்பட்டது. 14-7-'84 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்களும் இக்கருவி செயல்படும் முறையைப் பார்த்துப் பாராட்டியுள்ளார்.

இந்த நவீன கருவியின் விலை எவ்வளவு தெரியுமா? 500 ரூபாய்தான்!

இதேபோல திரு தேவராஜ் கீழ்த் தாடை இயக்க வெல்டிங் கண்ணாடி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இதன் விலை ரூ. 50.


இவர் கண்டுபிடித்துள்ள இன்னொரு கருவியின் பெயர்: ஆட்டோ எலக்ட்ரிக் வெல்டிங் கிளாஸ். இது வெல்டிங் செய்யும் போது, கண்களைப் பாதுகாக்கும் தன்மையுடையது.

நவீன இயந்திரக் கலப்பை - இவரது கண்டுபிடிப்புகளில் இதுவும் ஒன்று. முற்றிலும் இரும்பினால் செய்யப்பட்ட இக்கலப்பையில் மூன்று மாறும் இடைவெளிகளுடன் கூடிய மூன்று கொழுவுகள் உள்ளன.

ஒரே நேரத்தில், விதைகள் மூன்று வரிசையாக விதைக்கப்படுவதால் வேலை விரைவில் நடக்கிறது; இதன் மூலம் விதைப்பதால், 6 ஆட்கள், 6 மாடுகள், 3 கலப்பைகள் தேவையில்லை. அதற்குப் பதிலாக ஒரு ஆள், இரு மாடுகள் இருந்தால் போதும். இதனால் செலவு மிச்சமாகிறது.

ஆட்டோ எலக்ட்ரிக் [illegible] ஆகும் இவரது கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். இவ்வாறு இவர் 40-க்கும் மேற்பட்ட பல வேறு கருவிகளைக் கண்டுபிடித்துப் [illegible] பாராட்டுதல்களைப் பெற்று வருகிறார்.

**—பி. வி. ஜி.**



# காகித அட்டை வேளாண் கழிவிலிருந்து...

கு. அரங்கசாமி,
அ. சண்முகம்,
து. அனந்தகிருஷ்ணன்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோவை-3

வாழை, சோளத்தட்டை, பருத்திமார், சூரியகாந்தித்தட்டு, கம்புத் தட்டு, பார்த்தீனியம் என்ற நச்சுச்செடி, நீர்த்தாமரை, தேங்காய் மட்டைத் தூள் போன்றவை விவசாயக் கழிவுப்பொருட்களாகும். இக் கழிவுகளைப் பயனுள்ள பொருளாக மாற்ற ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கழிவுப் பொருள் ஆதலால் இவை மலிவாகவும், எளிதாகவும் கிடைக்கக்கூடியன. இக் கழிவுகளிலிருந்து காகித அட்டைகள் தயாரிப்பு முறை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக வேளாண் பதனீடு செய்துறை உருவாக்கியுள்ளது. இதனால் ஆண்டு முழுவதும் 20 ஆட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம். நல்ல லாபமும் பெறலாம்.

இந்த மூலப் பொருட்களைக் கழிவுக் காகிதத்தின் மூலம் 3:1 என்ற விகிதக் கணக்கில் சேர்த்து நல்ல தரமுள்ள அட்டைகளாகத் தயாரிக்க முடியும். தற்பொழுது சிறிய காகிதத் தொழிற்சாலை நடத்துபவர்கள், சாக்குத் துணி, கழிவுப் பருத்திநூல், பனியன் கம்பெனிகளின் கழிவுத்துணிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி காகித அட்டைகள் தயார் செய்கின்றனர். இம்மாதிரிச் செய்வதால் மூலப்பொருளின் அதிக விலையால் உற்பத்திப்பொருளின் விலையும் அதிகரித்து விடுகின்ற சூழ்நிலை உருவாகிவிடுகின்றது. ஆகவே பண்ணையில் கிடைக்கும் வேறு எந்த உபயோகமும் இல்லாத நல்ல நார்த்தன்மை கொண்ட பொருட்களைப் பயன்படுத்தி நல்ல தரமுள்ள விலை குறைந்த காகிதப் பொருட்களைத் தயாரிக்க முடியும்.

## மூலப் பொருட்களைத் துண்டுகளாக்குதல்

காகிதக்கூழ் தயார் செய்வதற்கு முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப்பொருளாக வாழைத் தண்டு, பருத்திச்செடி, சோளத் தட்டு அல்லது வேறு ஏதாவது அதிக அளவில் கிடைக்கக்கூடிய பயிர்த் தண்டுகளைத்தட்டு வெட்டும் கருவி மூலம் சிறுசிறு துண்டுகளாக வெட்டவேண்டும். துண்டுகள் 2 முதல் 3 செ.மீ. நீளத்திற்கு மிகைப்படாமல் இருத்தல் நல்லது. வெட்டப்பட்ட துண்டுகளைக் கழுவிச்சுத்தம் செய்தபின் கொதிகலனில் போடவேண்டும்.

## கொதிகலனில் வேகவைத்தல்

சிறு துண்டுகளாக்கப்பட்ட மூலப்பொருட்களைக் கொதிகலனில் போட்டபின் அவை நன்கு மூழ்கி இருக்கும் அளவிற்குத்தண்ணீர் ஊற்ற வேண்டும். பின்பு எரிசோடா என்கின்ற உப்பை 4 சதம் அளவு சேர்த்து மூலப் பொருளை நன்கு கொதிக்க வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் எளிதில் கரையக் கூடிய மாவுப் பொருட்கள் கரைந்தவுடன் நார்ப் பொருள்கள் அப்படியே இருக்கும். 2 விருந்து 3 மணி நேரம் இவ்வாறு கொதிகலனில் வெந்தபிறகு தண்ணீரை வடிகட்டி வேகவைத்த தண்டுகளைப் பிரித்து விடவேண்டும்.



## துண்டுகளை அரைத்தல்

வேகவைத்த தண்டுகளைக் குளிர்ந்த நீரில் நன்கு கழுவிவிட வேண்டும். பின் அதை அரைக்கும் எந்திரத்தில் போடவேண்டும். அரைக்கும் எந்திரத்தில் தேவையான அளவு நீர் சேர்த்து 1½ மணி நேரம் நன்கு அரைக்க வேண்டும். பின்பு அரைத்த மரக் கூழில் 3ல் ஒருபங்கு கழிவுக் காகிதம் சேர்த்து மேலும் 1¼ மணி நேரம் நன்றாக அரைக்கவேண்டும். பின் அந்தக் கூழில் சீனக்களி மண் 5 சதம், ரோசின் என்ற பசைப்பொருள் 1 சதம், நீலம் 0.05 சதம், படிகாரம் 3 சதம் போன்ற இரசாயனப்பொருட்களைக் கலந்து மேலும் ½ மணி நேரத்துக்கு அரைக்க வேண்டும். பின்பு இக்கூழை பிளீச்சிங் தூள் கொண்டு சுத்தம் செய்யவேண்டும். பிளீச்சிங் தேவையில்லாத காகிதப்பொருட்களுக்கு வெறும் தண்ணீர்விட்டுக் கழுவினால் போதுமானது.

## வார்ப்பிடுதல்

காகிதம் அல்லது காகித அட்டைகள் தயார் செய்ய ஆட்டோ வாட் என்ற வார்ப்பு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. தேவையான அளவு அரைக்கப்பட்ட காகிதக்கூழை எடுத்து வார்ப்பிடும் அச்சில் இடவேண்டும். தயாரிக்கப்போகும் காகித அட்டையின் அல்லது காகிதத்தின் கனத்தைப் பொறுத்து, காகிதக் கூழை அளவோடு அச்சில் ஊற்ற வேண்டும். பின் வார்ப்பிடும் அச்சானது தண்ணீரில் மூழ்குமாறு செய்து, காகிதக்கூழைச் சீராகப் பரப்ப வேண்டும். பின் அச்சை வெளியில் அடுக்கும் பொழுது அச்சில் உள்ள சல்லடைத் துவாரத்தின் வழியாகத் தண்ணீர் கசிந்து காகிதக்கூழ் மட்டும் அட்டை வடிவில் தங்கிவிடும்.



பின்பு, ஈரத்தோடு இருக்கும் இந்தக் காகிதக்கூழை மெல்லிய துணி போர்த்தி அப்படியே அச்சைவிட்டு எளிதாக சமமான மரப்பலகையின் மேல் கிடத்தி விடவேண்டும்.

## நீர் பிழிதல்

இவ்வாறு வார்க்கப்பட்ட ஈரக் காகித அட்டையைத்திரவ அழுத்தக் கருவியின் உதவியால் அழுத்தும் பொழுது, அட்டையில் உள்ள அதிகப்படியான நீர் பிழிந்தெடுக்கப்படுகிறது. இந்தத் திரவ அழுத்தக் கருவியில் 15 லிருந்து 20 வார்ப்பிட்ட அட்டைகளை ஒரே சமயத்தில் வைத்து நீரைப் பிழியலாம்.

## உலர வைத்தல்

நீர் பிழியப்பட்ட காகித அட்டைகளைப் போர்த்தப்பட்ட துணிகளோடு அப்படியே வெயிலில் உலரவைக்கவேண்டும். இந்த அட்டைகள் காய்ந்து ஈரம் குறைந்தவுடன் (சுமார் 10 சதம் ஈரப்பசை) மேலே ஒட்டியிருக்கும் துணிகளைப் பிரித்து எடுத்துவிட வேண்டும். இதனை வீட்டில் பெண்கள் வத்தல் வடாம் போன்றவற்றைத் துணியில் பிழிந்து காய வைத்து எடுப்பதற்கு ஒப்பிடலாம். காகித அட்டைகளை அதிக அளவு ஈரப்பசை இருக்கும்பொழுது துணியிலிருந்து பிரித்தால் அட்டை கிழிந்து விட வாய்ப்புள்ளது. ஆகவே அளவான ஈரப்பதத்தில் காகித அட்டையைத் துணியிலிருந்து பிரித்தபின் நன்கு உலரவைத்துக்கொள்ளவேண்டும்.



## சுருக்கம் நீக்கி மெருகிடுதல்

வெயிலில் நன்கு உலர்ந்த காகித அட்டைகளில் நிறைய வளைவுகளும் சுருக்கங்களும் இருக்கும். இவைகளைப் போக்க காகித அட்டைகளை இரண்டு பளபளப்பான இரும்புத் தகடுகளுக்கு இடையில் வைத்து கனமான இரும்பு உருளைகளின் வழியாகச் செலுத்தவேண்டும். இவ்வாறு செய்வதால் சுருக்கம் நீங்கி அட்டைகள் நன்கு மெருகேற்றப்பட்டு வெளியே தள்ளப்படுகின்றன. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை செய்தால் நன்கு மெருகேற்றப்பட்ட அட்டைகள் கிடைக்கும். கிடைத்த அட்டைகளை வெட்டும் கருவியின் உதவி கொண்டு, ஓரங்களை வெட்டி, தேவையான அளவிற்குச் செய்து கொள்ளலாம்.

## காகிதப் பொருட்கள் – இவற்றின் பயன்கள்

தேவையான அட்டை கிடைத்த உடன் அவற்றை மடித்து, இரும்புக் கம்பிகள் பொருத்தி கோப்புகளாக மாற்றலாம். இந்த அட்டைகளை மெலிதாகக் காகித அளவில் செய்தால் அதிலிருந்து அலுவலகத்திற்கு வேண்டிய அஞ்சல் உறைகள் செய்யலாம். சற்று கனமான அட்டைகளைக் கொண்டு, அலுவலகத்தில் அலுவலர்கள் எழுதுவதற்குப் பயன்படுத்தத் தாங்கும் அட்டைகளாகச் செய்யலாம். கனமான காகித அட்டைகளுக்கு 'வார்னிஷ்' பூசி, பின்பு, வண்ணம் பூசி அலங்காரக் கூரைகளாகவும் தடுப்புச் சுவர்களாகவும் கூட இவற்றைப் பயன்படுத்தலாம்.


# கோவை மாவட்டத்தில் கொய்த மலர்கள்

நா. ஆதிமூலம் இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்
கோயம்புத்தூர்.

**கோ**வை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் ரூ. 168 இலட்சம் மான்யம் வழங்கி 12,600 குடும்பங்கள் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.


**சுயவேலை வாய்ப்புப் பயிற்சி:**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழுகின்ற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அக்டோபர் திங்களுக்குள் அளிக்கப்பட இருக்கிறது. நடப்பு ஆண்டில் ஏறத்தாழ 678 பேருக்குச் சுயவேலை வாய்ப்புப்பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டு இருக்கிறது.



**வேளாண்மைப்பெருக்குத் திட்டப் பணிகள்:**

கோவை மாவட்டத்திலுள்ள 20ஊராட்சி ஒன்றியங்களில் வேளாண்மைப் பெருக்கத் திட்டப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகள் ரூ. 78 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட இருக்கின்றன. ரூ. 22இலட்சம் இதுகாறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 4,000 விவசாயக்குடும்பங்கள் பயனடையும்.





**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்:**

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட்ட 1.112 வேலைகள், புதிதாகத் துவக்கப்பட்டிருக்கிற 583 வேலைகள் ஆகமொத்தம் 1,695 வேலைகள் ரூ. 223 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

**எரிசாணவாயு அடுப்பு:**

எரிசாண வாயு அடுப்பு அமைக்கின்ற திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 1,500 அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இதுகாறும் 661 அடுப்புகள் அமைக்க முடிக்கப்பட்டு இருக்கின்றது. மேலும் 236 அடுப்புகள் முடியும் தறுவாயில் உள்ளது.

கோவை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ரூ 685 இலடசம் சிறுசேமிப்பு வசூல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்படடிருக்கிறது. இதுகாறும் ரூ. 211 இலட்சம் சிறுசேமிப்பு வசூலாகியிருக்கிறது.



**குடும்பநலம்:**

நடப்பு ஆண்டில் கோவை மாவட்டத்தில் 39,800 பேருக்குக் குடும்பநல நிரந்தர அறுவைச் சிகிச்சை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுகாறும் 10,405 பேருக்கு குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது.

**கிராமப்புறங்களில் கழிப்பிடங்கள்:**

கோவை மாவட்டத்தில் 428 பொதுக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து இதுகாறும் 428 பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பொது மக்களின் உபயோகத்திற்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன

**மாவட்டத் தொழில் மையத்தின் பணிகள்:**

மாவட்டத் தொழில் மையம் 1.4.84 முதல் 31.7.84 வரை 2,326 பேருக்கு வேலை வாய்ப்பை, புதியதாக உருவாக்கிக்கொடுத்துள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் வளர்ச்சிப் பணிகள்:**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின்மூலம் கல்வி உதவித் தொகை வழங்க ரூ.35,57,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

பல்லடம் வட்டம் கண்ணம்பாளையம் கிராமத்தில் 2.70 ஏக்கர் நிலம் ரூ. 32 ஆயிரத்திற்கு ஆர்ஜிதம்செய்யப்பட்டு 47 பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குஇலவசமாக வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட இருக்கின்றன.





**அனாதைக் குழந்தைகள் இல்லங்கள்:**

கோவை மாவட்டத்தில்ஏறத்தாழ 3,559 குழந்தைகள் அனாதைகளாக இருக்கிறார்கள். இவர்களுக்கு அனாதை இல்லங்கள்21ஊராட்சி ஒன்றியங்களில் துவக்கப்பட உள்ளன.



**வனத்துறையின். வளர்ச்சிப் பணிகள்:**

பொள்ளாச்சி வனக்கோட்டத்தில் 25 எக்டேர் பரப்பிலும், கோயம்புத்தூர் வனக் கோட்டத்தில் 120 எக்டேர்பரப்பிலும், காகிதக்கூழ்மரங்கள் பயிரிடப்பட்டு இருக்கின்றன. இதற்காக ரூ. 1,80,000 செலவிடப்பட இருக்கிறது.


பொள்ளாச்சி வனக்கோட்டத்தில் 50 இலட்சம் எக்டேர் பரப்பிலும், கோவை வனக் கோட்டத்தில் 50 எக்டேர் பரப்பிலும் சந்தன மரங்கள் வளர்க்கப்பட இருக்கின்றன.

**கைத்தறித்துறையின் மூலம் வளர்ச்சிப் பணிகள்:**

கோவை சரகத்தில் 1984 சூலை திங்களில் 24,226 நெசவாளர்கள் கூட்டுறவுத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டு இருக்கிறார்கள். நெசவாளர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 4,200 உறுப்பினர்கள் சேர்த்து இருக்கிறார்கள்.

**புதிய சத்துணவு மையங்கள்:**

கோவை மாவட்டத்தில் செப்டம்பர் 15 முதல் 10ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவ, மாணவியர்க்கும் சத்துணவு அளிக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் 171 உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளும், 64 நடுநிலைப் பள்ளிகளும் ஆக மொத்தம் 235 பள்ளிகளில் புதிய சத்துணவு மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 61.826 மாணவர்கள் பயனடைவார்கள்.




**எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் வெற்றி பெற இயலாதவர்களுக்கு தனிப்பயிற்சி:**

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றிபெறத் தவறிய மாணவ, மாணவிகளுக்குத் தனிப் பயிற்சி நடத்துவதற்காக கோவை மாவட்டத்தில் 45 மையங்கள் தேர்வு செய்யப்பட்டு 1.8.1984 முதல் பயிற்சி நடைபெற்று வருகிறது.

**புதிய 20 அம்சத் திட்டப் பணிகள்:**

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் 6,477 எக்டேர் பரப்பிற்குப் புதிதாகப் பாசன வசதி செய்துதர இலக்குநிர்ணயிக்கப்பட்டு 1787.8 எக்டேர் பரப்பிற்குப் பாசனவசதி செய்துதரப் பட்டு இருக்கிறது.



**உடுமலை வட்டம் கடத்தூரில் வணிகர்களின் கல்வெட்டு கண்டுபிடிப்பு:**

உடுமலை வட்டம் கடத்தூரில் எண்ணூறு ஆண்டுகட்கு முன் நடப்பட்ட வீரபட்டணக் கல் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஒரு பக்கம் கல்வெட்டும், மற்றொரு பக்கத்தில் வணிகர்களின் சின்னங்கள் (சாமரம், குத்துவிளக்கு, அரிவாள், கத்தி, மழு, பாசம், அங்குசம், கலப்பை) உள்ளன. இது போன்ற ஏறி வீரப் பட்டணம் கோவை மாவட்டத்தில் இது வரை மூன்று கண்டுபிடுக்கப்பட்டுள்ளன. ஆனைமலை, பட்டணம் (பொள்ளாச்சி வட்டம்) போன்றவைகள் ஏற்கெனவே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.



**வட்டெழுத்துக்கள் கண்டுபிடிப்பு:**

வெள்ளலூரில் இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் ஒன்று கோதண்டன் வீரநாராயணன் கல் வெட்டு இந்த மன்னர் சேரவம்சத்தைச் சார்ந்தவன். இந்தக் கல்வெட்டுக்கள் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட தானத்தைப் பற்றியது. வெள்ளலூரில் இந்தவம்சத்தினரின் கல்வெட்டு மூன்று கிடைத்துள்ளன. ரோமானியர் காசுகள் வெள்ளலூரில் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று. ரோமானியர்கள் வெள்ளலூரில் வந்து வாணிகம் செய்து சென்றுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

**குடிமப்பொருள்:**

கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம், கிடங்குகளில் 6,485 டன்கள் நெல்லும் 28,377 டன்கள் அரிசியும் கையிருப்பில் உள்ளன. இது அரிசிக் கணக்கில் மொத்தம் 32,700 டன்கள் ஆகும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்பக் கார்டுதாரர்களுக்கு தற்போதைய இருப்பு 6½ மாதங்களுக்கு விநியோகம் செய்யப் போதுமானதாக உள்ளது.

# இராசராசன்


## காந்தளூர்ச் சாலையில் கலமறுத்ததன் பொருள்...

நடன. காசிநாதன்
இயக்குநர் (பொறுப்பு)
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

**சோ**ழப் பெருமன்னன் முதலாம் இராசராசன் கி.பி. 985இல் ஆட்சிக் கட்டிலேறியுள்ளான். அவனது முதல் வெற்றியாகச் 'சாலை கலமறுத்த'' செய்தியைத்தான் கல்வெட்டுக்களில் காண முடிகிறது. இராசராசனின் நான்காம் ஆட்சி ஆண்டு முதல் இவ்வெற்றிச் செய்தியை அவனது மெய்க்கீர்த்தியாகக் கல்வெட்டுகளில் பொறிப்பதில் பெருமையடைந்திருக்கின்றான்.

இச்செய்தி கல்வெட்டுக்களில்,

''காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி'' என்றும்



''சாலை கலமறுத்தருளி'' என்றும் எழுதப்பட்டுள்ளது.

முதலாம் இராஜாதிராஜனும் இதே போன்றதொரு வெற்றியைத் தமக்குக் கூறிக் கொள்கிறான். முதலாம் குலோத்துங்கனும் தமது காந்தளூர்ச் சாலை வெற்றியைப் பெரிதாக மதித்திருக்கிறான் என்பது விக்ரம சோழன் உலாவாலும், குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழினாலும் உணர முடிகிறது.

'இருகாற் சாலைக் கலமறுத்த தண்டினான்' என்று விக்ரம சோழன் உலாவும்,

'வேலை கொண்டு விழிஞ மழித்ததும்
சாலைகொண்டதும் தண்டுகொண்டல்லவோ''

என்று கலிங்கத்துப் பரணியும்

'தண்டில் விழிஞத் தெயில் தகர்த்துடைய முத்துச் சலாப முழுதும் பொறையன் சாலையொடு கொண்டாய்' என்று குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழும் பேசுகின்றன.

பாண்டிய மன்னன் ஜடாவர்மன் பராந்தக பாண்டியன் கூட, தாம் காந்தளூர்ச் சாலையை வெற்றி கொண்டதைக் கூறிக் கொள்கிறான்.


இவ்வளவு சிறப்புடன் பேசப்பெறும் அக்காந்தளூர்ச் சாலை எத்தன்மையது என்பதில் பல வேறுபாடான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. டாக்டர் ஹுல்ஷும், வெங்கையாவும் காந்தளூர்ச் சாலையில் உள்ள பல மரக்கலங்களை இராசராசன் அழித்தான் எனப் பொருள் கொண்டனர்:



பெரும் வரலாற்றறிஞர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், 'காந்தளூர்ச் சாலையின் ஓரத்தில் கப்பற்படைகளை வென்றதாக இது தெரிவிக்கிறது' என்று கூறியுள்ளார். தேசிக விநாயகம் பிள்ளை 'சாலையில் ஒவ்வொருவருக்கும் உணவு அளிக்க வேண்டிய முறை இவனால் வரையறுக்கப்பட்டது' என்று கருதினார். டி. ஏ. கோபிநாதராவ், 'சாலையில் சோறு அட்டுவதை அரசன் நிறுத்திய செய்தியினையே இது குறிக்கிறது' என்று தெரிவித்தார். மு. இராகவையங்கார் 'மலை நாட்டுச் சாசனங்களிற் கஉறக்கண்டீச்சுரம், கலைக் குளங்களில் கலமற்ற என்று கூறப்படும் செய்தியை யொத்ததே காந்தளூர்ச் சாலையில் ராசராசனும் முதற் குலோத்துங்கனும் நடத்திய கலமறுத்த செயலென்பதும்; கலமற்றயாண்டென்பது, பெருங்கலகங்கள்.

''கன்னப்போர் செய்தருளிக் காந்தளூர்ச் சாலைக்
கலமறுத்து மன்னுபுகழ் மறையவர்தம்
மணியம்பலத்துள் இனிதிருந்து
ஆயிரத்தெண்மர்''

நீங்கிய காலத்தைக் குறிப்பது என்பதுவே பொருந்துகின்றன' என்று தெரிவித்துள்ளார். அண்மையில் இக்கட்டுரையாசிரியரால் ஒரு



கருத்துக் கூறப்பட்டது. அதாவது, 'கலமறுத்து என்பதை கலம் + அறுத்து எனக்கொண்டு சாலைக்கு எவ்வளவு கலம் நெல் அனுப்புதல் வேண்டும் என்றும், சாலையில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் எவ்வளவு கலம் தம் பங்காகப்பெறுதல் வேண்டும் எனவும் இராசராசன் வரையறை செய்ததையே இது குறிக்கிறது' என்பதாகும்.

காந்தளூர் எங்குள்ளது என்பதில் யாருக்கும் தற்போது ஐயம் இல்லை. ஏனெனில் ''சேரலன் வேலை கெழு காந்தளூர்ச் சாலை'' என்று முதலாம் இராஜாதிராஜனின் கல்வெட்டுக் கூறுவதால் ஆகும். மேலும் டி.ஏ. கோபிநாதராவ் அவர்கள் காந்தளூர்ச் சாலையைத் திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாக விளங்கும் வலியசாலை என்று தீர்மானித்துள்ளார். சாலை என்பது கல்விச் சாலையினையே குறிக்கிறது என்பதும், ஊர்திகள் செல்லுவதற்கு ஏதுவாக அமைந்த பெருவழியைக் குறிக்கவில்லை என்பதும் பார்த்திபசேகரபுரச் செப்பேடு கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகு அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகத் தற்போது நிலவுகிறது.

ஆனால், 'கலமறுத்து' என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்வது என்பதில்தான் தற்போது கருத்து வேறுபாடு உள்ளது. இதற்கு இன்னமும் எல்லாரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு பொருள் கூறப்படவில்லை. கல்வெட்டறிஞர் டி. என். சுப்பிரமணியம், 'தென்னிந்திய கோயிற் சாசனங்கள்' என்னும் நூலில் தஞ்சாவூர் மாவட்டம் கோயில் தேவராயன்பேட்டையிலிருந்து கிடைத்துள்ள ஒரு கல்வெட்டிலிருந்து கீழ்க்காணும் செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்.

''ஸம்வத்சரம் ப்ரதி மார்கழி சந்தராதித்தவற் தேவர் தீர்த்தமாடின திருவாதிரை நான்று ஜைமினிகள் சாம வேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கீழ்பாதத்து ஒரு துருவும் கரைப் பறிச்சுப் பட்டம் கடத்துப் பிழையாமே சொன்னார் ஒருகாற் கொண்டாரல்லாதாரை மெய்காட்டுத்தீட்டினாரெல்லாரும் தம்மில் அஞ்சு புரியிலுஞ் சொல்லிக் கலமறுத்து நல்லாரானாரொருவற்கு விருத்தியான இக்காசுமூன்றும் இதேவரே குடுப்பாராக ஒவ்வொரு வருஷமும் மார்கழி மாதம் திருவாதிரை நாள் இரவு திருச்சேலூர் மகாதேவர் முன்பு ''ஜைமினிகள் சாம வேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கீழ்ப் பாதத்து ஒரு துருவும் கரைப் பறிக்கப்பட்டம் கடத்துப் பிழையாமே சொன்னார்க்குப் பரிசாக ஒருவன் இருபது பொன் அளித்ததைத் தெரிவிக்கிறது. அந்த இருபது காசு முதலுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் பலிசை மூன்று காசையும் ஒருகாற் கொண்டார் அல்லாதாரை மெய்க்காட்டுத் தீட்டினார் எல்லாரும் தம்மில் அஞ்சுபுரியிலுஞ் சொல்லிக் கலமறுத்து நல்லாரானார் ஒருவற்கு எம்பெருமானே அருள வேண்டும் என்பது ஏற்பாடு'' என்று கூறிவிட்டு, ''இவ்விடத்திலே கலமறுத்து என்ற சொல்லுக்குச் சாசனத்தால் அல்லது ஓலையால் நிர்ணயிக்கப் பெற்ற என்ற பொருளே கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கிறார்.

மேலும் ''இதைக் கொண்டு, இராசராசனும் காந்தளூரில் இருந்த பாடசாலையிலே நடந்த சாஸ்திரப் போட்டியிலே ஈடுபட்டுத் தன் திறமையை வெளிப்படுத்தி வெற்றி

கொண்டு பரிசையும் அடைந்தான் என்று பொருள் கொள்ளத் தோன்றுவது சகஜமே'' என்று கூறிவிட்டு, இறுதியில், ''ஆயினும் கல்வெட்டுக்களிலே காந்தளூரில் சோழர்கள் படை வலிமைகொண்டே வெற்றியடைந்தனர் என்று காணப்படுவதை நாம் முன்னரே எடுத்துக் காட்டியிருக்கிறோம். அதனால் அவ்விதம் பொருள் கொள்வது தவறாகும்'' என்று கருதியுள்ளார்.

முதலாம் இராசராசனின் ஆயிரமாவது முடிசூட்டு ஆண்டு விழாவினையொட்டி இராசராசன் காலத்துக் கல்வெட்டுக்களையெல்லாம் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற அடிப்படையில் கல்வெட்டுக்களைச் சேகரித்தபோது திருச்சி மாவட்டம் காமரசவல்லியிலிருந்து படியெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டும் நகல் எடுக்கப்பட்டது. இக்கல்வெட்டு இராசராசனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுப் படி, மத்திய அரசு கல்வெட்டுத் துறையின் பாதுகாப்பில் இருந்து வருகிறது. இக்கல்வெட்டில் கீழ்வரும் வாசகம் காணப்படுகிறது.

''ஸம்வத்சரம் ப்ரதி சந்தராதித்தவற் இத்தேவர் தீர்த்தமாடின மார்கழி திருவாதிரை ஞான்று பகல் இத்தேவர் தீர்த்தமாட எழுந்தருளுவதற்கு முன்பு இதின் முன்னை இரவு தலவகார சாமவேதிகள் வந்தாரை எல்லாம் கீழ்பாதத் தொரு துருவு மேல் பாதத்தொரு துருவும் இப்படித்தான் ஒருக்காலும் கொண்டிலாதார்கேய் கரையிட்டு பிழையாமல் ஒரே துருவும் சொன்னான் மெக்காட்டுத் தீட்டில் மெக்காட்டினார் எல்லாம் இரண்டு பாதத்தும் ஒத்துச் சொல்லி **கலமறுத்து** ஒருவாரக் கலமறுத்திச் சொல்லினவல்லாரானார் கையிலே இப்பொன்னின் கழஞ்சே காலும் இடுவிதாச்சு'' என்பதாகும் அவ்வாசகம்.

மார்கழி மாதத்தில் தேவர் நீராடுகிற திருவாதிரை நாளில் தேவர் எழுந்தருளுவதற்கு முன்பு, முன்னாள் இரவு வந்த தலவகார ஸாமவேதிகள் எல்லாரையும் கீழ்பாதத் தொரு துருவும் மேல் பாதத்தொரு துருவும் பிழையாமல் சொல்ல வேண்டும் என்று ஆணையிட்டு, அவ்வாறு பிழையாமல் சொன்னாரைத் தேர்ந்தெடுத்தவர்கள், தாமும் இரண்டு பாதத்தும் ஒத்துச் சொல்லி, அவர்களைப் **பிழை நீக்கி (கலமறுத்து)** சொல்லச் செய்து நன்கு சொன்னவர் கையிலே பொன் கழஞ்சே கால் அளிக்கப்பெற்றது என்று பொருள் கொள்ளலாம். இப்பொருள் சரியெனக் கொண்டால் '**கலமறுத்து**' என்பதற்கு **பிழைநீக்கி** என்று பொருள்படுகிறது. இதன்படிப் பார்த்தால் காந்தளூர்ச் சாலையில் ஸாமவேதம் பயில வந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் மன்னன் இராசராசனும் ஈடுபட்டான் என்றும், அவன் ஸாமவேதம் அறிந்தவனாக இருந்திருத்தல் வேண்டும் என்றும் கருதலாம்.

இக்கருத்துக்குப் பார்த்திபசேகரபுரச் செப்பேடும் துணை நிற்பதாகத் தெரிகிறது. இச்செப்பேட்டில்,



இராசராசனின் 30 ஆண்டு ஆட்சிக் காலம்- சோழர் ஆட்சியை விரிவுற்ற மிகப் பெரிய பேரரசாகத் திகழவைத்த காலமாகும். நிர்வாகத் திறன், போர்ப்பயிற்சி, கலை, சமயம், இலக்கியம் ஆகிய பல்துறை அறிவும் வாய்க்கப் பெற்றவன்.

—கே.ஏ நீலகண்ட சாஸ்திரி

சோழ இராச்சியத்தின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தது சோழர் குடியில் தோன்றிய அரசர்களின் ஆற்றலேயாம். அத்தகைய ஆற்றலமைந்த சோழ மன்னர்களுக்குள் முதல் இராசராசன் தலைமை வாய்ந்தவன்.

—தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்

சோழ மன்னர்களில் முதன் முதலில் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் கடல் கடந்த நாடுகளைப் பிடித்து ஆட்சிப் பரப்பை விரிவு படுத்தும் கொள்கையுடையவராய் இருந்தனர். இந்தியாவின் கீழைக் கடல் பகுதிகளையும் கங்கையையும் வெற்றி பெற்று, இந்தியாவில் மிகப் புகழ் மிக்க பேரரசுகளுள் சோழப் பேரரசும் ஒன்று என்று கருதும்படிச் செய்தனர்.

—ஏ.எல். பாஷம்

இராசராசனின் துணிச்சல் மிக்க செயல்கள், கடவுளின் தூண்டுதலின் பேரில்தான் நடைபெற்றன எனக்கொள்ள இடமிருக்கிறது. ஏனெனில் தஞ்சையில் மிகப் பெரிய கோயிலைக்கட்டி அதற்குத் தன்னையும், தன்னுடைமைகளையும் அர்ப்பணித்துள்ளான்.

—மார்க் வெளியீட்டின் 'தமிழ் நாட்டின் அதிசயங்கள்' என்ற நூலில்

* இராசராசனின் புகழுக்கு, அவனுடைய வீரச் செயல்கள் மட்டும் காரணமல்ல; அவன் வளர்த்த கலைகளும் நிர்வாகத் திறனும் காரணங்களாகும்.

—டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி — ஐயங்கார்

பிற கடவுளர்களுக்குக் கொடுக்காத முக்கியத்துவத்தை அசுரர்களுடன் போரிட்டு முப்புரம் அழித்த திரிபுராந்தகனுக்குக் கொடுத்து, சிற்பங்களிலும் ஓவியங்களிலும் வடித்துள்ளான். இதற்குக் காரணம் பல நாடுகளை வெற்றி பெற்று மிகப் பெரிய வீரனாக விளங்கியதேயாகும்''.

மேரிஸ் பஸ்லாக்ளி, சிவராம மூர்த்தி

இராசராசனின் போர் வெற்றியும், செறிப்படுத்தப்பட்ட பேரரசும், கலை மற்றும் இலக்கியப் பற்றும், சமயப் பொறையும் அவனைக் குறிப்பிடத்தக்க மன்னனாகத் திகழச் செய்தது.

—சி. சிவராமமூர்த்தி

முதல் இராசராசன், இராசேந்திரன், ஆகிய இவர்களின் ஐம்பது ஆண்டுக்கால ஆட்சி, தமிழ் மன்னர் அனைவரையும் அடிபணிந்து ஆண்ட காலமாகும்.

—வின்செனட் ஏ. ஸ்மித்

இவன் பல்லாண்டுகள் இளவரசராக அமர்ந்து, ஆட்சிப் பொறுப்புகள் பலவற்றை ஏற்று நடத்தி, அரசியலில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றிருந்தான். சோழப் பரம்பரையின் பெயரையும் புகழையும் பன்மடங்கு உயர்த்தி விட்டவன் இராசராசனே. இராட்டிரகூடரின் படையெடுப்புக்களினால் திறனிழந்து, வளமிழந்து சுருங்கிவிட்ட சோழநாடு மீண்டும் விரிவுற்று மிகப் பெரியதொரு பேரரசாக வரலாற்றில் திகழவைத்த பெருமை முதலாம் இராசராசனையே சாரும்

—டாக்டர் கே. கே. பிள்ளை

சோழப் பேரரசின் பெயரையும் பெருமையையும், நிலைநிறுத்தியவன் முதல் இராசராசன். இவன் அலெக்சாந்தர், ஜூலியட் சீசர், அனிபால் போன்ற மாவீரர்களுடன் ஒப்பிடத் தக்க சிறந்த வீரன்.

—எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்


''திரைராஜ்ய வியவஹாரத்துக்கு வேண்டும்
ஒத்துடையான் இது ஸத்யம்
என்று ஐவர் சுட்டரைக்கொண்டு பஞ்சக்கஞ்
செய்தான் புகழ் பெறுவான்''

என்ற வாக்கியம் காணப்படுகிறது. மூன்று ராஜ்ய விவகாரத்துக்கு வேண்டும் ஒத்துடையான் (அறிவுடையான்) இது சரி என்று ஐந்து சுட்டர்கள் துணையோடு கூறி அவனால் தேர்வு பெற்றவன் புகழ்பெறுவான் என்று பொருள்படுகிறது. இதிலிருந்து மூன்று ராஜ்ய (சேர, சோழ, பாண்டிய நாட்டு) விவஹாரத்துக்கு வேண்டும் புலமையுடையாரை அவர்கள் தகுதியுடையவர்கள் என்று நிர்ணயிக்கும் ஒருவர் பாத்திபசேகரபுரச் சாலையில் இருந்தார் என்பது தெரியவருகிறது. அதேபோன்ற பணியைத்தான் முதலாம் இராசராசனும் காந்தளூர்ச் சாலையில் செய்திருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம். ஆதலால்தான் தாம் அரசுப் பொறுப்பேற்ற நான்காம் ஆண்டிலேயே காந்தளூர்ச் சாலைக்குச் சென்றிருக்கிறான். அங்கு சென்றவன் தம் அரசாட்சிக்குத் தேவைப்படும் சிலரை அச்சாலையிலிருந்து தேர்ந்தெடுத்திருப்பான் என்று கருத இடம் ஏற்படுகிறது.

''சட்டர்கள் திரைராஜ்ய விவஹாரத்துக்கு அதாவது (தமிழக வழக்குப்படி முடியுடை வேந்தர் மூவரான சேர, சோழ, பாண்டியர் ஆகிய மன்னர்களின் மூன்று ராஜ்யர்களது விவகாரங்களை நிர்வகிப்பதற்கு வேண்டிய பயிற்சியும் அறிவும் (ஒத்து) உடையவராக இருத்தல் வேண்டும்'' என்று டி.என். சுப்பிரமணியம் பார்த்திபசேகரபுரச் சாசனத்தைப் பற்றி எழுதுகையில் குறிப்பிட்டிருப்பது ஈண்டு கூர்ந்து கவனிக்கத் தக்கது.

மேலும் முதலாம் இராசராசனது முக்கிய உயர் அதிகாரிகளிலே பலர் பிராமணர்களாக இருந்திருப்பதை நாம் கல்வெட்டுக்கள் மூலம் உணர முடிகிறது. தஞ்சைப் பெருவுடையார் கோயில் திருச்சுற்றை எடுப்பித்தவனான ஸ்ரீகிருஷ்ணன் இராமன் என்னும் மும்முடிச் சோழ பிரும்மமாராயன், சேனாதிபதியாகப் பணி புரிந்திருக்கிறான். இக்கோயிலில் திருவாய்க் கேழ்வியாகப் பணி புரிந்தவர்கள் மும்முடிச் சோழக் கடிகை மாராயன், ராசராச கடிகை மாராயன், ஜயங்கொண்ட சோழக் கடிகை மாராயன் இம்மூன்று அதிகாரிகளும் கடிகையிலிருந்து அதாவது சாலையிலிருந்து (கல்வி நிறுவனம்) வந்தவர்கள் என்பது அவர்களது பெயர்களாலேயே புலனாகிறது.

ஆதலால் மேலே கூறியவற்றைக்கொண்டு ஆராய்கையில் முதலாம் இராசராசன் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்தது மூன்று இராச்சிய விவாகரத்துக்கு வேண்டி அச்சாலையிலிருந்து சிலரைத் தேர்ந்தெடுத்த செயலேயாகும் என்று உறுதியாகக் கூறலாம்.



# இரண்டே போதும்


மு. பிச்சையா,
மக்கள் தொடர்பு அலுவலர்
(பொறுப்பு)
வேலூர்


குடும்பநலத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் 1985 ஆம் ஆண்டை குழந்தை பெறா ஆண்டாக அரசுப் பணியாளர்கள் உறுதிமொழி எடுக்கும் விழா, வட ஆர்க்காடு மாவட்டத்தின் சார்பில் 23.9.84 அன்று வேலூரில் நடைபெற்றது.

இந்த விழாவையொட்டி வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கே.வடிவேலு, இ.கா.ப., துவக்கிவைத்தார். ஊர்வலத்தில் குடும்பநலத் திட்டம் பற்றிய அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் இடம் பெற்றன. ஊர்வலம் வேலூர் நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றன.

ஊர்வலத்தை வேலூர் அண்ணா கலையரங்கின் முன்னர் அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் இருந்து மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறைஅமைச்சர் திரு எம். விஜயசாரதி, தமிழக அரசின் இரண்டாவது செயலர் திரு டி.வி.அந்தோனி, இ.ஆ.ப. மத்திய அரசின் சுகாதார அமைச்சரவை கூடுதல் செயலர் திரு ஆர்.பி கபூர், இ.ஆ.ப., குடும்பநலத்துறை இயக்குநர் திரு டி.முருகராஜ், இ.ஆ.ப.,மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இ.எஸ்.தானியல் குணாநிதி, இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டனர்.

ஊர்வலத்திற்குப் பிறகு அண்ணா கலையரங்கில் விழா நடைபெற்றது. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம்.விஜயசாரதி அவர்கள் விழாவைத் துவக்கி வைத்துஉரையாற்றுகையில், ''இங்கு நடத்தப்பட்ட ஊர்வலம் மற்ற மாவட்டங்களில் நடந்ததற்கு சிகரம் வைத்தது போல அமைந்து உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பாராட்டுகிறேன். அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டுதான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. மக்கள் தொகை அதிகமானால், திட்டங்களின் பலன் குறையும், எனவே, குடும்ப நலத் திட்டத்திற்கு அரசு ஊழியர்களும் பொது மக்களும்மேலும் ஆதரவு 'தரவேண்டும்'' என்று கூறினார்.

தமிழக அரசு இரண்டாம் செயலாளர்திரு. டி.வி.அந்தோனி இ.ஆ.ப., தமது தலைமையுரையில், ''தமிழகத்தில்தான் குடும்பநலத் திட்டத்துக்கு நல்ல ஆதரவு இருக்கிறது. இதுபோன்ற ஊர்வலங்களை ஆறு மாவட்டங்களில் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால், வேலூரில் நடத்தப்பட்ட அழகான அமைதியான மிகப்பெரிய அரசு ஊழியர் ஊர்வலத்தைப் பார்த்தது கிடையாது என்று கூறினார்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இ. எஸ். தானியல் குணாநிதி இ.ஆ.ப., வரவேற்றுப் பேசுகையில்''இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் ஒரு லட்சம் பேருக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யத் தீர்மானித்திருக்கிறோம்''என்று கூறினார்.

குடும்பநல அறுவைச் சிகிச்சையில் சாதனை புரிந்துவர்களுக்கும் சிறுசேமிப்புத் திட்டத்தில் சாதனை புரிந்தவர்களுக்கும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம்.விஜயசாரதி அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் திரு ஜிவ. ஜிதேந்திரியநாத் நன்றி கூறினார்.





# ஐவரில் ஒருவருக்குச் சத்துணவு


மா. கலைமணி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
வட ஆர்க்காடு மாவட்டம்.


வடார்க்காடு மாவட்டத்தில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட விரிவாக்க விழா வேலூரை அடுத்த பள்ளிகொண்டாவில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15-9-84 அன்று நடைபெற்றது. பள்ளிகொண்டா அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இவ்விழாவில் 10 முதல் 14 வயது வரையிலுள்ள பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவு வழங்குவது, மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இ.எஸ்.டானியல் குணாநிதி, இ.ஆ.ப. தலைமையில், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு கோ. விசுவநாதன் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது:

''மாண்புமிகு முதல்வர் கொண்டுவந்துள்ள இந்தத் திட்டம் மாணவர்களிடம் ''யார் என்ன ஜாதி?'' என்று பார்க்காமல் பொருளாதார - சமுதாய சமத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் குழந்தைகளிடையே தீண்டாமை ஒழிக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளைத் தங்களது வறுமையில் கூலி வேலைக்கு அனுப்பிவந்த பெற்றோர்கள் இன்று பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும் நிலை ஏற்பட்டுள்ளது, இதனால் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

"மேலும் ஆதிதிராவிடர்கள் நலனுக்காக 3 ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயல்படுத்த இருக்கிறது. இதற்காக ரூ. 123 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இதற்காகத் தனிவாரியம் அமைக்கப்பட்டு அந்தப் பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும்" என்று தெரிவித்தார்.

விழாவிற்குத் தலைமைவகித்த மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும்போது,

"ஏற்கனவே இம் மாவட்டத்தில் 7,46,000 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. இன்றைக்கு மேலும் 1,60,000 உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுவதின் மூலம் 9,06,000 குழந்தைகள் சத்துணவால் பயனடைந்து வருகின்றனர்.

''இத்திட்டத்தால் 20,479 நபர்கள் வேலைவாய்ப்பிலைப் பெற்றுள்ளார்கள். 44 இலட்சத்து 14 ஆயிரம் ஜனத்தொகை பெற்ற இம்மாவட்டத்தில் 9 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதின் மூலம் ஏறத்தாழ 5 நபர்களுக்கு ஒருவர் வீதம் சத்துணவால் பயனடைந்து வருகின்றனர்" என்று குறிப்பிட்டார்

மேலும் விழாவில் குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ அரிசி, உடல் ஊனமுற்ற 5 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளும் 3 பெண்களுக்குத் தையல் இயந்திரமும், 11 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியமும் 5விதவைப் பெண்களின் மகள்களுக்குத் திருமண உதவித் தொகையும், 4 கலப்பு மணத்தம்பதிகளுக்குச் சேமிப்புப் பத்திரமும், 3 நபர்களுக்கு முடி திருத்தும் கருவிகளும், 7 நபர்களுக்குச் சலவைப் பெட்டியும், 14 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும் — ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாணஎரிவாயுத் திட்டத்திற்காக வங்கிக் கடனும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

## மாணவர் பக்கம்

# அறிவியல் செய்திகள்

எலும்பின் உள்ளே உள்ள சரப்பதமான மெல்லிய கொழுப்புப் பகுதியில் (Marrow) குடியேறும் புற்றுநோய்க் கிருமிகளைக் காந்த அலைகளின் உதவியால் அழித்துவிடும் முறையைப் பன்னாட்டு விஞ்ஞானிகள் குழு ஒன்று இப்பொழுது கண்டுபிடித்துள்ளது.

வழக்கமான ''கீமோதெரபி'' முறையுடன்கூட புதிய முறையும் லண்டன் மருத்துவமனை ஒன்றில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 99.9 சதவிகித புற்றுநோய்க் கிருமிகளை இவ்வாறு அழித்து விட முடியும் என்று சோதனைக் கூடங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

நரம்புகளில் உருவாகி எலும்பினுள் செல்லும் இவ்வகைக் கிருமிகளால் தாக்கப்பட்ட நோயாளிகள் பிழைப்பது அரிது. இப்படி மரணமடைபவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளே!

புதிய முறைப்படி முதலில் நோயாளியின் எலும்பினுள் உள்ள கொழுப்புப் பகுதியில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே வெளியே எடுக்கப்படுகிறது. அதற்குமேல் எடுத்தால் நோயாளியின் உடலில் நோய் எதிர்ப்புத்திறன் குறைந்துவிடும். பிறகு எஞ்சிய பத்தில் ஒன்பது பங்கு எலும்புக் கொழுப்பில் உள்ள கிருமிகளை அகற்ற நோயாளிக்கு மருந்து கொடுக்கப்படுகிறது.

முதலில் வெளியே எடுக்கப்பட்ட எலும்புக்கொழுப்பு புற்றுநோய்க் கிருமிகளுடன் தொற்றிக் கொள்ளும். பொருள்களோடு கலக்கப்பட்டு காந்தத் துண்டை உள்ளடக்கிய சிறு பிளாஸ்டிக் உருண்டைகளுடன் ஒரு கலத்தில் இட்டு உருட்டப்படுகிறது. புற்றுநோய்க்கிருமிகள் காந்த மணிகளில் ஏறிக் கொள்ள, அந்தக் காந்த மணிகள் பிளாஸ்டிக் குடுவையின் ஓரங்களில் ஒட்டிக்கொள்கின்றன. பின் ஆரோக்கியமான எலும்புக் கொழுப்புப் பொருள் பிரித்தெடுக்கப்பட்டு திரும்பவும் நோயாளியின் எலும்பினுள் செலுத்தப்படுகிறது.

## கல்லீரல் நோய்களுக்குத் தடுப்பு மருந்து

புற்று நோய் மற்றும் மஞ்சள் காமாலை முதலான நோய்களுக்குக் காரணமான கல்லீரல் அழற்சியைத் தவிர்ப்பதற்குப் புதிய தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இது புழக்கத்தில் உள்ள மருந்துகளைவிட அதிகப் பயன் தருவது. ஆனால் விலை குறைவானது.

இந்தத் தடுப்பு மருந்து அதிக அளவில் தயாரிக்கப்பட்டால் ஆசியாவிலும் ஆ.:ப்பிரிக்காவிலும் கல்லீரல் புற்று நோய், கல்லீரல் தொடர்பான பிற உடல் நலக் கேடுகளால் ஏற்படும் மரணங்கள் நிச்சயம் தவிர்க்கப்படும்.

முதன்முறையாக மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்தத் தடுப்பு மருந்து, உலகம் முழுவதும் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகலாம்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்


## உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் மொத்தம் 15 ஆயிரம் தாவர வகைகள் உள்ளன.

இவைகளில் காட்டு வகைகள் நீங்கலாக 4000 இனத்தாவரங்கள் நாட்டின் பல பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன.

பொருளாதார ரீதியிலான தாவர வேறுபாடுகள், இந்திய விவசாய ஆய்வுக் கவுன்சில் மற்றும் தேசிய தாவர ஜெனிடிக் ஆதாரக்கழகம், புதுதில்லி ஆகியவற்றின்கீழ் இயங்கும் பல்வேறு நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன.

மிளகு தேயிலை, சணல் முதலியன இந்திய ஏற்றுமதி கொள்கையில் ஷெட்யூல்டு 1-ல் குறிப்பிட்டிருந்த போதிலும் அவற்றின் ஏற்றுமதி அனுமதிக்கப்படுவதில்லை. ஆராய்ச்சி நோக்கங்களுக்காக விதைகள், தாவர இனங்கள் இவை வெளிநாட்டு சகளுடனும், வெளிநாட்டு நிறுவனங்களுடனும் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகிறது.



## தமிழ்நாட்டில் புதிய உயர்நிலைப்பள்ளிகள்

தமிழ்நாட்டின் கல்வி முன்னேற்றம் மற்றும் குறிப்பாக கிராமப்புறங்களில் உயர் கல்விக்கான வசதிகளை அதிகப்படுத்த வேண்டிய தேவை ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு இவ்வாண்டு மொத்தம் 94 உயர்நிலைப் பள்ளிகளைப் புதிதாகத்துவக்க முடிவு செய்துள்ளது. கீழ்க்கண்ட மாவட்டங்களில் புதிய உயர் நிலைப்பள்ளிகள் துவக்கப்பட்டுச் செயல்படும்.

சென்னை 4, செங்கல்பட்டு 8, தென்னார்க்காடு 6, வடஆர்க்காடு 10, சேலம் 13, தர்மபுரி 6, கோயம்புத்தூர் 5, நீலகிரி 3, பெரியார் 5, தஞ்சாவூர் 6, திருச்சி 6, புதுக்கோட்டை 6, மதுரை 3, இராமநாதபுரம் 9, திருநெல்வேலி 4, ஆக மொத்தம் 94.

அவற்றுள் மகளிருக்கெனத் துவக்கப்படும் பள்ளிகள் மொத்தம் 19. இந்த 19 மகளிர் பள்ளிகளும் பாரதியார் நூற்றாண்டு விழாவின் நினைவாகத் திறக்கப்படுகின்றன.



## யானை

—தளவை : இளங்குமரன்

பாறைபோல யானையொன்று
படுத்துக் கிடக்குது—மலைப்
பாம்புபோலத் தும்பிக்கையும்
பார்வை கொடுக்குது!

குறைபோல முச்சுக்காற்றுச்
சுருட்டி அடிக்குது — முறம்
சுழல்வதுபோல் காதிரண்டைச்
சுழட்டி அசைக்குது.

தாழிபோலக் கரியபெரிய
தலையை உருட்டுது—வாழைத்
தண்டுபோல வெளுமை ஒளிரும்
தந்தம் உடைத்தது!

காளிகோயில் தூண்கள்போலக்
கால்கள் பருத்தது—வாலும்
கணுவில்லாத கரும்புபோலக்
கருத்தைப் பறிக்குது!

பூனைபோலச் சிறியவிழியைப்
பொருத்தித் திறக்குது— தீனிப்
பொதியைப்போலத் தழையைவயிறு
புடைக்கப் புசிக்குது!

1950லிருந்து பற்களுக்குத் தான் செயற்கைப் பற்கள் கட்டிக் கொள்வது வழக்கம். அதற்கு முன்பு 'தங்கப்பல்' இருந்து வந்தது. எந்த நேரத்தில் இந்த ஸிளார்க் என்னும் பல் மருத்துவர் தனது இருதயத்தை மாற்றிக் கொண்டு வாழ்ந்து காண்பித்தாரோ, அதிலிருந்து மாற்றத்திற்கு ஒரு பெரிய மார்க்கெட்டே தோன்ற ஆரம்பித்துவிட்டது.

''எதையும் மாற்றலாம்'' என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. சராசரி வாழ்நாள் பெருகிவரும் நிலையில் 60, 70 வயது வாழ்பவர்கள் பெருக, மாற்றமும் பெருக வாய்ப்பிருக்கிறது. இவர்களுக்கு ஏதாவது ஒன்றை மாற்றவேண்டி நேரிடலாம். அத்தகைய மாற்றம் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ உதவி செய்யும்.

அமெரிக்காவிலும், மற்றும் பல முன்னேறிய நாடுகளிலும் கோடிக் கணக்கில் செலவு செய்து பல செயற்கை உறுப்புகளைச் செய்யும் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இடுப்புகள், இதய அடைப்பான்கள், இதயங்கள், முழங்கைகள், முழங்கால்கள், இரத்தக்குழாய்கள், இப்படிப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. ஆண்டிற்குப் பத்து லட்சம் அமெரிக்கர்கள், தங்கள் உடம்பில் உள்ள பாகத்தில் ஏதாவதொன்றை மாற்றிக் கொள்ளும் அளவிற்கு இக்கலை வளர்ந்துள்ளது.

இந்தச் செயற்கை உறுப்புக்களைச் செய்வதற்குப் பெருமளவில் நவீன தொழிற்சாலைகள் உருவாகிக்கொண்டு வருகின்றன. செயற்கைக் காதுகளைத் தயாரிக்க இரண்டு கம்பெனிகள், கால் பிடிக்க பயன்படுவது செயற்கை எலும்புகள் தயாரிக்க மற்றொன்று செயற்கைத் தோலுக்கு கிரீன் கராஸ் எனப்படும் ஜப்பானிய மருத்துவ நிறுவனம்




செயற்கை இரத்தத்தையே உற்பத்தி செய்ய முயன்று கொண்டிருக்கிறது!

எஸ். வடிவேலு
நன்றி: "ரெயில் கோச்"


## காந்தி நூலகம்

கிண்டியில் காந்தி மண்டப வளாகத்தில் திறக்கப்பட்டுள்ள நூலகம் சென்னை மாநகரில் கல்வித் துறையால் உருவாக்கப் பட்டுள்ள 125வது நூலகம் ஆகும்.

காந்தியடிகள் எழுதிய நூல்களும் அவரைக் குறித்து மற்றவர்கள் எழுதிய நூல்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, காந்தியத் தத்துவம் குறித்து உலக அறிஞர்கள் எழுதிய நூல்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப் பெற்றுள்ளன.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பெற்று, அந்தக் குழுவின் முயற்சியால் இந்நூலகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஒருவர் இந்நூலகத்திற்கு 5 ஆண்டுகள் சென்று காந்தியடிகளின் நூல்களைப் படித்துக் குறிப்பு எடுத்துக் கொண்டால் காந்தியம் என்றால் என்ன என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.



# நியாய விலையில் காய்கறி வழங்கிட அரசு திட்டம்



தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் ரூபாய் 102.35 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் காய்கறி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்தும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

காய்கறி பயிரிடும் சிறு மற்றும் குறு நில விவசாயிகள் ஆகியோரது பொருளாதார நிலைகளை மேம்படுத்துவது, அவர்களுக்கு நியாயமான வருவாய் கிடைக்க வகை செய்வது, மக்களுக்கு நியாயமான விலையில் காய்கறி கிடைக்க வகை செய்வது ஆகியவையே இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இச்சங்கங்கள், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட மையங்களுக்குக் காய்கறிகள் வழங்குகின்றன. இம்மாநிலத்தில் இதுவரையில் காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் 505 அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 412 சங்கங்கள் செயல்படத் தொடங்கிவிட்டன. இத்திட்டத்தின் முதல் படியாக, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 44 சங்கங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கான அடிப்படை வசதிகளைப் பெருக்க இந்த 44 சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் சிறு லாரி ஒன்றையும், குளிர் பதனப் பெட்டி - குளிர் பதன அறை ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளில் விற்பனைக்கு உபரியாகவுள்ள பொருள்களின் அளவையொட்டி 15 சங்கங்களுக்குக் கிடங்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இத்திட்டம், கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு இணைப் பதிவாளரால் செயல்படுத்தப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சியர், சங்கங்களின் செயல்பாட்டிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவர், தேவை [illegible] இப்பொருள்கள் [illegible] தொழில்நுட்ப [illegible]

இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 102.35 இலட்சம் ஆகும். (ஒட்டுமொத்த மூலதனம் ரூ. 97.95 இலட்சம், நடைமுறை மூலதனம் ரூ. 4.40 இலட்சம்) தொடக்க உதவித் தொகையைத் தவிர, ஒட்டுமொத்த மூலதன உதவி இச்சங்கங்களுக்கு 50 சதவீதம் கடனாகவும், 50 சதவீதம் உதவித் தொகையாகவும் கொடுக்கப்படும்.

ஒட்டுமொத்த மூலதனத்தில், உதவித் தொகைப் பகுதியான ரூபாய் 47.875 இலட்சம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மூலதனத்தில் எஞ்சிய தொகையாகிய ரூ. 50.75 இலட்சம் தேசியப் பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடமிருந்து கடனாகப் பெற முயற்சி செய்யப்பட்டு வருகிறது. நடைமுறை மூலதனத் தேவையாக ரூ. 4.40 இலட்சம் சம்பந்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளினால் வழங்கப்படும்.

பார்த்திபனூர் மதகுக்குக் கீழே வைகை ஆற்றின் கரையை உயர்த்திச் செப்பனிடும் பணிகளை மேற்கொள்வதற்காக ஆறு கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்துக்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆண்டே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, நான்கு ஆண்டுகளில் முடிக்கப்பட்டுவிடும்.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தற்காலிகப் பணியாளர்களாக இருப்பவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் நிரந்தரப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவச் சலுகைகள், வசதிகளை [illegible] தற்கு அரசு முடிவு செய்து இதற்கான [illegible] பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(26-9-'84 [illegible]
[illegible] திரு [illegible]

# காந்தி பிறந்த நாளில் கதர் விற்பனை....



அண்ணல் காந்தியடிகள் கதர்த் துணியின் வளர்ச்சியிலும் கிராமத் தொழில்களின் மேம்பாட்டிலும் மிகுந்த கவனம் செலுத்தினார். அவரது கொள்கைகளையும் தத்துவங்களையும் போற்றிக் கடைப்பிடித்து வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கதர்த்துணியின் வளர்ச்சியில் அக்கறை காண்பித்து வந்தார். அண்ணாவின் கொள்கையைப் பொன்னேபோல் போற்றிவரும் தமிழக அரசு கதர்த் துறைக்கு என்றே தனி அமைச்சர் ஒருவரை ஏற்பாடு செய்து கதர்- கிராமத்தொழில்களின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருகிறது. வாங்குவோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சலுகைகளை அளித்து வருகிறது.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டும் தீபாவளித் திருநாளின் காரணமாகவும் அக்டோபர் 2 ஆம் நாள் முதல் 23ஆம் நாள் வரை

இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி இ.ஆ.ப. அவர்கள் குறிப்பிட்டார்:

''மகாத்மா காந்தி அடிகளின் திட்டங்களில் மிகச் சிறந்த திட்டம் கதர் விற்பனைத் திட்டமாகும். அவர் வலியுறுத்திய கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம் லட்சக் கணக்கான மக்களுக்கு வாழ்க்கையைக் கொடுத்து வருகின்றது.

''அவர் ஆரம்பித்த சிறிய இராட்டை இன்று 16 கதிர் கொண்ட ராட்டையாக வளர்ச்சி பெற்றுள்ளது. ஏறக்குறைய 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ராட்டை நூற்பதன் மூலம் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். இவர்களில் நூற்றுக்கு 50-க்கும் மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளனர். கதர்த்துணியின் விற்பனையில் ஒரு ரூபாய்க்கு 75 காசுகள், நூற்போருக்குச் செல்

என்றே தனி அமைச்சர் ஒருவரை நியமித்திருக்கிறார்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி குறிப்பிட்டார்:

''காந்தியடிகளின் கனவை நனவாக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருகிறார்.

''கிராம மக்கள் நகர மக்களைப் போல வசதியான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதில் காந்தியடிகள் அக்கறை காட்டினார். அவர்களால்தான் நாடு முன்னேற்றமடையமுடியும் என்று கருதினார்.

''ஏழை, எளிய மக்கள் வேலை வாய்ப்புப் பெற வேண்டும், குறிப்பாக தாய்மார்கள் தமது வாழ்க்

கதர் பருத்தித் துணிகளுக்கு. விலையில் 35 சதவிகிதமும் பட்டுத் துணிகளுக்கு 20 சதவிகிதமும், கம்பளித் துணிகளுக்கு 15 சதவிகிதமும் சிறப்புச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

கதர்த்துணியின் விற்பனையை அண்ணல் பிறந்த அக்டோபர் 2ஆம் நாள் காலை குறளகத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களின் தலைமையில் மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த அனைவரையும் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் இயக்குநர் திரு வெங்கடாசலம் வரவேற்று உரை ஆற்றினார்.

சிறப்புரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத் துறை

கின்றன என்பதை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டும்.''

அடுத்து, வழக்குரைஞர் தெய்வசிகாமணி உரையாற்றுகையில், ''கதர் இயக்கம் பெருகுவதால் ஏழை எளிய மக்கள் பயன் அடைவர்'' என்று குறிப்பிட்டார்.

கதர் வாரியத் துணைத் தலைவர் பட்டுக்கோட்டை திரு பாப்பையன் குறிப்பிட்டார்:

''1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றவுடன், கதரின் நிலை என்ன ஆகுமோ என்று பலர் அஞ்சினர். ''கதர்த்துறை மேலும் வளரும் அதைத் திறம்பட நடத்துவேன்'' என்று அண்ணா அவர்கள் கூறினார்கள். இன்று புரட்சித் தலைவர் அவர்கள், அண்ணா அவர்களின் வழியில் நின்று கதர்த் துணியின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வருகிறார். கதர்த்துறைக்கு

கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும்-சுய வேலை வாய்ப்பு மூலம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற முறையில்தான் கதர் கிராமத் தொழில் வாரியம் சிறப்பாகப் பணியாற்றிவருகிறது.

''ஒவ்வொரு கிராமத்திலும் பல தொழில்களை உருவாக்கிப் பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது இந்த வாரியம். கிராமிய நூற்பு நிலையங்களை உருவாக்கி வருகிறது. தமிழ்நாடு முழுதும் 508 கிராம நூற்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 30 பெண்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். இந்த ஆண்டு மேலும் 80 நிலையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.

''கதர் விற்பனை நாட்டில் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.''

அடுத்து உரையாற்றிய மாண்பு



மிகு கல்வி அமைச்சர் குறிப்பிட்டதாவது:

''தேசப் பிதாவாக நாம் கருதிப் போற்றி வரும் காந்தியடிகள் நாடு காக்கும் போராட்டங்களில் ஈடுபட்டபோது நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத் திட்டம் தீட்டிச் செயல்பட்டு வந்தார்.

''கதர்த் துணியில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த உறுதி நாளுக்கு நாள் மக்களிடத்தில் குறைந்து கொண்டு வருகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கதர்த்துணியைப் பற்றிப் பேசவும் அதன் சிறப்பைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும். அதனை வாங்கும் உணர்வும் பெருக வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

''ஒரு நாள் ஒரு நேரம் கூட சாப்பிட முடியாதிருப்பவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னால் 40 சதவிகிதம் பேர் இருந்தனர். இந்தத் தொகை குறைவதற்குப் பதிலாக அதிகரிக்கும் விநோதத்தைத்தான் காண முடிகிறது. திட்டமிட்ட பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றிவரும் இந்த நாட்களிலும் இந்தத் தொகை அதிகரிப்பது நமக்கு வேதனையைத் தருகிறது.

''கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை உயர்வதற்காக புனர் நிர்மாணத் திட்டங்களை காந்தியடிகள் தீட்டினார். Unskilled Labourer திறமை பெறாத தொழிலாளர்கள் தக்கிளி - சர்க்கா ஆகியவற்றின் மூலம் ஒரு நாளுக்கு குறைந்தது 2 மணி நேரமாவது நூல் நூற்றால் அவர்களது வாழ்வு நலம்பெறும் என்று கருதினார். இவற்றின் மூலம் உருவாக்கப்படும் பொருள் நமக்கு அத்தியாவசியத் தேவையாக உடையாகும்.

''நாட்டு மக்களின் வறுமையை ஒழிக்கச் சிறந்த சாதனம் கதர் கிராமத் தொழில்கள் என்ற கருத்தை மக்களிடம் பரப்ப வேண்டும். கதரை ஆதரிப்பது புனிதமான பணியாகக் கருதப்பட வேண்டும். அனைவரும் ஆதரவு தர வேண்டும். ஆசிரியர்கள், மாணவர்கள் கதர் வாங்கும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும் ''

சொற்பொழிவுகளுக்குப் பின்னர் - மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் அவர்கள் கதர் விற்பனையைத் தொடங்கி வைத்தார். சென்ற ஆண்டு கதர் விற்பனையில் சிறந்து விளங்கிய ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கேடயங்களைப் பரிசாக வழங்கினார் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம் முதற் பரிசும், திருச்சி மாவட்டம் அரியலூர் ஊராட்சி ஒன்றியம் 2வது பரிசும், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் 3வது பரிசும் பெற்றன.

**சண்முகசுந்தரம்**



சேதுபதி மன்னர் ஒரு முறை இரவில் நகர் உலா வந்தார். அப்போது ஒரு தாய் தன் குழந்தையைத் தாலாட்டிக்கொண்டிருந்தாள். அந்த வீட்டை மன்னர் எட்டிப்பார்த்தார். அவரது கைவிரலில் ஒளி வீசிய மோதிரத்தை அந்தத் தாய் பார்த்துவிட்டாள்.

எட்டுத்திக்கும் புகழ்மணக்கும்
சேதுபதிராசன் கைவிரல்
மோதிரம் கண்டோ நீ அழுதாய்

எனக் குழந்தையைப் பார்த்துக் கேட்கத் தொடங்கினாள்.

அந்தப் பாடலின் மூலம் அவளது குடும்பத்தின் வறுமை நிலையை அறிந்த சேதுபதி மன்னர் தங்கத் தாம்பாளத்தில் மோதிரத்தை வைத்துக் கொடுத்தார்.

# உற்சாகத்துடன் உழைத்து முன்னேறுவேன்



இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை பந்தல்குடி சாலையில் சோப் தயாரிக்கும் கம்பெனியான ''நிலா சோப்'' கம்பெனி அமைந்துள்ளது. ப்ளு டிடர்ஜென்ட் சோப் தயாரிக்கும் இந்நிறுவனத்தின் உரிமையாளர் திரு. எம். முருகன். இவர் சமீபத்தில்தான் பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் அருப்புக்கோட்டையில் உள்ள கனரா வங்கி மூலம் நிதி உதவி பெற்று தொழில் தொடங்கினார். இதன் மூலம் மாதத்திற்குக் குறைந்த பட்சமாக ரூபாய்600 ஊதியமாகக் கிடைப்பதாக் அவரைப் பேட்டி கண்டபோது கூறினார்.

நீங்கள் எவ்வாறு இந்தத் தொழிலைத் தொடங்கினீர்கள்?

நான் பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தினைப்பற்றி செய்தித்தாள்களில் படித்தறிந்தேன். அதன் பிறகு இத்தொழில் துவங்கிட நிதி உதவி கேட்டு இராமநாதபுரம் மாவட்டம் தொழில் மையத்தின் பொது மேலாருளக்கு விண்ணப்பித்தேன், டிசம்பரில் விண்ணப்பம் செய்த என்னை ஜனவரியில் இண்டர்வியூ செய்தார்கள். பிப்ரவரி மாதம் ரூ. 20,000 கடன் வழங்கப்பட்டது. மார்ச் மாதத்தில் எனக்கு அளிக்கப்பட்ட கடன்தொகை போதாது என்று மேலும் ரூ. 2,000 தேவை என்று விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து கூடுதல் கடனாக ரூ. 2000 கொடுத்தார்கள். இதனைக் கொண்டு ஜூனில் தொழிலைத் தொடங்கினேன். இந்த ரூபாய் 22,000ல் ரூ. 10,000 மிஷின் வாங்கவும், ரூ.12,000 தொழில் செய்யவும் உதவினார்கள்.

நீங்கள் தயாரிக்கும் இந்த டிடர்ஜென்ட் சோப் பற்றிக் கூறமுடியுமா?

ஒரு நல்ல தரமான சோப் தயாரிக்க ஸ்டோன்பவுடர், ஆசிட்ஸ் சில்லரி, சோடியம் சிலிகேட், டிரைசோடிம் பாஸ்பேட், எஸ்.டி.பி.பி. மற்றும் சோடாஸ் ஆகிய பொருட்கள் தேவைப்படுகின்றன. இவை அனைத்தும் மதுரையில்தான் வாங்குகிறேன், சிலிகேட் ஒன்றுதான் அடிக்கடி கிடைப்பதில்லை. இது வாங்குவதில் தட்டுப்பாடு அதிகம் உண்டாகிறது.

தயாரிக்கும் முறை பற்றி கூறமுடியுமா?

ஸ்டோன்பவுடர், சோடாஸ், எஸ்.டி.பி.பி. நிறம் தரும் ப்ளு பவுடர் இவைகளை எல்லாம் ஒன்றாகக் கலந்து ஒருமுறை கலக்குவோம்-பிறகு இதில் ஆசிட் சில்லரி ஊற்றி மீண்டும் கலக்குவோம்-கடைசியாக சிலிகேட் ஊற்றுவோம், இவைகள் எல்லாவற்றையும் யூனிபார்ம் ஆகக் கலக்குவோம். வாசத்திற்காக ஜாஸ்மின் நறுமணம் சேர்க்கிறோம்.


இது முடிந்ததும், சோப் தயாரிக்கும் மெஷினில் போட்டு சிறுசிறு சிப்சாகத் தயாரிப்போம். தயாரித்த பிறகு மெஷினில் வடிவத்திற்கு ஏற்பவிட்டுப் போட்டு, எந்த சைஸில் வேணுமோ அப்படிப் பெறலாம்.


**ஆர். இராவணன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்.**



# லைஃப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!

ஆரோக்கிய மயம் லைப்பாய் நயம்--
போராடிப் பொழுதெல்லாம்
உழைத்த பின்-- ஜோராக ஆடிய
பின்-- நீராடும் இன்பம் லைப்பாய்
போல் வேறில்லை-- குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர்
சுத்தமே உருவான ஆரோக்கிய
மலர்ச்சி!



அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது லைஃப்பாய்




சோப் தயாரிக்கும் போது எண்ணெய் சேர்ப்பதுண்டா?

நான் எண்ணெய் சேர்ப்பதில்லை. எண்ணெய் சேர்ப்பதால் உற்பத்தி செலவு குறையும். தரம் - கிடைக்காது.

ஒரு நாளைக்கு எத்தனை டஜன் சோப் தயாரிக்கிறீர்கள்?

ஒருநாளைக்கு 60 டஜன் சோப் தயாரிக்கிறோம், ஒரு மாதத்திற்கு 600 டஜன் முதல் 1000 டஜன் வரை தயார் செய்கிறோம்.

இந்தத் தொழிலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? இதன் வளர்ச்சிக்கு என்ன செய்வீர்கள்?

இந்தத்தொழிலுக்கு அரசாங்கத்தில் 3.2 இலட்சம் வரை விற்பனை வரி கிடையாது. அதனால்தான் இது கிராமத் தொழிலாக வளர முடிகிறது. விற்பனை பிரதிநிதிகளை எங்களுடைய கிராமத்திற்கு அனுப்பி ஆர்டர் வாங்கி வர்ச்செய்து சோப் தயாரிக்கிறோம், தேனி, கோவில்பட்டி, பெருநாழி, மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, இராமநாதபுரம் போன்ற இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்புகிறோம். எல்லா இடங்களிலும் விலை குறைவாகக் கேட்கிறார்கள். விலை குறைவாகத் தந்தால் சோப் தரமாக இருக்க முடியாது.

இதன் மூலம் எத்தனைப் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளீர்கள்?

6 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளோம். தொழில் பெருகும்போது மேலும் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும்.

இந்தச் சோப்பின் மேல் அட்டைகள் எங்கு அச்சடிக்கிறீர்கள்?

சிவகாசியில் அச்சடிக்கிறோம்.

இந்தத் தொழிலில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?

விவசாயம் செய்து வந்தேன். விவசாயத்தில் சரியான வருமானமில்லை. தொழில் செய்ய ஆசைப்பட்டேன். அந்தச் சூழ்நிலையில் பல எண்ணங்களுக்கு மத்தியில் இந்தத் தொழில் நட்டமில்லாத தொழில் என்று நண்பர்கள் மூலம் அறிந்து இதனைத் தேர்ந்தெடுத்துச் செய்ய ஆரம்பித்தேன்.

பிரதமரின் இத்திட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பாரதப் பிரதமரின் இந்தத் திட்டம் மிகவும் நல்ல திட்டம். முறையாகத் தொழில் செய்பவர்கள் இத்திட்டம் மூலம் முன்னேறலாம்.

இந்த நிதி உதவி கிடைக்க அதிகாரிகள் உங்களுக்கு உதவினார்களா?

அருப்புக்கோட்டை கனரா வங்கி அதிகாரிகள் நல்ல முறையில் உதவி செய்தார்கள். ஒரு தடவைதான் சொன்னோம். இராமநாதபுரம் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திலும் நல்ல முறையில் வழிமுறைகள் கூறியதோடு, உதவியும் செய்தார்கள்.

இந்தக் கடன் மூலம் என்ன சலுகைகள் உங்களுக்குக் கிடைக்கிறது?

வட்டி விகிதம் குறைவு - வருடத்தில் திரும்பக் கட்ட லாம். இதற்கு மானியமும் உண்டு. ரூ. 22,000/- கடன் வாங்கியுள்ளேன். மாதம் ஒன்றிற்கு நான் செலுத்தும் தொகை ரூபாய் 90/- தான்.

இத்தொழில் மூலம் மாதத்திற்கு நீங்கள் எவ்வளவு வருமானம் சம்பாதிக்கிறீர்கள்?

இதன் மூலம் மாதத்திற்கு ரூ. 600/-க்குக் குறையாமல் சம்பாதிக்கிறேன்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் உதவுபெற்ற இவர், மிகவும் உற்சாகத்தோடு, இத்தொழிலைச் செய்து வருகிறார். ஆறுபேருக்கு வேலைவாய்ப்புத் தந்திருப்பதோடு, இவரும் வேலை இல்லையே என்ற நிலையைப் போக்கிக் கொண்டுள்ளார். பாரதப் பிரதமரின் இந்தத் திட்டத்தால் தனது வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டிருப்பதுடன், மேலும் மேலும் உற்சாகத்துடன் உழைத்து முன்னேறுவேன் என்ற உறுதியும் ஏற்பட்டுள்ளது என்று உற்சாகமாய் இவர் கூறும் போது உழைப்பின் வெற்றி அங்கே தெரிகிறது!






# தன்னம்பிக்கை தரும் சுய வேலைவாய்ப்பு

—கே. பி. நல்லதம்பி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்

"சாலையோரத்திலே வேலை யற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்" என ஏக்கப்பெருமூச்சுவிட்ட அறிஞரின் கனவை நனவாக்கும் முகத்தான் தொழில்வளம் பெருகவும், படித்த இளைஞர்கள் சுயமாகச் சிந்திக்கவும், தன்னம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்தவும் பாரதப்பிரதமரின் சுய வேலைவாய்ப்புத்திட்டம் வழி வகுக்கிறது.

பாரதப் பிரதமரின் இம்மகத்தான திட்டத்தை இன்று தமிழகம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. தமிழகம் தொழில்மயமாகி வருகிறது என்பதற்கு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சுய வேலை வாய்ப்புப் பெற்ற ஆண்-பெண் ஆகியோர்களைப் பேட்டிகண்டபோது பெருமையுடன் கூறியதாவது:

"உங்கள் பெயர் என்ன?"

"எஸ். என். மோகனவல்லி"

"உங்கள் சொந்த ஊர்?"

"மதுரை"

"நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?"

"நான் எஸ்.எஸ்.எல்.சி. படித்துள்ளேன்."

"எந்த ஆண்டு படிப்பை முடித்தீர்கள்?"

"நான் படிப்பை முடிக்கவில்லை. படிப்பு என்னை முடித்துக்கொண்டது!"

"பொருள் புரியவில்லையே? என்ன சொல்கிறீர்கள்?"

"படிக்க ஆசைதான், பொருளாதாரம் ஒத்துழைக்கவில்லை. குடும்பச்சூழ்நிலை, வறுமைஆகிய காரணங்களால் படிப்பு நின்றுவிட்டது. 1981ஆம் ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.யில் தேர்ச்சி பெற்றேன்."

"இதுவரை வேலை எதற்கும் முயற்சி செய்யவில்லையா?"

"குடும்பச் சூழ்நிலையை முன்விட்டு பாவாடை நாடா செய்யும் தனியார் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்தேன்."

"சுயமாகத் தொழில் தொடங்கலாம் என்ற முடிவுக்கு நீங்கள் எப்படி வந்தீர்கள்?"

"தனியார்கம்பெனியில் தினக்கூலியாக வேலைபார்த்து வந்தேன். மாதத்திற்கு ரூ. 250-வரை கிடைத்தது. தற்செயலாக பேப்பர் ஒன்றில் சுயவேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் ரூ. 25 ஆயிரம் அரசு கடன் வழங்குகிறது என்று அறிந்தேன்.

"மாவட்டத் தொழில் மைய மேலாளர் அவர்களை அணுகி விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்விற்குப்பின் இந்தியன் வங்கி மூலம் பாவாடை நாடா செய்யும் இயந்திரத்தைப் பெற்று பாவாடை நாடா உற்பத்தி செய்து வருகிறேன். இத்தொழில் என் குடும்பத்தொழிலாக இருப்பதால் குடும்பத்தில் உள்ள என் அண்ணன் மற்றும் அம்மா இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தற்போது மாதத்திற்கு அனைத்துச் செலவுகளும் போக அறுநூறு ரூபாய் வரை கிடைக்கிறது.

உள்ள குடும்பச் சூழ்நிலையில் வரதட்சிணை கொடுத்து என் கல்யாணம் நடைபெறுமா என ஏங்கிய காலம் உண்டு. ஆனால் அரசு கொடுத்துள்ள ரூ. 20ஆயிரம் மதிப்புள்ள இயந்திரத்தினால் உற்பத்தியாகிக் கிடைக்கின்ற வருமானத்தைப் பார்த்த பல ஆடவர்கள் என்னைத் திருமணம் செய்துகொள்ள ஆர்வமாக உள்ளனர்" எனக்கூறினார்.

ஆரப்பாளையத்தைச் சேர்ந்த திரு எஸ்.மோகனிடம் உரை எனத் தேடி அலையும் இக்காலத்தில் அரசு வேலையைத் துறந்து சொந்தமாகத் தொழில் துவங்கி வெற்றிநடை போடும் இளைஞர்கள் பலருக்குப் பாரதப்பிரதமரின் சுயவேலைவாய்ப்புத்திட்டம் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குவது தெரிகிறது.

அரசு அலுவலகத்தில் பணியாற்றிய திரு மோகன் தன் வேலையை ராஜினாமா செய்தார். தொழிற்பயிற்சி நிலையத் படித்த படிப்பிற்கும் தற்போது செய்கிற கிளார்க்வேலைக்கும் தொடர்பின்றி இருப்பதை அறிந்து தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆசை இருந்தது.

"அரசு அறிவித்த சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின்படி கனரா வங்கியின் மூலம் ரூ. 20 ஆயிரம் கடன் பெற்று "சுமோ பிளாஸ்டிக் இன்டஸ்ட்ரீஸ்" தொடங்கியுள்ளேன். அரசுவேலையில்மாதம் ரூ. 680 தான் கிடைத்தது. ஆனால் இத்தொழில் மூலம் எல்லாச் செலவுகளும் போக மாதம் ரூ. 1,000 வரை கிடைக்கிறது."


இத்தொழிலின் மீது தங்களின் நாட்டம் செல்லக் காரணம் என்ன என்று கேட்கப்பட்டபோது கூறியதாவது:

"நவீன காலத்தில் விளம்பரங்கள் பலவிதமாக மாறிக்கொண்டு வருகிறது. தற்போது விளம்பர மோகம் பிளாஸ்டிக் மூலம் செய்வதாக உள்ளது. பொருட்காட்சியில் பெயர்ப்பலகை எழுதுவதில் பிளாஸ்டிக் மூலம் செய்வதைப் பெரிதும் விரும்புகிறார்கள். அதிக ஆர்டர் வருகிறது. எங்களால் செய்து கொடுக்க முடியாதநிலையில் உள்ளோம் என்றார்."

மதுரை மாவட்டத்தில் 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 3 கோடி குறியீடாக நிர்ணயிக்கப்பட்டது. வங்கி அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் ஒத்துழைப்புடன் இக்குறியீடானது எட்டப்பட்டது. 2,287 விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 340.975 இலட்ச ரூபாய்க்கு வங்கிக்கு கடன் வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டது.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் 2,124 இனங்களுக்கு ரூ. 313.48 இலட்சங்களுக்கு ஒப்பளித்து, 1425 இனங்களுக்கு ரூ. 191.99 இலட்சங்கள் விநியோகித்துள்ளன.

மாவட்டத்தொழில் மையம், சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தேவைப்படும் வசதிகளை உடனுக்குடன் செய்து கொடுப்பதுடன், உரிமம் பெறுதல், மின் இணைப்பு பெறுதல் ஆகியவற்றுக்குத் தேவையான நடவடிக்கை மேற்கொண்டு அவை விரைவில் கிடைப்பதற்கு ஆவன செய்கிறது. மேலும் இவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பளிக்கும் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்குவதற்கு எண்ணியுள்ளது.



**சிவா சமாதி**

தமிழ்நாடு அரசு, தியாகி சுப்பிரமணிய சிவா நூற்றாண்டு விழாவையொட்டி நினைவுத்தூண் ஒன்றைப் பாப்பாரப்பட்டியில் சிவா சமாதி அருகே நிறுவியுள்ளது. இதனை மகாபலிபுரம் சிற்பக்கல்லூரியைச் சேர்ந்தவர்கள் உருவாக்கினார்கள். இது விரைவில் நடைபெறவிருக்கும் சுப்பிரமணிய சிவா நூற்றாண்டு விழாவில் திறந்து வைக்கப்படும்.


(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)



மதுரை நவநீத கிருஷ்ணசாமி கோயிலில் நடைபெற்ற திருவிளக்கு பூசை.



இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ மதத்தினர் மதுரை மேலமாசி வீதி, வடக்கு மாசி வீதி சந்திப்பில் 19.10.84ல் நடத்திய கூட்டு வழிபாடு.



மாண்புமிகு அமைச்சர் திரு எஸ்.என். இராசேந்திரன் அவர்கள் தலைமையில் பொதுமக்கள் பலர் 14.10.84ல் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சிறப்புப் பிரார்த்தனை நடத்துவதற்காகத் தூத்துக்குடியிலிருந்து பாதயாத்திரை மேற்கொண்டனர்.



நெல்லை சாலைக் குமாரசாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு.

நெல்லை ஜங்ஷன் ஜும்மா பள்ளிவாசலில் 19.10.84 அன்று ஆயிரத்துக்கு மேற்பட்ட இஸ்லாமியர்கள் பிரார்த்தனை செய்தனர்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பக்தர்கள் வேல் குத்தியவாறு, (19.10.84) காவடி எடுத்துப் பிரார்த்தனை செய்தனர்.





திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற திருவிளக்குப் பூசை.




பிரார்த்தனை.



வீட்டு வசதி வாரியததின் சார்பில் சிறப்பு வழிபாடு

சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனை.






தலைமைச் செயலகத்தின் வாயிலில் உள்ள அம்மன் கோயிலில் நடைபெற்ற வழிபாடு.



தலைமைச் செயலகத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது



மயிலை முண்டகக்கண்ணியம்மன் ஆலயத்தில் இசைப் பிரார்த்தனை நடைபெற்றது.



அரசினர் தோட்டத்தில் உள்ள இஷ்டலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு [தமிழரசு அலுவலகத்தார் பங்கு பெற்றனர்]



நாமக்கல், கோட்டை ஆஞ்சநேயர் கோயிலில் பொதுமக்கள் சிறப்பு அர்ச்சனை நடத்தினர்.







வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர் அண்ணா கலையரங்கில் அனைத்துச் சமயத் தலைவர்கள், அரசு ஊழியர்கள், 25-10-84ல் கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர்.

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 29.10.'84 அன்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள இயற்கை விநாயகர் ஆலயத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. இசைக் கலைஞர்கள் திரு வீரமணி, திரு சீர்காழி சிவசிதம்பரம், திரு டி. கே. எஸ், கலைவாணன் மற்றும் குன்னக்குடி திரு வைத்யநாதன் ஆகியோர் இசை-இறை வழிபாட்டில் கலந்து கொண்டனர்.







# இந்தியப் பிரதமர் இந்திராவுக்கு இதய அஞ்சலி

**1984** அக்டோபர் 31.

இந்தியாவுக்கு மட்டுமல்லாது உலகத்துக்கே ஒரு துயர நாளாக அமைந்து விட்டது.

இந்திய மக்கள் தங்கள் இதயத்தில் வைத்துப் போற்றிய சரித்திர நாயகி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இரக்கமற்ற அரக்கர்களால் சுடப்பட்டார்.

தமிழக மக்கள் சார்பில் மேதகு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி ஆர். அவர்கள் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் தங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## ஆளுநர் அனுதாபம்

**மேதகு ஆளுநர் திரு. எஸ்.எல். குரானா அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:**

நமது அன்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தியை நம்மிடம் இருந்து அபகரித்துச் சென்ற அருவருக்கத்தக்க இந்தக் கொலைச் செயலை அதிர்ச்சியினால் திக்குமுக்காடிக் கொண்டு இருக்கும் இந்த நாடே கண்டிக்கிறது.

புயல் போல் சுழன்று வந்து கொண்டு இருந்த அந்த உயிரின் நாடி அடங்கி விட்டது. ''புரட்சிக் கனலில் பூத்து தியாகப் பள்ளியில்'' வளர்ந்த பிரதமர் இந்திரா காந்தி தன் வாழ்நாள் முழுவதையும் இந்தியாவின் பெருமையை நிலைநாட்டவே அர்ப்பணித்தார்.



தாழ்த்தப்பட்ட மற்றும் அந்தஸ்து இன்றி ஒதுக்கப்பட்ட மக்களுக்காக அவர் மனதாரக் கொண்டிருந்த கவலையும், நாட்டின் பொருளாதார உயர்வுக்காக அவர் அயராது பாடுபட்ட முயற்சியும், இந்த நாட்டு மக்கள் எல்லோராலும் என்றும் பாராட்டப்படும்.

கூட்டுச்சேரா நாடுகள் இயக்கத்தை தலைமை தாங்கி சிறப்பிடம் அடைய அவர் செய்த செயல்கள், நாடுகளுக்கு இடையே ஒற்றுமையை வளர்க்க அவர் பட்ட பாடுகளை வருங்காலச் சந்ததியினர் நிச்சயம் நினைவில் இருத்திக்கொள்வார்கள்.

நாட்டு மக்கள் அனைவருடைய மன வலிமையுடன் வன்முறையையும்பிரிவினையையும்கண்டிக்க முன் வந்தால் அதுவே பிரதமர் இந்திராவின் நினைவுக்காக அவருடைய தகுதிக்கு இணங்க நாம் பெரிதும் அளிக்கும் பாராட்டாகும்.

### மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்

''இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவலராகவும் இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் இந்திய நாட்டின் ஏகப் பிரதிநிதியாகவும் விளங்கி வந்த இந்தியப் பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திராகாந்தி அவர்கள் மிருகவெறி கொண்ட - காட்டுமிராண்டித்தனமான கயவர்களால் படுகொலைக்கு ஆளானார்கள் என்ற துக்ககரமான செய்தி பேர் அதிர்ச்சியையும், ஆற்றொணாத் துயரத்தையும் அளிக்கிறது.

இந்திய நாடே தாயை இழந்த சேயைப் போல் கண்ணீர் விட்டுக் கதறி அழுது கொண்டிருக்கிறது.

துக்கத்தில் திகைத்து நிற்கும் மக்களைத் தேற்ற வழி ஏதுமில்லை. உலகம் முழுவதும் புகழ் ஒளி பரப்பிக் கொண்டிருந்த சுடர் விளக்கு அணைந்து விட்டது. எங்கணும் துக்க இருள் சூழ்ந்து இருக்கிறது.

திருமதி இந்திராவின் பேரிழப்பை நாட்டு மக்கள் அனைவரும் காட்டும் உறுதியாலும், கட்டுப்பாட்டாலும், கடமை உணர்வாலும் மட்டுமே ஓரளவுக்குச் சமாளிக்க முடியும். கவலையும் துயரமும் ஆட்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், பொது மக்கள் நிதானத்தை இழக்காமல் வன்செயல்களுக்கு இடம் தராமல் உறுதியுடன் இருந்து நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டியது முக்கியக் கடமையாகும்.



திருமதி இந்திரா காந்தியை இழந்து வருந்தும் ராஜீவ் காந்தி அவர்களுக்கும், உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது இரங்கற் செய்தியில் கூறியுள்ளார்.

### மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன்

''உலகத்தின் தலைசிறந்த பெண்மணியும், உலக மக்களின் போற்றுதலுக்குரிய மாபெரும் தலைவரும், இந்தியத் துணைக் கண்டத்தின் ஈடு இணையற்ற பிரதமரும் ஆன இந்திரா காந்தி அவர்கள் கொடிய சக்திகளின் தூண்டுதலால், காட்டுமிராண்டித் தனமாகச் சுட்டுப் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு இருப்பது 70 கோடி இந்திய மக்களின் இதயத்திலும் நெருப்பைக் கொட்டியுள்ளது.

உலகத்தின் மாபெரும் ஜனநாயக நாடான இந்தியாவைச் சமதர்மச் சாலையில் நடத்துவதற்கு அவர் ஆற்றி வந்த பணி வெற்றிப் பாதையை நோக்கி முன்னேறும் நேரத்தில் இக்கொடிய கொலை வெறிக்கு ஆளாகி விட்டார். இந்த நூற்றாண்டில் சந்தித்த மாபெரும் தலைவர்களில் முகத்தான மக்கள் தலைவராக அவர் இருந்தார்.

தீரமும், உறுதியும், மக்கள் சேவையும் ஒருங்கே இணைந்த ஆற்றல்மிக்க தலைவியாகத் திகழ்ந்தார்.

தமிழக முதல்வர் உடல் நலம் குன்றிய நேரத்தில் நேரில் வந்து ஆறுதல் கூறிய தாயுள்ளங் கொண்ட தலைவியைப் பறித்து விட்டார்கள்.

மனித குல வரலாற்றில் இக்கொடுமையான செயல் அழிக்க முடியாத கறையை ஏற்படுத்தி விட்டது.

இதுபோன்ற கொடுமைகள்-காட்டுமிராண்டித் தனமான செயல்கள் நடைபெற விடாமல் தடுக்கும் முயற்சியில் மனித சமுதாயம் ஈடுபட வேண்டும்.


இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள 70 கோடி மக்களும், இந்திராவின் உயிரைப் பறித்த கொடுமையான செயலுக்குக் கண்ணீரால் கழுவாய் தேடுகிறோம்.''

இவ்வாறு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தமது இரங்கற் செய்தியில் கூறியுள்ளார்.

### தமிழ்நாட்டில் 12 நாள் துக்கம்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தமிழக அரசு 12 நாள் துக்கம் கடைப்பிடிக்கிறது.

இந்த 12 நாட்களும் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும். அரசாங்க விழாக்கள் எதுவும் நடைபெறாது.







## மேதகு குடியரசுத் தலைவர் பிரார்த்தனை

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நலத்தை விசாரித்து மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் அவர்கள், 25-10-84 அப்பல்லோ மருத்துவமனை டாக்டர் பி.சி. ரெட்டியிடம் தொலைபேசியில் பேசினார். "முதல்வர் எம்.ஜி.ஆர். விரைவில் பூரண குணம் அடைய என் நல்வாழ்த்துக்களையும், பிரார்த்தனையையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மேதகு குடியரசுத் தலைவர் அன்று, பிரதாப் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மாண்புமிகு பிரதமர் பிரார்த்தனை

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் உடல் நலமின்றிச் சிகிச்சை பெற்று வரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உடல் நலம் பற்றி விசாரிப்பதற்கென்றே 16.10.84 அன்று சென்னை வந்திருந்தார்.

"உங்கள் உடல் நிலை வெகு சீக்கிரத்தில் குணம் அடைய வேண்டும் என்று என் வாழ்த்துக்களையும், பிரார்த்தனையையும் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா மருத்துவர்களும் உங்களுக்குச் சிறந்த சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்த நாடே நீங்கள் விரைவில் நலம் பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறது" என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பார்த்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி - ஐப்பசி 15
மலர் : 15 1-11-1984 இதழ் :


## மேதகு ஆளுநர் வேண்டுகோள்

"முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் குணம் அடைந்து முன்புபோலப் பணியாற்ற வர வேண்டும். இதற்காக அனைவரும் சாதிமத வேறுபாடின்றி அனைத்து மதத்தைச் சார்ந்த வர்களும் பிரார்த்தனை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்" என மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவ[illegible] அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள் ··· அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வந்திருந்த அமெரிக்க டாக்டர்கள்

ஜப்பானிய டாக்டர்கள்







அன்னை இந்திரா காந்தியின் இறுதி யாத்திரை (3.11.84)



பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் உடல் சாந்தி வனத்தில் எரியூட்டப்படுதல் (3.11.84)



## தமிழுக்கு மரியாதை தந்த தாய்!



“இந்த மாநாட்டுக்கு வரவேண்டும் - வாழ்த்துக் கூறவேண்டும் என்றும், தமிழக மக்களின் அன்பை அவர்கள் காண வேண்டும்-தமிழகம் அவரை எப்படி மதிக்கிறது என்பதைத் தொடர்வதற்காக மீண்டும் ஒரு நல்ல வாய்ப்பை அவர் காணவேண்டும் என்று விரும்பிய எங்கள் உள்ளத்தைப் புரிந்து கொண்டு தமிழுக்கு மரியாதை - உயர்வு - பாராட்டு என்ற வகையில்-இன்று எத்தனையோ வேலைகள் இருந்தாலும் உலகப் பிரச்சினைகள் இருந்தாலும்-தமிழகத்துக்கு வந்து தமிழ் மொழிக்குத் தரவேண்டிய மரியாதையைத் தரவேண்டும்-மாநாடு நடத்துபவர்களைத்-தமிழ் அறிஞர்களை வாழ்த்த வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற முனைப்போடு பிரதமர் அவர்கள் இன்று இங்கு கலந்து கொள்வதை எண்ணி எண்ணி நான் உள்ளம் பூரித்து மன நெகழ்ச்சியோடு நின்று கொண்டிருக்கிறேன்.

“இது ஏதோ முகஸ்துதியாகவோ - ஏதோ பாராட்டுவதற்காகவோ சொல்கிற வார்த்தை அல்ல. அவர்கள் தாயாக இருப்பது மட்டுமின்றி இந்த நாட்டின் தலைவியாகவும் இருப்பதை எண்ணி நாம் பெருமைப்படுகின்றோம்.”

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர்

[ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு நிறைவு விழாவில்.]

# வளமும் செழுமையும் வற்றாத தமிழ்

## ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் அன்னையின் பெருமிதம்

"இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற அழகிய நகரில் உலகத் தமிழ் மாநாட்டில் உங்களுடன் இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சங்கப் புலவர்களின் தேர்ந்து தெளிந்த மொழிகளையும் புலமை நயமிக்க காவியங்களையும் பற்றிய நினைவுகளை நம் முன் கொண்டு வருவது மதுரை நகரம்.

பல மொழிகளும் பல கலாசாரங்களும் ஒருங்கே அமையப் பெற்று வரும் நம் பொதுமை சூழ்நிலையில் முக்கிய இடம் பெற்றுள்ள இலக்கியம், கலை, கலாசாரம் பற்றிச் சிந்தித்துக் கூடிப் பேசி ஆலோசித்துப் பல நாட்டு அறிஞர்களும் ஒன்றாகக் கூடுவதற்கு ஏற்புடைய பொருத்தமான நகரம் இந்த மதுரை.

மனிதனின் வாழ்வில் அடிப்படை நியதிகளையும கடமைகளையும் வலியுறுத்தும் பேரிலக்கியமாகவும் சிறந்த நீதி நூலாகவும் உள்ள திருக்குறள் இதை நமக்கு நினைவுறுத்துகிறது.

"திரைகடலோடித் திரவியம் தேடு" என்று அவ்வைப் பிராட்டியார் கூறினார்.

தமிழர்கள் எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி போன்ற நாடுகளுடன் நெருங்கிய வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர்.

வாசனைத் திரவியங்கள், ஏலக்காய், கிராம்பு போன்றவற்றையும் அணிகலன்களையும் தமிழகத்திலிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

கிரேக்க, லத்தீன் அரசர்கள் தமிழக மக்களின் உயர்ந்த பண்பாட்டினைப் பற்றிப் பாராட்டியுள்ளனர்.

தொடக்கக் கட்டத்தில் கிரேக்கர்களும் பிறகு அரபு நாட்டவரும் தமிழக மக்களின் பன்னாட்டு வர்த்தகத்துக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தந்தனர்.

தமிழில் இருந்து கிரேக்கர்கள் கடன் வாங்கிய பல சொற்கள் பின்னர் ஐரோப்பிய மொழிகளில் புகுந்துள்ளன.

ரோம் நாட்டைச் சேர்ந்த பழைய நாணயங்கள் மதுரையில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டன.

இதிலிருந்து மதுரையில், கிரேக்க-ரோம குடியிருப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பது தெளிவாகிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய புறநானூற்றுப் புலவர் இந்தப் புதுமைக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்.

தொன்மையும் வளமையும் மிக்க ஒரு மொழி தமிழ்.

இந்திய மொழிகளில் பேசப்படும் மொழிகளுக்குப் பெரிதும் மாறுபடாத நிலையில் எழுதப்பட்டு, பண்டைய பேரிலக்கியத்தில் அமைக்கப்பட்டு இன்றும் பேச்சு வழக்கு உள்ளதுமான ஒரே மொழி தமிழ்தான்.

கவிதை நயம் பொருந்திய தமிழ், பல நாட்டுத் தொடர்புகளையும் பெற்றிருந்தது.



குறுகிய மனப்பான்மையை வெறுத்து ஒதுக்க எனக்குச் சிறு வயதிலிருந்து போதிக்கப்பட்டு வந்தது.

வடக்கில் பிறந்த நான் கிழக்கிலும் மேற்கிலும் கல்வி பயின்றேன்.

வாழ்க்கையின் தொடக்கக் கட்டத்திலேயே தென்னிந்தியாவின் பல பகுதிகளில் நான் பயணம் செய்துள்ளேன்.

பொதுமை உணர்வு பெற்றவரை (நேரு) என் தந்தையாகப் பெற்றிருந்தேன்.

தமிழை நான் சில காலம் பயின்ற போதிலும் தமிழில் எனக்குப் பேச முடியாதது குறையாகத்தான் உள்ளது.

இருந்தாலும் 50 ஆண்டுகளுக்கு முன் நான் தமிழ் நாட்டுக்கு முதன் முறையாக வந்த காலத்திலிருந்து இன்றுவரை தமிழைக் கேட்டு உள்ளேன்.

அதன் வளம் - இனிமை – எழிலை நான் வியந்து பாராட்டியுள்ளேன்.

திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதியார் பாடல்கள் மொழி பெயர்ப்புகளைப் படித்து அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்துள்ளேன்.

காமராஜர், அண்ணா, ராஜாஜி, சத்தியமூர்த்தி ஆகியோர் தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்ப்பவர்கள். சமுதாயப் பாகுபாடுகள் நமது வாழ்க்கையைப் பாதித்துக் கூறு செய்துள்ளன.

சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகள் குறித்துத் தமிழ் அஞ்சத் தேவையில்லை.

தமிழின் உறுதியும் வளமும் ஒரு நாளும் பாதிக்கப்படாது. அதன் செழுமை ஒருநாளும் வற்றாது.

ஒரு மொழியின் பாதிப்பில் மறுமொழிக்கு அனுகூலம் என்பது சரியல்ல.

மத்திய அரசின் மொழிக் கொள்கை எல்லா இந்திய மொழிகளுக்கும் அரசியல் மொழிகள் மட்டும் இன்றி, சிறிய மொழிகள் அனைத்தின் வளர்ச்சிக்கும் உதவுவதுதான்.

மத்திய அரசு இந்தியில் மட்டும் தான் அக்கறை கொண்டுள்ளது என்று செய்யப்படும் பிரசாரம் தவறானது.

மத்திய அரசைப் பொறுத்தவரை எல்லா மாநில மொழிகளுடனும் அன்பு கொண்டு இணைப்பு மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று கருதுகிறது, ஆனால் இந்தித் திணிப்பை நாங்கள் விரும்பவில்லை. ஏனென்றால் அதனால் எதிரான விளைவுகளே ஏற்படும்.

[மதுரையில் நடைபெற்ற 5வது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து].






## தமிழக அமைச்சரவை இரங்கல் தீர்மானம்

மறைந்த பிரதமர் இந்திரா காந்திக்கு அனுதாபம் தெரிவிக்கும் இரங்கல் தீர்மானம் ஒன்று தலைமைச் செயலகத்தில் கூடிய [5.11.84] அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறியதாவது:

'மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் முதல்வர் மற்றும் அமைச்சர்கள் சார்பிலும் தமிழக அரசு சார்பிலும் நிறைவேற்றப்பட்டது'.

'பிரதமர் ராஜீவ் காந்திக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மத்திய அரசுக்கும் எங்கள் சார்பில ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'




# அன்புத் தலைவருக்கு அமெரிக்காவில் சிகிச்சை



உடல் நலக் குறைவு காரணமாகச் சென்னையிலுள்ள அப்பல்லோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம். ஜி. ஆர். அவர்களை நேரில் கண்டு நலம் விசாரிப்பதற்காகவே வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், 'மறுபடியும் வந்து பார்ப்பேன்' எனக் கூறிச் சென்றார்.

ஆனால், அதுவே அவரது கடைசித் தமிழகப் பயணமாக இருக்கப் போகிற தென்று அப்போது நமக்கோ-அவருக்கோ தெரியாமலே போய்விட்டது!


பாவிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு விட்டார் பிரதமர் இந்திராகாந்தி.

'யாரோ சில சீக்கியர்கள், வெறித்தனத்தால் அந்தக் கொடூரத்தைச் செய்தார்கள் என்பதற்காக அந்த இனமே வெறித்தனமானது என்று நான் சொல்ல மாட்டேன்' எனக் கூறித் தனது பெருந்தன்மையைக் காட்டிக் கொண்டிருக்கிறார் புதிய இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி.

அந்தக் கொடுமையான கொலைச் செயலை நம்மால் அத்தனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிகிறதா?

தமிழக அமைச்சரவையே ஓர் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியது பிரதமரின் மறைவு குறித்து.

மாண்புமிகு முதல்வர் டாக்டர்எம். ஜி.





ஆர். அவர்களின் துணைவியார் திருமதி வி. என். ஜானகி அவர்கள், ராஜீவ் காந்திக்கு இரங்கல் தந்தியொன்று அனுப்பினார். இதயம் பதறி, அதில் கூறப்பட்டு இருந்ததாவது:

''பிரதமர் இந்திரா காந்தி, கொடியவர்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளாகி மரணம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். நான் அடைந்துள்ள வருத்தத்தை எடுத்துச் சொல்ல வார்த்தைகள் கிடைக்காமல் தவிக்கிறேன்.

''கடந்த 15 தினங்களுக்கு முன்பாகத் தான், என் கணவரைப் பார்த்து உடல் நலம் விசாரிப்பதற்காகச் சென்னைக்கு இந்திரா வந்திருந்தார். என் கணவரின் நிலையைப் பார்த்துவிட்டு, அவர் நலம் பெறத் தேவையான சிகிச்சை அளிப்பதற்கு, எல்லாவிதமான உதவிகளையும் செய்து தருவதாக உறுதி கூறினார்.



''இந்தியாவுக்கு இந்திரா காந்தியின் தலைமை தேவைப்படும் இந்த இக்கட்டான நேரத்தில், அவர் மறைவு ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும்.


''இந்தப் பேரிழப்பைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் இந்திரா காந்தி விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்ற மன உறுதியையும் ஆண்டவன் உங்களுக்கு அளிக்கட்டும்.

''என் கணவர் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''-இவ்வாறு அந்தத் தந்தியில் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிகிச்சைக்கென 5-11-84 அன்று இரவு 10.40-க்கு ஏர்-இந்தியா தனி விமானம் மூலம் அமெரிக்க நாட்டுக்குப் பயணமானார். அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச் .வி. ஹண்டே, மாண்புமிகு முதல்வரின் தனிச் செயலாளர் திரு மு. பரமசிவம், டாக்டர்கள், நர்சுகள் உட்பட மொத்தம் 21 பேர் அவ்விமானத்தில் உடன் சென்றனர்,

தமிழ்நாடு அமைச்சரவை ஒப்புதல் அளித்ததன் பேரிலும், விமானப் பயணம் முதல்வரின் நலத்திற்கு ஊறு விளைவிக்காதென டாக்டர்கள் பரிசோதித்துத் தெரிவித்ததன் பேரிலுமே இந்தப் பயணம் ஏற்பாடாயிற்று.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புறப்படுவதற்கு முன்பாக, அவர் விரைவில் குணம் பெற வாழ்த்தி, பிரதமர் திரு ராஜீவ்காந்தி எழுதிய கடிதமொன்றை மாண்புமிகு மத்திய



உள்துறை அமைச்சர் திரு நரசிம்மராவ், இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு ஜி. கருப்பையா மூப்பனார், வெளி விவகார கொள்கை நிர்ணயக் குழுத் தலைவர் திரு ஜி. பார்த்தசாரதி ஆகியோர் கொண்டு வந்தனர்.

தனி விமானத்தில் சென்னை வந்த அவர்கள் கொண்டு வந்த அக்கடிதத்தில் ''சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லும் தாங்கள் விரைவில் குணமடைந்து திரும்ப வாழ்த்துகிறேன். நேரில் வந்து தங்களை வழியனுப்ப நான் விரும்பியபோதிலும், தற்போதைய சூழ்நிலையில் அது இயலாமல் போனது குறித்து வருந்துகிறேன்'' எனக் கூறியிருந்தார் பிரதமர் திரு ராஜீவ் காந்தி.

அன்றிரவு ஒன்பது மணியளவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆம்புலன்ஸ் வேன் ஒன்றின் மூலம் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

மக்கள் பல்லாயிரக் கணக்கில் விமான நிலையத்திலும், வழிநெடுகிலும் கூடியிருந்து வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தி வழியனுப்பி வைக்க விமான நிலையத்தில் மாண்புமிகு மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா, அவரது துணைவியார் திருமதி இந்திரா குரானா, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு கர்நாடக அமைச்சர் திரு எம். ரகுபதி, அனைத்துக் கட்சிப் பிரமுகர்கள், கலையுலகப் பிரமுகர்கள்; சட்டப் பேரவை-மேலவை-நாடாளுமன்ற உறுப்பினர்களெல்லாம் வருகை தந்திருந்தனர்.

வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு செல்லையாத் தேவர், குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு என்.வி.என்.செல்வம், பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி சுலோசனா சம்பத், மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

எல்லோரது இதய வாழ்த்தோடும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பயணமான அந்த ஏர்-இந்தியா போயிங் விமானம், மீனம்பாக்கம் விமான நிலையத்தை விட்டுச் சரியாக 10.45 மணிக்குப் புறப்பட்டது.

அமெரிக்காவில், நியூயார்க் நகரில் உள்ள 'புரூக்லின் டவுன்ஸ்டேட்' மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிகிச்சை பெறுவார்கள்.

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது முதல் இன்று வரை, அந்த மருத்துவமனைத் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி, அவருக்கு உதவியாக இருந்த டாக்டர்கள் மணி, இராமலிங்கம், மற்றும் தமிழக அரசுஅமைத்த டாக்டர்கள், நர்சுகள் ஆகிய அனைவரும் மிகச் சிறப்பான முறையில் நம் முதல்வருக்குச் சிகிச்சை அளித்தனர். தமிழக மக்கள் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் அவர்களுக்கெல்லாம் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்களும்...

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் குணம் பெறத் தொடர்ந்து பிரார்த்தனை செய்யுங்கள்'' என மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி வி. என். ஜானகி அம்மாள் அவர்களும் இங்கிருந்து பயணமாகு முன் வெளியிட்ட தனித்தனி அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்தனர்.

சென்னையிலிருந்து பம்பாய், லண்டன் வழியாக 24மணி நேர விமானப் பயணத்தின் பின், நியூயார்க் சென்றடைந்தார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர்.

புரூக்லின் மருத்துவமனையில் தீவிர கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர், அங்கு டாக்டர் ஸ்ரீபத்ராவ், டாக்டர் எல்பிரெட்மென் முதலான டாக்டர்கள் மூலம் மிகக் கவனமாகச் சிகிச்சை பெற்று வருகிறார்.

— அ. மருது



# அமரர் இந்திரா





# அன்னை இந்திராவின் மறைவுக்கு அறிவுலகின் இரங்கலுரை

பேராசிரியர் டாக்டர்
**பொ. பா. சுந்தரேசன்**
துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக் கழகம்

உலக வரலாற்றுடன் ஒருங்கிணைந்த பாரத துணைக்கண்ட வரலாற்றின் ஒரு நூற்றாண்டின் முடிவு நிலையில் நாம் இன்று இருக்கிறோம்.

பாரதியார் கனவு கண்டு, மகாத்மா காந்தி பெற்றுத் தந்து நேரு அடித்தளம் இட்ட சுதந்திர இந்தியாவை ஆக்க வழியில் செயல்படுத்திய அன்னை இந்திராவைவிட சமூகத்திற்கு மேலும் தொண்டு செய்ய விடாமல் மறைய வைத்தது நமக்கு ஒரு பேரதிர்ச்சி!

அன்னை இந்திராவின் நேரடிப் பார்வையில் இருந்த தேசிய அறிவியல் - தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தில் பணி புரிந்து அவரிடம் பழகும் வாய்ப்பு எனக்கு இறைவன் கொடுத்த பெரும் பேறு.

மேலை நாடுகளின் அறிவியல்-தொழில் நுட்ப வளர்ச்சிகளைக் கண்டு அவர் வியந்தார். தொன்று தொட்டு காலக் கட்டங்களில் முதிர்வடைந்த இந்திய சமுதாயத்தின் பழமை, பெருமைப்பண்புகள் புதிய வளர்ச்சிகளால் பாதிக்கப்படாதவாறு காக்க வேண்டுமென்று நினைத்தார். நம் முன்னோர் விட்டுச் சென்ற சிற்பங்கள், ஓவியங்கள், தாஜ் மகால் போன்ற கலைக் கூடங்கள் மாசு படாதவாறு தொழில் வளம் பெருக வேண்டுமென்று கவனித்தார். நம் நாட்டிற்கே உரித்தான பயிரின மற்றும் உயிரினங்கள் அழிக்கப்படாமல் பசுமையான சூழ்நிலையில்தான் மனிதனின் மேன்மையான எண்ணங்கள் மலரும் என்று கருதினார்.

தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளுடன் போட்டியிட்டு, நம் நாட்டின் உயிர்க்கோடிகளையும் ஆன்மாவையும் அழித்துவிடாமல் காக்க இந்தியப் பண்பாட்டுடன் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் வேண்டும் என்ற தொலை நோக்கப் பார்வை அன்னை இந்திராவிடம் தெரிந்தது.

மக்களின் வாழ்க்கைத்தரம் (Quality of life) உயர்த்தப்பட தொழில் வளர்ச்சி வேண்டுமென்று வற்புறுத்தினார். சுருங்கச் சொன்னால் வளர்ச்சி மட்டும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாது என்று எண்ணி இந்த நாட்டு மக்களின் பசி போக்கி, தூய நீர், காற்று உட்கொண்டு இயற்கையுடன் ஒன்று கலந்த ஓர் உயர்ந்த நிலைக்கு அறிவியலும்-தொழில் நுட்பமும் பயன்படத்தக்க ஒரு வளர்ச்சியை இந்திய மக்கள் உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்று அடிக்கடி சொன்னார்.

காலத்திலும் - தூரத்திலும் அவருக்கு மிக அருகில் இருந்த நம்மால் இந்தத் தொலைநோக்கு பார்வையை முழுமையாக மெச்ச இயலவில்லை. வரலாற்று ஏடுகளில் அவருடைய குறிக்கோள் சிந்தனைகள் எழுதப்படும்போது அன்றைய சமுதாயம் இப்படிப்பட்ட தலைவியையா குண்டடிபட்டு உயிர் நீக்கச் செய்தது என்று சொல்லத்தான் போகிறது. அதற்கு நாம் தலை குனியத்தான் வேண்டும்.

அவரது தந்தை நேரு தனது இறுதி உயிர் விருப்பில் (will) தானிறந்தபின் தன் உடலின் சாம்பல் இந்தியத் துணைக் கண்டத்தின் நிலம், நீர், மலை, கடல், ஆறு, வயல்கள் எல்லாவற்றிலும் தூவப்பட்டு இந்திய மண்ணுடன் இரண்டறக் கலக்க வேண்டுமென்று விரும்பினார்.

இன்று அத்தகைய பெருந்தலைவரின் ஒரே மகளின் இரத்தம் இந்தப் பாரதத் துணைக் கண்டத்தின் தலைநகரில் சிந்தியுள்ளது. அந்த இரத்தம் 70 கோடி மக்களின் கண்ணீரில் கலந்து இந்த நாட்டின் பட்டி தொட்டிகளை எல்லாம் தூய்மைப் படுத்த இறைவன் அருள் புரியட்டும்.

## ஐ. நா. பாதுகாப்பு மன்றம் தீர்மானம்

**"இந்தியப் பிரதமர் என்ற முறையிலும், அணி சேரா இயக்கத்தின் தலைவர் என்ற வகையிலும் இந்திரா காந்தி தன்னை அமைதிப் பணியில் முற்றிலுமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்"**

—ஐ. நா. பாதுகாப்பு
மன்றத் தீர்மானம்



# வெற்றி தேடித் தந்த ஜவகரின் செல்வி


## கவிஞர் கண்ணதாசன்

இந்திய மலைகள் தோறும்
இந்திரா பேர்கேட் டாயா!
இந்திய நதிகள் எங்கும்
எதிரொலி கேட்கின் றாயா!
இந்தியக் கடல்கள் முற்றும்
இயங்கிடும் இசைகேட் டாயா!
இந்தியா இந்தி ராவே
இந்திரா இந்தி யாவே!

நல்லரசு அமைத்தாள்; மக்கள்
நலனெலாம் சமைத்தாள்; அன்று
கொல்புலி அணையா ளாகிக்
கொடுத்தனள் வங்கம் வாழ!

வல்லரசு என்றே இந்த
வையத்தில் பரத நாட்டை
நில்லென வைத்தாள்; எங்கள்
நிகரிலா ஜவகர் செல்வி!

பலகோடிக் கால்கள் செல்லும்
பாதையும் ஒன்றே கண்டோம்!
பலகோடிக் கண்கள் பார்க்கும்
பார்வையும் ஒன்றே ஆனோம்
விலைகோடி கொடுத்தோ மேனும்
வெற்றிமேல் வெற்றி கண்டோம்!
சிலைகோடி வைத்தால் கூட
செல்விக்கு ஈடா காது!





# உலக ஏடுகள் கண்ணீர்!

பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதை உலகப் பத்திரிகைகள் கண்டனம் செய்து தலையங்கங்கள் தீட்டியுள்ளன.

"பேராற்றல் மிக்க தலைவரை இந்தியா இழந்து விட்டது" என்று "தி யு.எஸ்.ஏ" என்ற அமெரிக்க நாளிதழ் கூறியுள்ளது.

"துயரம் நிறைந்த இந்தக் கொடுமையை இந்தியா தாங்கிக் கொள்ளும். ஒருவேளை இதன் மூலம் புதிய படிப்பினையையும் அது கற்றுக் கொள்ளும். மாபெரும் தேசங்களுக்குக் குண்டு துளைக்காத ஆட்சி முறை தேவை" என்று 'நியூயார்க். டைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

"இந்திய ஜனநாயக அமைப்பு நிலை பெறுவது உலகத்தின் ஆரோக்கியத்திற்கு அவசியமானது" என்று 'தி டெய்லி நியூஸ்' கருத்து தெரிவித்துள்ளது.

"பயங்கரவாதிகளின் வெறித் தாக்குதல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் நிலையில் ஜனநாயகங்கள் இல்லை என்பதைக் காட்டும் மற்றொரு நிகழ்ச்சியே திருமதி இந்திரா காந்தியின் படுகொலை" என்று "நியூயார்க் போஸ்ட்' கூறியுள்ளது.

"இந்து-சீக்கியர் வெறுப்புணர்வைத் தணிப்பதற்குத் தனது தாய் கூறிவந்த மனப்புண்ணை ஆற்றும் நடவடிக்கையை மேற்கொள்வதுதான் ராஜீவ் காந்திக்கு முதலாவது பரிசோதனையாக இருக்கும்" என்று 'பிலடெல்பியா என்கொயரர்' குறிப்பிட்டுள்ளது.



"இந்திரா காந்தி இல்லாத இந்தியா" என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டிய 'டைம்ஸ்' பத்திரிகை, மார்க்கரெட் தாட்சர், போப்பாண்டவர், ரொனால்டு ரீகன் ஆகியோரைக் கொலை செய்ய நடந்த முயற்சி பற்றிக் குறிப்பிட்டு, "இந்தத் தடவை கொலையாளிகள் புதுடில்லியில் உலகத் தலைவர்களில் ஒருவரான இந்திரா காந்தியின் உயிரைப் பறித்துவிட்டார்கள், இதன் மூலம் இந்திய ஜனநாயகத்துக்குப் புதிய நெருக்கடியை உருவாக்கி விட்டார்கள்" என்று கவலை தெரிவித்துள்ளது.

திருமதி இந்திரா காந்தி படுகொலை மற்றும் அவரது அரசியல் பற்றிய செய்திக்கு 8 பக்கங்களை 'டைம்ஸ்' ஒதுக்கியிருந்தது.

"அசாதாரணமான ஒரு தலைவரின் முடிவையும் உலகில் மிகப் பெரிய ஜனநாயகம் அபாயம் நிறைந்த அரசியல் பாதையில் அடி எடுத்து வைப்பதையும், திருமதி இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டது குறிக்கிறது" என 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' கூறியுள்ளது.

"அவர் ஓர் உலகத் தலைவர். இந்தியாவின் மாபெரும் தலைவர்களில் ஒருவராக வரலாற்றில் அவர் இடம் பெறுவார்" என்று இலங்கை அரசு கட்டுப்பாட்டிலுள்ள 'டெய்லி நியூஸ்' பத்திரிகை குறிப்பிட்டது.

"இந்திரா காந்தியின் மரணம் தெற்கு ஆசியாவையே அதிர்ச்சி அடையச் செய்து விட்டது" என்று அங்குள்ள 'தி சன்' பத்திரிகை கூறியுள்ளது.

"அவர் உயிரோடு இருந்தவரை நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் அவரது செல்வாக்கு நமக்கு உறுதி அளிப்பதாக இருந்தது. நமது ஆட்சியுரிமையை அவர் மதித்தார். பாக் ஜலசந்தியில் தீரச் செயல் எதையும் நடத்தாத அளவுக்கு முதிர்ச்சி பெற்றவர் அவர். இந்தியாவில் நிலவும் நிச்சயமற்ற தன்மை இலங்கையிலும் சோதனைகளை ஏற்படுத்தலாம்" என்று 'தி டெய்லி நியூஸ்' கருத்து தெரிவித்துள்ளது.

"திருமதி இந்திரா காந்தி 'ஆசியாவின் பாதுகாவலர்" என்று இலங்கை கம்யூனிஸ்ட் பத்திரிகையான 'அத்தா' (உண்மை) வர்ணித்துள்ளது.

பிரதமர் இந்திராகாந்தியின் மரணம் குறித்து வருத்தம் தெரிவித்து பாகிஸ்தான் பத்திரிகைகள் தலையங்கம் தீட்டியுள்ளன.

"அவரது படுகொலை இந்தியாவை நிலைகுலைய வைத்துவிட்டது. அவரது தந்தை ஜவஹர்லால் நேரு மரணத்தை விடவும் அதிக பாதிப்பை இந்திரா காந்தியின் மறைவு ஏற்படுத்தும்" என்று 'டாண்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

"இந்திரா காந்தியைப் போன்று செல்வாக்கும் தகுதியும் நிறைந்த ஓர் தலைவரை இந்தியாவில் இப்போது காண முடியவில்லை" என்று 'நவாயி வக்த்' என்ற உருது பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

"நாட்டுக்கு வெளியே கட்டவிழ்த்து விடப்பட்ட இந்திய விரோதப் பிரச்சாரத்தின் இறுதி விளைவே திருமதி இந்திரா காந்தியின் படுகொலை" என்று சோவியத் பத்திரிகையான 'சோவெத்ஸ்கயா ரோஸ்ஸியா' குறிப்பிட்டுள்ளது.

## இந்திரா பெற்ற விருதுகள்

அன்னை இந்திரா காந்தியை அணி செய்த பட்டங்கள் ஏராளம், எண்ணற்றவை. ஒப்பற்ற கவுரவ பட்டங்கள் பல ஓடிவந்து அவரை ஒட்டிக் கொண்டன.

பங்களாதேஷ் நெருக்கடியில் பாங்கான தலைமைக்காக 1972ல் அன்னை இந்திராகாந்திக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.

பங்களாதேஷை விடுவித்ததற்காக, மெக்சிகன் அக்காதமி விருது அதே ஆண்டில் வழங்கப்பட்டது.

உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டுப் பதக்கத்தை 1973ல் பெற்றார்.

1976ல் அமெரிக்காவின் 'அன்னையர் விருதி'னைப் பெற்றார்.

1967, 1968ஆம் ஆண்டுகளில் யேல் பல்கலைக்கழகம் ஹொலந்து நினைவுப் பரிசளித்துக் கவுரவித்தது.

1971ல் பிரெஞ்சு நிறுவனம் நடத்திய பொதுமக்கள் கருத்துக் கணிப்பு, புகழ் மிக்க பெண்மணி இந்திரா காந்தி எனத் தெரிவித்தது.

அதே ஆண்டில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட கேலப் வாக்கெடுப்பு உலகத்திலேயே மிகப் புகழ்வாய்ந்த நபர் இந்திரா காந்தி என நிறுவியது.

1982 ஆகஸ்ட் 2ல் கிழக்கு-மேற்கு உறவுக்கான ஊதாண்ட் விருது நியூயார்க்கில் வழங்கப்பட்டது.

## பயிற்றுவித்த ஆசிரியர்களின் பாராட்டுகள்



இந்திரா, புனாவில் ஒரு பள்ளியில் படித்துவந்தார். அந்தப் பள்ளியை நடத்தி வந்த திருமதி வக்கல், சிறு வயதிலேயே இந்திராவிடம் காணப்பட்ட ஆர்வத்தையும் சுறுசுறுப்பையும் பற்றிக் கூறியுள்ளார்.

"அந்த வயதில் இந்திரா சுறுசுறுப்பாகவும் சிரத்தை மிக்கவளாகவும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டவளாகவும் படபடப்பற்ற அமைதியான மனநிலையுடையவளாகவும் இருந்தாள். தன் கையால் வேலை செய்வதை இந்திரா என்றுமே அவமானமாகக் கருதியதில்லை."

இந்திரா கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்அவர்களின் சாந்திநிகேதனத்தில் பயின்றுவந்த போது, அவரது பேராசிரியர் ஒருவர் சூட்டிய புகழ்மாலை:

"சாதாரண உடையணிந்து எளிமையான தோற்றமளித்த இந்திரா என்னை மிகவும் கவர்ந்தாள். தனக்கென்று தனிச் சலுகைகள் எதுவும் எதிர்பார்ப்பதேயில்லை. பிறருக்குச் சமமாகவே தன்னை நினைத்துக்கொள்வதில் மகிழ்ச்சியுற்றாள். தன் உடைகளைத் தானே துவைத்துக் கொண்டாள். தன் படுக்கையைப் போட்டுக் கொண்டாள். காலையில் தினம் பிரார்த்தனைக் கூட்டத்திற்குத் தவறாமல் வந்தாள். அவளது நடத்தையில் குற்றமே கண்டுபிடிக்க முடியாது. வீட்டுப்பாடத்திலும் வகுப்புப் பாடத்திலும் எப்போதும் தீவிர கவனம் செலுத்தினாள். சரியான விடைகளை எழுதி அவள் எல்லாப் பரீட்சைகளிலும் நல்ல மார்க்குகள் எடுத்தாள். தந்தையின் கையெழுத்தைப் போலவே அவளுடைய கையெழுத்தும் மணிமணியாக இருக்கும்."

# அனைத்துக் கட்சியினர் அஞ்சலி!

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு அனைத்துக் கட்சிகளின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் மாபெரும் அமைதி ஊர்வலமும், இரங்கற் கூட்டமும் சென்னையில் 4-11-84 ஞாயிறன்று நடை பெற்றன.

அன்று மாலை தேனாம்பேட்டை காமராசர் திடலின் அருகிலிருந்து புறப்பட்ட அமைதி ஊர்வலம் அண்ணா சாலை, வாலாஜாசாலை, காமராசர் சாலை வழியாகக் கடற்கரைச் சீரணி அரங்கை அடைந்தது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ்(இ), திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், ஜனதா கட்சி, பாரதீய ஜனதா கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், தமிழரசுக் கழகம், காங்கிரஸ்(ஜெ), கிருஸ்துவ ஜனநாயக முன்னணி, திராவிடர் கழகம் (திருவாரூர் தங்கராசு), அம்பேத்கார் மக்கள் இயக்கம், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, குடியரசுக் கட்சி, தமிழ்நாடு முஸ்லீம் லீக், தலித் மஸ்தூர் கிசான் கட்சி, தேசிய சஞ்சய் மஞ்ச் முதலான பல்வேறு கட்சிகளும் இந்த ஊர்வலத்திலும் சீரணி அரங்கில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்திலும் பங்கேற்றன.

இரங்கற் கூட்டம் தொடங்குமுன், கலைமாமணி டாக்டர் சீர்காழிகோவிந்தராஜன், கலைமாமணி பித்துக்குளி முருகதாஸ் உள்ளிட்ட இசைவாணர் பலரும் பிரதமர் இந்திரா காந்தி மறைவு பற்றிய பாடல் களைச் சோகமயமாகப் பாடினர்.

பின்னர், அனைத்துக் கட்சிகளின் சார்

**சென்னை கடற்கரையில் நடந்த அனைத்துக் கட்சி இரங்கல் கூட்ட மேடையில் தலைவர்கள்**






பில் இரங்கல் தீர்மானம் படிக்கப்பட்டது. இத்தீர்மானத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு எம். பழனியாண்டி படித்தார்.

தீர்மான விவரம் வருமாறு:

'உலக அமைதிக்குப் பாடுபட்டுவந்த தலைவர்களில் தலைசிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தவரும், கூட்டுச் சேரா நாடுகளின் பெருமைக்குரிய தலைவராக விளங்கியவரும், இந்தியப் பெருங்குடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவருமான இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் படுகொலைக்கு ஆளான செய்தி நம் அனைவரையும் துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. இதிலிருந்து மீள முடியாமல், அனைவரும் துன்பக் கடலில் தத்தளித்துக் கொண்டு இருக்கிறோம்.

'மறைந்த இந்திரா காந்தி அவர்கள், பண்டித நேரு பெருமான் ஏற்றி வைத்த ஜனநாயக ஒளிவிளக்கு எக்காரணங்களைக் கொண்டும் அணைந்து போகாமல் இருக்கப் பாடுபட்டு வந்தார்.

'மன்னர்களுக்கு மானியம் அளித்து வந்த முறையை அடியோடு ஒழித்தார். சாதாரண மக்களின் நலன் கருதி, பாங்குகளைத் தேசிய மயமாக்கினார். நலிந்தோருக்கு நல்வாழ்வு நல்க 20 அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

'இலங்கைவாழ் தமிழர்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக அரும் பெரும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டார். எல்லாத் தரப்பினராலும் போற்றத்தக்க வகையில் அறிவுத் திறன், ஆற்றல்திறன், நெஞ்சுறுதி, செயலூக்கம் விடாமுயற்சி போன்ற நற்பண்புகளைச் சிறப்பாகப் பெற்றுத் திகழ்ந்தார்.



'இப்படிப்பட்ட அருமை பெருமைகளுக்கெல்லாம் உறைவிடமாக விளங்கிய இந்திரா காந்தியை, மனிதப் பண்பற்ற - இழிதன்மை கொண்ட கயவர்கள் சுட்டுக் கொன்றது காட்டுமிராண்டித்தனமானது. மிருக வெறித் தன்மை கொண்டது. கண்டிக்கத்தக்கது.

'இந்திரா மறைந்து விட்டாலும் அவர் ஊட்டிய உணர்வுகளும், கொள்கைகளும், தீட்டிய திட்டங்களும் நம் எதிரே நிற்கின்றன.

'நல்வாழ்வு, அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒருமைப்பாடு ஆகியவற்றை நிலை நாட்ட நாம் அனைவரும் ஒருங்கிணைந்து நின்று தொடர்ந்து பாடுபடுவோமாக!

'ஜனநாயகப் பண்புகளையும், முறைகளையும் காப்போமாக. இனம், மதம், சாதி, கட்சி ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் சண்டை சச்சரவுகளைக் களைவோமாக! உலக அமைதிக்குப் பாடுபடுவோமாக!

'இத்தகைய சீரிய உணர்வுகளோடு இந்திராகாந்திக்கு இந்த இரங்கல் கூட்டம் தலைவணங்கி இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

'அருமை அன்னையை இழந்து வருந்தும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இக்கூட்டம் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.'

மேற்கண்ட தீர்மானத்தைத் திரு பழனியாண்டி படித்தார்.

பிறகு அப்பெருங் கூட்டத்தினர் 2 நிமிட நேரம் மவுனமாக நின்றார்கள்.

அதன் பிறகு தமிழகக் காவல் துறை இசைக் குழுவினர் சோக இசையை இசைத்தனர்.

— இராசேந்திரன்



# இந்தியத் தலைவர்களின் இரங்க

திருமதி காந்தியின் படுகொலை தேச பக்தியுள்ள ஒவ்வொரு இந்தியனையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி, நிலைகுலையச் செய்துள்ளது.

நாட்டில் இப்படிப்பட்ட படுகொலை நடைபெறுவதற்கு நாமெல்லாம் வெட்கமும் மிகுந்த வேதனையும் படவேண்டும். நான் அரசியலில் அவரை எதிர்த்து வந்துள்ள போதிலும், நாட்டின் வரலாற்றில் அவர் மிக முக்கிய பணியாற்றியுள்ளார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தப் படுகொலை ஒரு தனிப்பட்ட நபருக்கு எதிராக மட்டும் செய்யப்பட்டதல்ல; நாடு முழுவதற்கும் எதிராகச்செய்யப்பட்டது. இந்தக் கோழைத்தனமான கொலையை நானும் எனது கட்சியிலுள்ள நண்பர்களும் மிகமிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நம்நாட்டின் வரலாற்றில் இது ஒரு துக்ககரமான நாள். வளர்ந்துவரும் இத்தகைய பயங்கரவாதம், நாம் வளர்த்துவரும் ஜனநாயக லட்சியங்கள் அனைத்துக்கும் மிகப் பெரிய அபாயமாக விளங்குகிறது.

மறைந்த பிரதமரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக. அவரது குடும்பத்தினர் அவரது இழப்பைத் தாங்கிக் கொள்ளும் உறுதியும் பலமும் பெற இறைவனிடம் வேண்டிக் கொள்வோமாக.''

**—முன்னாள் பிரதமர் திரு சரண்சிங்**

"திருமதி இந்திரா காந்தியின் படுகொலையை இந்திய மக்கள் அனைவரோடும் சேர்ந்து நானும் கண்டிக்கிறேன். வளர்ந்து வரும் பயங்கரவாதம் பைத்தியக்காரத்தனத்தைவிட வேறல்ல''.

**—ஜனவாடி தலைவர் திரு சந்திரஜித் யாதவ்**

''இந்தக் கோழைத்தனமான செயலை அனைவரும் கண்டிக்க வேண்டும். அவரது ஆன்மா அமைதி பெறுமாக''.

**—முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய்**

''திருமதி காந்தியின் மரணம் நாட்டுக்கும் அணிசேரா உலகுக்கும் பேரிழப்பாகும். நாடு நெருக்கடியான கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவரது மரணம் மேலும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.''

**—காங்கிரஸ் (எஸ்) தலைவர் திரு சரத்பவார்**

''திருமதி இந்திராகாந்தியின் படுகொலையால் தோன்றியுள்ள துயரமான நிலைமையை ஒற்றுமையோடும் அமைதியாகவும் நாடு சமாளிக்க வேண்டும்.''

**—ஜனதா தலைவர் திரு எஸ். எம். ஜோஷி**

''நமது நாட்டில் ஏற்பட்டுள்ள மிகத் துயரகரமான சம்பவம்.''

**—அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சிச் செயலர் திரு எஸ். ஏ. டாங்கே**

''திருமதி காந்தி இந்தியாவின் ஐயத்திற்கு இடமில்லாத தலைவர்; உலகத்தின் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவர். இந்தியாவும் உலகமும் அவரிடமிருந்து நிறைய எதிர்பார்த்தன. ஆனால் கடவுளின் திருவுளத்தை மாற்ற முடியாது.''

**—கர்நாடக ஆளுநர் திரு ஏ. என். பானர்ஜி**

''திருமதி காந்தி கோழைத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டது மிகவும் அதிர்ச்சி தருவதாகும். அவர் தனது தந்தை நேருவிடமிருந்து போற்றத்தக்க பல குணங்களைப் பெற்றிருந்தார். மிகக் கடினமான சூழ்நிலைகளைத் தைரியத்துடன் சமாளிக்கும் மிக அபூர்வமான பெண்மணி அவர்.''

**கர்நாடக முதல்வர்**
**திரு ராமகிருஷ்ண ஹெக்டே**



''மகாத்மா காந்தியின் படுகொலைக்குப் பிறகு நம் நாட்டில் பொதுவாழ்வில் நிகழ்ந்துள்ள மிகத் துக்ககரமான நிகழ்ச்சியாகும் இது. பயங்கரவாதத்தை நாம் அனைவரும் தடுத்தாக வேண்டும். இந்தக் கொடூரமான படுகொலையை நாடு தாங்கிக் கொள்ள வேண்டும். ஒற்றுமையாக இருப்பதன் மூலம்தான், நம்மை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை நாம் சமாளிக்க முடியும்.''

**—ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகர்**

"துக்ககரமான சூழ்நிலையில் பிரதமர் துயரமான வகையில் மரணமடைந்திருப்பது ஒரு தேசிய சோக நிகழ்ச்சியாகும். துப்பறியும் இலாகாவால் மிகவும் கவனமான முறையில் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய தனது பாதுகாப்புக் காவலர்களாலேயே பிரதமர் படுகொலை செய்யப்படுவது பரிதாபகரமானதாகும்.

''அவரது மரணம், எல்லா அரசியல் கட்சித்தலைவர்களுக்கும் தங்களது அற்பவேறுபாடுகளைவிட்டு நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டினையும் கட்டிக்காக்க விடப்பட்ட அறைகூவலாகும். அரசியல் வேறுபாடுகளை மறந்து, நாட்டின் ஒருமைப்பாட்டைப் பற்றி நினைப்பதே எல்லா அரசியல் தலைவர்கள் மற்றும் சரியாகச் சிந்திக்கும் மக்களின் பொதுவான அக்கறையாக இருக்க வேண்டும்.''

**காங்கிரஸ் (ஜெ) தலைவர்**
**திரு ஜெகஜீவன்ராம்**

''இன்று நடந்துள்ளது இந்தியாவை நேசிக்கிற, அமைதியைப் போற்றுகிற அனைவராலும் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. சொந்த முறையில் எனக்கிருக்கும் வருத்தத்தோடு, பயங்கரமான இந்த வன்செயலை மற்ற இந்திய மக்களோடு சேர்ந்து நானும் கண்டிக்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடையவும், சங்கடங்கள் நிறைந்த இந்தியாவில் அமைதி மீளவும் பிரார்த்திப்போமாக.''

**—திருமதி மேனகா காந்தி**

''திருமதி காந்தியின் படுகொலை நாடு முழுவதையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அவரோடு நாங்கள் பல கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தோம். எனினும் அவர் பல வழிகளிலும் குறிப்பிடத்தக்க நபர் என்பதை அவரது எதிரிகளும் ஏற்றுக் கொள்வார்கள்.

''தைரியமான முடிவுகள் எடுக்க அவர் தயங்கியதில்லை. அவை சில நேரங்களில் சரியாக இல்லாமல் இருந்திருக்கலாம். பயன்தரும் என்று கருதிய முடிவுகளை அவர் மேற்கொண்டார். அதற்காகப் பலரின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்ள நேர்ந்தது பற்றி அவர் கவலைப்படவில்லை.

''தேசமே துக்கத்திலும் நெருக்கடியிலும் இருக்கும் இந்த நேரத்தில் மக்கள் ஒற்றுமையாக இருக்கவும், அமைதியையும் வகுப்பு நல்லுறவையும் எப்பாடுபட்டேனும் காத்திடவும் பாரதீய ஜனதா கட்சி கேட்டுக் கொள்கிறது.''

**—பாரதீய ஜனதா கட்சித் தலைவர்**
**திரு ஏ. பி. வாஜ்பாய்**



## தீர்க்க தரிசனத்துக்கு ஒரு நேரு

இந்திரா சிறுமியாக இருந்தபோது நேரு பல கடிதக் கட்டுரைகளை அவருக்கு வரைந்திருக்கிறார். ஒரு கடிதத்தில் நேரு குறிப்பிட்டது வருமாறு:

''மன உறுதியுடன் இருந்து விட்டால் நீ எதைப் பற்றியும் கவலைப்படத்தேவை இல்லை. ஒருவருக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. பின்னர் வெட்கித் தலை குனியும்படி எதையும் செய்யமாட்டாய்.

''சின்னஞ் சிறு கண்மணியே, இந்தியாவின் சேவையில் நீ திரமிக்க வீராங்கனையாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்திவிட்டு விடைபெறுகிறேன்.''

நேரு வாழ்த்தியது போலவே, இறுதி வரை வீராங்கனையாக விளங்கி, இந்திய நாட்டுக்காகத் தனது இன்னுயிரையும் இரத்தத் துளிகளையும் வழங்கியிருக்கிறார் இந்திரா.

''திருமதி காந்தியின் மரணத்தால் இந்தியா ஒரு மாபெரும் தேசபக்தரையும் தலைசிறந்த தலைவரையும் இழந்துவிட்டது. ஏறத்தாழ 20 ஆண்டுக்காலம் இந்திய அரசியல் அரங்கில் அவர் மாபெரும் சக்தியாகத் திகழ்ந்தார். அவரது மறைவால் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது''.

**—பாரதீய ஜனதா கட்சிப் பொதுச் செயலர்**
**திரு. எல். கே. அத்வானி**

''இந்தியாவை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நீண்ட காலமாகச் செயல்பட்டு வரும் ஏகாதிபத்திய ஏஜண்டுகளின் ஆதரவு பெற்ற சமூகவிரோத பயங்கரவாதிகளின் செயல் இது என்பது தெளிவு. இப்படிப்பட்ட பயங்கர நடவடிக்கைககள் தொடர்ந்து நடக்க அனுமதிக்கப்படுமானால், குழப்பம்தான் ஏற்படும்.''

**—இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)**



* உலகம் முழுவதும் ஒரு குடும்பமே என்னும் உணர்வுடன் வாழ வேண்டும். இந்தக் கருத்தை இளவயதிலேயே குழந்தைகளின் மனத்தில் பதிக்கச் செய்ய வேண்டியது அவசியம்.

* இந்தியாவில் மேற்கத்திய நாடுகளின் கலாசாரம் மீது மோகம் வளர்வது குறித்தும், சாதிபாகுபாடுகள் புதுக்கோணத்தில் பெருகுவது குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

* விஞ்ஞானமும்,தொழில் நுட்பமும் பொருளாதார வளர்ச்சி வேகமாக ஏற்பட உதவுபவை. நாட்டின் பாதுகாப்பு பத்திரமாக இருந்தால்தான் நாடு முன்னேற்றம் காண முடியும்.

* கல்வியின் பலன் பெருந்திரளான மக்களுக்குப் போய்ச் சேருவதோடு, பின் தங்கிய மற்றும் அடித்தட்டு மக்களின் நிலையை மேம்படுத்துவதாகவும் இருந்தால்தான் அர்த்தமுள்ளதாக இருக்கும்.—திருமதி இந்திரா

''கருப்புச் சக்திகளும் பயங்கரவாதமும் படுகொலை அரசியலும் அரசியல் அரங்கில் நுழைந்து, நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் அழித்து, குழப்பத்தை உண்டாக்கப்பார்க்கின்றன என்பதற்கான எச்சரிக்கைதான் இது. அத்தகைய சக்திகளை அழித்தொழிக்கும் தருணம் வந்துவிட்டது.''

**—இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலர்**
**திரு சி. ராஜேஸ்வரராவ்**

''திருமதி காந்தியின் மரணம் நாட்டுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்''

**—ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர்**
**திரு ஜி. எம். ஷா**

''இது ஒரு கோழைத்தனமான செயல். மிகவும் கவலையளிக்கும் செய்தி. சரியாகச் சிந்திக்கும் மக்கள் அனைவராலும் கண்டிக்கத்தக்கது. இத்தகைய செயல்களை மக்கள் கண்டிக்காவிட்டால், நாம் விரும்பும் ஜனநாயக அரசியல் ஆபத்துக்குள்ளாகிவிடும்.''

**—மேற்கு வங்க முதல்வர் திரு ஜோதிபாசு**

''நாடு இந்த நெருக்கடியான கட்டத்தில் பயங்கரவாதத்துக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.''

**—திரு ஐ. கே. குஜ்ரால்**

''நாட்டை ஒற்றுமையாக வைத்திருக்கத் திருமதி காந்தி பாடுபட்டார். சிறு சிறு வேறுபாடுகளை மறந்து அவரது லட்சியங்களின் அடிப்படையில் நாட்டைக் கட்டிக் காப்பது ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும்.''

**முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர்**
**திரு பி. டி. ஜட்டி**

''பிரதமர் இந்திராகாந்தியின் படுகொலையைக் கேட்டு நான் பெரும் அதிர்ச்சிக்குள்ளானேன். அனைவரும் கண்டிக்கத்தக்க காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் இது. இந்த நெருக்கடியான கட்டத்தில் நாட்டையும் மக்களையும் கடவுள் காப்பாற்றுவாராக! நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்போமாக!''

**—தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்**
**திரு எம். பக்தவத்சலம்**

''சரியாகச் சிந்திக்கும் அனைவராலும் கண்டிக்கத்தக்க கோழைத்தனமான செயல் இது. பிரதமர் இந்திராகாந்தியின் மறைவால் இந்தியா தனது செல்ல மகளை இழந்துவிட்டது; நாடு ஓர் இணையற்ற ராஜதந்திரியை இழந்துவிட்டது. உலகம், அமைதிக்கும் சுதந்தரத்துக்கும் பாடுபட்ட ஒப்பற்றதோர் வீரரை இழந்துவிட்டது. அன்னாரின் குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

**— ஆந்திரப் பிரதேச முதல்வர்**
**திரு என். டி. ராமராவ்**

''நாட்டைப் பத்திரமாக வழிநடத்திச் சென்ற வழிகாட்டி நட்சத்திரத்தை இந்தியா இழந்துவிட்டது. அன்புக்குரிய தலைவரை நாம் இழந்து விட்டோம். உலக அமைதிக்குப் பாடுபட்ட தலைவரை உலகம் இழந்து விட்டது.''

**—மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்**
**திரு க. இராசாராம்**

''இந்தியா முழுவதையும் உலகெங்கும் உள்ள மக்களையும் ஆழ்ந்த துக்கத்தில் வீழ்த்தியுள்ள மிகவும் கோழைத்தனமான செயல்.''

**—மேதகு கேரள ஆளுநர்**
**திரு பி. இராமச்சந்திரன்**

தொகுப்பு :

**டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி**

## முத்திய அமைச்சரவை

## இரங்கல்

புதிய பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை, இந்திராகாந்தியின் மறைவு குறித்துப் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:

''நாட்டின் மாபெரும் தலைவர் பிரதமர் இந்திரா காந்தியின் துயரமிக்க மரணத்திற்கு, இந்த அமைச்சரவைக் கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

''நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் அயராது பாடுபட்டவரின் மறைவால் நாடு முழுவதும் அநாதையாகிவிட்டது. அணி சேரா இயக்கம் ஒரு மாபெரும் தளபதியை இழந்துவிட்டது. உலகம் ஒரு மாபெரும் ராஜதந்திரியைப் பறிகொடுத்து விட்டது. வெளி ஆக்கிரமிப்பும் நெருக்கடியும் சூழ்ந்த மிக இக்கட்டான காலகட்டத்தில் நாட்டுக்கு வழிகாட்டி, ஐக்கியப்பட்ட, பொருளாதாரத்தில் உறுதிப்பட்ட நாட்டை உருவாக்கினார். இன்று இந்தியா தற் சார்பில் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

மறைந்த நமது மாபெரும் தலைவரின் நினைவுக்கு மரியாதை செலுத்தும் அதே நேரத்தில், அவர் தமது இறுதி மூச்சுவரை பாடுபட்ட நாட்டை நிர்மாணிக்கும் மகத்தான பணியில் தொடர்ந்து செல்ல நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

திருமதி இந்திரா காந்தி இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் வாழ்ந்தார். உயிரை விட்டார். அமைதி, வகுப்புகளுக்கிடையே நல்லுறவு, ஒற்றுமை இவற்றைப் பராமரிக்கும்படி நாடு முழுவதையும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்''.

---

*அரசு சிறப்பிதழ்:*

**"இந்திய அரசு, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி 1984 அக்டோபர் 31ந் தேதி புது டில்லியில் காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது" எனறு சிறப்பு அரசிதழ் (கெஜட்) வெளியிட்டது. உள்துறை அமைச்சகச் செயலர் திரு எம்.எம்.கே. வாலி அதில் கையெழுத்திட்டிருந்தார்.**





# 'எனக்கு மட்டுமல்ல நாட்டுக்கே தாய்!'

## -பிரதமர் புகழஞ்சலி

இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு, புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற அவரது மூத்த மகன் ராஜீவ் காந்தி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தி:

''நமது உணர்ச்சிகள் நம்மை மேற்கொள்ளுமாறு நாம் விடக்கூடாது. உணர்ச்சி வசப்படுவது நிதானமிழக்கச் செய்யும்.

''நாடு என் மீது மாபெரும் பொறுப்பைச் சுமத்தியுள்ளது. நாட்டு மக்களுடைய ஆதரவு, ஒத்துழைப்பின் மூலம் மட்டுமே நான் அதனை நிறைவேற்ற முடியும்.

''ஆழ்ந்த துயரம் கொடுக்கும்தருணம் இது. இத்தருணத்தில் நாம் நிதானம் இழக்காமல் இருப்பது மிகவும் முக்கியம். இந்தத் துயரமிக்க இக்கட்டான நிலையை உறுதி, தீரம், விவேகம் மூலம் மட்டுமே சமாளிக்க வேண்டும். அது நம்மால் முடியும்.

''நாட்டின் எந்தப் பகுதியிலாவது நடக்கும் வன்முறையல்லாது வேறு எதுவும் நமது பேரன்புக்குரிய இந்திரா காந்தியின் ஆன்மாவைக் காயப்படுத்தாது. நாம் இந்த நேரத்தில் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் சரியான பாதையில் இருக்க வேண்டியது மிக மிக அவசியம். இந்திரா காந்தி இறந்து விட்டார். ஆனால் அவரது ஆன்மா வாழ்கிறது. இந்தியா வாழ்கிறது. இந்தியா அழிவற்றது. இந்தியாவின் ஆன்மா அழிவற்றது.

''நாடு தன் பொறுப்புகளை உணர்ந்து தனது சுமையை உறுதியுடனும், தீரத்துடனும் தாங்கிக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

''இந்திரா காந்தி, இந்தியப் பிரதமர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவர் எனக்கு மட்டுமின்றி, நாடு முழுவதற்குமே தாயாக விளங்கினார். கடைசி சொட்டு இரத்தம் இருக்கும் வரை அவர் இந்திய மக்களுக்காகப் பாடுபட்டார்.

''இந்தியாவின் அபிவிருத்திக்காக அவர் எவ்வாறு அயராத அர்ப்பணிப்புடன் பணியாற்றினார் என்பதை நாடு அறியும். ஐக்கியப்பட்ட, அமைதியான, வளமான இந்தியா அவரது இதயத்துக்கு எவ்வளவு அருமையாக இருந்தது என்பதை நாட்டு மக்கள் உணர்வார்கள். இந்தியர்கள் அனைவரும் மத, மொழி, அரசியல், வேறுபாடின்றி விரோதமோ வெறுப்போ அற்ற சூழ்நிலையில் ஒரு பெரும் குடும்பமாக வாழும் இந்தியாவை அவர் விரும்பினார். அவரது அகால மரணத்தால் அவரது பணி நிறைவேறாமல் உள்ளது. இந்தப் பணியை நிறைவேற்றி வைப்பது நமது பொறுப்பாகும்.''

## சூரிய சந்திரன் உள்ளவரை!

மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் முகத்தைக் கடைசியாக ஒருமுறை பார்க்க இறுதி ஊர்வலப் பாதையின் இருமருங்கிலும் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் திருமதி இந்திரா மீதான தங்களின் மதிப்பை, தங்கள் அன்பை வெளிப்படுத்த பல வகையான முழக்கங்களை முழங்கினர்.



"இந்திரா காந்தி அமர் ரஹே" என்றும் "தேஷ்கி மாதா இந்திரா காந்தி (இந்திரா இந்நாட்டின் அன்னை) என்றும் பலர் முழக்கம் எழுப்பினர்.

மற்றும் பலர் "ஜப் தக் சூரஜ் சாந்த் ரஹேகா, இந்திரா காந்தி தேரா நாம் ரஹேகா" (சூரியன், சந்திரன் உள்ளவரை இந்திராவின் பெயர் நிலைத்திருக்கும்") என்று வானளாவ முழங்கினர்,



# ஜனநாயக உலகத்தின் இழப்பு..



## அனைத்து நாட்டுத் தலைவர்கள் இரங்கல்

இந்திரா காந்தியின் படுகொலையை உலகத்தலைவர்கள் கண்டித்ததுடன், இந்தியாவுக்கும் அணிசேரா இயக்கத்திற்கும் அவர் வீரமிக்க தலைவராக விளங்கினார். என்று புகழாஞ்சலி செலுத்தினார்கள்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஜியா-உல்-ஹக், ''ஆழ்ந்த அதிர்ச்சியும் துயரமும்'' வெளியிட்டார். ''இந்தியா பாகிஸ்தான் உறவில் திருமதி இந்திரா காந்தி ஒரு நெருக்கடியான தீர்க்கமான பங்காற்றினார்''.

பாகிஸ்தான் அமைச்சரவைகூடி அனுதாபம் தெரிவித்ததுடன், மூன்று நாள் நாடு முழுவதும் துக்கம் அனுசரிப்பதாகவும் அறிவித்தது.

''இந்தக் கீழ்த்தரமான, காட்டுமிராண்டித்தனமான செயல், அந்தக் குற்றம் இழைத்தவர்களின் கோழைத்தனத்தையும் காட்டுகிறது'' என்றார் பங்களாதேஷ் அதிபர் லெப்டினென்ட் ஜெனரல் எச்.எம். எர்ஷத்.

''இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல இது. ஜனநாயகத்தை விரும்பும் எல்லா மக்களுக்கும் ஏற்பட்ட இழப்பு'' என்றது தாய்லாந்து அரசு.

''கோழைத்தனமான படுகொலை. இந்திய மக்கள் ஒரு மாபெரும் ராஜதந்திரியை இழந்து விட்டார்கள்''-டச்சு அரசு.

''இந்தப் பயங்கரத்தை ஆஸ்திரேலிய அரசு கண்டிக்கிறது'' — ஆஸ்திரேலிய பிரதமர் பாப் ஹாக்.

ஆப்பிரிக்க நாடுகள் அதிர்ச்சியடைந்தன. வானொலிகள் தங்களது வழக்கமான நிகழ்ச்சிகளை நிறுத்தி, இந்த மரணச் செய்தியைத் தெரிவித்தன. கீன்யாவின் அதிபர் டேனியல் அராம்மோய், டான்சானிய அதிபர் டாக்டர் ஜூலியஸ் நைய்யரே மற்றும் பலர் தங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

''உலக பயங்கரத்தின் நேரடி விளைவு இது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' — இஸ்ரேல் அரசு.

இரானியப் பிரதமர் முசாலி தனது அனுதாபத்தைத் தெரிவித்தார். ஐக்கிய அரபு எமிரேட்டுகள் அதிபர் ஷேக் சையத் கண்டனம் தெரிவித்தார். ஆறு வளைகுடா கூட்டு நாடுகளின் ஷேக்குகள் இளவரசர்கள் மற்றும் பிரதமர்கள் அனுதாபம் தெரிவித்தனர். குவைத் அதிபர் ஷேக் ஜாபர் அல்-அகமது அல்-சாபா கண்டனம் தெரிவித்தார்.

''இந்தியாவும் உலக மக்களும் ஒரு மாபெரும் தலைவரை இழந்துவிட்டார்கள். அமைதிக்குப் பாடுபட்ட ஒருவரை வன்முறை மீண்டும் பலி வாங்கிவிட்டது''— பிலிப்பைன் அதிபர் ஃபெர்டினான் மார்போஸ்.

''உலகத்தைக் குருதியால் கறைப்படுத்தும் தொடர் வன்முறைகளில் இதுவும் ஒன்று. இந்தச் செய்தி உலகெங்கும் அச்சத்தையும் துயரத்தையும் தோற்றுவித்துள்ளது.'' — போப் ஜான் இரண்டாவது பால்.

''இது இந்தியாவுக்கு மட்டும் ஈடு செய்ய முடியாத இழப்பல்ல. அணிசேரா நாடுகளின் இயக்கத்திற்கும் சர்வதேச சமுதாயத்திற்கும் பலத்த அடி''—இலங்கை அரசு. இந்திரா காந்தி இறந்த செய்தியைச் சொல்ல இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் குறுக்கீடு செய்ததுடன் வழக்கமான நிகழ்ச்சிகளையும் ரத்து செய்தது.

''இந்திரா காந்தியின் மறைவு இந்தியாவுக்கும், உலகத்துக்கும் ஏற்பட்ட இழப்பாகும். இலங்கையில் வாழும் தமிழர்கள் தங்கள் இதயத்தில் இந்திரா காந்திக்குச் சிறப்பிடம் அளித்துள்ளார்கள். அணி சேரா நாடுகளின் தலைவர் என்ற முறையில் ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை ஒளியாக அவர் விளங்கி வந்தார்''—தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் திரு சிவசிதம்பரம்.



## சுயசரிதை எழுதாதது ஏன்?

**''எவர் மனத்தையும் புண்படுத்த விரும்பாததால் நான் சுயசரிதை எழுதவில்லை!''**

**கடந்த 30 ஆண்டுகளாக நெருங்கிப் பழகி வந்த தனது லண்டன் தோழி திருமதி மேரி சேடனிடம் திருமதி இந்திரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

**1977 தேர்தலில் தோல்வியுற்ற பின் 6 அல்லது 7 பதிப்பாளர்கள் சுயசரிதை எழுதுமாறு இந்திராவை வற்புறுத்தியதன் பேரில் அவர் ஒப்புக்கொண்டிருந்தார்.**

**பின்னர் திருமதி இந்திராவுக்கு எதிராக 'ஷா கமிஷன்' அமைக்கப்பட்டது. 3 மாதங்களுக்குப் பிறகு நான் சுயசரிதை எழுதப் போவதில்லை என்று கூறிவிட்டார்.**

**''நான் உண்மையை எழுதவேண்டும். அப்படியானால் பல்வேறு மனிதர்களின் மனத்தைப் புண்படுத்துவதாக அது அமையும். அதனால் சுயசரிதை எழுதாமல் இருப்பதே நல்லது'' என்று இந்திரா கூறியதாகத் திருமதி மேரி தெரிவித்தார்**

''திருமதி இந்திராகாந்தி நீண்ட காலம் இந்தியாவை மிகச் சிறந்த முறையில் வழி நடத்தினார். அவர் இந்தியாவிலும் அணி சேரா இயக்கத்தின் தலைவர் என்ற முறையிலும் மிகவும் மரியாதைக்குரியவராகத் திகழ்ந்தார்'' — ஜப்பானிய அரசு.

''இந்தத் துயரச் செய்தி கேட்டு நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். திருமதி இந்திரா காந்தி ஒரு மிகச் சிறந்த இராஜதந்திரி. சீன இந்திய நல்லுறவின் வளர்ச்சிக்கும் சீரமைப்புக்கும் அவர் பயனுள்ள பணியாற்றியுள்ளார்''—சீன அரசு.

''திருமதி காந்தி ஒரு மாபெரும் தலைவராக விளங்கினார். உலகம் முழுதும் புகழ் பெற்று வந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் அரபு உலகத்துடன் இந்தியாவின் நல்லுறவு மிகச் சிறந்த முறையில் இருந்தது. எங்கள் அனுதாபத்தை இந்திய மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்'' -பஹரைன் அரசு.

''திருமதி இந்திரா காந்தியின் அகால மரணத்தால் சோவியத் யூனியன் அதிர்ச்சியடைந்துள்ளது. மிகச் சிறந்த தலைவருக்கு எதிராகக் கிளம்பியுள்ள குற்றவாளிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் சோவியத் யூனியன் இனங்கண்டு வைத்திருக்கிறது. இந்திரா காந்தியின் புகழமிக்க பெயர் வரலாற்றில் என்றென்றும் வாழும்''- சோவியத் ரஷ்யா.

அமெரிக்காவில் அதிகாலையில் இந்த





அவலச் செய்தி கிடைத்ததும் அலுவலர்கள் அமெரிக்க அதிபர் ரீகனை நித்திரையிலிருந்து எழுப்பிச் சொன்னார்கள். தான் பலமுறைச் சந்தித்தும், உலகப் பிரச்னைகள் பற்றிக் கடிதப் போக்குவரத்தும் வைத்திருந்த திருமதி காந்தியின் மரணம் தனக்குச் ''சொந்த முறையில் ஆழ்ந்த துயரத்திற்குரியது'' என்றார் ரீகன்.

''இந்த மிருகத்தனமான கொலை பற்றி, நான் அதிர்ச்சியும் துயரமும் அடைகிறேன். பயங்கரத்தின் கொடுமை பற்றி நானும் அவரும் அண்மையில் கடிதப் போக்குவரத்து நடத்தினோம். மனித குலத்துக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்த, சுதந்திரம் விரும்பும் நாடுகளிடையே கூட்டுறவைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாங்கள் ஒத்துக்கொண்டோம். மதியீனமான அவரது படுகொலை, நம்மையெல்லாம் எதிர் நோக்கியுள்ள பயங்கரவாத அபாயத்தையே தெளிவாக நினைவூட்டுகிறது. இந்த அபாயத்தை முறியடிக்கும் நமது உறுதியை நாம் மீண்டும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். பிரதமர் இந்திராகாந்தியின் சாதனைகளும் நினைவும் மனித குலத்துக்கு ஊக்கமளிக்கும் சக்தியாக விளங்கி வருவதை உறுதி செய்ய வேண்டும்.''

அதிபர் ரீகன் மாசாசூசெட்ஸ் அவின்யூவில் உள்ள இந்தியத் தூதரகத்திற்குச் சென்று இரங்கல் செய்திப் பதிவேட்டில் கையெழுத்திட்டார்.

**தொகுப்பு : ராஜா**



## தைரியத்தின் திருவுருவம்

தைரியத்தின் திருவுருவமாகத்தான் திருமதி இந்திராகாந்தி திகழ்ந்து வந்தார். சாவைப் பற்றியோ கொலையைப் பற்றியோ அவர் கிஞ்சித்தும் கலங்கியது இல்லை.

*1984 அக்டோபர் மாதம் அயல்நாட்டு நிருபர் ஒருவர் இந்திராகாந்தியைப் பேட்டி கண்டார். உங்களைக் கொல்ல அடிக்கடி முயற்சி நடக்கிறதே? உங்களுக்கு அது அச்சத்தைத் தரவில்லையா?'' என்று கேட்டார்.*

அன்னை இந்திரா உறுதிமிக்க தொனியில் பதிலளித்தார். ''இல்லவே இல்லை. எனக்கு அச்சம் என்பதே இல்லை.

''என்னை அடிக்கடி தாக்குகிறார்கள். ஒருவன் துப்பாக்கியால் குறி பார்த்தான். இன்னொரு சந்தர்ப்பத்தில் டில்லியில் ஒருவன் என்மீது கத்தியை எறிந்தான்.

*1975 மார்ச் 18ந்தேதி அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு வெளியே குண்டுகள் நிரப்பிய ரிவால்வரை வைத்திருந்ததற்காக, கோவிந் மிஸ்ரா என்ற பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டார். ஒரு தேர்தல் வழக்கில் திருமதி இந்திராகாந்தி சாட்சி சொல்ல வந்த சற்று நேரத்திற்கு முன்னதாக இது நடந்தது.*

## சகாப்தம் சாய்ந்தது

ஜவகர்லால் நேரு நைனி சிறைச்சாலையில் இருந்தபொழுது தனது பிரிய மகள் பிரியதர்சினிக்கு (இந்திரா காந்திக்கு)க் கடிதங்கள் எழுதுவது வழக்கம்.

ஒரு கடிதத்தில் நேரு எழுதினார்:

''சரித்திரத்தைப் படிப்பது நல்லதுதான். ஆனால் அதைவிடச் சிறந்தது, அந்தச் சரித்திரம் உருவாக உதவியாக இருப்பது...''

சரித்திரம் படைத்த அந்தத் தந்தை, தன்மகளும் சரித்திரம் படிக்க வேண்டும்; சரித்திரம் படைக்க வேண்டும் என்று விரும்பினார். அவரது எண்ணம் நிறைவேறவே செய்தது.

இந்தியாவின் பிரதமராக இந்திரா காந்தி 1966ல் பதவியேற்றார். சரித்திர நாயகனின் புதல்வி புதிய சரித்திரம் படைக்கத் தொடங்கினார். 18 ஆண்டுகள் அவரது வாழ்க்கை தேசத்தின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தது.



மேடு பள்ளம், சூழ்ச்சிச் சதுரங்கம், கிளர்ச்சிகள் கொந்தளிப்புகள், புயல்கள், பெரும் சூறாவளிகள் . . . . இத்தனையும் சமாளித்த முத்தனைய தலைவருக்கு கொலையாளியின் துப்பாக்கி தோட்டா முற்றுப்புள்ளி வைத்தது.

தரித்திரர்களை ஈடேற்ற இடையறாது பாடுபட்டார், இந்தச் சரித்திர நாயகி! சுக போக வாழ்க்கை அல்ல, அவர் அனுபவித்தது.

சரித்திரத்தின் ஓர் அத்தியாயம் முடிந்தது. இல்லை. சகாப்தம் சாய்ந்தது!



## அப்போ சரிதான்

ஆண்டு 1935. பிப்ரவரி மாதம்.

வங்காளத்தின் கவர்னராக இருந்த சர் ஜே.அண்டர்சன் சாந்திநிகேதனத்தைச் சுற்றிப் பார்த்து வருகிறார்.

பெண்கள் விடுதி நுழைவாயிலில் ஓர் அறையில் மேஜை மீது அழகாகப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறை நேர்த்தியும் அது பராமரிக்கப்பட்டுள்ள விதமும் கவர்னரைக் கவருகின்றன. தற்செயலாக நின்று, அங்குப் புத்தக அலமாரியில் உள்ள புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார் கவர்னர்.

''சோஷலிசத்துக்குப் புத்திசாலிப் பெண்ணின் வழித்துணை'' என்ற பெர்னார்ட் ஷாவின் புத்தகம் கைக்குக் கிடைக்கிறது. அடுத்த புத்தகத்தைப் பார்க்கிறார். இன்னொன்று எடுக்கிறார். எல்லாமே சோஷலிசம் பற்றிய நூல்கள்.

''இந்த ரெட் லேடி யார்?'' என்று பக்கத்தில் இருந்தவர்களிடம் கேட்கிறார் கவர்னர்.

''நேருவின் மகள்'' என்று பதில் கிடைக்கிறது. கவர்னர் கிண்டலாகச் சொல்கிறார். ''அப்போ சரிதான். . . ..!''

## உழைக்கவே பிறந்த உத்தமி



இந்திரா காந்தியின் பாட்டனார் மோதிலால் நேரு லேசுப்பட்டவரா என்ன? ஜவகர்லால் நேருவுக்குத் தந்தையாயிற்றே!

மோதிலால் நேரு ஒரு சமயம் பேத்தி இந்திராவைப் பார்த்துச் சொன்னார்:

''குழந்தை இந்திரா! உலகத்தில் இரண்டு வகை மக்கள் இருக்கிறார்கள். உழைக்கிறவர்கள் ஒருவகை; பேர் தட்டிக் கொள்கிறவர்கள் இன்னொரு வகை. நீ முதல் வகையாக இரு . . . .''

திருமதி இந்திராகாந்தி, ''நான் எப் பொழுதும் இந்த முதல் வகையாக இருக் வே முயன்று வந்துள்ளேன்!'' என்று சான்னார்.

இந்திராகாந்தி மென்மையாகத் தோற் ளிப்பார். அவரது புன்னகை யாரையும் முறுத்தாது. ஆனால் அந்த மென்மை ன உடலுக்குள்ளே உறுதியான ஆன்மா ந்தது. தன்னம்பிக்கையும் அரிய சியல் தீட்சண்யமும் இருந்தன.

அவர் மற்றவர்களிடம் ஆலோசனை ட்பார். ஆனால் சுயமாகச் சிந்தித்து, ாந்த முடிவுக்குத்தான் வருவார்.

## நாட்டுக்காக உயிர்விட்ட தேச சேவகி

"நான் எப்பொழுதும் என்னை ஒரு தேச சேவகியாகவே கருதி வந்துள்ளேன்.. இந்த நாட்டின் மகத்தான மக்களின் வேலைக்காரியாகவும் என்னை நான் கருதிக் கொள்கிறேன்.. என் மீது வைத்துள்ள நம்பிக்கையை நான் நிறைவேற்ற முடியும் என்றே நம்புகிறேன்...''

*1966* ஜனவரி 19ல், முதல்முறையாக காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி திருமதி இந்திரா காந்தியைப் பிரதமர் பதவிக்குத் தனது வேட்பாளராகத் தேர்ந்தெடுத்த சமயம் நன்றி தெரிவித்துப் பேசியபோது அவர் தன்னைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வார்த்தைகள் வீண்போகவில்லை. நாடு அவர் மீது வைத்த நம்பிக்கையை அவர் நல்ல வகையில் நிறைவேற்றி, அந்த அரும்பணியில் தனது நல்லுயிரையும் நாட்டுக்காகவே அர்ப்பணித்து விட்டார்.

அவரது பணியை நினைக்கும்போது உள்ளம் பெருமிதத்தால் விம்முகிறது. அவரது பலியை எண்ணும்போது துக்கத்தால் நெஞ்சம் துடிக்கிறது.

இந்திரா காந்தியின் இணையற்ற சாதனை விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் நிகழ்ந்துள்ளது. ஜவகர்லால் நேருவின் மகள் என்பதற்கிணங்க அவர் அப்பாவின் கனவுகளைத் தப்பாமல் நிறைவேற்றிவிட்டார்.

பசுமைப் புரட்சியின் மூலம் உணவு உற்பத்தியில் சாதனை, அமைதிப் பணிகளுக்கு அணுசக்தி உபயோகம், அணு வெடிப்புச் சோதனை, வானவெளியில் தகவல் தொடர்புக்குச் செயற்கைக் கோள், விண்கலம் செலுத்தும் ராக்கெட் தயாரிப்பு, விண்வெளியில் முதல் தடவையாக இந்தியர்களை அனுப்பல்.. இவையெல்லாம் இதயம் களிக்கும் செய்தியல்லவா!














# தமிழக வருகையின் போது






கல்பாக்கம் அணுமின் நிலையத் தொடக்க விழாவில் (23-7-83)

தமிழகத்தில் நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டபோது (28-3-83)






சென்னைக்குக் கிருஷ்ணா ஆற்றுநீர் கொண்டுவரும் திட்டத் தொடக்க விழாவில் (25-5-83)



சென்னைத் துறைமுகத்தின் விரிவாக்கப் பணிகள் தொடக்க விழாவில் (18-12-83)










## "மம்மி, நான் மேலே போறேன்!"

திருமதி இந்திரா காந்தியின் வாழ்க்கையில் துயரமிக்க சம்பவமொன்று 1980 ஜூன் 23 ஆம் தேதி நடந்தது.

33 வயதுள்ள அவரது இரண்டாவது மகன் சஞ்சய்காந்தி தனது ஒற்றை எஞ்சின் இரட்டை சிட் பிட்ஸ் 2-ஏ விமானத்தில் பயிற்சி மேற்கொண்டார்.

புதுடில்லி சப்தர்ஜங் விமான நிலையத்தை விட்டுக் கிளம்பிய சற்று நேரத்திற்கெல்லாம் அந்த விமானம் விபத்துக்குள்ளாகி நொறுங்கியது. சஞ்சய்க்கு சாவைக் கொடுத்தது. சஞ்சய்யுடன் பயணம் செய்த அவரது நண்பர் கேப்டன் சுபாஷ் சாக்சேனாவும் விபத்தில் மாண்டு போனார்.



அன்றைய தினம் காலை 7.30மணிக்கு பிரதமரின் இல்லம் இருந்த சப்தர்ஜங் சாலையிலிருந்து சில நிமிடங்களில் காரில் சென்று சேரக்கூடிய விமான நிலையத்திற்கு சஞ்சய் புறப்பட்டார். வழக்கமாக அவர், ''அம்மா நான் புறப்படுகிறேன்'' என்றுதான் சொல்லிவிட்டுப் போவார். ஆனால் அன்றைய தினம் மட்டும் ''மம்மி நான் மேலே போறேன்'' என்று சொன்னார். தனது தாயுடன் அவர் பேசிய கடைசி வார்த்தைகள் அவைதான்.

விமானம் நொறுங்கியது. நாடே அதிர்ந்தது. துக்கத்தில் ஆழ்ந்தது. ஆனால் அன்னை இந்திரா நொறுங்கவில்லை. அவரை நெருங்கி ஆறுதல் சொல்ல வந்தவர்களை அவர் தேற்றி அனுப்பினார்.

சொந்தப் பேரிழப்பை - தேசத்தின் பெருநஷ்டத்தைப் பெருந்தன்மையுடன் தாங்கிக் கொண்ட போற்றரும் பெருமாட்டியே இந்திரா காந்தி.

## கவலைக்குக் கைகண்ட மருந்து


அரசாங்க காரியத்தில் ஈடுபடாத போது, மனத்தை இலகுவாக்கிக் கொள்ள அன்னை கடைப்பிடித்த வைத்திய முறை என்ன தெரியுமா?

சாதாரண சின்ன விஷயங்களில் சிந்தை செலுத்துவது. பேரக் குழந்தைகளுடன் விளையாடப் போவார்.

இல்லாவிட்டால் குறுக்கெழுத்து வார்த்தைப் புதிர்களில் ஈடுபடுவார். ஒரு பேட்டியில் இதை அவரே சொல்லியிருக்கிறார்.

''இங்கிலாந்தில் மாணவியாக இருந்த பொழுதிலிருந்தே எனக்கு இந்தப் பழக்கம் உண்டு. கவலைகளுக்கு அது கைகண்ட மருந்து. மிகச் சிறந்த இலக்கிய விளையாட்டுங்கூட.''

இந்திரா காந்திக்கு ஏதேனும் புதிர் தோன்றிவிட்டால் போதும், பக்கத்தில் இருக்கிறவர்களைப் பார்த்து, ''உங்களால் இந்தப் புதிரை விடுவிக்க முடியுமா?'' என்று கேட்பார்.





## ஒற்றுமை உணர்வு கொள்வோம்!

தமிழ்ப்பித்தன்



அன்பெனும் நெறியைத் தந்த
அண்ணலைக் கொன்ற தாலே
எண்ணிலாப் பழிச்சொல் பெற்ற
இந்திய நாடே! அந்நாள்
பண்ணிய பாவம் போக்க
பக்குவ மாயு ழைத்தும்
இன்றொரு பாவம் செய்தாய்
இழிநிலை மீண்டும் பெற்றாய்!

இந்திய நாடே, உன்றன்
இழிபெயர் நீங்கச் செய்து
வந்தனைக் குரிய தாக
மாற்றினார் இந்திரா காந்தி!
சிந்தனை ஒளியில் தோய்ந்த
செயல்மிகு தலைவி தன்னை
பந்தமே மறந்து கொன்றாய்
வற்றிடாக் களங்கம் சேர்த்தாய்!

வியர்வையை, உழைப்பை, மூச்சை;
விழிநிறை உணர்வை உன்றன்
உயர்விுக் காகத் தானே
ஒவ்வொரு நாளும் தந்தார்!
அயர்விலா துழைத்த எங்கள்
அன்னை யார்க்குத் தோட்டா
இயன்றதோர் பரிசாய்த் தந்தால்
இதுதானா நன்றிச் சான்று!

கொடியவர் இடத்துக் கூடக்
குளிர்மனம் கொள்ளல் வேண்டும்
படிந்திடும் விதத்தில் மாற்றிப்
பண்படச் செய்தல் வேண்டும்

தொடர்ந்திடும் பகைமை வேண்டாம்
சொல்லியே சென்றார் முன்னோர்
மடிவது ஒருமு றையே
மனத்தினில் வஞ்சம் ஏனோ?

கடித்திடும் பாம்பு பூரான்
கனன்றிடும் நெருப்பு வட்டம்
இடியொலி, புயலின் வீச்சு,
இருள்நில நடுக்கம், வெள்ளம்,
வெடித்திடும் எரிம லைகள்
வெறுத்திடல் நியாயம் ஆகும்!
கொடிமலர் இடத்துத் தானா
கொடுமையைக் காட்ட வேண்டும்?

வேலியே பயிரை மேய்ந்தால்
விளைச்சலும் என்ன வாகும்?
மேழியே பாம்பாய் மாறின்
பிடிப்பவன் கதிதான் என்ன?
ஆளினைக் காக்கும் கைகள்
அழிவினில் ஈடு பட்டால்
பாழிலே இந்த வையம்
பன்னூ றாண்டு மூழ்கும்!

கற்றவர் இந்திரா என்னும்
கண்மணி, மண்ணில் வீழ்ந்து
குற்றுயி ராகச் சாய்ந்து
குருதியில் குளித்த தெல்லாம்
முற்றிலும் நாட்டுக் காக
முகிழ்த்ததோர் தியாகம் அன்றோ!
ஒற்றுமை உணர்வி னாலே
உவந்தவர் நெறியைக் காப்போம்!



## அண்ணலின் அக்கறை

**பி**ஞ்சுப் பருவத்தில் இந்திரா காந்தி ஒல்லியாக இருந்திருக்கிறார். அவர் மெலிவாக இருப்பதை எண்ணி, அண்ணல் காந்தியடிகள் கவலைப்பட்டிருக்கிறார். அவர் உடல் நலம் தேறிக் காட்சியளித்த போது அண்ணல் பெருமகிழ்ச்சியடைந்திருக்கிறார்.

காந்தியடிகள் எரவாடா சிறையில் இருந்தபோது அங்கே சென்று அவரைப் பார்த்துவிட்டுத் திரும்பியிருக்கிறார் சிறுமி இந்திரா. அந்தச் செய்தியை நேருவுக்கு ஒரு தந்தியின் வாயிலாகத் தெரிவிக்க முனைந்த அண்ணல், ''இந்துவைப் பார்த்தேன். அவள் உடலில் அதிகமான சதையைக் கண்டேன். அவள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள்'' என்று குறிப்பிட்டார்.

## வினாவும் விடையும்



''**நீ**ங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்த பல்வேறு சக்திகள் என்னென்ன?'' -இந்திரா காந்தி அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார் புகழ் பெற்ற எழுத்தாளர் கே. ஏ. அப்பாஸ்.

''என் பாட்டனார் மோதிலால் நேரு, தந்தை ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, தாகூர் ஆகிய நால்வரும் நான் சிறுமியாக இருந்தபோது. என் வாழ்க்கையை உருவாக்கியுள்ளார்கள். எனினும் என்னிடமுள்ள எந்தெந்தக் குணப் பண்புகளுக்கு யார் யார் பொறுப்பு என்று என்னால் வரையறுத்துக் கூற இயலாது''—பிரதமர் இந்திரா இவ்வாறு பதிலளித்தார்.

''தங்களது எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதில் தங்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தால் எம்மாதிரியான வாழ்க்கையை ஏற்றுக்கொண்டிருப்பீர்கள்?'' அப்பாஸ் கேட்கிறார்.

''நான் ஓர் எழுத்தாளராக ஆகியிருப்பேன். அல்லது சரித்திர ஆராய்ச்சியாளராகவோ, மனித வர்க்கத்தைப் பற்றிய ஆராய்ச்சியாளராகவோ ஆகியிருப்பேன்!''

''உங்களுக்கு சோஷலிசத்தில் நம்பிக்கை உண்டா?''—அப்பாஸ் கேட்கிறார்.

''சந்தேகமில்லாமல்! ஆனால் கொள்கைப் பிடிவாதம் கிடையாது. எல்லாவிதமான சுரண்டலையும் ஒழிக்க வேண்டுமெனக் கருதுகிறேன். அதை அடைவதற்குச் சோஷலிசம் ஒன்றே வழி. ஏனெனில் பெரும்பான்மையான மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். வசதி படைத்தவர்கள் அவர்களை வாட்டுகின்றனர். முதலில் இது தடுக்கப்பட வேண்டும். நல்வாழ்வு வாழ மக்களுக்கு உரிமை உண்டு என்று மனப்பூர்வமாக நம்புகிறவள் நான். உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இருந்து விட்டால் மட்டும் போதுமா? அறிவுத் துறையிலும் ஆன்மிகத் துறையிலும் மக்கள் ஏற்றம் காண வேண்டும். மனவளம் பெற்ற பெருவாழ்வு வாழ்ந்தவளாதலால் வறுமையின் காரணமாக மக்கள் நம் கலாசாரத்தின் மேன்மையையும் கலைகளின் சிறப்பையும் நன்கு ரசிக்க முடியாமல் இருப்பதைக் கண்டு எனது மனம் பெரிதும் வாடுகிறது. நம் மக்கள் வாழ்க்கையின் நுண்ணிய உணர்வுகளை நுகர்ந்து இன்புறுவதற்கான சூழ்நிலையைக் கண்டிப்பாக அமைத்துத் தர வேண்டுமென்று விரும்புகிறேன்.''





## தந்தையைப் போலப் பெண்

"**தா**யைப் போலப் பெண்'' என்பது பழமொழி. இந்திராவைப் பொருத்தவரை ''தந்தையைப் போலப் பெண்'' என்பதுதான் பொருந்தும். தந்தைக்கும் மகளுக்கும் பல வகைகளில் ஒற்றுமை இருக்கிறது. அது சாதாரணமான ஒற்றுமை அல்ல; விசித்திரமான ஒற்றுமை.

மோதிலால் நேருவின் ஒரே ஆண்பிள்ளை ஜவகர். அதேபோல் இந்திராவும் ஜவகருக்கு ஒரே குழந்தை. இருவருமே செல்லமாக வளர்ந்தவர்கள்.

ஜவகர் நவம்பர் மாதத்தில் பிறந்தவர். இந்திராவும் அப்படியே.

சிறு வயதிலேயே ஜவகர் நிறைய புத்தகங்கள் படித்தார்; கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார். இந்திராவும் இளவயதிலேயே எண்ணற்ற நூல்களைப் படித்தார்: நூல் அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

இங்கிலாந்தில் கல்வி பயின்றவர் ஜவகர். இந்திரா உயர்தரக் கல்வி பெற்றதும் இங்கிலாந்தில்தான்.

ஜவகர் விடுதலைப் போரில் கலந்து கொண்டார். இன்னல் பல பெற்றார். இந்திராவும் தந்தை வழியைப் பின்பற்றி விடுதலைப் போரில் ஈடுபட்டார்; பலமுறை சிறை சென்றார்; பல இன்னல்களுக்கு ஆளானார்.

ஜவகர் அகில இந்தியக் காங்கிரசுக்கட்சியின் தலைவராக இருந்தார். இந்திராவும் அந்தப் பதவியை வகித்திருக்கிறார். இந்தியா விடுதலை பெற்ற நாள் முதல் இறக்கும் வரை ஜவகர் பிரதமராக இருந்தார். இந்திராவும் நம் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்தார். மக்கள் அன்று நேருவை நேசித்தனர்; இந்திராவையும் அவ்வாறே நேசிக்கின்றனர்.

தந்தை ஜவகரோ இளவயதில் விழாக்கள் பல கொண்டாடுவதை விரும்பினார். ஹோலிப் பண்டிகை, 'ஈத்', கிறிஸ்துமஸ் முதலிய பண்டிகைகளை நேரு விரும்பினார். இந்திராவும் அந்த விழாக்களை மிகவும் விரும்பினார்.

சாதி, மத வெறி அற்றவர் நேருஜி. இந்திராவும் அப்படியே.

மூடப் பழக்க வழக்கங்களை நேருஜி அறவே வெறுத்தார்; அவைகளைக் கடுமையாகச் சாடி வந்தார். இந்திராவுக்கும் மூடப் பழக்க வழக்கங்கள் கொஞ்சமும் பிடிக்காது.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் உடையவர் ஜவகர். அதேபோல், நேர்மையான உள்ளமும் உரமான நெஞ்சும் உடையவர் இந்திரா.

இவைகளைப் போல் தந்தைக்கும் மகளுக்கும் பல வகைகளில் ஒற்றுமை உண்டு. அதனால், ''தந்தையைப் போலப் பெண்'' என்று இந்திராவை அழைக்கலாம் அல்லவா?

**—நன்றி : எம்.வி. வெங்கட்ராம் எழுதிய "இந்திரா காந்தி"**



## குழந்தைகளை மிகவும் நேசித்தவர் இந்திரா

''இந்திரா காந்தி குழந்தைகளை மிகவும் நேசித்தார்'' என்று பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் மாமனார் திரு ஸ்டீபனா மெய்னோ கூறினார். இந்திரா காந்தியின் இறுதிஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக இத்தாலியில் இருந்து அவர் டெல்லிக்குப் புறப்பட்ட போது, டூரின் விமான நிலையத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''பெண்களில் இந்திரா காந்தி தனித்தன்மை மிக்கவர், அரசியலில் அவர் உயிருக்கு ஆபத்திருப்பது பற்றி அறிந்தும், துணிச்சலாக மக்கள் சேவையில் ஈடுபட்டு வந்தார்'' என்றார்.

## அப்போதே அரசியல் பிரவேசம் !



மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் நான்கு வயதில் அரசியலில் இறங்கினார். (அப்போது அவர் இந்திரா நேரு என்று அழைக்கப்பட்டார்).

1921ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் தேதியன்று இந்திராவின் தாத்தா மோதிலால் நேரு ஒரு வழக்கில் விசாரிக்கப்பட்டபோது இந்திரா அவருடைய மடியில் உட்கார்ந்திருந்தார்.

மோதிலால் நேருவுக்கு ரூ. 500 அபராதமும் ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அதே போனற ஒரு வழக்கில் பண்டித ஜவகர்லால் நேருவுக்கும் ரூ. 500 அபராதமும் ஆறு மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அபராதம் சிறுதொகையாக இருந்த போதிலும், தந்தையும், மகனும் அதைச் செலுத்த மறுத்து விட்டனர்.

இந்த அபராதத்திற்குப் பதிலாக நேருவின் வீடான ஆனந்த பவனிலிருந்து ஏராளமான மரச் சாமான்களையும், தரை விரிப்புகளையும் போலீசார் எடுத்துச் சென்றனர்.

போலீசாரின் இந்தச் செயலுக்குச் சிறுமி இந்திராவும் திட்டுவதன் மூலம் தன்னுடைய பங்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்.

ஆதாரம்: நேரு பற்றிய பி ஆர். நந்தாவின் புத்தகம்.

## அஞ்சல் வழிக்கல்வி

நேரு தனது மகளுக்குத் தந்தையாகவும் தாயாகவும் விளங்கியதோடு ஆசிரியராகவும் திகழ்ந்தார். நாட்டுப் போராட்டத்தினால் சிறையிலிருந்த நேரு, உலக வரலாற்றையும் அறிவியல் நுட்பங்களையும் கடிதங்கள் வாயிலாகவே தமது மகளுக்கு உணர்த்தியிருக்கிறார். அஞ்சல் வழிக் கல்வியை 1930லேயே தொடங்கிவிட்டார் நேரு.

நேரு-தனது மகள் இந்திராவுக்கு, சிறையிலிருந்து 196 கடிதங்கள் எழுதியுள்ளார். முதல் கடிதம் இந்திராவின் 13வது பிறந்த நாளான 19-11-1930ல் எழுதப்பட்டது. அதற்கடுத்த கடிதத்தை 1931ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளான புத்தாண்டு தினத்தில் எழுதினார்.



## துணிவுக்கொரு தலைவி



இந்தியாவின் சரித்திரத்திலேயே மிக நெருக்கடியான கட்டத்தில் சிரமமானதும் கவலைகள் மிகுந்ததுமான தலைமைப் பதவியைத் தாங்கள் மன உறுதியுடன் ஏற்றுக் கொண்டுள்ளதைப் பாராட்டுகிறேன். இந்த மாபெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. தங்களுடைய துணிவை மட்டும் காட்டவில்லை, இந்திய மக்கள் மீது தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் அவர்களது எண்ண எழுச்சிகளிலும் எதிர்கால வளர்ச்சியிலும் தாங்கள் காட்டும் விசுவாசத்திற்கும் இது ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந்திருக்கிறது.

—எகிப்து அதிபர் நாசர்

[1966-ல் இந்திரா காந்தி பிரதமர் பொறுப்பை ஏற்றபோது அனுப்பப் பெற்ற வாழ்த்துச் செய்தி]

## சகுனம் சொன்னதோ!

துன்மார்க்கர்கள் தன்னைக் கொலை செய்யக்கூடும் என்று அன்னைக்குக் முன்கூட்டியே தெரிந்திருக்கிறது.

ஒரிஸ்ஸாவில் தனது இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தில் அக்டோபர் 30ஆம் தேதி பேசுகையில் திருமதி இந்திராகாந்தி உணர்ச்சிவசப்பட்டுக் குறிப்பிட்டார்:

"நாட்டின் சேவைக்காக நான் உயிரிழக்க நேர்ந்தால் அதற்காகப் பெருமைப்படுகிறேன். என்னுடைய ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நாட்டின் வளர்ச்சிக்கே பயன்படும்; நாட்டை வன்மையும் வேகமும் உள்ளதாக்கும்.''



இரத்தம் சிந்துவதைப் பற்றிப் பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு என்ன அவசியம் வந்தது?30ஆம் தேதி பேசுகிறார்; 31ஆம் தேதி சுடப்படுகிறார்.

இன்னொரு சகுனமும் நடந்திருக்கிறது. அவரது பேரக் குழந்தைகள் 30ஆம் தேதி புதுடில்லியில் கார் விபத்தொன்றில் சிக்கினார்கள். அவர்களுக்காகப் பாதுகாப்பாகப் பின்னால் வந்த காரும் வேனும் விபத்தில் மாட்டிக் கொண்டதால், அவர்களைப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு செல்ல, கார் டிரைவர் காரை வேகப்படுத்தினார். அதனால் பேரன் ராகுலின் காலில் காயம் பட்டது. பேத்தி பிரியங்கா தலை மோதி வீக்கங்கண்டது.

## இறந்தும் வாழும் இந்திரா

இந்திரா காந்தியின் இறுதிச் சடங்கிற்கு வந்திருந்த ரஷ்யப் பிரதமர் டிக்கனோவை, ஜப்பான் பிரதமர் நாகசோனே சந்தித்துப் பேசினார். ஜப்பான்-ரஷ்யப் பிரதமர்கள் 11 ஆண்டுகளாகச் சந்தித்துப் பேசியதில்லை. அந்த இருநாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை இருந்து வருவதே காரணம்.

இந்திராகாந்தியின் மறைவுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் தினமும் கூடுதலாக ஒரு மணி நேரம் வேலை பார்ப்பதென்று, நாடாளுமன்ற ஊழியர்கள் உறுதியெடுத்துள்ளனர்.

இந்திரா காந்தியின் பெயரில் விருது ஒன்றை டில்லி விளையாட்டு வீரர்கள் சங்கம் நிறுவியுள்ளது. இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்.



## இந்திரா விருப்பம்!

“எனது அன்னை இந்திரா காந்தி இமயமலையை மிகவும் நேசித்தார். அவர் தனது அஸ்தி, அப்பனிமலைமீது தூவப்பட வேண்டும் என்று விரும்பினார். எனவே அவர் விருப்பப்படி அவரது அஸ்தி கங்கோத்திரியிலும், அம்மலையின் இதர பகுதிகளிலும் தூவப்படும்.”

‘‘இந்திரா காந்தியின் அஸ்தியைப் பனி படர்ந்த இமயத்தின் மீது பரவலாகத் தூவுவதுடன் அவரது பூவுலகப் பயணம் முடிந்துவிடும். ஆனால் நாட்டின் பயணம் தொடரும். நிமிர்ந்த நெஞ்சுடன், நினைத்த காரியத்தை முடிக்கும் நோக்குடன் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உறுதியுடன் நடைபோட்டு முன்னேறுவோம்.

‘‘இந்திரா காந்தி தன்னைப் பர்வதராஜனின் குழந்தையெனப் பாவித்து இமயமலையிடம் அதிக அன்பு செலுத்தினார். பனி மேவிய மலையைக் காணும்போதெல்லாம் அவர் மனம் குதூகலம் அடையும். அவர் புதுத் தெம்பும் பெறுவார்” என்று மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் அறிவித்தார்.



## தூய அன்னை புகழ் வாழ்க!

பி.வி. கிரி

நாடு போற்றும் நல்லவராம்
நேரு மகளாய்ப் பிறந்தவராம்
ஏடு புகழும் இனியவராம்
இந்திரா காந்தி உயர்ந்தவராம்!

ஒருமைப் பாட்டை வளர்த்தவராம்
‘ஒன்றே இந்தியா’ என்றவராம்
இருபது அம்சம் தந்தவராம்
இறவாப் புகழை அடைந்தவராம்!

அண்ணல் வழியில் நடந்தவராம்
அமைதி வேண்டி உழைத்தவராம்
கண்ணிமை போலக் காத்தவராம்
கருத்துகள் நாட்டிற் களித்தவராம்!

எளியவர் உயரச் செய்தவராம்
இதயந் தன்னில் வாழ்பவராம்
உலக நாடுகள் கண்டவராம்
உலகத் தலைவர் ஆனவராம்!

அன்பும் பண்பும் கொண்டவராம்
ஆட்சித் திறமை மிக்கவராம்
துன்பம் துடைக்கத் துடித்தவராம்
தூய அன்னை புகழ்வாழ்க!

## மனித நேயம் மிக்கவர்

1966-ல் திருமதி இந்திராகாந்தி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மக்கள் வரவேற்றனர்; பாராட்டினர்;

‘‘பெண்மணியால் நாட்டை ஆள முடியுமா?’’ என்று ஒரு சிலர் ஐயம் எழுப்பினர். I am no woman but human' என்று அதற்குப் பதிலளித்தார் இந்திரா.

ஆண்-பெண் என்ற பிரிவுகளைக் கடந்து இன எல்லைகளுக்கு அப்பாற்பட்ட மனித நேயம் உடையவராக அவர் திகழ்ந்தார் என்பதையே அவரது மறுமொழி உணர்த்துகிறது.



## அரசியலில் அலுப்புக் கிடையாது

‘‘அரசியலில் உங்களுக்கு எப்போதாவது அலுப்புத் தோன்றியதுண்டா?’’—ஒரு நிருபர் பிரதமர் இந்திராவைக் கேட்டார்.

‘‘நான் அரசியலின் அடிப்படை அம்சத்தைத்தான் நோக்குகிறேன். அதை ஒரு தொழிலாகவோ போட்டிக்குரிய விஷயமாகவோ நோக்குவதில்லை’’—இந்திரா பதிலளித்தார்.

‘‘நீங்கள் ஆக்கபூர்வமாகத் திட்டங்கள் வகுத்துச் செயல்படுவதைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் சிலர் கேலி செய்கிறார்களே?”

‘‘நான் அதைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. ஆனால், வகுக்கப்பட்ட திட்டங்கள் எதிர்பார்த்த அளவு வேகமாக நிறைவேறாமல் தாமதித்துக் கொண்டிருக்கும்போதுதான் எனக்கு ஆயாசம் ஏற்படுகிறது’’—அன்னை இந்திரா அளித்த மறுமொழி.



## வீரத்தலைவரிடமிருந்து ஈரநெஞ்சம்

‘‘பண்டித நேருவிடம் தங்களை மிகவும் கவர்ந்த அம்சம் எது?’’—ஒரு நிருபர் கேட்டார்.

‘‘இது ரொம்பக் கடினமான கேள்வி!’’ இந்திரா தயங்கினார்.

‘‘அவருடைய புதல்வியாக இருந்த பாக்கியத்தால் அவரிடமிருந்து எத்தனையோ பண்புகளை அருகிலிருந்து அனுபவித்துப் போற்றியிருப்பீர்கள் என்றாலும் எல்லாவற்றிற்கும் மேலாக..’’ நிருபர் தொடர்ந்தார்.

‘‘அவருடைய அடிப்படை மனிதாபிமானம்தான்—தேசப் பிரச்னைகளில் மட்டுமல்லாது சொந்தப் பிரச்சினைகளிலும் ஒவ்வொரு தனிமனிதரிடம் இதயத்தோடு இதயம் நெருக்கமாகக் கலந்து, உறவாடிப் பேசி அவர்களுடைய பிரச்சினைகளை அக்கறையோடு கவனித்து நிறைவேற்றும் ஈரநெஞ்சம்தான் அவருடைய பெரும் சிறப்பு.’’



# புதிய பிரதமர் ராஜீவ் காந்தி வாழ்க்கைக் குறிப்பு

இந்தியாவின் ஆறாவது பிரதமராகப் பதவியேற்றுள்ள திரு ராஜீவ் காந்தி அவர்கள் இந்த உயர்ந்த பதவியை இதுவரை வகித்தவர்களுள் மிகவும் இளையவராவார்.

விமான 'பைலட்'டாக இருந்து அரசியலுக்கு வந்த திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கு கடந்த ஆகஸ்ட் 20ஆம் தேதி 40 வயது பூர்த்தி அடைந்தது. 1981-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அவர் அரசியலில் நுழைந்ததிலிருந்தே அவரது அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்களின் அரசியல் வாரிசாகவும் கருதப்பட்டார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் டிரினிடி கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றவர் திரு ராஜீவ் காந்தி அவர்கள். 20-8-1944 அன்று பம்பாயில் பிறந்தார். தனது தாய்வழி பாட்டி, தாத்தா பெயர்களைக் குறிக்கும் வகையில் அவருக்கு ராஜீவ்ரதன் காந்தி என்று பெயரிடப்பட்டது. ராஜீவ் என்றால் சம்ஸ்கிருதத்தில் கமலம் (தாமரை) என்றும், ரதன் என்றால் ஜவஹர் என்றும் பொருள்.

குழந்தை பிறந்தபோது பண்டித நேரு சிறையில் இருந்தார். அவர்தான் ராஜீவ் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்.

திரு ராஜீவுக்கு 10 வயதானபோது 'போர்டிங்' பள்ளிக்கு அனுப்பப்பட்டார். டூன் பள்ளியில் படிப்பை முடித்துக் கொண்டு 1960-ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்று வெளியே வந்தார்.

1962-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர் 'டிரினிடி' கல்லூரியில் 'மெகானிகல் என்ஜினீயரிங்' படிப்பில் சேர்ந்தார். இங்குதான் 1965-ஆம் ஆண்டு கோடையில் தனது எதிர்கால மனைவியான சோனியா மெய்னோ என்ற டூரின் நகரத்தைச் சேர்ந்த இத்தாலியப் பெண்ணை அவர் சந்தித்தார்.

திரு ராஜீவ்-சோனியா திருமணம் 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்தது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது கோடை விடுமுறையில் அவர் ரொட்டிக் கடை ஒன்றில் வேலை செய்ததாகவும், லாரியில் செங்கல் ஏற்றும் வேலையையும் அவர் செய்ததாகவும் அவருடன் படித்த நண்பர் ஒருவர் கூறினார்.

படிக்கும்போதே தாத்தா அளித்த ஊக்கத்தின் பேரில் விமானம் ஓட்டும் பயிற்சியிலும் அவர் ஈடுபட்டு வந்தார். 1968 மே மாதம் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் பயிற்சி விமானியாக அவர் சேர்ந்தார். 7 மாதத்துக்குப் பின் டகோடா விமானத்தில் பயணிகளை அவர் ஏற்றிச் சென்றார். ஓராண்டிற்குப் பின் 'போக்கர் பிரண்ட்ஷிப்' விமானத்தை அவர் ஓட்டத் தொடங்கினார். பின்னர் அவர் 'ஆவ்ரோ' விமானங்களை ஒட்டத் தகுதி பெற்றார். அரசியலில் நுழையும் வரை அந்த விமானங்களிலேயே அவர் பறந்தார்.

1981-ஆம் ஆண்டு அரசியல் உலகில் அவர் அடியெடுத்து வைத்தார். அதே ஆண்டு ஜூன் மாதம் அமேதி தொகுதியில் போட்டியிட்டு, அனைவரும் எதிர்பார்த்ததற்கு மேலாக 2 லட்சத்து 37 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

1981 ஜூன் 25-ஆம் தேதி இளைஞர் காங்கிரஸ் (இ) தேசிய செயற்குழு உறுப்பினராக திரு ராஜீவ் காந்தி அவர்கள் நியமிக்கப்பட்டார். 1983 பிப்ரவரி 2ஆம் தேதி அ. இ. கா. க. (இ) பொதுச் செயலாளரானார்.

பின்னர் அவர் கட்சிப் பிரதிநிதியாகப் பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளார். 1983 செப்டம்பரில் தனது அன்னையுடன் அவர் ஐ. நா. சபைக்குச் சென்றார். அங்கு ஐ. நா. 37-வது பொதுச்சபைக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் 101 நாடுகள் அடங்கிய அணி சேரா இயக்கத்துக்கு திரு ராஜீவ் காந்தி அவர்கள் தானாகவே தலைவராகிறார்.

இந்தப் பதவிக்கு திருமதி இந்திராகாந்தி அவர்கள் கடந்த ஆண்டு (1983) மார்ச் மாதம் புதுடில்லியில் நடந்த உச்ச மாநாட்டின்போது தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவியின் காலம் 3 ஆண்டுகள்.

# இந்திரா காந்தி இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவி



இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகெங்கும் பரவலாகக் கொண்டாடப்பட்ட தலைவியாகத் திகழ்ந்தவர் திருமதி இந்திரா காந்தி.

நாட்டு மக்களின் பேரன்புக்கு உரிய அந்த ஒப்பிலாத் தலைவியின் வரலாற்றையும் அவரது முன்னோர்கள் பற்றிய விவரங்களையும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

**1716**

இந்திராகாந்தியின் முன்னோரான திரு ராஜ்கவுல், மொகலாய அரசரான ஃபரூக் ஸ்யாரின் அழைப்பின் பேரில் டில்லி வந்தார். அவருக்கு கால்வாய் அருகில் வீடுஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. கால்வாய் ( Nahar ) என்பது-செல்லப் பெயராக "Naharu" என்று வழங்கி நாளடைவில் அது நேஹரு ( Nehru ) என்று வழங்கியது.

**1850**

ராஜ்கவுலின் வழித்தோன்றலான லட்சுமி நாராயண் நேரு கடைசி மொகலாய அரசரான பகதூர் ஷாவின் தர்பாரில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதிநிதியாக இருந்தார்.

**1857**

லட்சுமி நாராயணனின் மகன் கங்காதார் பிரிட்டிஷாருக்கு எதிராக அரசருக்கு உடந்தையாக இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டார்.

**1861 மே 6**

கங்காதாரின் மகன் மோதிலால் நேரு ஆக்ராவில் பிறந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு மோதிலால் நேருவின் குடும்பம் அலகாபாத்தில் குடியேறியது. அங்கு அவர் வழக்கறிஞராகத் தொழில் நடத்தினார்.

**1889, நவ. 14**

ஜவஹர்லால் நேரு பிறப்பு.

**1900**

மோதிலால் நேரு அலகாபாத்தில் பெரும் தோட்டத்தை வாங்கினார். அங்குள்ள மாளிகைக்கு 'ஆனந்தபவன்' என்று பெயரிடப்பட்டது.

**1905**

நேரு இங்கிலாந்திலுள்ள ஹாரோபள்ளியில் சேர்ந்தார்.

**1907**

ஜவஹர்லால் நேரு கேம்பிரிட்ஜ், டிரினிடி கல்லூரியில் சேர்ந்தார்.

**1910**

பட்டப்படிப்பை முடித்த நேரு சட்டம் பயின்றார்.

**1912**

ஜவஹர்லால் நேரு இந்தியா திரும்பினார். வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

**1912 டிசம்பர்:**

ஜவஹர்லால் பன்கிப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

**1915 ஜனவரி**

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பினார். ஜவஹர்லால் நேரு முதல் தடவையாக அரசியல் கூட்டத்தில் பேசினார்.

**1916 பிப்ரவரி 8**

ஜவஹர்லால் நேரு — கமலாகவுல் திருமணம்.



**1916 டிசம்பர்**

லக்னோ-வில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஜவஹர்லால் மகாத்மா காந்தியைச் சந்தித்தார்.

**1917 நவம்பர் 19**

இந்திரா பிறப்பு.

**1922**

இந்திரா அகமதாபாத்துக்கு வந்தார். காந்தியின் ஆஸ்ரமத்தில் தங்கினார்.

**1923 டிசம்பர்:**

இந்திரா மாடர்ன் பள்ளியில் சேர்ந்தார். கமலா நேருவுக்கு ஆண்குழந்தை பிறந்து இறந்தது. கமலா நேரு நோய்வாய்ப்பட்டார்.

**1926**

மருத்துவச் சிகிச்சைக்காகக் கமலா-நேரு சுவிட்சர்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் இந்திராவும் சென்றார். இந்திரா இண்டர் நேஷனல் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இந்திரா, ரோமன் ரோலண்ட், ஐன்ஸ்டின், சர் ஜகதீஸ் சந்திரபோஸ், எர்னஸ்ட் டாலர், ரோஜர் பிட்வின் போன்றவர்களைச் சந்தித்தார்.

**1927**

தந்தை நேருவுடன் இந்திரா ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குச் சென்றார்.

**1927**

நேரு குடும்பம் இந்தியா திரும்பியது. இந்திரா அலகாபாத் செயிண்ட் மேரிஸ் கான்வெண்டில் சேர்க்கப்பட்டார்.

**1928**

ஜவஹர்லால் தன் மகளுக்குத்தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். இவைதான் பிற்காலத்தில் 'தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்' என்ற நூலாக வெளிவந்தன. இந்திரா, காந்தியடிகளின் சர்க்கா சங்கத்தைத் தொடங்கினார். மோதிலால் இரண்டாவது முறையாகக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக ஜவஹர்லால் நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1929**

ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1930 ஏப்ரல் 6**

மோதிலால் நேரு தனது மாளிகையைக் காங்கிரஸ்கட்சிக்கு அளித்தார். அது சுயராஜ் பவன் என்ற புதுப் பெயர் பெற்றது. இந்திரா அலகாபாத்தில் வானர சேனைஎன்ற அமைப்பை ஏற்படுத்தினார். சிறுவர் சிறுமிகளைக் கொண்ட அந்த அமைப்பு காங்கிரஸ் ஊழியர்களிடையே துண்டுப் பிரசுரங்களை எடுத்துச் செல்வது, தகவல்களைக் கொண்டு செல்வது, கொடிகளைத் தயாரித்து அளிப்பது போன்ற பணிகளைச் செய்தது.

**1930 அக்டோபர் 26**

ஜவஹர்லால் நேரு இரண்டாவது முறையாகத் தொடர்ந்து தன்மகள் இந்திராவுக்குக் கடிதங்கள் எழுதினார். இந்தக் கடிதங்கள் 1933-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் நாள் வரை தொடர்ந்து எழுதப்பட்டன. இவைதான் 'உலக சரித்திரம்' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளன.

## திறமையான நிர்வாகி

**யே**ல் பல்கலைக் கழகத்தின் அழைப்பை ஏற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968-ல் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது, டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, இந்திய அரசு குறித்து அவரிடம் வினவினார்.

"இந்திரா காந்தி திறமையாக நிர்வாகம் செய்து வருகிறார். மாநிலங்களுக்கு இருக்கும் தடைகளை அவர் உணராமல் இல்லை" என்று குறிப்பிட்டார் அண்ணா.





**1930 நவம்பர் 14**

நேருவின் பிறந்தநாள் ஊர்வலத்திற்கு இந்திரா தலைமை வகித்தார். நேரு சிறையிலிருந்ததால் அவரது பேச்சைக் கமலா நேரு படித்தார்.

**1931 ஜனவரி 1**

கமலா நேரு கைது செய்யப்பட்டார்.

**1931 பிப்ரவரி 2**

மோதிலால் நேரு மறைவு.

**1931 ஜூன்**

இந்திரா புனேயில் உள்ள பீப்பிள்ஸ் ஓன் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.



**1931 டிசம்பர்**

ஜவகர்லால் நேரு மீண்டும் கைது செய்யப்பட்டார்.

**1932 பிப்ரவரி**

புத்தகங்களை விரும்பிப் படிப்பதுபோல இந்திரா விளையாட்டுகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். மலையேறுதல் முதல் இந்திய நடனம் வரை அனைத்தையும் கற்றார்.

**1932 செப்டம்பர் 18**

காந்தியடிகளை அவர் இருந்த சிறைக்குச் சென்று சந்தித்தார் இந்திரா.

**1924 ஜூலை - 1935 ஏப்ரல்**

தாகூரின் சாந்திநிகேதனில் இந்திரா படித்தார்.

**1935 மே**

கமலா நேரு மருத்துவச் சிகிச்சைக்காக ஐரோப்பா சென்ற பொழுது இந்திராவும் உடன் சென்றார்.

**1936 பிப்ரவரி 28**

லாவ்ஸனேயில் கமலா நேரு இறந்தார்

**1937**

இந்திரா ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்தார். அப்பொழுதுதான் அங்குப் படித்துக் கொண்டிருந்த பெரோஸ் காந்தி அவருக்கு நண்பரானார்.

**1941**

இந்திராவும் பெரோஸ் காந்தியும் கப்பலில் தாயகம் திரும்பினர். வரும்பொழுது இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்தனர்.

**1942 மார்ச் 26**

இந்திரா பெரோஸ் காந்தி திருமணம்,

**1942 ஆகஸ்ட் 7**

பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் ஜவஹர்லால், பெரோஸ் காந்தி, இந்திரா மூவரும் கலந்து கொண்டனர்.

**1942 செப்டம்பர் 10**

அலகாபாத்தில் இந்திரா காந்தி பேசிய கூட்டத்தில் பிரிட்டிஷ் இராணுவவீரர்கள் சூழ்ந்து கொண்டு அவரைக் குறிபார்த்து சுட முனைந்தனர். பெரோஸ் காந்தி குறுக்கிட்டுத் தடுத்தார். இந்திராவும் பெரோஸ் காந்தியும் கைது செய்யப்பட்டு, நைனி சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



**1943 மே 13**

வங்காளத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தின் காரணமாக இந்திரா விடுதலை செய்யப்பட்டார்.

**1944 ஆகஸ்ட் 20**

இந்திராவின் முதல் ஆண் குழந்தை ராஜீவ் பிறப்பு.

**1946 டிசம்பர் 14**

இந்திராவின் இரண்டாவது ஆண் குழந்தை சஞ்சை பிறப்பு.

**1947 ஆகஸ்ட் 15**

நாடு விடுதலை அடைந்தது.

**1947-48**

காந்தியடிகளின் வேண்டுகோளின்படி டில்லியில் வகுப்பு ஒற்றுமையைப் பராமரிக்கும் பணிகளில் இந்திரா காந்தி ஈடுபட்டார்.

**1948 அக்டோபர்**

வெளிநாடுகளுக்குத் தன் தந்தை ஜவகர்லால் நேருவுடன் பயணம் மேற்கொண்டார்.

**1953 ஏப்ரல் 16**

இந்தோனேஷியா பாண்டூங் மாநாட்டில் இந்திரா கலந்து கொண்டார்.

**1953-54**

இந்திரா முதல் தடவையாக சோவியல் ரஷ்யாவுக்குச் சென்றார். 1954-இல் சீனாவுக்குச் சென்றார்.

**1955 ஏப்ரல்**

பாண்டூங் மாநாட்டில் இந்திரா காந்தி கலந்து கொண்டார்.

**1955 செப்டம்பர் 19**

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு உறுப்பினராக இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1955 செப்டம்பர் 22**

அலகாபாத் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1958 பிப்ரவரி 23**

காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரி போர்டுக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**1959 பிப்ரவரி 8 — 1960 ஜனவரி 18**





அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இந்திரா பணியாற்றினார். மகாராஷ்டிர மாநிலம், கேரள மாநிலம் அரசியல் நிலைமைகளை அறியச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

**1959 டிசம்பர்**

கேரள மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பொறுப்புகளை இந்திரா கவனித்துக் கொண்டார்.

**1960 செப்டம்பர் 8**

இந்திராவின் கணவர் பெரோஸ் காந்தி மறைவு.

**1960 நவம்பர் 18**

பாரிஸிலுள்ள யுனெஸ்கோ நிறுவனத்தின் நிருவாக் வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் இந்திரா.

**1961 ஆகஸ்ட்**

இந்திரா காந்தி கென்யா, உகண்டா, தான்சானியா, இரஷ்யா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

**1963 ஜனவரி 19**

மத்திய மக்கள் குழுத் தலைவராக இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1963**

நல்லெண்ணப் பயணமாகப் பல ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்திரா காந்தி சென்றார்.

**1964 மே 27**

பிரதமர் ஜவகர்லால் நேரு மறைவு.

**1964 ஜூன்**

புதிய பிரதமர் லால்பகதூர் அமைச்சரவையில் செய்தி-ஒலிபரப்புத் துறையில் அமைச்சராகத் திருமதி இந்திரா காந்தி நியமிக்கப்பட்டார்.

**964 ஆகஸ்ட் 20**

மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**966 ஜனவரி 10**

தாஷ்கண்டில் லால்பகதூர் சாஸ்திரி மரணமடைந்தார்.

**966 ஜனவரி 19**

காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் அக்குழுவின் தலைவராகத் திருமதி இந்திரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**966 ஜனவரி 24**

இந்தியப் பிரதமராக இந்திரா காந்தி பதவி ஏற்றார்.

**967 பிப்ரவரி**

பொதுத் தேர்தலில் ரே-பெரேலி தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு இந்திராகாந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**967 மார்ச் 13**

இந்திரா காந்தி பிரதமராகப் பதவி ஏற்றார்.

**969 ஜூலை 19**

14 பெரிய வங்கிகளை நாட்டுடைமையாக்கினார் இந்திராகாந்தி.

**70 டிசம்பர் 27**

இந்திரா காந்தியின் ஆலோசனையின்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

**71 மார்ச் 1-10**

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியின் தலைமையிலுள்ள காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்றது.



**1971 மார்ச் 18**

இந்திரா பிரதமராகப் பதவி ஏற்றார்.

**1975 ஜூன் 26**

குடியரசுத் தலைவர் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்.

**1977 மார்ச் 21**

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தியும், காங்கிரஸ் (இ) கட்சியும் தோற்றார்கள்.

**1977 மார்ச் 21**

பிரதமர் பதவியை இந்திரா காந்தி ராஜினாமா செய்தார்.

**1978 மே 15**

சிக்மகலூர் தேர்தலில் திருமதி இந்திரா காந்தி வெற்றி பெற்றார்.

**1979 ஜூலை 15**

திரு மொரார்ஜி தேசாய் அமைச்சரவை பதவி விலகியது.

**1979 ஜூலை 18**

திரு சரண்சிங் பிரதமரானார்.

**1979 ஆகஸ்டு 20**

சரண்சிங் ராஜினாமா செய்தார்.

**1979 டிசம்பர் 15**

குடியரசுத் தலைவர் திரு என். சஞ்சீவ ரெட்டி பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

**1980 ஜனவரி 14**

காங்கிரஸ் (இ) தேர்தலில் வெற்றி பெற்றது. திருமதி இந்திரா காந்தி ரேடரேலி, மேடக் இரு தொகுதிகளில் இருந்தும் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1980 ஜனவரி 15**

திருமதி இந்திரா காந்தி பிரதமரானார்.

**1980 ஜூன் 23**

திரு சஞ்சய் காந்தி, எம்.பி. விமான விபத்தில் இறந்தார்.

**1983 மார்ச்**

அணி சேரா இயக்கத்தின் தலைவராகத் திருமதி இந்திரா காந்தி டில்லி கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1984 அக்டோபர் 31**

இந்திரா காந்தி இல்லத்திலிருந்து அலுவலகத்திற்கு நடந்து செல்லும்போது பாதுகாப்புக் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட வேதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

—மாமூலன்



# அஸ்திக் கலசத்திற்கு மக்கள் அஞ்சலி

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அஸ்தி (சாம்பல்) 40 கலசங்களில் சேகரிக்கப் பெற்று, பல மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

டில்லியிலிருந்து அஸ்திக் கலசம் விமானத்தில் பெங்களூருக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து 5.11.84 அன்று தனி ரயிலில் எடுத்து வரப்பட்டது.

ஜோலார்ப்பேட்டையில் ரயில் நிலையத்தில் அஸ்திக் கலசத்தை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், காட்பாடி, வாலாஜா ரோடு, அரக்கோணம், திருவள்ளூர், ஆவடி ஆகிய ரயில் நிலையங்களில் சில நிமிடங்கள் ரயில் நிறுத்தப் பட்டது. அங்கெல்லாம் ஏரானமான பொதுமக்கள் இந்திரா காந்தியின் அஸ்திக் கலசத்திற்கு அஞ்சலி செலுத்தினர்.

6.11.84 பிற்பகல் 4.10 மணிக்கு தனி ரயில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தடைந்தது. முப்படை அதிகாரிகள் அஸ்திக் கலசத்தைப் பெற்று, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடம் அளித்தனர். அவர், அதனை மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த காவல்துறை வாகனத்திற்கு எடுத்துச் சென்றார். அதனை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பெற்று, வாகனத்தின் மேல் அதற்கென அமைக்கப் பெற்ற இடத்தில் வைத்தார். பின்னர் தமிழக அரசின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன, தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ்சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது.

பின்னர், வாகனம் புறப்பட்டது. இருபுறங்களிலும் இராணுவ வீரர்கள் வரிசையாக நின்று மரியாதை செலுத்தினார்கள். 'அமரர் இந்திரா வாழ்க' என்னும் வாழ்த்தொலி எங்கும் ஒலித்தது.

வாகனம் மெதுவாக நகர்ந்து சென்றது. அமைச்சர்களும், பொதுமக்களும் வாகனத்தின் பின்னால் நடந்து வந்தனர். அரசினர் தோட்டத்தின் தலைவாயில் வழியாக நுழைந்து, ராஜாஜி மண்டபத்தை 5 மணியளவில் அடைந்தது.

ராஜாஜி மண்டபத்தில், தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அஸ்திக் கலசத்தைப் பெற்றுக் கொண்டார். ராஜாஜி மண்டபத்தின் உள்ளே மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அஸ்திக் கலசம் வைக்கப்பட்டது. பெரிய அளவில் தீட்டப்பட்டிருந்த இந்திராவின் உருவப் படமும் இடம்பெற்றிருந்தது.

அமைச்சர் பெருமக்களும், முப்படை அதிகாரிகளும் அஸ்திக் கலசத்திற்கு மலர் மாலைகள் அணிவித்தும்— மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தினர்.

மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் தமது துணைவியாருடன் வந்து, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.


தமிழ்நாடு இசைக்கல்லூரி மாணவிகளும், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களும் பக்திப் பாடல் பாடினர்.

அக்டோபர் 7-ஆம் தேதி காலை 8 மணியிலிருந்து 9-ஆம் தேதி இரவு 8 மணி வரை பொதுமக்கள் மரியாதை செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் அன்னை இந்திராவின் அஸ்திக்கு அஞ்சலி செலுத்தினர்.

இசைக் கலைஞர்கள் பலர் இசை அஞ்சலி செலுத்தினர்.

அன்னையின் அஸ்திக் கலசம் 10-ந்தேதி காலை 11.15 மணிக்கு பெங்களூருக்குக் கொண்டு செல்லப் பட்டு,அங்கிருந்து டில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இமயம்போல் சிறப்புப் பெற்ற பாரத அன்னையின் அஸ்தி-இமய மலையில் தூவப்பட்டது சிறப்புக்குரிய செய்தியாகும்.







# மதுரை முத்து மறைவு

திராவிட இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும், மதுரை மாநகராட்சியின் முன்னாள் மேயருமான மதுரை திரு எஸ். முத்து, எம்.எல்.சி. அவர்கள் (வயது 69) நெஞ்சுவலி காரணமாக மதுரை மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு 5.11.84 அன்று இயற்கை எய்தினார்.

மதுரை முத்து அவர்கள் 1916ஆம் ஆண்டு மார்ச்சு 13ஆம் நாள் பிறந்தார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய தலைவர்களிடம் நெருக்கமாகப் பழகியவர். 1936ஆம் ஆண்டு முதல் அரசியலில் ஈடுபட்டார்.

1957ஆம் ஆண்டு முதல் 1964 வரை மதுரை மாநகராட்சி உறுப்பினராகப் பணியாற்றியவர் மதுரை மாநகராட்சியின் முதல் மேயராகத் (1971) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1978ல் மீண்டும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

27.6.80லிருந்து மறையும்வரை சட்ட மேலவை உறுப்பினராக இருந்து வந்தார்.

மதுரை முத்து அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் இரங்கல் செய்தி விடுத்திருந்தனர்.

மாவீரர் மதுரைமுத்து அவர்கள் திராவிடர் இயக்க மூத்த தலைவர்களில் முக்கியமான ஒருவராகத் திகழ்ந்தார். இவர் 47 ஆண்டுகளாகத் தம்மை முழுக்க முழுக்க பொதுத் தொண்டுக்கு ஒப்படைத்துவிட்டு மிக்க பெரும் புகழையும் பெருமையையும்பெற்றவர். பாண்டிய நாட்டில் திராவிடர் இயக்கம் வேரூன்றிப் பூத்துக் காய்த்துக் கனிய அவர் அடிப்படையாக அமைந்தார். அவர் அழுத்தமான கொள்கைப் பிடிப்புக் கொண்ட சிறந்த செயல் வீரர். பெரியார். பேரறிஞர் அண்ணா ஆகியோரால் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

கொள்கைக்காகப் பலமுறை சிறைப்பட்டவர். அவரது மறைவு பொதுவாகத் திராவிடர் இயக்கத்திற்கும் குறிப்பாக மதுரை மாநகருக்கும் பெரியதொரு இழப்பாகும்.

மதுரையில் நடந்த மதுரை முத்து அவர்களின் இறுதி ஊர்வலத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அனைத்துக் கட்சியினரும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.




மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு மதுரை முத்து அவர்களிடம் (8-8-'78) மாண்புமிகு முதல்வர் அவர்கள் செங்கோல் வழங்குகிறார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.






தமிழரசு



## சென்னையில் பிரதமர்

சென்னையில் ஏற்பட்ட புயல்-வெள்ள
சேதத்தைப் பார்வையிடுவதற்கா
மாண்புமிகு பிரதமர் திரு.ராஜீவ் காந்
அவர்கள் 16.11.1984ல் வருகை தா
போது....

# புதிய இந்தியாவைப் படைப்போம்!

### மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி



இந்திரா காந்தியின் அஸ்தி அவர் விரும்பிய வண்ணம் இமயமலையின் சிகரங்களில் நேற்று தூவப்பட்டது! அவர் கனவு கண்ட இந்தியாவை உருவாக்கும்படி அவரது ஆன்மா நம்மை ஏவுகிறது.

நமது புராதன நாட்டுக்கு மகாத்மா காந்தி புத்துயிர் அளித்தார். அவர் நமக்கு உரிமை வாழ்வைத் தேடித்தந்தார். உண்மை, அன்பு, அகிம்சை ஆகிய உயர் பண்புகளைப் போதித்தார். அரசியல் தொழில் நுட்ப ரீதியான நவீன இந்தியாவுக்கு - ஜனநாயக, மதச்சார்பற்ற, சோஷலிச, அணிசேரா இந்தியாவுக்கு ஜவகர்லால்நேரு அடித்தளம் அமைத்தார்.

இந்திரா காந்தி, இந்த அடித்தளங்களின் மீது உறுதியான இந்தியாவை எழுப்பினார். மக்களின் உரிமை வாழ்வுக்கு உண்மையான உருவம் கொடுத்தார். கொள்கை கோட்பாடுகளும் சட்ட திட்டங்களும் தங்களுக்கு உரிய இடத்தைப் பெறுமாறு செய்தார். வெறித்தனங்களும் குறுகிய போக்குகளும் எந்த வடிவத்தில் வந்தாலும் அவற்றை எதிர்த்துப் போரிட்டார்.

விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் மற்ற பல தொழில்நுட்பத் துறைகளிலும் இந்தியா தற்சார்புடையதாக இருக்கச் செய்தார். வறுமையை எதிர்த்து அயராது போரிட்டார். நெருக்கடிகளும் சிக்கல்களும் நிறைந்த இந்த உலகத்தில் சர்வதேச அமைதிக்காக அவரது குரல் ஓங்கி ஒலித்தது.

அனைத்துக்கும் மேலாக நம்மிடையே தன்னம்பிக்கையும், இலட்சிய நோக்கும் கிளர்ந்தெழச் செய்தார். நமது பெருமையை மீண்டும் நிலைநாட்டினார். இந்த மகத்தான மரபை நமக்கு விட்டுச் சென்றுள்ளார், மதிப்புக்குரிய இந்திரா. இந்த அரும் செல்வத்தை அழியாது காக்கவும், ஐக்கியப்பட்ட, வளமும் வன்மையும்மிக்க-அமைதிக்குப் பாடுபடும் இந்தியாவை உருவாக்கவும் நான் உறுதி எடுத்துக் கொள்கிறேன். நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் விட நமக்கு வேறெதுவும் பிரதானமல்ல. இந்தியா பிரிக்க முடியாதது.

மதச்சார்பின்மையே நமது தேசிய வாழ்க்கையின் அடித்தளம். இதற்குச் சகிப்புத் தன்மை மட்டும் போதாது.


## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி - கார்த்திகை 16
மலர் : 15 இதழ் : 11
1-12-1984

ஒருமைப்பாட்டுக்கு ஓயாது உழைக்க வேண்டும் என்பதும் இதன் பொருளாகும். வெறுப்பையும், அத்திரத்தையும் எந்தச் சமயமும் போதிப்பதில்லை. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள சுயநல சக்திகளே இந்தியாவைப் பிளவுபடுத்த வகுப்பு வேற்றுமையையும, வன்முறையையும் தூண்டிவிடுகின்றன. வகுப்புவாதத்திற்கு வகுப்புவாதத்தால் பதிலளிப்பது நாட்டைச் சீர்குலைக்கும் இத்தகைய பிரிவினைச் சக்திகளுக்கே உதவுவதாகும். இந்திய மக்களும் அரசும் அவர்களது நோக்கத்தைத் தகர்த்தெறிவார்கள். ஒரே ஒரு இந்தியாதான் உண்டு. அது நம் அனைவருக்கும் சொந்தமானது.

வறுமையை விரைவாக ஒழிப்பதே நமது அடிப்படை இலட்சியமாகும். அரசு எத்தகைய மாற்றத்தைக் கொண்டு வருகின்றதோ, அதை வைத்துத் தான் அதனுடைய தரத்தையும் திறமையையும் மக்கள் தீர்மானிக்கிறார்கள்.


ஐந்தாண்டுகளுக்கு முன்னர் மதிப்பிற்குரிய இந்திரா அவர்களை மக்கள் மீண்டும் ஆட்சியில் அமர்த்தியபோது பயனுள்ளதோர் அரசை அமைப்பதாக அவர் உறுதி சொன்னார். அதனை அவர் நிறைவேற்றிவிட்டார்.

உணவு உற்பத்தியும், மின் உற்பத்தியும், சாதனை அளவை எட்டியுள்ளன. விஞ்ஞானம் மிக முன்னேறியுள்ளது. தொழில்துறை வேகம் பெற்றுவிட்டது. வேலைவாய்ப்புகள் பெருகி வருகின்றன. இயற்கை விளைத்த மிக மோசமான அழிவுகளையும் சர்வதேச நெருக்கடிகளையும் நமது பொருளாதாரம் தாங்கிக்கொண்டது. உலகத்தில் இந்தியாவின் அரசியல் பொருளாதாரத் தகுதி முன் எப்போதும் இருந்திராத அளவிற்கு உயர்ந்துள்ளது.

சோஷலிசத்தையும் திட்டமிடுதலையும் நாம் பற்றி நிற்போம் என்று நான் மீண்டும் உறுதி கூறுகின்றேன். திட்டமிடாமல் நாம் இன்றுள்ள நிலையை அடைந்திருக்க முடியாது. தொடர்ந்து நவீனமாக்குவதும், உற்பத்தியைப்பெருக்குவதும், சமூக நீதியை விரைவுபடுத்துவதுமே நமது இலட்சியமாகும்.

நமது திட்டங்களில் கிராம வளர்ச்சி, உணவு தானியங்கள், பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்திப் பெருக்கம்,பாசன வளர்ச்சி,சிறு தொழில் மற்றும் கைத்தொழிலுக்கு ஆதரவு, எல்லா முனைகளிலும் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்துதல் ஆகிய இவைகளுக்கு முக்கியத்துவம் உண்டு.





கிராமப்புற, மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கும் பெருமளவில் வேலை வாய்ப்பை எற்படுத்தித் தருவது, பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைத்து, சமூக அமைதியை உறுதி செய்ய அவசியமானதாகும். இதற்சாக விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் அதிக வளர்ச்சி விகிதத்தை நாம் அடைந்தாக வேண்டும்.

நவீன பொருளாதாரத்திற்கு அடிப்படை அமைப்பதில் பொதுத்துறை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பங்கினை ஆற்றியுள்ளது. அது மேலும் மாபெரும் பொறுப்புகளை ஏற்று, முதலீட்டுக்கு உபரியான பொருள்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு மேலும் திறன்படைத்ததாக வேண்டும்.

தேசீயக் கொள்கைகளுக்கு உட்பட்டுப் பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் வாய்ப்பு, தனியார் துறைக்குப் போதிய அளவு உள்ளது. ஆனால் அது இந்தப் பலத்தை, செலவைக் குறைத்து, புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்தி, போட்டி மூலம் அடைய வேண்டும். பொதுத்துறை, தனியார் துறை இரண்டும் புதிய துறைகளில் ஈடுபட்டு, தரத்தை உயர்த்தி, உள்நாட்டுத் தொழில் நுட்பத்தை வளர்க்க வேண்டும்.

உழவர்களும் தொழிலாளர்களும் நமது பொருளாதாரத்தின் தூண்கள். அவர்களது நலனுக்சான நமது கொள்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், கைவினைஞர்கள், விவசாயத் தொழிலாளர்கள், மகளிர், நகர்ப்புற ஏழை மக்கள் ஆகியவர்களின் வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகளை மேம்படுத்த அரசு உறுதி காட்டும். மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றி வைக்கும். இந்திரா காந்தியின் இருபது அம்சத் திட்டம் உண்மையுடனும் பயனுள்ள வகையிலும் அமலாக்கப்படும்.

மக்கள்தான் நமது மாபெரும் சொத்து. தனி நபர்களும் குடும்பங்களும்



தங்களது முழுத் திறனைப் பயன்படுத்த நாம் வாய்ப்பளிக்க வேண்டும். இதற்கு நாம் குடும்பநலம், சத்துணவு, மகளிர் குழந்தைகள் நலம், நோய்க் கட்டுப்பாடு, தொடக்க மற்றும் வயது வந்தோர் கல்வி, விளையாட்டு, நல்ல செய்தித் தொடர்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

மக்களுக்கு அரசுத் துறைகள் ஆற்றி வரும் சேவையின் தரத்தை அபிவிருத்தி செய்ய நான் உறுதிபூண்டுள்ளேன். இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அவர்கள் ஒழுக்கத்தோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும்பணியாற்றினால்,வெளியார் குறுக்கீடு எதுவும் நேராமல் அவர்களுக்கு முழுப்பாதுகாப்பு தரப்படும். அதே நேரத்தில், ஊழலுக்கோ, சோம்பேறித்தனத்திற்கோ, திறமைக் குறைவுக்கோ இடமில்லை என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது நிர்வாகம் லட்சிய நோக்குள்ளதாக இருக்கவேண்டும். அரசு நடைமுறைக்குக் கட்டுப்பட்டதாக இராமல், சாதனைக்குக் கட்டுப்பட்டதாக இருக்கும். ஒரு புதிய பணி - சித்தாந்த, வேலை-கலாசார முறையொன்றை நாம் உருவாக்க வேண்டும். சாதனையை ஒட்டிப் பரிசோ, தண்டனையோ தரப்பட வேண்டும். எல்லா அலுவலகங்களிலும் திறமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில் விஞ்ஞானம், தொழில் நுட்பத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விஞ்ஞானிகளுடன் சிறந்த பங்காளியாக இருந்து இந்திரா காந்தி நாட்டுக்கு உதவியிருக்கிறார். இந்தத் தொடர்பை நான் பேணி வருவேன்.

படைப்புக் கலைகள் வாழ்க்கைக்கு உள்ளார்ந்த அர்த்தத்தையும் அழகையும் கொடுக்கின்றன. நமது பண்டைய மரபைப் போற்றிவரும் நமது கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். விலை மதிக்க முடியாத நமது மரபைப் பாதுகாத்து, கலை

கள் செழித்து வளரத் தக்க சூழ்நிலைகளை நாம் தோற்றுவிக்க வேண்டும்.

நமது கல்வி முறையை, நாட்டின் வளர்ச்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உரியதோர் உத்வேக சக்தியாக மாற்றியமைக்க வேண்டும். கல்வி முறையை விரிவாகப் பரிசீலனை செய்து, சீர்திருத்தத்திற்கான தேசீயக் கருத்தொற்றுமையை எட்ட வேண்டும்.

தேச நிர்மாணப் பணிக்கு முதல் தேவை அமைதி. நமது அண்டை நாடுகளுடன் அமைதி. உலகத்தில் அமைதி. நமது பாதுகாப்புக்குப் பங்கமேற்பட்டுள்ளது. நமக்கு அண்டை அயலிலும் இந்தியக் கடலிலும் நவீன ஆயுதங்கள் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் உறுதிப்பாட்டை நமது இராணுவ வீரர்கள் கட்டிக்காப்பார்கள் என்பதில் ஐயமில்லை. நமது இராணுவத்தை நவீனப்படுத்தவும், இராணுவ வீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் நலன் பேணவும் அரசு தொடர்ந்து அனைத்து முயற்சிகளையும் செய்துவரும்.

நாட்டின் கவுரவத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காக்கும் வீர ஜவான்கள், இராணுவ அதிகாரிகள் ஆகியவர்களை இந்த நேரத்தில் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலக நாடுகளின் மாபெரும் தலைவர்களெல்லாம் தங்கள் நாட்டு மக்களின் அனுதாபங்களைத் தாங்கி இங்கே சென்ற வாரம் வந்திருந்தார்கள். இந்தியா தொடர்ந்து சர்வதேச அமைதிக்கும் நட்புறவுக்கும், கூட்டுறவுக்கும் பணியாற்றி வரும் என்று நான் அவர்களிடம் தெளிவுபட எடுத்துரைத்தேன்.

ஜவகர்லால் நேரு நமக்கு வகுத்தளித்துச் சென்ற அயல்நாட்டுக் கொள்கையை இந்திரா காந்தி வளப்படுத்தியுள்ளார். அதை நான் கொண்டு செலுத்துவேன். ஐக்கிய நாடுகள் அவை, அணிசேரா இயக்கம் ஆகியவைகளைப் பற்றி நிற்கவும், பழைய-புதிய காலனியாதிக்கத்தை எதிர்க்கவும் இந்தியா பூண்டுள்ள உறுதியை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். சர்வதேசப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க நாம் திடசித்தத்துடன் பணியாற்றுவோம்.

நாம் நமது அண்டை நாடுகளுடன் அமைதி, நட்புறவு, கூட்டுறவு மிக்க சூழ்நிலையில் நெருக்கமான உறவுகளை வளர்த்துக்கொள்ளவே விரும்புகிறோம். இதைத்


தான் நாம் பாகிஸ்தானுக்குத் தெரிவித்தோம். ஒருநாடு இன்னொரு நாட்டின் உள் விவகாரங்களில் குறுக்கிடாமை, அமைதியான நட்புறவு, அணி சேராமை இவையே நமது உறவுக்கு வழிகாட்டிக் கொள்கையாக இருக்கவேண்டும் என்று நாம் எப்போதும் வலியுறுத்தி வருகிறோம்.

தெற்காசிய வளர்ச்சி என்ற பொதுப் பிரதேசக் கொள்கையை நாம் மேலும் பின்பற்றுவோம். சைனாவுடனான நமது உறவு வளர்ந்து வருகிறது. சிக்கல்களுக்குத் திருப்திகரமான தீர்வு காண நாம் தொடர்ந்து முயல்வோம்.

நெடுங்காலமாக சோவியத் யூனியனுடன் பரஸ்பர ஒத்துழைப்பு, நட்புறவு, எப்பொழுது மிகவும் தேவையோ அப்பொழுது உறுதியுடன் உதவிடுதல் ஆகியவற்றின் மீதமைந்த உறவை நாம் மிகவும் போற்றுகிறோம்.

கிழக்கு மற்றும் மேற்குடன் நாம் எப்பொழுதும் நட்புறவுடனே இருந்து வருகிறோம். அவைகளுக்கு இடையேயும் நல்லுறவு நிலவ நாம் ஆசைப்படுகிறோம்.

அமெரிக்காவுடன் நமது நட்புறவு பலதரப்பட்டது. அமெரிக்காவுடன் நமது பொருளாதார, தொழில்நுட்ப, கலாசார ஒத்துழைப்புக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம்.



அரபு உலகம், தென் மேற்கு, தென் கிழக்கு ஆசியா, தூரக்கிழக்கு மற்றும் கரீபியன், மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பா ஆகிய பகுதி மக்களுடனும் நாம் நமது அரசியல், பொருளாதார உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

இன்றைய உலகத்தை எதிர் நோக்கியுள்ள மிகப்பெரும் அபாயம் அணு ஆயுதப் போர் என்று இந்திரா காந்தி நமக்கு அறிவுறுத்தினார். படைபலக் குவிப்பை எதிர்த்து அயராது அவர் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து நாம் நடத்துவோம். உலகப் பொருளாதார நெருக்கடி பற்றியும் அவர் கவலை கொண்டிருந்தார். வடக்குக்கும் தெற்குக்கும் உறவை வளர்க்கவும், நியாயமானதோர் உலகப் பொருளாதார அமைப்பை உருவாக்கவும் நாம் பாடுபடுவோம்.

மிக நெருக்கடியான நேரத்தில் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டு விட்டார். நமது மக்களின் ஆன்மா தட்டியெழுப்பப்பட்டுள்ளது. நெருக்கடியான காலகட்டங்களில்தான் இந்தியா விழித்தெழுந்து தெளிவோடும், புதிய திட சித்தத்தோடும் செயல்படும். குழப்பத்திலிருந்துதான் புத்திசாலித்தனம் பிறந்து, மனிதனுக்கு மனிதன் ஆழமான மனித நேயத்தைத் தோற்றுவித்து, ஒற்றுமையை உருவாக்கும்.

சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட நமது தலைவர்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள மிகப் புராதனமான நமது மரபுக்கு அடிப்படை மதச்சார்பின்மையும் சகிப்புத்தன்மையுமாகும். இந்த லட்சியங்களின் அடிப்படையில் இந்தியாவை உருவாக்கும் முயற்சியில்தான் இந்திரா காந்தி தனது உயிரை அர்ப்பணித்துள்ளார்.


நமது தலைவர்களின் லட்சியங்களையும் விஞ்ஞான, தொழில்நுட்ப உயிரோட்டங்களையும் நாம் ஒருங்கிணைக்க வேண்டும்.

நமது அரசியல், கலாசார, பண்பாட்டு மரபை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். நமது இயற்கை வளங்களுடன் சரியான உறவை ஏற்படுத்தி, நாம் புதிதாகச் சாதித்துள்ள தற்சார்பைப் பலப்படுத்த வேண்டும். இதற்கு நாம் புதிதாகப் பல வழிமுறைகளைக் கண்டறியவும் வேலை முறைகளில் மாற்றம் காணவும், புதிய அறிவை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். அப்பொழுதுதான் நாம் நமது மக்களுக்குப் பொருளுள்ள புதுவாழ்வை அளிக்க முடியும்.

நாம் இன்று உருவாக்குவதை வைத்துத்தான் நாளைய சமுதாயம் அமையும். நாம் அனைவரும் ஒன்றுபட்டு 21வது நூற்றாண்டு இந்தியாவைச் சமைப்போம். நாம் அனைவரும் ஒன்றுபட்டு அவசியமான மாற்றங்களைச் செய்வோம். நாம் அனைவரும் ஒன்றுபட்டு அறைகூவல்களையும் எதிர்ப்படும் இன்னல்களையும் சமாளிப்போம். நாம் அனைவரும் ஒன்றுபட்டு, பலம் பொருந்திய - அறிவும் ஆற்றலுமிக்க அமைதிக்கும் சகிப்புத்தன்மைக்கும் தீபமாகத் திகழும் இந்தியாவை உருவாக்குவோம்!

**(மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் 12-11-1984 அன்று நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய வானொலி உரை.)**





# புயல் வெள்ளப் பகுதிகளில் பிரதமர்

**நான்காவது அட்டை சொல்லும் செய்தி:**

சென்னை-செங்கல்பட்டு மாவட்டத்தில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட புயல்-வெள்ளச் சேதங்களைப் பார்வையிடுவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் திடீரென்று சென்னைக்கு வருகை தந்தார்.

பிரதமர் அவர்கள், புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றிப்பார்த்த பிறகு தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்க ஆணை பிறப்பித்ததோடு, தமிழகப் புயல் நிவாரணத்திற்காக ரூ. 5 கோடி முன் உதவித் தொகை வழங்கப் படுவதாகவும் அறிவித்தார்.

தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதங்களைப் பார்ப்பதற்காகவே மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் **16-11-84** காலை தனி விமானம் மூலம் சென்னைக்கு வருகை தந்தார். பிரதமர் வருகையைப் பற்றி அவர் வருவதற்குச் சிலமணி நேரத்திற்கு முன்னர்தான் தெரிய வந்தது. இந்தக் குறுகிய கால அவகாசத்திலும், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு ஏராளமான மக்கள் திரளாக வந்திருந்து அவரை வரவேற்றனர்.

இந்தியப் பிரதமரை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களும், சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்களும், சட்ட மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்களும், நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. மற்றும் அனைத்துக் கட்சியினரும் ஆர்வத்துடன் வந்திருந்து வரவேற்றனர்.

பிறகு, பிரதமர் இராணுவ அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இராணுவ பாண்டு வாத்திய இசைக்கு இடையே சிறப்பாக அமைக்கப்பட்ட தனி மேடையில் பிரதமர் நின்று, வரவேற்பை ஏற்றார்.

திறந்த ஜீப்பில் விமான மைதானத்தில் கூடியிருந்த மக்களிடம் சென்று



மாலைகளையும் கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார். கூடியிருந்தவர்கள் 'அன்னை இந்திரா புகழ் ஓங்குக!' 'பிரதமர் ராஜீவ் காந்தி வாழ்க' என்று மகிழ்ச்சி ஆரவார வாழ்த்து ஒலி எழுப்பினர்.

பிறகு மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு என்.டி ராமராவ், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் ஆகியோருடன் ஹெலிகாப்டரில் புயல் வெள்ளச் சேதப்பகுதிகளைப் பார்வையிடப் புறப்பட்டார். செங்கல்பட்டு-சென்னை மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டரில் இருந்தவாறே பார்த்தறிந்தார்.

பிறகு அதே ஹெலிகாப்டரில் மாலையில் சென்னை திரும்பினார்-வெள்ளத்தினால் அதிக அளவு சேதப்பட்ட பகுதியான சென்னை வியாசர்பாடி, ராதா கிருஷ்ண நகர் பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். மக்களின் கோரிக்கைகளை உன்னிப்பாகக் கேட்டறிந்தார். 'உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்' என்றார்.

புயலால் பாதிக்கப்பட்டு சென்னை வியாசர்பாடி அம்பேத்கார் கல்லூரியில் தஞ்சம் புகுந்துள்ள மக்கள் மத்தியில் பேசினார் பிரதமர் அப்போது அவர் தமது உரையில்:



"டில்லியில் இருந்து வந்து, புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நெல்லூரிலும் சென்னையிலும் பார்வையிட்டேன். சேத விவரங்களைத் தெரிந்து கொண்டேன். இந்த நேரத்தில் என்னென்ன உதவிகளை எப்படிச் செய்ய முடியும் என்பதைப் பேசிக்கொண்டு இருப்பதைவிடச் செயலில் காட்டுவதே மேல் என்று கருதுகின்றேன்.



"மாண்புமிகு நிதியமைச்சருடனும் மற்ற அரசு அதிகாரிகளுடனும் இது குறித்துக் கலந்து பேசி உடனடி நிவாரணம் செய்கிறேன். சென்னையில் மட்டும் ஒரு லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும்.

"மீண்டும் சென்னை வருவதான வாய்ப்புகள் இருப்பதால், அப்போது உங்களுடன் பேசிக்கொள்ள முடியும். பேசிக்கொண்டு இருப்பதைவிட முக்கியமானது நிவாரண நடவடிக்கைகள் தான்" என்று ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கலந்து கொண்டு பேசும்போது—

"பதவி ஏற்று 15 தினங்கள் ஆகின்றன. அதற்குள் டில்லியில் உள்ள வேலைகளை விட்டு விட்டு ஆறுதல் கூறப் பிரதமர் இங்கு வந்திருக்கிறார். மக்களிடம் பிரதமர் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதற்கு இதுவே ஒரு உதாரணம்! காலையிலிருந்து பல இடங்களைச் சுற்றிப் பார்த்ததற்காகவும், மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய பணிகளைச் செய்வதாகக் கூறியதற்காகவும் நான் பிரதமருக்கு நன்றி கூறுகிறேன்" என்று குறிப்பிட்டார்.



**தமிழகத்திற்கு ரூ. 5 கோடி**

புயல்வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்ட பின், ஆளுநர் மாளிகையில் பிரதமர் அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"தமிழ்நாட்டில் சென்னை நகரில் சில பகுதிகளிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளிலும் புயலால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் பகுதியில்தான் மிகவும் மோசமான அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. அங்கே கடற்கரைப்பகுதிகள் அதில் உள்ள உப்பளங்கள், ரோடுகள், ரெயில்வே பாதைகள், மின்சாரக் கம்பங்கள் ஆகியவை புயலால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

"தண்ணீர் தேங்கி நிற்பதால் பயிர்களுக்கும் சேதம் ஏற்படும். சேத விவரங்களைக் கணக்கு எடுக்க, நாள் பிடிக்கும்.

"புயல் நிவாரணப் பணிகளைச் சமாளிக்க முன்பணமாக ஆந்திராவுக்கு ரூ. 7 கோடியும், தமிழ்நாட்டுக்கு ரூ. 5 கோடியும் அனுமதிக்கிறோம். புயல் சேதம் பற்றி ஆய்வு செய்வதற்காக மத்திய நிபுணர் குழுவைத் திங்கட்கிழமை இரு மாநிலங்களுக்கும் அனுப்புகிறோம். அவர்களின் அறிக்கை வந்தபிறகு தான் மேலும் ஏதாவது செய்ய முடியும். அத்துடன் பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து இம்



மாநிலங்களுக்குத் தலா ரூ. 15 இலட்சம் வீதம் கொடுக்கிறோம். அதைத் தனி நபர் நிவாரணத்திற்காக வழங்குகிறோம்.

''மூன்றாவதாக அகில இந்திய இ. காங்கிரஸ் கட்சியின் நிதியில் இருந்து இரண்டு மாவட்ட இ. காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் (ஆந்திராவில் ஒன்று-தமிழ்நாட்டில் ஒன்று) தலா ரூ. 5 இலட்சம் வீதம் கொடுக்கிறோம்.

''மாநில அரசிடம் இருந்து மனு வராமலேயே இந்த நிதி உதவியை அளிக்கிறோம்'' இவ்வாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் குறிப்பிட்டார்.

பிறகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் விமானம் மூலம் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார். மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் அமைச்சர் பெருமக்களும் ஏராளமான பொது மக்களும் வழியனுப்பி வைத்தனர்.

பிரதமரின் எதிர்பாராத சென்னை வருகை, புயல்வெள்ளச் சேதத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

நிகழ்ச்சித் தொகுப்பு :

**ஜீ. ஆனந்தன்**








# மறைந்த பிரதமருக்கு மக்கள் தலைவர்கள் புகழாரம்!

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்கு, சென்னை மாநகர மக்கள் சார்பில் நடத்தப்பட்ட இரங்கல் கூட்டத்தில் அவருக்குப் புகழாரம் சூட்டப்பட்டது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 8.11.'84 அன்று சென்னை நகர ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன் ஏற்பாடு செய்திருந்த பிரதமர் இந்திரா காந்தி மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டத்திற்கு மேதகு ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர்கள் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில், "சிறு வயதிலேயே இந்திரா காந்தி திறமை மிக்கவராகத் திகழ்ந்தார். சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களில் அவரும் ஒருவர். நாட்டில் பொருளாதாரம் - சமூக வளர்ச்சி மற்றும் தொழில் விஞ்ஞான வளர்ச்சிக்காக அவர் சிறந்த முறையில் பணியாற்றி வந்தார். ஏழை மக்கள் நல்வாழ்வுக்காகத் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் பிரதமர் இந்திரா காந்தி" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில்,

"இந்திரா சுட்டுக் கொல்லப்பட்டு அகால மரணம் அடைந்த செய்தி இந்தியாவை மட்டுமின்றி உலக நாடுகளையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. இதன் மூலம் இந்தியத் துணைக்கண்டம் இன்று இருளில் மூழ்கித் தவிக்கிறது. எத்தனையோ சரித்திரச் சாதனைகளைச் செய்தவர் பிரதமர் இந்திராகாந்தி. ஏழைகளுக்காகப் பல நல்ல திட்டங்களைத் தந்துள்ளார். பொறுமையின் சிகரமாக விளங்கினார். கொள்கையில் குணக் குன்றாகவும் இலட்சியவீரராகவும் திகழ்ந்தார். தந்தை பண்டித ஜவகர்லால் நேருவைப் போல ஜனநாயகத்தைக் காக்கப் பாடுபட்டார் பிரதமர் இந்திரா காந்தி.

"அணிசேரா நாடுகளின் தலைவியாக உலக நாடுகள் பாராட்டும் வகையில் நடந்து கொண்டவர் பிரதமர் இந்திரா காந்தி. அவர் மீது உலகம் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருந்தது என்பதை அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உலகத் தலைவர்களைப் பார்த்த போது காணமுடிந்தது. பிரதமர் இந்திரா காந்தி உலக வரலாற்றைப்படித்தவர்தான் என்றாலும் அவரே உலக வரலாற்றைப் படைத்த ஒப்பற்ற, தலைவராக நீங்காப் புகழ் பெற்றவராகி விட்டார். இந்தியாவின் பெருமையை உலகிற்கே எடுத்துக் காட்டிய புகழ் அவரைச் சேரும். மன்னர் மானியம் ஒழிப்பு, வங்கிகளை நாட்டுடைமையாக்குதல், வங்கதேசப் போர் ஆகியவற்றில் அவர் திறமையாகவும் துணிச்சலுடனும் செயல்பட்டார். அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வோம். உலக அரங்கில் இந்தியாவின் புகழை நிலை நாட்டுவோம்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தமது உரையில்,

"பிரதமர் இந்திரா மறைவால் இந்த நாடு ஈடுசெய்ய முடியாத இழப்புக்கு ஆளாகியுள்ளது. காந்திஜி, மார்ட்டின் லூதர் கென்னடி போன்ற தலைவர்கள், துப்பாக்கி குண்டுக்குப் பலியாகி உள்ளனர். ஆனால் பிரதமர் இந்திராவோ அவரது பாதுகாவலர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டதுதான் மிகவும் கொடூரமான செயலாகும். நேருஜி இறந்த பிறகு இனி, யார் அந்த இடத்தை நிரப்புவது என்று உலகம் கேட்டது. அதற்குத் தன் 16 ஆண்டுக்கால ஆட்சியின் மூலம் விடை அளித்து விட்டார் இந்திரா காந்தி.

"தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சியினரின் கோரிக்கையான சேலம் இரும்பாலைத் திட்டத்தைக் கொண்டு வந்து நம்மையெல்லாம் மகிழ்வித்தவர் அவர். இதுபோல பல திட்டங்களை நாட்டுக்குத் தந்தவர் இந்திரா காந்தி. நல்ல காரியங்கள் செய்வதில் ஒரு 'தாய்' உள்ளத்தோடு நடந்து கொள்பவர் பிரதமர் இந்திரா காந்தி. "பிரச்சனைகளைத் தீர்ப்பதில் இந்திரா காந்தி அம்மையாருக்கு இணை இந்திரா காந்தி அம்மையாரே தான்" என்று குறிப்பிட்டார்.

## தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் நியாய விலைக் கடைகள்

தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்க உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் 12,651 நியாய விலைக் கடைகளை நடத்துகின்றன.

இந்தக் கடைகளில் சர்க்கரை, அரிசி, கோதுமை, மைதா, ரவா, மண்ணெண்ணெய் முதலியன 85 லட்சம் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

சென்னை நகருக்கு வெளியே உள்ள 3032 கூட்டுறவுச் சில்லறைக் கடைகள் மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை விநியோகிக்கின்றன. இவற்றின் மூலம் 36,775 பள்ளிகளில் படிக்கும் 97 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். கடந்த 198?-83-ஆம் ஆண்டு மொத்தம் 535 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பாடப்புத்தகங்களும், 366 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 11,159 கிராமப்புறங்களிலும், 1492 நகர்ப்புறங்களிலும் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 16 ஆயிரம் கிராமங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு நியாயவிலைக் கடையாவது திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது



மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது உரையில்,

"பாரதியார் கண்ட புதுமைப் பெண் இந்திரா. இந்திரா இருந்த இடம் இன்று சூன்யமாகிவிட்டது. அந்த இடத்தைப் பூர்த்தி செய்ய இன்னொரு இந்திரா தோன்றுவார். பாரதத்தாய் மலடியாக வில்லை. அவள் மீண்டும் ஒரு இந்திராவைப் பெற்றுத் தருவாள்" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் அவர்கள் தமது உரையில்,

"இந்திரா காந்தி கொல்லப்பட்டது பெரும் சதிதான் என்று நாம் கருத வேண்டும். இதற்கு யார் காரணம் என்று கண்டு பிடித்து உலகுக்கு அடையாளம் காட்டவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இரங்கல் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார், முன்னாள் முதல்வர் பெரியவர் திரு எம். பக்தவத்சலம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு எம். பழனியாண்டி, இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு எம். கல்யாணசுந்தரம் எம். பி., தமிழ்நாடு ஜனதா கட்சித் தலைவர் திரு இரா. செழியன், திருமதி தாரா செரியன், எம்.எல்.சி., அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் எம். ஏ எம். ராமசாமி, தொழில் அதிபர் வி.வி. வாசு ஆகியோர் பங்கேற்று அஞ்சலி உரையாற்றினர்.

தொடக்கத்தில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி பிரார்த்தனைப் பாடல்கள் பாடினார். பிறகு பகவத் கீதை, குரான், பைபிள் ஆகியவை வாசிக்கப் பட்டன. சென்னை நகர ஷெரீப் திருமதி சரோஜினி வரதப்பன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சித் தொகுப்பு :
**ஜீ. ஆனந்தன்**





# சத்துணவுத் திட்டத்திற்கு சீனப் பேராசிரியர் பாராட்டு

—டாக்டர் மெ. சுந்தரம்

மலேயப் பெருநாட்டில் வாழும் தமிழன்பர்களின் அழைப்பினை ஏற்று அங்குச் சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற நான் சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகக் கருத்தரங்கில் உரையாற்றும் வாய்ப்புப் பெற்றேன். குறிப்பாக, தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் சிந்தனையில் மலர்ந்த சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு நல்வாழ்வு அளிக்கும் சத்துணவுத் திட்டம் குறித்து உரையாற்றினேன்.

''அறிவியல் கண்ணோட்டம், சமுதாயக் கண்ணோட்டம், இலக்கியக் கண்ணோட்டம், உளவியல் கண்ணோட்டம், பொருளாதாரக் கண்ணோட்டம், என ஆறுவகையான கண்ணோட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டத்தின் வாயிலாக, பிள்ளைக் கனியமுதுகள்-பேசும் பொற்சித்திரங்கள் நோயில்லா வாழ்வு பெறமுடிகிறது. வலுவானவர்களாகவளர முடிகிறது. பள்ளிக்குச் செல்வதில் பேரார்வமும் அவர்களுக்கு ஏற்படுகிறது'' என்று எனது உரையிலே விரிவாகக் குறிப்பிட்டேன்.

இந்த உரையைச் செவிமடுத்த சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகச் சமுதாயவியல் துறையில் பணிபுரியும் சீனப் பேராசிரியர் ஒருவர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். சத்துணவுத் திட்டத்தின் பெருமையை உணர்ந்து போற்றிப் புகழ்ந்தார்.

''உங்கள் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சத்துணவுத் திட்டத்தினை நீங்கள் ஆறு வகைக் கோணங்களில் ஆராய்ந்தது ஒரு நல்ல திறனாய்வு ஆகும். கல்விக் கண்ணோட்டத்தோடு உங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்திட்டத்தினைக் கொண்டு வந்திருப்பது, உலகத்தவரின் பாராட்டுக்கு உரியதாகும். எனக்குத் தெரிந்த வரையில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்நாட்டில் தான் இத்தகைய புதிய புரட்சிகரமான திட்டம் கல்வித் துறையில் குழந்தைகளுக்காக வளர்ச்சி மனப்பான்மையோடும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நல்ல உள்ளத்தோடு இதனை நடத்திக் கொண்டிருக்கும் உங்கள் முதல்வருக்கு என்னுடைய உளம் நிறைந்த பாராட்டுக்கள்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்,' என்று பாரதி பாடியது எனது நினைவுக்கு வருகிறது.


பிறநாட்டவர் போற்றிப் பாராட்டும் அளவுக்கு அரும் பெரும் திட்டங்களை-ஆக்கப் பூர்வமான திட்டங்களை நம் தாய்த் தமிழகமும்-அதன் தங்கமனை முதல்வரும் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை எண்ணும்போது என் உள்ளம் இறும்பூதெய்துகிறது.



# கோவை மாவட்டத்தில்

## புதிய 20 அம்சத்திட்டச் சாதனைகள்

புதிய 20 அம்சத்திட்டத்தின்கீழ் 9,777 எக்டர் பரப்பிற்குப் புதிதாகப் பாசன வசதி செய்துதர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 261.6 எக்டர் பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்து தரப்பட்டுள்ளது.



32,400 டன் பயறு வித்து உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 780 டன் பயறு வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.



96,300டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 9,442 டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2,982 குடும்பங்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டிருக்கிறது.



தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3,50,000 உழைப்பு தினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.


31.55 எக்டேர் உபரிநிலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.



குடும்பநல அறுவைச் சிகிச்சை 7813 பேர்களுக்குச் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது.



257பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.



25 பம்பு செட்டுகளுக்கு மின்இணைப்புத் தரப்பட்டிருக்கிறது.



28,105 மரங்கள் நடப்பட்டிருக்கின்றன.

602 எரிசாண வாயு அடுப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

247 சிறுதொழில்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.







## ஊமைப் பெண் வாழ்வில் ஒளிவிளக்கு

கணவனால் நிராதரவாக விடப்பட்ட ஒரு ஊமைப் பெண் வாழ்வில், ஸ்டேட் பாங்க் ஒளியேற்றி வைத்துள்ளது.

திருமதி ரகீம் உன்னிசா காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவள். ஏற்கெனவே வறுமையால் உழன்ற பெரிய குடும்பத்தில் ஊமையாகப் பிறந்து, பெரும் சுமையானாள்.

அழகான வாலிபருக்கு அவளைப் பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சி நிலைக்கவில்லை. ஒரு குழந்தைக்கு அவளைத் தாயாக்கி விட்டு, அவள் கணவன் எங்கோ ஓடி விட்டான்.

பிறவிலேயே ஊமை. காதும் கேளாது. வாழ்க்கைத் துணையையும் இழந்து, கைக் குழந்தையுடன் பரிதவித்தாள்.

ஒரு சமூக சேவகர் மூலம், அவள் நிலை ஸ்டேட் பாங்கிற்குத் தெரிய வந்தது. அவள் வசித்த பகுதியில் விறகிற்குத் தட்டுப்பாடு இருந்தது. ஸ்டேட் பாங்க் அவளுக்கு நிதி உதவி அளித்தது. அந்த உதவியைக் கொண்டு விறகுக் கடையை அவள் ஆரம்பித்தாள்.


ஆரம்பத்தில் ஏற்பட்ட சோதனைகளைச் சமாளித்து, ஒரு நல்ல நிலையை எட்டினாள். ஸ்டேட் பாங்க் அளித்த உதவி காரணமாக அவளுக்கு ஒரு நாளைக்கு 50 ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கிறது. வாய் பேச முடியாத ஊமையானாலும், உதவி கிடைத்தால் வளமான வாழ்வைப் பெற முடியும் என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறாள்.

## ஊனம் என்றாலும் உறுதி இருந்தது!

அதிர்ஷ்டசாலிகளை அவர் உருவாக்குகிறார். ஆனால் அந்த அதிர்ஷ்டசாலிகள் மத்தியில் அவரே முதல் முதல் அதிர்ஷ்டசாலியாகத் திகழ்கிறார்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த முகம்மது கனி 8-வது வகுப்பு வரை படித்தார். அது வரை தரையில் ஊர்ந்து, ஊர்ந்துதான் சென்றார். அவரோடு படித்த மாணவர்களும், அக்கம்பக்கத்தில் வசிப்பவர்களும் அவரைக் கேலி பேசினாலும் அதை அவர் பொருட்படுத்தவில்லை. மற்ற மாணவர்களைவிட புத்திசாலியாகத் திகழ்ந்தார்.

அவருடைய தந்தை ஒரு சிறிய பெட்டிக்கடையை நடத்தி வந்தார். அந்த வருமானம் குடும்பத்தை நடத்தவே போதாத நிலையில், 8-வது வகுப்புக்கு மேல் முகம்மது கனியால் படிக்க முடியவில்லை.



அவருடைய நிலையை அறிந்த சமூக நலத்துறை அவருக்கு 1983-ஆம் ஆண்டு மூன்று சக்கர சைக்கிள் வண்டியை அளித்தது. அவர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மூன்று சக்கர சைக்கிளில் சென்று லாட்டரிச் சீட்டுகளை விற்றார். அவருடைய முயற்சி தோல்வி அடையவில்லை.

நிறைய அளவில் லாட்டரி டிக்கெட்டுகள் விற்பனையானது. வேறு லாட்டரி விற்பனையாளர்களிடம் வாங்கி, லாட்டரிச் சீட்டுகளை விற்பதைவிட, தானே விற்பனை உரிமை பெற்றால் என்ன என்று அவருக்குத் தோன்றியது. அவருடைய எண்ணத்தை ஈடேற்ற, காஞ்சிபுரம் நகர ஸ்டேட் பாங்க் கிளை கடனுதவி அளித்தது.

அதைக் கொண்டு அவர் லாட்டரி ஏஜெண்டானார். இப்போது முகம்மது கனி பல அதிர்ஷ்டசாலிகளை உருவாக்கி வருகிறார்.

# இலங்கைத் தமிழர் வாழ்வு வளம்பெற.....



தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், தமிழக அரசு நிறுவனமாகும். தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழருக்கு வாழ்வளிக்க உதகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தில் இருவருக்கு வேலையளிக்கப்பட்டுள்ளது. இதுவரை இவ்வாறு 2,325 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

இவர்களில் 2,201 குடும்பங்களுக்குத் தரமான குடியிருப்பு வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றவர்களுக்குத் தற்காலிக வீடுகள் தரப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கும் நிரந்தர வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

கடந்த நான்காண்டுகளில் மட்டும் 322 குடும்பங்கள் (644 தொழிலாளர்) வேலை வாய்ப்பும், 529 குடும்பங்கள் நிரந்தரக் குடியிருப்பு வசதியும் பெற்றுள்ளன. இந்தக் காலத்தில் 521 எக்டேர் பரப்பிலும் இதுவரை மொத்தம் 2420 எக்டேர் பரப்பிலும் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது.

இந்தத் தேயிலைக் கழகத்திற்கு மூன்று தொழிற்சாலைகள் இருக்கின்றன. சேரங்கோடு தொழிற்சாலை 15 இலட்சம் கிலோ கிராமும், குன்னூர் தொழிற்சாலை 7.5 இலட்சம் கிலோ கிராமும் ஆண்டொன்றுக்குத் தேயிலை உற்பத்தி செய்யும் திறன் பெற்றவை. மூன்றாவதாக 15 இலட்சம் கிலோ கிராம் உற்பத்தி செய்யும் . தொழிற்சாலை ரூபாய் ஒரு கோடியே 40 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, 1984 மார்ச் மாதத்தில் உற்பத்தி தொடங்கியது.

கடந்த நான்காண்டுகளில் மொத்தம் 32 இலட்சத்து 75,361 கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டு மொத்தம் ரூபாய் 17 கோடியே 91 இலட்சத்து 64 ஆயிரம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.



தமிழ்நாடு தேயிலைக் கழகம் தயாரிக்கும் தேயிலை மிகச் சிறந்த தரமுடையதாக இருப்பதால், தென்னிந்திய ஏல விற்பனையில் மிக உயர்ந்த விலை கிடைக்கிறது. டைகர் ஹில் தேயிலையில் கணிசமான பகுதி அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த வகையில் கடந்த மூன்றாண்டுகளில் கழகம் ரூ. 43.16 இலட்சம் அளவிற்கு அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது. ரூ. 5 கோடி பங்கு மூலதனம் கொண்ட கழகம் 1981-82 வரை நட்டத்தில் நடந்து வந்து, 1982-83 முதல் லாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. 1982-83ல் ரூ. 8 இலட்சம் மட்டுமே இலாபம். இது 1983-84ல் ரூ. 202 இலட்சம் அள்வுக்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்:வாடகை இல்லா வீட்டு வசதி; குடிநீர், மருத்துவ வசதி; 20 நாள் விடுப்பு, 9 நாள் விடுமுறை;நோய்க்கால அலவன்சு 14 நாள் (2/3 சம்பளத்துடன்); சம்பளத்துடன் பேறு கால விடுமுறை 84 நாள்; குடும்ப நல வசதி, குழந்தைகள் காப்பகம்; ஆரம்பப்பள்ளி வசதி.

[தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழக நிர்வாக இயக்குநர் திரு கே. அருணாசலம் தெரிவித்த செய்திகளிலிருந்து..]

ரவி.

# பாராட்டுக்குரிய பண்பாட்டுப் பலகணி

தமிழ்வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் சார்பில் 'பண்பாட்டுப் பலகணி' நிகழ்ச்சி சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலை அரங்கில் 26.9.'84 அன்று தொடங்கப்பட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றார்.

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன், இந்தப் புதிய நிகழ்ச்சியின் தொடக்கம் குறித்தும் - அது தொடங்கப்படுவதற்குரிய பின்புலம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

''பண்பாடு Culture என்னும் சொல்லுக்கு விளக்கம் எழுதத் தொடங்கினால் பல்லாயிரக் கணக்கான பக்கங்கள் எழுத முடியும். பழக்க வழக்கங்கள், நடை உடைகள், நம்பிக்கைகள், கருத்துகள், திருவிழா, இலக்கியங்கள், உணர்வுகள் எல்லாவற்றையும் பண்பாட்டில் சேர்த்து விடலாம். Sweetness and light என்பதுதான் பண்பாடு என்று மாத்யூ அர்னால்டு தெரிவித்திருக்கிறார்.

''தமிழ்வளர்ச்சித் துறையின் கீழ் பத்து, பன்னிரண்டு துறைகள் செயல்பட்டு வருகின்றன. திங்கள் தோறும் ஒவ்வொரு துறையின் மூலம் ஒரு நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

''பலகணி என்றால் ஜன்னல் என்று பொருள். சாளரம் என்றும் வாயில் என்றும் பொருள்படும். பலகண்கள் வழியாகப் பார்ப்பது என்றும் கூறலாம். தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியை - வாழ்க்கைக் கூறுகளைப் படம் பிடிக்கும் வகையில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைத் தொடங்க வேண்டும் என்று திட்டமிட்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆற்றுப் படுத்திய வகையில் இது தொடங்கப் பெறுகிறது.

''இன்று இங்கு காட்சியுரை ஆற்றப்பட இருக்கிறது. எழுதிப் படிப்பது எழுத்துரை; பேசுவது சொற்பொழிவு; பேசுவதும் விறல் பட நடித்துக்காட்டுவதுமாக உள்ள உரையை அல்லது பேசுவதும் படமாகவும் காட்டுவதாக உள்ளதைக் காட்சியுரை என்று குறிப்பிடுகிறோம்.

''இங்கு இன்று தமிழிலக்கிய மெய்ப்பாட்டியல் குறித்து பத்மா சுப்ரமணியம் அவர்கள் காட்சியுரை ஆற்றுகிறார்கள். மெய்ப்பாடு என்பது உள்ளத்து உணர்வு [illegible] புறத்தே [illegible] ஆகும். [illegible] இருக்கிறது என்பதைக் கண்களின் சோர்வு மூலம் காண்பிக்க முடியும். அல்லது கன்னத்தில் கை வைப்பதன் மூலம் காண்பிக்க இயலும்.''

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''நமது பண்பாட்டு நிகழ்ச்சிகளின் மூலம் பண்பாட்டு வாயில்களை ஏற்படுத்த வேண்டும் எனத் திட்டம் இடப்பட்டு இப் பலகணி தொடங்கப்படுகிறது.



''பரதநாட்டியத்தைப் பார்த்து ரசிக்கும் வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம். இது போன்ற நிகழ்ச்சிகள் தேவை என்று உணர்கிறோம்.

சென்னை நகருக்கு வெளியே உள்ளவர்கள், வெளி மாநிலத்தவர்கள் பலர் மாமல்லபுரத்தையும் அருங்காட்சியகத்தையும் தினமும் நூற்றுக்கணக்கில் வந்து பார்வையிடுகின்றனர். இது போன்ற கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட அவர்கள் விரும்பும் போது, இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுவது இல்லை. அவர்கள் பார்க்க விரும்பும்போது இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று பண்பாட்டுத் துறையைக் கேட்டுக் கொள்கிறேன்.

''சாதாரண மக்களின் [illegible] கையில் உள்ள கலை அம்சங்கள் நிகழ்ச்சிகளாகத் தீட்டப்பட வேண்டும். சென்னையில் உள்ள நமது மக்கள் கூடப் பார்க்காதவைகளை இந்நிகழ்ச்சிகளின் மூலம் பார்க்க முடியும்.

''நமது நாட்டில் பல அருங்கலைகள் உள்ளன. நாம் ஆதரவு தந்து பாதுகாக்காவிட்டால் பல கலைகள் அழிந்து போய்விட நேரும் என்ற நிலை உள்ளது. சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகங்கள் பல, அவர் எழுதியவாறு நடிக்கப்படுகின்றனவா என்பது சந்தேகம். அதைப் பார்க்கப் பலருக்கு வாய்ப்பில்லை. அவரது புத்தகத்தில் உள்ள பல பாடல்களுக்கு, ராகம், மெட்டு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. அவர் என்ன மெட்டில் பாடினார் என்பதைத் தெரிந்தவர்கள் இருந்தால் அவர்களைக் கொண்டு பாடவைத்து டேப்பில் பதிவு செய்து கொள்ளலாம். பிற்காலத்திற்கு இது பயன்படும்.

''அவர் எழுதிய வள்ளி திருமணம் நாடகத்தைப் பார்க்க விரும்பினால், இன்று அந்த வாய்ப்பு இல்லை. ஆனால் எதிர்காலத்திலாவது அந்த [illegible] வரவேண்டும். நமது நாட்டில்

நாடகக் கலை இப்படி இருந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் நாடக வளர்ச்சிக்கும் இது பயன்படும்".



காட்சியுரை ஆற்றிய டாக்டர் பத்மா சுப்ரமணியம் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள மெய்ப்பாடியலுக்கும் பரத முனிவர் கூறியுள்ள ரசபாவத்துக்கும் உள்ள ஒப்பியல்புகளை எடுத்துச் சொல்லியதுடன் பாவங்களின் இயல்பு குறித்தும் தெளிவாக எடுத்துரைத்து அபிநயங்களின் மூலமும் முத்திரைகளின் மூலமும் மெய்ப்பித்துக் காட்டினார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''உள்ளத்தில் உள்ள உணர்வுகளைப் புறத்தார்க்குப் புலப்படும்படி மெய்யால் செய்து காட்டுதல் விறல் எனப்படும். இதனால்தான் சங்க கால நடனப் பெண்டிர் விறலியர் என வழங்கப்பட்டுள்ளனர்.

''தொல்காப்பியருக்கும் பரத முனிவருக்கும் மிகுந்த ஒற்றுமை உள்ளது. காப்பியர் எட்டு வகைச் சுவைகளைக் குறிப்பிடுகிறார். பரதரும், எட்டுவகை ரஸம் உள்ளன என்றுதான் குறிப்பிட்டுள்ளார். சாந்தம் அல்லது நடுவு நிலை என்று சொல்லப்படும் ஒன்பதாவது சுவை பற்றி பரதரோ, காப்பியரோ கூறவே இல்லை. இது பிற்கால நூலாசிரியர்களின் சேர்க்கை ஆகும்.

''பாவங்களில் இரண்டு உள்ளன. சாத்விக பாவம், அனுபாவம் என்பவை அவை. சாத்விகம் என்பதற்கு விறல் என்ற பொருளையும் அனுபாவத்திற்குக் குறிப்பு என்ற பொருளையும் கூறலாம்.

''அபிநயத்தில் பதார்த்த அபிநயம் என்றும் வாக்யார்த்த அபிநயம் என்றும் இரண்டு உள்ளன, பாடலின் பதங்களின் பொருளை உணர்த்துமாறு அபிநயம் செய்வது பதார்த்த அபிநயம் ஆகும். பாடலில் சொல்லப்பட்டிருக்கும் சூழ்நிலையை உணர்த்துமாறு அபிநயம் செய்வது வாக்யார்த்த அபிநயம் ஆகும்''.

இவ்வாறு தெரிவித்த அவர் இருவித அபிநயத்திற்கும் உள்ள வேற்றுமையைக் காட்சி பூர்வமாகக் காண்பித்து விளக்கினார்,

கம்ப இராமாயணத்தில் வரும் ''அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" என்னும் செய்யுளின் முதல்வரிக்கு அபிநயம் பிடித்துக்காண்பித்தார்.


நின்ற இடத்தில் இருந்தவாறே அங்க அசைவுகளுடனும் அபிநயங்களுடனும் சொல்லுக்குச் சொல் விளக்கம் தரும் வகையில் குறிப்பு வகையால் விளக்கிக் காண்பித்தார், அடுத்தாற் போல் அதே வரிக்குரிய விளக்கத்தை வேறொரு பாணியில்-அதாவது வாக்கியார்த்த அபிநய முறையில் விளக்கினார்.

'அண்ணலும் நோக்கினான்' என்ற சொற்கள் ஒலிக்கும்போது கோதண்டத்தைக் கையில் ஏந்தியவாறு ஸ்ரீராமன் வருவது போலவும், அவன் உப்பரிகையை நோக்குவது போலவும் அபிநயித்து, மறுவினாடியே,'அவளும் நோக்கினாள்' என்னும் வரிக்கு-குனிந்த தலையும் நாண உணர்வும் கொண்டு அரைக்கண்ணால் சீதை பார்ப்பது போலவும் அபிநயம் செய்து காண்பித்த நேர்த்தி .பார்வையாளர்களைக் கவர்ந்தது. சுருங்கச் சொன்னால் ஒருவராகவே நின்று ஒரு நாடகத்தையே உருவாக்கிக் காண்பித்தார். Mono act போல அந்த நிகழ்ச்சி சுவையூட்டியது என்று குறிப்பிடலாம்.

தொடர்ந்து அந்தச் செய்யுளின் அடுத்த வரிகளையும் அபிநயம் செய்து காண்பித்து மெய்ப்பாட்டியல் குறித்துத் தக்க தொரு விளக்கத்தைத் தெரிவித்து அனைவரின் பாராட்டுகளையும் கை தட்டுதல்களையும் பெற்று விட்டார்.

தமிழ்ப் பண்பாட்டுத்துறையின் சார்பில் நடத்தப்பெறும் இது போன்ற நிகழ்ச்சிகள் முத்திரை பதித்த நிகழ்ச்சிகளாகமுகிழ்ப்பது உறுதி.

—தமிழ்ப்பித்தன்



நீண்ட காலம் நிலை பெற்று வழங்கி வருவதற்குரிய அறக்கட்டளையையும் அரசனின் ஆணையையும் கல்லிலும் செம்பிலும் தீட்டிக் காட்டுவது பண்டைக்கால மன்னரின் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

இவ்வழக்கம் தமிழகத்தில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தோன்றியுள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் சான்று கிடைக்கிறது.

தமிழகத்தில் கல் வெட்டுகள் பல்லவர் காலத்தில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டுவரை வளர்ச்சியுற்றன. பின்னர் சோழர் காலத்தில் வெகு வளர்ச்சி பெற்றுள்ளன.

# குமரியில் சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

—செ. மு. பசீர்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், (பொறுப்பு).
கன்னியாகுமரி மாவட்டம்

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் சுய வேலை வாய்ப்புத் திட்டம் கணிசமான அளவு வெற்றி பெற்றுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

இத்திட்டத்தின் கீழ் குமரி மாவட்டத்தில் 800 நபர்களுக்கு 1.20 கோடி ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வழங்க குறி நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் வங்கிகளின் பேராதரவின்படி 1245 நபர்களுக்கு 1.50 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. தொழில் தொடங்க 618 நபர்களுக்கு 74,41,200 ரூபாயும் வியாபாரம் செய்ய 347 நபர்களுக்கு 34,03,800 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. கடன் பெற்ற நபர்கள் வெற்றிகரமாகத் தங்கள் தொழிலை நடத்தி வருவதுடன் கணிசமான அளவிற்கு வருவாயும் பெற்று வருகின்றனர்.

**கன்னியாகுமரி மாவட்டம் குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம் தலக்குளத்தைச் சேர்ந்த திரு சசீதரன் என்பவர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் ரூ. 1,500 கடன் பெற்று முடிதிருத்தம் தொழில் செய்கிறார்,**



இத்திட்டத்தின் கீழ் இந்தியன் ஓவர்சீஸ், வங்கியின் வாயிலாக, கன்னியாகுமரி மாவட்டம், குருந்தங்கோடு ஒன்றியம் தலாக்குளம் ஊரைச்சார்ந்த முடிதிருத்துபவர் திரு. சசிதரன் நிதி உதவி பெற்றார்.

இரணியல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இவர் ரூபாய் 1,500 நிதி உதவி பெற்று முடிதிருத்தும் தொழிலுக்குத் தேவையான நவீன. கருவிகள் எல்லாவற்றையும் வாங்கப் பெரிதும் பயன்பட்டதாகக் கூறுகின்றார். நிதி உதவித் தொகை ரூபாய் 1,500-ல் இவருக்கு ரூ. 500 மானியமாக அளிக்கப்பட்டதாகவும், மாதம் ரூ. 50 வீதம் கடன் தொகையை இவர் திருப்பிச் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கின்றார்.

இருபத்தைந்து ஆண்டுகளாக முடிதிருத்தும் தொழிலை மேற்கொண்டு வரும் திரு. சசீதரன் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான தகவல்களை, விளம்பரங்களை செய்தித் தாள்கள் வாயிலாக அறிந்து குருந்தங்கோடு ஒன்றியத்திலுள்ள பணம் வசூலிப்பவர் மூலமாக எல்லா விவரங்களையும் கேட்டறிந்து அவர் மூலமாக மனுச் செய்து பயன் பெற்றதாகத் தெரிவிக்கின்றார்.

மேலும் இவர் மனுச் செய்த ஆறு மாதக் காலத்திற்குப் பின்பு யாருடைய துணையுமின்றி,இவர் தனது தொழிலை மேற்கொள்வதற்கான நிதி உதவியைப் பெற்று பயனடைந்ததாகத் தெரிவிக்கின்றார். இவர் நிதி உதவி பெற்று ஐந்து மாதங்களாகின்றது.

வங்கியில் நிதி உதவி பெறுவதற்கு முன்பு, முடிதிருத்தும் தொழிலில் மாத வருமானம் ரூ. 500 வந்ததாகவும், நிதி உதவி பெற்ற பின்பு இவரது மாத


வருமானம் கணிசமான அளவிற்கு வளர்ச்சியுற்று தற்பொழுது ரூ. 800 கிடைக்கின்ற அளவிற்கு உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றார். மேலும் தற்பொழுது இவருக்குத் துணை புரிய 'உதவியாளர்' ஒருவரும் இருப்பதாகத் தெரிவிக்கின்றார்.

முடிதிருத்தும் தொழிலுக்குத் தேவையான நவீன கருவிகள் யாவற்றையும் வாங்கி, வசதிகளையும் பெருக்கி, நகரத்திலுள்ள முடிதிருத்தும் நிலையத்தைப் போலவே தனது தலாக்குளம் கிராமத்தில் இவர் முடி திருத்தும் நிலையம் வைத்து, மக்களுக்குச் சேவை செய்ய சுய வேலை வாய்ப்புத் திட்டமானது பெரிதும் பயன்பட்டது என்ற தகவலைப் பெருமிதத்தோடு கூறுகின்றார் திரு. சசீதரன்.

சுயவேலை வாய்ப்புத் திட்

பதினைந்து ஆண்டுகளாகத் தையற் தொழில் செய்து வரும் திரு எட்வின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான தகவல்களை குருந்தங்கோடு ஒன்றியத்திலுள்ள கிராம சேவக் அவர்களின் மூலமாகப் பெற்று விண்ணப்பித்துப் பயன் பெற்றதாகத் தெரிவிக்கின்றார்.

இவர் மனுச் செய்த ஆறுமாதக் காலத்திற்கு பின்பு நிதி உதவி பெற்று உள்ளார். நிதி உதவி பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, நிதியுதவி உடனடியாக அளிக்க தமிழ்நாடு முதலமைச்சருக்குக் கருணை மனு ஒன்று அனுப்பியதாகவும் உடனடியாக நிதி உதவி அளிக்க தாம் ஏற்பாடு செய்வதாகவும் கூறிய தகவல் முதலமைச்சரிடமிருந்து (கடிதத்தைக் காட்டினார்) வந்ததாகவும்





**கன்னியாகுமரி மாவட்டம் குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம் கீழ்முட்டத்தைச் சேர்ந்த திரு எட்வின் என்பவர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் கடன் பெற்று தனக்குத் துணை புரிய மேலும் இரண்டு தையற்காரர்களை உதவியாளர்களாக வைத்து தொழில் செய்கிறார்.**

டத்தின் கீழ் பயன்பெற்றவர் கன்னியாகுமரி மாவட்டம் குருந்தங்கோடு ஒன்றியம், கீழ் முட்டத்தைச் சார்ந்த திரு எட்வின் என்பவர் (ஊனமுற்றவர்).

இரணியல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இவர் ரூபாய் 5,000 நிதி உதவி பெற்று, தையல்தொழிலுக்குத் தேவையான மூன்று மிஷின்களை வாங்க முடிந்ததாகக் கூறுகின்றார். மாதம் ரூ.125 வீதம் இவர் கடன் உதவித் தொகையைத் திருப்பிச்செலுத்தி வருவதாகக் கூறுகின்றார்.

தெரிவித்தார். அதன் பின்பு உடனடியாக உதவித்தொகையை பெற்றதாகவும் இவர் தெரிவிக்கின்றார். இவர் நிதி உதவி பெற்று நான்கு மாதங்கள் ஆகின்றன.

வங்கியில் நிதி உதவி பெறுவதற்கு முன்பு தையற் தொழிலின் மாத வருமானம் ரூ. 250 முதல் ரூ. 300 வரை கிடைத்ததாகவும் நிதி உதவி பெற்ற பின் இவரது மாத வருமானம் ரூ. 500 முதல் ரூ. 6c0 வரை உள்ளதாகவும் தெரிவிக்கின்றார். மேலும் தனக்குத் துணை புரிய மேலும் இரண்டு தையற்காரர்களைஉதவியாளர்களாக வைத்து அவர்களுக்கு தினக் கூலியாக முறையே ரூ. 5 ரூ. 10 கொடுக்கும் அளவிற்குத் தமது தையற் தொழில் வளர்ச்சி பெற்றிருப்பதாக மகிழ்ச்சியுடன் கூறுகின்றார்.

திருமணமாகாத திரு எட்வின் தனது தையற் தொழிலைத் திறம்படச் செய்து மக்களுக்குச் சேவை செய்ய மிகவும் உதவிகரமாக இருந்த சுயவேலைவாய்ப்பு திட்டத்தை மிகவும் பாராட்டித் தனது நன்றியை வெளிப்படுத்தினார்.



# வறட்சியில் வளமை

டி. பி. எஸ். சுந்தரநாதன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம் மாவட்டம்



இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பகுதி வறட்சி பாதித்தவைகளாகும். வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் இப்பகுதியை வளமைக்கு மாற்றும் திட்டம். இத்திட்டத்தில் சிறப்புற்று வளர்ந்து வருவது பட்டுப்புழு வளர்ப்பாகும்.

இம்மாவட்டத்தில் முதன் முதலில் 1977-ஆம் ஆண்டு பட்டுத்தொழிலில் புகுத்தப்பட்டது. குறுகிய காலத்தில் அரசின் தீவிரத் திட்டங்களினால் இம்மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 22 அரசுப் பட்டுப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இதில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள 750 நிலமற்ற ஏழைகட்கு நேரடியான வேலை வாய்ப்பு கிராமப்புறத்திலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 84-85ஆம் ஆண்டில் ஆயிரம் ஏக்கர் பரப்பில் மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 300 ஏக்கர் பரப்பளவிற்கு மல்பரி செடி பயிர் செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 1984ஆம் ஆண்டு தற்போது பட்டுத்தொழிலை மேற்கொண்டு பயன்பெறும் ஆயிரம் சிறு விவசாயிகள் குடும்பங்களின் எண்ணிக்கையை இவ்வாண்டு இறுதிக்குள் இரட்டிப்பாக்கி ரூ. 25இலட்சம் மதிப்புள்ள பட்டு உற்பத்தியாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள், ஐ. புதூர் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் இளம்புழு வளர்ப்பு மையங்கள் முறையூர், எஸ்.புதூர், பாண்டியூர், கல்குறிச்சி, ஈஞ்சார் மகாராஜபுரம் .முதலான இடங்களும் மாதிரி மல்பரி பண்ணைகள் குன்றக்குடி, கழனிவாசல், காளையார்கோவில், தமராக்கி, நித்தம், சாலைகிராமம், லாடனேந்தல், முத்தனேந்தல் பரவச்சி சாத்தூர், செவலூர் முதலான இடங்களிலும் கிராமிய பட்டு நூற்புப்பயிற்சி மையங்கள் மானாமதுரை மற்றும் விருதுநகரிலும் பட்டு வித்தகப்பண்ணை பிளவக்கல்லிலும் நிறுவப்பட்டுள்ளன.


பிளவக்கல் அணைப்பகுதியில் சுற்றிலும் மலையால் சூழப்பட்டு குன்றாத நீர்வளத்துடன் பட்டுத் தொழிலுக்கு முற்றிலும் ஏற்றதொரு இயற்கைச் சூழலுடன் அமைந்துள்ளது இப்பட்டு வித்தக நிலையம்.

இந்நிலையம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 15 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிலையத்திற்கென சுமார் 27.50 ஏக்கரா நிலம் தேர்வுசெய்யப்பட்டு முதன்முதலில் பத்து ஏக்கரா நிலப்பரப்பில் 1983ஆம் ஆண்டு ஜனவரி மாத முதல்தேதி அன்று • தொடக்கப்பணிகள் ஆரம்பமாயிற்று.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தேவையான முசுக்கொட்டை விதைக்குச்சிகள் மற்றும் பட்டு முட்டைகள் அனைத்தும் அண்டை மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டு வருகிறது. அந்நிலையை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் இராமநாதபுரம் மாவட்ட மற்றும் அண்டை மாவட்டங்களுக்குத் தேவையான விதைக்குச்சிகள், பட்டு முட்டைகள் முதலியவற்றை இந்நிலையத்தில் இருந்தே வழங்க திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டும் வருகிறது. இதுதவிர, புதிய இன முட்டைகள் தயாரிப்பு கேந்திரமாகவும் இது விளங்கவுள்ளது. டி.டபிள்யூ.எம்.டபிள்யூ என்ற புதிய உள் நாட்டினங்கள் இப்பண்ணையில் வளர்க்கப்பட இருக்கிறது. இதன்மூலம் தென் மாவட்டங்களுக்குத் தேவையான பட்டு முட்டைகள் தயாரிப்பதில் தன்னிறைவு ஏற்படும்.

தென் தமிழ்நாட்டிலேயே வேறு எந்தப் பண்ணையிலும் இல்லாத வகையில் சுமார் ஒரு ஏக்கரா பரப்பளவில் மல்பரி மரங்கள் வளர்க்கப்பட்டுவருவதுகுறிப்






பிடத்தக்கதாகும். இப்பண்ணையில் பத்து அரசு அலுவலர்கள் பணிபுரியும் வகையில் பட்டுத் தொழிலில் அனைத்துப் பிரிவுகளும் இங்கு இயங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. பட்டுத்தொழிலின் அனைத்துப் பிரிவுகளும் இந்நிலையத்தில் செயல்பட இருப்பதால் அதற்கு ஏற்ற வகையில் வித்தக கட்டடம், புழுவளர்ப்பு மனை, நூற்பாலை, சோதனைச்சாலை முதலிய கட்டடங்கள் சுமார் ரூ.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இதைத்தவிர அலுவலர்களுக்கான குடியிருப்பு மனைகளும் கட்டப்பட்டு வருகின்றன.

இந்நிலையம் அமைந்துள்ள பகுதி இராமநாதபுரம் மாவட்ட முக்கிய சுற்றுலா மையமாகக் கருதப்படுவதால் தினந்தோறும் சுற்றுலாப் பயணிகள் வந்தவண்ணம் இருக்கின்றனர். குறிப்பாக விடுமுறை நாட்களில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் கூட்டம் அதிகம். நிலையத்தைப் பார்வையிட வரும் மக்களை உல்லாசப்படுத்துவதற்காகவே, இந்நிலையத்தில் சுமார் 0.75 ஏக்கர் பரப்பளவில் அழகுப் பூங்கா ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் தென் தமிழ்நாட்டிலேயே பட்டுத்தொழிலில் அனைத்துப் பிரிவுகளும் (முட்டைத் தயாரிப்பு முதல் பட்டு சோதனை (Silk Testing) வரை செயல்படும் வகையில் இந்நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது

இந்நிலையம் அக்டோபர் '84ல் பட்டு வளர்ப்பு ஆரம்பிக்கப்பட்டு 85-86ஆம் ஆண்டு முழு செயல் திறனை அடைய வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து இராஜபாளையம் செல்லும் மெயின் ரோட்டில் சுமார் 4கி.மீ தூரத்தில் படிக்காசுனைத்தான் பட்டி கிராமத்தைச் சேர்ந்த 10.15 எக்கர் பரப்பளவில் பட்டு தொழில் செய்முறைப் பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. 1981 மார்ச் மாதம் மல்பரி நடவு ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிலையம் அமைப்பதற்காக ரூ. 4.90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. இந்த நிலையம் அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு 6.12.1982 முதல் முழு அளவில் செயல்படத் தொடங்கியுள்ளது.



இந்த நிலையத்தின் நோக்கம் பட்டுத்தொழில் பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் செய்வதும், மல்பரி நடவு செய்துள்ள விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு பற்றி பயிற்சி அளிப்பதும் முக்கியத்துவம் ஆகும். மேலும் விவசாயிகளுக்கு மல்பரி நர்சரி செடிகளும் இந்நிலையத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பட்டு விவசாயிகளுக்கு முதல் எட்டு நாட்கள் வரை புழு வளர்ந்து இந்நிலையத்தின்மூலம் இளம்புழுவாகவும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தவிர இந்நிலையத்தில் விதைக்கூடுகள் நூற்றுக்கான பட்டுக்கூடுகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. புதியதாக மல்பரி நடவு செய்பவர்களுக்கு இந்நிலையத்திலிருந்து மல்பரி விதைக்குச்சிகளும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் 1981-82ல் 150 பேர்களும், 1982-83ல் 119 பேர்களும், 1983-84ல் 66 பேர்களும் ஆக மொத்தம் 335 விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்பு பயிற்சி பெற்றுள்ளனர். இந்நிலையத்தில் இதுவரையிலும் மொத்தம் 4 லட்சம் மல்பரி நர்சரி செடிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் மூலம் இதுவரையிலும் மொத்தம் 20,000 முட்டைகள் இளம்புழுக்களாகப் பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் இதுவரையிலும் மொத்தம் 5 இலட்சம் விதைக் கூடுகளும், 700 கிலோ பட்டு நூற்புக்கான பட்டுக்கூடுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.



7வது 5 ஆண்டுத்திட்டம் முடியும்போது தமிழ்நாட்டில் 1இலட்சம் ஏக்கரில் பட்டுப் புழுவளர்ப்பதற்கான மல்பரிச் செடிகள் பயிரிடப்படும்.

இப்போது 65,000 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 7,500 ஏக்கரில் மல்பரிச் செடிகள் பயிரிடப்படும். ஒவ்வொரு ஏக்கருக்கும் குறைந்தது 5 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் 3 இலட்சம் பேர் பயன் அடைவார்கள்.

வறட்சி நிறைந்த இராமநாதபுர மாவட்டத்தைப் பளபளக்கும் பட்டால் வளமை செழித்திட வைக்கும் பட்டுவளர்ப்புத் திட்டம் நிறைந்த பலனை விளைவித்து வருகிறது. ஏழை மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு மல்பரி வளர்ப்பு பெருந்துணையாகிறது. ஏக்கருக்குப் பத்தாயிரம் ரூபாய் நிகர லாபம் கிடைக்கவல்ல இத்தொழிலை ஏழை விவசாயிகள் பேரார்வத்துடன் ஏற்க முன் வந்துள்ளனர். கடற்கரையை ஒட்டிய பகுதிகளிலும் மல்பரி பயிர் வளர்ப்பதில் வெற்றி கண்டுள்ளனர். வறட்சிக்கு இலக்காகும் பகுதித்திட்டம் வளமைக்கு வழிகாட்டும் திட்டமாக இராமநாதபுர மாவட்ட மக்களை ஈர்த்துள்ளது.

இதுதவிர இவ்வருடம்போர்டு பவுண்டேசன் திட்டத்தின் கீழ் இந்த நிலையத்தில் 11 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மூன்று மாத காலம் பயிற்சிக்குப் பின் இந்தப் பெண்கள் கிராமிய இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்களிலும், மல்பரி விரிவாக்கப் பணிகளிலும் அமர்த்தப்படுவார்கள்.

போர்டு பவுண்டேசன் திட்டத்தின்கீழ் பெண்களுக்குப் பட்டுப்புழு வளர்ப்பு பற்றி பயிற்சி அளித்த பிறகு தற்காலிகமாகப் பணியில் அமர்த்தும் திட்டம் தற்சமயம் இராமரநாதபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுர மாவட்டத்தில் மொத்தம் 20 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 11 பெண்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் பட்டுத் தொழில் செய்முறைப் பயிற்சி நிலையத்திலும் மூன்று மாதம் பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்தப் பயிற்சிக்காலத்தில் இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்குப் பின்னர் 33 மாதம் தற்காலிகமாக கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்களிலும் மல்பரி விரிவாக்க பணிகளிலும் பணியில் அமர்த்தப்படுவார்கள். இந்தக் காலத்தில் இவர்களுக்கு மாதம் ரூ.350 சம்பளம் அளிக்கப்படும்.

# வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி

**எம். அண்ணாமலை,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை மாவட்டம்.**

மதுரை ஆண்கள் தமிழ்நாடு பாலிடெக்னிக்கில் 25-9-84முதல் 27-9-84 வரை வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள் பட்டியல் கண்காட்சி சிறப்பான முறையில் நடைபெற்றது.

வணிக மேம்பாட்டு ஆணையகம், புதுடில்லி, சென்னை சிறுதொழில் சேவா நிலையம், சென்னை தொழில் வணிகத்துறை, மதுரை மாவட்ட சிறுதொழில் அதிபர் சங்கம் ஆகியவை இணைந்து, வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள் தயாரிப்போர், இறக்குமதி செய்வோர், விநியோகிப்போர், விற்பனை செய்வோர் ஆகியோரின் பட்டியல் கண்காட்சியினை ஏற்பாடு செய்துள்ளனர்.

தானியங்கிக் கருவிகளுக்கான துணைக்கருவிகள், சைக்கிள் மற்றும் உதிரிபாகங்கள் வார்ப்பு சம்பந்தப்பட்ட பொருட்கள், டீசல் என்ஜின்கள், எலெக்ட்ரானிக் மற்றும் மின்சாரக்கருவிகள், கைவினைக் கருவிகள், தோட்டக் கருவிகள், கட்டடம் கட்டுவோரின் தொழிற் கருவிகள்இயந்திரக் கருவிகள், கூடைக் கலைகருவிகள், மனையியற் பொருட்கள், விரிப்புகள், பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் பொருட்கள் பொம்மைகள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள், ஆயத்த ஆடைகள் போன்ற பொறியியல் சம்பந்தப்பட்ட மற்றும் சம்பந்தப்படாத் பொருட்கள் இடம் பெற்றன.

ஏற்றுமதியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளில் அறிமுகம் செய்வதற்குத் தங்கள் பொருட்களின் படத்துடன் கூடிய விவரங்கள் மிக இன்றியமையாதது. அது நேரடி விற்பனைக்கு முன்னோடியாக அமைகிறது.

இம்மாதிரி வெளிநாட்டுப் பட்டியல்கள் இந்திய உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை எவ்வாறு அறிமுகப்படுத்துவது என்றும் வெளிநாட்டு விற்பனை அரங்கில் என்னென்ன பொருட்களுக்குத் தேவை என்பதை அறியவும் இது பயன்படுகிறது.



1980-81ஆம் ஆண்டில் இம்மாதிரிக் கண்காட்சிகள் பெங்களூர், பம்பாய், கல்கத்தா, ஆமதாபாத் ஆகிய இடங்களிலும், 1981 82ல் ஐதராபாத், சென்னை, பெங்களூர், புதுடில்லி ஆகிய இடங்களிலும், 1982-83ல் கோவை, கட்டாக், கல்கத்தா, கான்பூர் ஆகிய இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டன.

மிகக் குறைந்த கட்டணத்தில் தேவையான பட்டியல்களின் பிரதிநிதிகளை 'செராக்ஸ்' நகல் எடுப்பதற்குக் கண்காட்சி நடைபெறும் இடத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வெளி நாடுகளுக்குச் செல்லாமலேயே வெளிநாட்டு உற்பத்திப் பொருள்களைப் பற்றியும், இயந்திரங்களைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள தொழிலியல் வல்லுநர்களுக்கு இது ஒரு வாய்ப்பாகப் பயன்பட்டது.

இக்கண்காட்சியை 1,500-க்கும் மேற்பட்ட தொழில் அதிபர்களும், முனைவோர்களும் கண்டு பயன் பெற்றுள்ளனர்.

25-9-84 அன்றுகாலை 10 மணிக்கு தொடக்க விழாவிற்கு வந்திருந்தவர்களை மதுரை மாவட்ட சிறுதொழில் அதிபர்கள் சங்கத்தலைவர் திரு மோகன் ராஜன் வரவேற்றார். திரு. டி.சி. சவுக்கான், இ.ஆ.ப. இயக்குநர் தமிழ்நாடு தொழில் வணிகத்துறை, தலைமை தாங்கினார். திரு பி.பி. லால் இணைத் தலைவர் செய்தி - புள்ளி விவரத் தொகுதி வணிக மேம்பாட்டு ஆணையகம், புதுடில்லி திரு ஜே. ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். சென்னை சிறுதொழில் சேவா நிலைய இயக்குநர் திரு சி.வி. குப்புசாமி கண்காட்சியைத் திறந்து வைத்தார். கனராவங்கி துணைப் பொது மேலாளர் திரு பி.டி. சீனிவாசன் 'சிறுதொழில்' மலரை வெளியிட்டார். சிறுதொழில் சேவா நிலைய துணை இயக்குநர் திரு ஐசக் நன்றி கூறினார்.

26-9-84 அன்றைய நிகழ்ச்சியில் திரு எம். கோடீஸ்வரன், 'சென்னை இன்ஜினியரிங் எக்ஸ்போர்ட் . பிரமோசன் கவுன்சில்' வட்டார மேலாளர், தூத்துக்குடி ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேசனைச் சேர்ந்த திரு எஸ். சேசாத்திரி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



# முதுமலை வனவிலங்கு சரணாலயம்!

இந்தியாவின் தொன்மை மிக்க புகழ் வாய்ந்த சரணாலயங்களில் முதுமலை சரணாலயமும் ஒன்றாகும். 321 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இச்சரணாலயம் கர்நாடகம், கேரளா மாநில எல்லைகளைத் தழுவி, தமிழ்நாட்டில் உதகையிலிருந்து மைசூர் செல்லும் நெடுஞ்சாலையில் இரு மருங்கும் பரவியுள்ளது. அடர்ந்த மரங்களை மறைக்கும் மலைகள், புல்வெளிக் குன்றுகள், பள்ளத்தாக்குகள், நீர்வீழ்ச்சிகள், ஆறுகள், சிற்றோடைகள், நீர் ஊற்றுகள் முதலான இயற்கை அமைப்புகள் இச்சரணாலயத்தில் பலதரப்பட்ட வனவுயிர்கள் வாழ்வதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்கும் வழிகோலுகின்றன.

இச்சரணாலயத்தின் மேற்குப் பகுதியிலிருந்து கிழக்குப் பகுதி எல்லை வரையிலும் பல்வகை வனவகைகள் உள. பசுமை மாறாக் காடுகள், ஈர இலையுதிர் காடுகள், உலர்ந்த இலையுதிர் காடுகள் சமவெளிக் காடுகள், ஆற்றோரக் காடுகள், மூங்கில் பகுதிகள், புல் சமவெளி எனப் பலவகையான தாவர இனங்களைக் கொண்டுள்ளதால் பலதரப்பட்ட வனவுயிர்கள் காணப்படுகின்றன.

சரணாலயத்தில் பார்வையாளர்கள் ஆண்டு முழுவதும் வனவுயிர்களைக் கண்டு களிக்கலாம். இருப்பினும் சனவரி முதல் ஜூன் வரையிலான' காலங்களில் வனத் தாவரங்கள் இலை உதிர்த்து மறுவளர்ச்சிக்குள் ஏற்படும் இடைவெளிகள். வனவுயிர்களைக் காண எளிதாக அமைவதால் இக்காலமே சிறந்ததாகும். பொதுவாக எல்லாக் காலங்களிலும் குறிப்பாகக் காலையிலும் மாலையிலும் வனவுயிர்கள் அதிகமாக நடமாடும்.

23-4-'83-ல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்போது பார்க்கப்பட்ட வனவுயிர்கள்: கரடிகள்-7; மலை அணில்கள் 81; புள்ளி மான்கள் 608; சிறுத்தை 30; சருகுமான் 100; செந்நாய்கள் 58; கடமான்கள் 258; காட்டு ஆடுகள் 22; காட்டுப்பன்றிகள் 118; மயில்கள் 120; குரங்குகள், வெள்ளை மந்திகள் 329.

30-4-84 அன்று நடைபெற்ற யானைகள் மற்றும் காட்டெருமைகள் கணக்கெடுப்பில் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டது:

யானைகள் 112; காட்டெருமைகள் 144

17-4-84 முதல் 23-4-84 முடிய நடத்தப்பட்ட புலிகள் கணக்கெடுப்பின்படி 29புலிகள் இருப்பதாக அறியப்படுகிறது.

புள்ளினங்களைக் காண விழைவோருக்கு இச்சரணாலயம் ஒரு சொர்க்கமாகத் திகழ்கிறது. இங்கு காட்டுக் கோழிகள், கௌதாரி மஞ்சக் குருவி, இரட்டைச் செட்டு குருவி, மரங்கொத்தி, புறாக்கள், வல்லூறுகள், கழுகுகள் முதலிய புள்ளினங்கள் காணப்படுகின்றன. மேலும் மலைப்பாம்புகள், நாகப்பாம்புகள், சாரைப்பாம்பு போன்ற பலவகைப் பாம்பினங்களும் காணப்படுகின்றன.

30 யானைகள் தெப்பக்காடு யானை முகாமில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு யானைகளுக்கு உணவு அளிப்பதைக் காண்பது உல்லாசப் பயணிகளுக்கு ஒரு புதிய அனுபவமாக அமைகிறது. யானைகள் உணவு உண்ணும்போது கீழே விழும் உணவினை உட்கொள்ள வரும் காட்டுப் பன்றிகளை யானை முகாமிலேயே பார்வையாளர்கள் காணலாம். இங்கு மொத்தம் உள்ள 30 யானைகளில் ராணா, சுரபா, உதயணன் என்னும் குட்டிகளும் அடங்கும்.

சரணாலயத்தின் வற்றாத சிவநதியாக 'மாயாறு' திகழ்கிறது. தெப்பக்காட்டிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் நீர்வீழ்ச்சியாகக் காட்சி தந்து பார்ப்போர் மனத்தில் புத்துணர்ச்சி ஊட்டுகிறது.

இயற்கைச் சூழலின் நடுவே அமைந்துள்ள 7 ஒய்வு விடுதிகளும், பல படுக்கைகள்கொண்ட 3 விடுதிகளும் பயணிகளின் வசதிக்காகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விடுதிகளில் தங்குவதற்கு உதகையிலுள்ள வரவேற்புச் சரக அலுவலகத்தில் பணம் செலுத்தி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். சரணாலயத்தைச் சுற்றிப் பார்க்க யானைகள், ஊர்திகள், ஈப்புகள் மூலம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வனவிலங்குகளைக் காணச் செல்கையில் பழுப்பு, காக்கி, மற்றும் மங்கலான நிறமுடைய ஆடைகளை அணிவது நலம். யானைச் சவாரியின் போது நிசப்தமாக இருப்பது வனவிலங்குகளைக் காண ஏதுவாக அமையும். கால், கைகளை நீட்டல், சத்தம் செய்தலை விலங்குகள் விரும்புவதில்லை. சரணாலயத்திற்குள் புகைபிடித்தல் கண்டிப்பாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.



உதகமண்டலம் ஏரிக்கரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தொடங்கப்பட்டுள்ள 'அண்ணா எக்ஸ்பிரஸ்' என்னும் சிறுவர் உல்லாச ரயில்.

## யானைக்கு ஓய்வு எப்போது?

அரசு அலுவலர்கள் 58 வயதில் ஓய்வு பெறுகிறார்கள் அல்லவா? ராஜ கம்பீர யானைகள் 60-ல் ஓய்வு பெறுகின்றன.

தெப்பக்காடு யானை முகாமில் ஓய்வு பெற்றுள்ள யானைகள் இரண்டு உள்ளன. 74 வயது தாரா; 69 வயது கோதாவரி. கொள்ளு, கேழ்வரகுக் களி, உப்பு, வெல்லம், பசுந்தழைகள் முதலியவை யானைகளின் ஆகாரம். கொள்ளு, களி போன்றவற்றை 18 கிலோ கிராம் முகாமில் தருகிறார்கள். பெரிய யானைகள் சாதாரணமாக ஒரு நாளைக்கு 250 முதல் 350 கிலோ கிராம் வரை உணவு சாப்பிடுகின்றன.

ஒரு யானை 3,000 முதல் 4,000 கிலோ வரை எடை இருக்கும். இதில் 5 சதவிகிதம் அதற்கு உணவு தேவை.

குட்டி யானை பிறக்கும்பொழுது 98-110 கிலோ கிராம் எடை இருக்கும்; 12-14 வயதில் பருவமடைகிறது. பேறுகாலம் 690 நாட்கள் (18-22 மாதங்கள்). மூன்று நான்கு ஆண்டு இடைவெளியில் 60-70 வயது வரை குட்டி போடும். சாதாரணமாக ஒரு குட்டி பிறக்கும். இரண்டு, மூன்று பிறப்பதும் உண்டு.

மின்னொளி விளக்குகள், சப்தம், சேட்டை-இவை யானைகளுக்குக் கோபமூட்டும்.

41 வயதாகும் ரதி காட்டு யானையுடன் சேர்ந்து இப்பொழுது குட்டி போட்டுள்ளது. எட்டாவது குட்டி. 14 மாதமாகிறது.

யானைகள் நின்று கொண்டே தூங்கும். புல் மேயவும் தண்ணீர் குடிக்கவும் கூட்டமாகத்தான் போகும்.


கோபன் என்ற மாவுத்தன் இரண்டாண்டுகளுக்கு முன்னால் எதிர்பாராத வகையில் சிறுத்தைப் புலியால் தாக்கப்பட்ட பொழுது, அவன் போட்ட சப்தத்தைக்கேட்டு அவனது யானை பாமா ஓடிவந்து அவனைக் காப்பாற்றியது.

குட்டியாக இருக்கும்பொழுதே யானைக்குப் பாகன் நியமிக்கப்பட்டு விடுகிறான். அவனை அதற்கு அடையாளம் தெரிய வேண்டும் என்பதற்காக, பாகனின் வியர்வை வாசனை யானைக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. இதற்காக, யானைக்குக் கொடுக்கும் வெல்லக் கட்டியை மாவுத்தன் தனது வியர்வையில் நனைத்துக் கொடுப்பான்.

யானையின் காதுக்கும் கண்ணுக்கும் இடையில் உள்ள ஒரு துவாரத்தின் வழியாக, ஆண்டுக்கு ஒரு தடவை ஒருவித நீர் சுரக்கும். யானைக்கு மதம் பிடித்திருக்கிறது என்று அதனைச் சொல்வார்கள். அப்பொழுது யானை யாரையும் அண்ட விடாது தாக்கும். பாகன் மட்டுமே கிட்டப் போக முடியும். அந்தச் சமயங்களில் பாகன் குளிக்கவோ, துணிமணிகளை மாற்றவோ மாட்டான். வியர்வை வாசனை போய்விடாதபடி பாதுகாக்க இப்படிச் செய்யப்படுகிறது.

தெப்பக்காடு யானைகள் பராமரிப்பு அலுவலர் டாக்டர் ஜகந்நாதன் தெரிவித்த கருத்துக்களிலிருந்து.....

முத்து ராஜா



## 'முதல்வர் பார்வை மாடம்'

முதுமலையில் மோயாறு பள்ளத்தில் 'முதல்வர் பார்வை மாடம்' அமைக்கப்பட்டு வருகிறது. 1983 டிசம்பரில் தொடங்கிய பணி முடியும் கட்டத்தை அடைந்துவிட்டது. 53 படிகளுடன் 45 அடி உயரத்தில் ரூ 1.5 லட்சம் செலவில் கட்டப்படும் இம்மாடம், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் கருத்தில் உருப்பெற்றதாகும்.

இதில் டெலஸ்கோப் வைக்கப்படும். இம்மாடத்திலிருந்து 30 சதுர கிலோ மீட்டர் பரப்பில் உள்ள இயற்கை எழிலை மாந்தி மகிழ்ச்சியடையலாம்.

இன்னொரு பார்வை மாடம் கக்கநல்லா நதியருகில் உள்ளது. மணல் சாலைப் பார்வை மாடம் என்றழைக்கப்படும் இதன் உயரம் 35 அடி. கடந்த மே மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது. ரூ 50,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில் இரண்டு படுக்கைகள் உள்ளன. இரவு தங்கி, இயற்கைச் சூழலில் காட்டு விலங்குகளைக் கண்டு மகிழ்ச்சியடைய ஏற்ற இடம்.

முதுமலைக்கு ஆண்டுதோறும் சுமார் 5,000 பயணிகள் வந்து தங்கிச் செல்கிறார்கள். இவர்களில் 20-25 சதவிகிதம்பேர் அயல் நாட்டவர்.

[முதுமலை வனவிலங்குக் காப்பாளர் திரு ஜே. மங்கல்ராஜ் ஜான்சன் தெரிவித்த கருத்துகளிலிருந்து....]

## பத்திரிகையாளர் பாவசப் பயணம்

வனவிலங்கு வார விழாவினையொட்டி தமிழ்நாடு அரசு இந்த ஆண்டும் 4 நாட்களுக்குப் பத்திரிகையாளர் சுற்றுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

அக்டோபர் 4 முதல் 8வரை நடைபெற்ற இப்பயன்மிகு பயணத்தில், சென்னையிலிருந்து சுமார் 20 பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர். உதகமண்டலம், குன்னூர், முதுமலை, கோத்தகிரி ஆகிய இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும், அங்கு அரசின் வளர்ச்சிப் பணிகளையும் பத்திரிகையாளர் நேரில் கண்டறிந்தனர்.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் உதகையில் நடைபெற்ற சிறுவர் உல்லாச இரயில் தொடக்க விழா மற்றும் படகுத் துறைக்கு அடிக்கல்நாட்டு விழாவிலும், தமிழ்நாடு வனத்துறை சார்பில் நடைபெற்ற வனவிலங்கு வார நிறைவு விழாவிலும் கலந்து கொண்டனர். இப்பத்திரிகையாளர் பயணத்தில் 'தமிழரசு' இதழ் சார்பில் இணையாசிரியர் மு. முத்துக்காளத்தி பங்குகொண்டார்.

காடுகளையும் காட்டு விலங்குகளையும் கண்டு அனுபவிக்கும் கட்டுமீறிய வேட்கை கிளர்ந்தெழச் செய்யும் வகையில் வனப் பாதுகாப்புக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்துப் பணியாற்றி வருவதையும், அதன் பயனாக மக்கள் நூற்றுக்கணக்கில் இந்த இடங்களுக்கு உல்லாசம் நாடி உவகை பொங்க வந்து புத்துணர்ச்சி பெற்று மீள்வதையும் நம்மால் காணமுடிகிறது.

## சேலம் மாவட்டம்: ஊரக வளர்ச்சிப் பணிகள்




ம. அரிகிருஷ்ணன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாவட்டம்.


கிராமங்கள்தாம் ஒரு நாட்டின் உயிர்நாடி. கிராமங்கள் உணவுப் பொருள் உற்பத்தி செய்யும் உழவுத் தொழிலின் உறைவிடம். நாட்டில் எண்பது சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் நம்பியிருக்கும் தொழில் உழவுத் தொழில். நாட்டில் ஐம்பது சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழேதான்-அதாவது ஆண்டிற்கு ரூ. 3,500-க்கும் வருமானம் குறைந்த நிலையில் வாழ்க்கை நடத்துபவர்கள். விதியை எண்ணி வேதனையில் வாழ்பவர்கள் கடமையைஎண்ணி உழைத்தால் உயரலாம் என்ற தத்துவத்தை மக்களுக்கு உணர்த்தும் ஊரக வளர்ச்சித் திட்டங்களை அரசு இன்று நிறைவேற்றி வருகிறது.

கிராமப்புறங்களைத் தேடி திட்டங்கள் சென்று கொண்டிருக்கின்றன. சாதனைகள் குவிகின்றன. மாவட்டங்கள்தோறும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தின் மூலம் கிராமப்புறங்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த வகையில் சேலம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்திட்டம் 1979ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் 1984-85ஆம் ஆண்டிற்கு ரூ. 560 இலட்சம் கடனாகவும், ரூ 280 இலட்சம் மான்யமாகவும் ஆக மொத்தம் ரூ. 840 இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு 600 குடும்பங்கள் வீதம் சேலம் மாவட்டத்திலுள்ள 35 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 21,000 குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள். இவர்களில் ஐம்பது சதவிகிதத்தினர் ஆதிதிராவிடர் மற்றும் மலைச்சாதி மக்கள் ஆவர். மொத்தம் பயன் பெறுபவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள்.

சிறு விவசாயிகள் மிகச் சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறத் தகுதி பெற்றவர்கள்.

### உதவி பெறும் தொழில்கள்

மாட்டு வண்டி, டயர் வண்டி, ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல், பட்டு வளர்ப்பு, கைத்தறி நெசவு, தீப்பெட்டி தயாரித்தல், பெட்டிக்கடை, மளிகைக் கடை, சைக்கிள் கடை, ஒலி அமைப்பு ஆகிய தொழில்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கப்படுகிறது. சுயமாக உழைத்துச் சம்பாதித்து முன்னேற முடியும் என்ற நம்பிக்கையில் தொடங்கும் எந்தத் தொழிலுக்கும் இந்த மான்யம் வழங்கப்படும்.

சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், மிகச் சிறு விவசாயிகளுக்கு 33⅓ சதவிகிதமும் ஆதி திராவிடர்களுக்கு 50 சதவிகிதமும் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் சேலம் மாவட்டத்தில் மான்யமாக வழங்கப்படவுள்ள ரூ. 280 இலட்சத்தில் அரசிடமிருந்து இதுவரை ரூ. 140 இலட்சம் வரப்பெற்று ரூ.123.40 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை 12,000 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. மேலும் 9,000 குடும்பங்கள் நடப்பாண்டில் பயன் பெறும். ஒரு குடும்பத்திற்கு அதிக பட்சம் ரூ 3,000 வரை மான்யமாக வழங்கப்படும். 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 23,735 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியத்திற்கு 40 நபர்கள் வீதம் சேலம் மாவட்டத்தில் 1,400 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சுய வேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மணத்தால் கிராமத்தில் இத்திட்டத்தின் மூலம் 30 பெண்களுக்கு அம்பர் இராட்டை மூலம் நூல் நூற்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப பயிற்சியைத் திருச்செங்கோடு காந்தி ஆசிரம நிறுவனம் அளிக்கிறது. இதற்கான பயிற்சிக் காலம் ஆறு மாதங்களாகும். பயிற்சி பெறும் நபர்களுக்கு ரூ. 75 வீதமும், பயிற்சி பெறும் நிறுவனத்திற்கு நபருக்கு ரூ. 50 வீதமும் உதவித் தொகையாக இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**ஆடு வளர்ப்பு:**

மணத்தால் கிராமத்தைச் சார்ந்த திரு ஆர். பொன்னப்பன் என்பவர் கஞ்சமலை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனாக ரூ. 3,000 மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மான்யமாக ரூ. 1,500 ஆக ரூ. 4,500 பெற்று 21 ஆடுகள் வாங்கி வளர்த்து வருகிறார். ஆடு வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் இருப்பதாகவும், கடன் பெற்ற நான்கு மாத காலத்திலேயே ரூ. 500 வங்கிக்குத் திருப்பிச் செலுத்தியுள்ளதாகவும் திரு பொன்னப்பன் கூறுகிறார்.

மணத்தால் கிராமத்தைச் சார்ந்த திரு வெள்ளையன் என்பவரின் மனைவி திருமதி கமலி, ரூ. 2,500 இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் பெற்று கறவை மாடு வாங்கியுள்ளார். இதில் 1250 மான்யமாகும். நாள்





தோறும் 6 லிட்டர் பால் கிடைப்பதாகவும் லிட்டர் ரூ. 3 வீதம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் பால் ஊற்றி வருவதாகவும், இதன் மூலம் கடனையும் திருப்பிச் செலுத்தி குடும்பச் செலவிற்கும் நல்ல வருவாய் கிடைப்பதாகவும் கூறுகிறார்.

சேலம் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 12 இலட்சம் வீதம் 35 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 420 இலட்சம் செலவில் நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் ரூ. 357.52 இலட்சம் தொகையாகவும், மீதி ரூ. 62.48 இலட்சம் மதிப்பிற்கு அரிசியாகவும் வழங்கப்படுகிறது. சமூகக் காடுகள் அமைப்பதற்கு முன்னுரிமை கொடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 2 முதல் 2½ இலட்சம் செலவில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சமூகக் காடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் ஆதி திராவிடர் மக்களுக்கு வீடுகள் கட்டித் தருதல், வடிகால் வசதி, சாலை அமைத்தல், குடிநீர் வசதி அளித்தல் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

**வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்:**

இத்திட்டம் 1983-84ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் செலவிடப்படும் தொகை முழுவதும் மத்திய அரசினரால் வழங்கப்படுகிறது. ரூ. 288.88 இலட்சம் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 1983-84ஆம் ஆண்டில் 55.08 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1984-85 ல் இதுவரை ரூ. 88.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. தற்போது மேலும் ரூ. 70 இலட்சம் தொகை வரப்பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சாலைகள் அமைத்தல், இணைப்புச் சாலைகள் போடுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், வாய்க்கால் வெட்டுதல், ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு 650 வீடுகளும் மலைசாதி மக்களுக்கு 120 வீடுகளும் ஆக 770 வீடுகள் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. வீடு ஒன்று ரூ. 6,000 செலவில் கட்டி முடிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 24.20 இலட்சம் செலவில் கால்வாய் வெட்டும் பணி நடைபெறுகிறது. பூலா ஏரியிலுள்ள அதிகப்படியான நீரைக் கொண்ட சமுத்திரம் ஏரிக்குப் பாசனத்திற்குக் கொண்டு செல்ல இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால் 43.46 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசனம் பெறுகிறது. 127 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படும்; அமைக்கப்பட்டுவரும் கால்வாயின் நீளம் 2.61 கி.மீ. தூரம் ஆகும்.

கிராமங்கள் வசதி பெறவும், கிராமத்து மக்கள் முன்னேற்றம் எய்தவும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், பொருளாதார வளத்தை ஏற்படுத்துவதன் மூலம் - சமூகசமத்துவத்தை உருவாக்கவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் அரசு பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற்றம் பெறுவது மக்களின் கடமையாகும்.

# ஒரு புதிய திருப்பம்!



“இராயர்பாளையம்,” பெரியார் மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சின்னஞ் சிறு கிராமம்!

பெரியார் மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியும் கோவை மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியும் இணைகின்ற இடத்தில் கரடுமுரடான தீவுத்திடல்போல் அமையப் பெற்றுள்ள இக்கிராமத்தில் 270 சீர் மரபினர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் விவசாயம், விவசாயக் கூலி வேலை, விறகு வெட்டுதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்தும் வயிற்றுக்கு ஏற்ற வருமானம் கிடைக்காமல் இருந்தனர். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்ற இந்த ஏழை மக்களின் வாழ்வு மலர மகத்தான திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 25 நபர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க ரூ. 51,000 மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 50,000 செலவில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகின்றது.

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கிராமிய இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி பெறுவதற்காக 30 நபர்களுக்கு ரூ. 27,000 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

20 நபர்களுக்குக் கைத்தறி நெசவுப் பயிற்சி வழங்குவதற்கு ரூ. 18,000 உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சிறு குறு உழவர்களுக்கான திட்டத்தின் மூலம் 2 நபர்களுக்கு கிணறு ஆழப்படுத்திக் கொள்ள ரூ. 12,000 மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

ரூபாய் 50,000 செலவில் 1.8 கி.மீ. சாலை கப்பி போடப்பட்டுள்ளது.

46 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

மளிகைக்கடை, சைக்கிள்கடை; டீ கடை வைத்துக் கொள்ள மூன்று நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

72 குழந்தைகள் பயன் பெறும் வகையில் புதிய சத்துணவுமையம் தொடங்கப்பட்டுள்ளது.

புதிய மகளிர் மன்றம் தொடங்கப்பட்டுள்ளது. புதிய வழித்தடம் (திருப்பூர்- நம்பியூர் வழி ராயர்பாளையம்) தொடங்கப்பட்டுள்ளது. புதிய வானொலி மன்றம் தொடங்கப்பட்டுச்செயல்பட்டு வருகின்றது. 9 புதிய தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. உள்ளூர்ப் பொதுமக்கள் சார்பில் நெசவு மற்றும் நூற்புத் தொழில் கூடங்கள் கட்டுவதற்குத் தேவையான காலி மனைகள் இலவசமாகப் பெறப்பட்டுள்ளன. முதியோர் உதவித்தொகை மூன்று நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**செயல்பட இருக்கும் நலத் திட்டங்கள்:**

சாக்காட்டுப் பாளையத்திலிருந்து இராயர்பாளையம் வழியாக எம்மாம்பூண்டி வரை உள்ள 5.8 கி.மீ. பாதையில் 14-8-84 அன்று பேருந்து வழித் தடமாகத் தொடங்கியிருக்கும் சாலை முழுவதையும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தார்ச் சாலையாக மாற்றி அமைத்தல்.

பிற்பட்டோர் நலத்துறை மூலம் தற்போது கூரைக் கட்டடத்தில் இயங்கி வரும் பள்ளிக்கு நிரந்தரமான புதிய கட்டடம் பிற்படுத்தப்பட்டோர்நலத்துறை நிதியிலிருந்து அல்லது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலோ கட்டுதல்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் மேலும் 25 நபர்களுக்குக் கறவை எருமைகள் வாங்கக் கடன் வழங்குதல்.

—நா. தில்லை கோவிந்தன்—
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்.



## பெரியார் மாவட்டத்தில் அண்ணல் பிறந்த நாள் விழா

பெரியார் மாவட்டத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா 2.10.84 அன்று கோபிச்செட்டிப் பாளையத்தில் உள்ள ஆதிதிராவிட மாணவ - மாணவியர் விடுதி மைதானத்தில் கொண்டாடப் பட்டது.

விழாவில் கோபி சட்டமன்ற உறுப்பினர் திரு கே. ஏ. செங்கோட்டையன் அண்ணல் காந்தியடிகள் படத்தினைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. ராமகிருஷ்ணன், இ. ஆ. ப., முதியோர் கல்வி மையத்தைத் திறந்து வைத்து, மாணவ-மாணவியருக்குச் சீருடை வழங்கி தலைமையுரை நிகழ்த்தினார். கோபி கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு வெங்கடாசலம், ஈரோடு அரசினர் பெண்கள் மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் (பொறுப்பு) திரு தன்னாசி, ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு கே.எம். இராசு வரவேற்றார். முடிவில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு நாதில்லை கோவிந்தன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

விழாவில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

10 நபர்களுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் வெள்ளாடு வளர்ப்பதற்குக் கடன் வழங்குதல்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இராயர் பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பித்து ஈரோடு பால்வள ஒன்றியத்தின் பால் வழித் தடத்துடன் இணைத்தல்.

தற்போது மலையப்பாளையத்தில் சீர் மரபினருக்கெனத் தொடங்கப்பட்டுள்ள 12 கதர் அம்பர் ராட்டைப் பயிற்சி நிலையத்தை நிரந்தரமாக இராயர் பாளையத்தில் உற்பத்தி நிலையமாகச் செயல்பட ஏற்பாடு செய்தல்.

''குற்றப் பரம்பரையினர்'' என்ற பெயரில் திருடுவதுதான் இவர்களது தொழில் என்று பிறரால் இழிவாகக் கருதப்பட்ட இந்தச் சீர் மரபினரின் வாழ்வில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. விடிவெள்ளி தோன்றியுள்ளது.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் மாசற்ற உள்ளம்தான் முன்னாள் குற்றப்பரம்பரையினர் என்ற பெயர் மாறி சீர் மரபினர் என்ற புதுப் பெயர் சூடக் காரணமாகும்.

பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. ராமகிருஷ்ணன், இ. ஆ. ப., அவர்களின் சீரிய முயற்சியில் பல்வேறு அரசுத் துறையினரும் சீர்மரபினர் புது வாழ்வு பெற மறுவாழ்வுத் திட்டப்பணிகளைச் செய்து முடித்துள்ளனர்-தொடர்ந்து செய்யவிருக்கின்றனர்.

சீர் மரபினர் மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தும் விழா கடந்த 14-8-84 ஆம் நாள் இராயர்பாளையத்தில் பெரியார் மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர் திரு. கு. சம்பத்குமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜி. கே. சுப்பிரமணியன், சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ரெங்கசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

# நூல் நயம்

## வீர வாஞ்சி

ஆசிரியர் : ரகமி
வெளியீடு: பூரம் பப்ளிகேஷன்ஸ் 6, ஜம்புலிங்க நாயக்கர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-34.

விலை : ரூ. 15. பக்கம் 201.

மனிதனின் ஓவியத்தை வரைவது எளிதா, பேயின் சித்திரத்தைத் தீட்டுவது எளிதா என்று ஓர் ஓவியரிடம் கேட்கப்பட்டபோது, 'பேயின் ஓவியத்தைத் தீட்டுவது தான் எளிது. ஏனென்றால் யாரும் பேயைப் பார்த்தது கிடையாது. அது இப்படித்தான் இருக்கும் என்று எவராலும் உறுதியாகக் கூறமுடியாதல்லவா'' என்று பதில் தந்தாராம் அந்த ஓவியர்.

அதைப்போல, ஹர்ஷ மன்னன் காலத்துச் செய்தியை அல்லது சேர சோழ பாண்டிய மன்னர்கள் காலத்து நிகழ்ச்சியை நவீனமாக்கி விடலாம், கற்பனையின் உதவி கொண்டு! ஆனால் அண்மைக் கால வரலாற்று நிகழ்ச்சிகளை நவீனமாக்குவது என்பது அருஞ் சாதனைக்கு உரியதாகும்.

விடுதலைப் போரில் ஈடுபட்டு வீரவரலாற்றை உருவாக்கிய வாஞ்சிநாதனின் கதையை வீர வாஞ்சி என்ற தலைப்பில் விறுவிறுப்பும் - சுவையும் மிகுந்த நவீனமாக எழுதியுள்ளார் நூலாசிரியர். இதனைப் படிக்கும் போது ஆங்கில அரசின் காட்டு தர்பாரையும் அதனை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட இந்திய வீரர்களின் - குறிப்பாக இளைஞர்களின் தியாகத் தொண்டுகளையும் நன்கு தெரிந்துகொள்ள முடிகிறது. துப்பறியும் நவீனங்களில் கூட இதுபோன்ற சுவை இருக்க முடியுமா என்பது சந்தேகம்தான்! இனிய எளிய நடை- சம்பவத் தொகுப்பு அனைத்தும் நூலைக் கீழே வைக்க விடாமல் ஒரே மூச்சாகப் படிக்க வைத்து விடுகிறது.

சம்பந்தப்பட்டவர்களின் புகைப்படங்களும் ஆங்காங்கே இடம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. இந்தத் தலைமுறையினர் கண்டறியாத தியாகிகளின் படங்களைக் காணும் போது உள்ளம் குளிருகிறது— அவர்களது தன்னலம் கருதாத தியாக வேள்வி குறித்து அறிந்து கொள்ளும்போது மெய்சிலிர்த்து விடுகிறது.

தொல்பொருள் ஆய்வாளரின் நெறியில் நின்று இந்த நூலை ஆசிரியர் எழுதியுள்ளார் என்பதை— நூலின் ஒவ்வொரு பக்கமும் தெரிவிக்கிறது. இளைய தலைமுறையினருக்கு இது வரலாற்றுப் பாடம் புகட்டும் அற்புத நூலாக அமைந்திருக்கிறது.

## அண்ணாவின் காவியம்

ஆசிரியர் : டாக்டர் கோ. செல்வம்.
கிடைக்குமிடம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சிட்கோ எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98.

விலை : ரூ. 10 பக்கம் 158

பேரறிஞர் அண்ணா வாழ்க்கை வரலாற்றை மரபுக் கவிதைகளில் வடித்திருக்கிறார் நூலாசிரியர், அறுசீர், எண்சீர், வெண்பா, கண்ணிகள் போன்ற பற்பல யாப்புகளைப் பயன்படுத்தி இனிமையாக நூலைக் கொண்டு செல்வது பாராட்டுக்குரியது.

புதுக்கவிதைப் பூந்தோட்டங்கள் பெருகிவரும் இந்நாளில் மரபுக் கவிதை மலர்களை விளைவிப்பதற்கே ஒரு துணிச்சல் வேண்டும். அதிலும் - ராஜா ராணிக் காவியமாகப் படைக்காமல் - அரசியல் - சமுதாயத் தலைவரைக் குறித்துக் காவியம் எழுதுவதற்குப் பெருந் துணிச்சல் வேண்டும். ஏனென்றால் காவிய நாயகருடன் பழகிய பலர் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே காவிய நாயகரைப்பற்றிய செய்திகளைச் சொல்லும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தவறு நேராமல் தற்காத்துக் கொள்ள வேண்டும். நூலாசிரியர் - முரண்பாடுகள் ஏதும் தோன்றாதவாறு தேன் மொழிக் கவிதையை வழங்கியிருக்கிறார்.

தமிழ்உள்ள காலங்கள்
அண்ணன் வாழ்வார்
தமிழறியும் உள்ளங்கள்
தன்னை ஆள்வார்

என்று நூலாசிரியர் குறிப்பிடும் கருத்து நூற்றுக்கு நூறு உண்மை!

—சுந்தர்

## நில், கவனி, கொல்

ஆசிரியர் : ராஜேஷ் குமார்
வெளியீடு: மயிலவன் பதிப்பகம் 7, எம். கே. அம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

விலை : ரூ. 10 பக்கம்: 152

நிவேதனாவின் (அழகான பெயர்) இதய மூலையில் முதன் முதலாய் ஒரு சந்தேக விதை (பணக்காரக் கிழவி மடியில் அமுக்கிப் பிடித்திருக்கும் தோல் பையைப் பற்றி) பச்சைப்பசேலென முளைவிட்டதுமே கதை ஆரம்பமாகி..

'அவள் அசந்து தூங்குகிற நேரத்தில் அந்தப் பையைத் திறந்து விடலாமென' நிவேதனா விபரீதமாக நினைக்க (வேண்டாத வேலை, ஆபத்தில் மாட்டிக் கொள்ளப் போகிறாள்.. நாம் முகம் சுளிக்க....) கதை ஐ.ஏ.எஃப் ஜெட்டாய்க் கிளம்புகிறது.

மண்ணின் மணம் கமழும் எழுத்தாற்றல் மிக்க ஆசிரியர், இதிலும் கோவையை மிக இயல்பாய் வலம் வருகிறார்.

'உண்மை தன்னந்தனியாய் வரும், பொய்க்குத்தான் துணை தேவை' என்பதை மெய்ப்பிக்க பேராசையால் ரெய்ச்சூர் இன்ஸ்பெக்டரிடம் முதல் பொய்யைச் சொன்ன நிவேதனா, தொடர்ந்து அண்ணன்...காதலன் என்று அனைவரிடமும் புளுகு மூட்டையை அவிழ்க்க...(நம் அனுதாபமும் கழன்று கொள்ள. ....) தண்டனையாகக் கதை தரை இறங்கும்போது...அவள் அம்பேல்.

ஆபாசம் இல்லாத கதை..

''நாவலைத் தொட்டேன் முடித்துவிட்டுத்தான் வைத்தேன் என்பார்கள். இதுவும் அந்த வகையில் சேர்த்தி.

—குமார்

## வேலையிலிருந்து விலக்கப் பட்டால் மீண்டும் வேலை கிடைக்க என்ன செய்ய வேண்டும்?

ஆசிரியர் : ஆர். எச். நாதன்
வெளியீடு: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-608 098

விலை : ரூ. 7.50 பக்கம் : 140

தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், மீண்டும் வேலை கிடைக்க சட்ட ரீதியாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது இந்நூல்.

நூலாசிரியர் திரு ஆர். எச். நாதன், பல்வேறு தொழிற் சங்கங்களின் தலைவராக இருந்து பணியாற்றியவர். அந்த அனுபவத்தின் காரணமாக இந்நூல் மிகச் சிறந்த படைப்பாகத் திகழ்கிறது.

எட்டுப் பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, வேலைக்குப் பாதுகாப்பளிக்கும் சட்டங்கள், தொழில் தகராறு சட்டங்கள், தவறான வேலை நீக்கம், எத்தகைய குற்றங்களுக்கு நடவடிக்கை எடுக்கலாம்? இப்படிப் பல்வேறு சட்ட ரீதியான விளக்கங்கள் நூல் முழுவதும் உள்ளன. தொழிலாளர்கள் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய நூல் இது.

## வளமூட்டும் செல்வம்:

ஆசிரியர் : சக்தி சீனிவாசன்,
வெளியீடு: அல்லயன்ஸ்கம்பெனி
தபாற் பெட்டி எண். 617. மயிலாப்பூர்,
சென்னை-600 004

விலை: ரூ. 3.50 பக்கம் 48

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை,' என்றார் வள்ளுவர். எனவே, வளமான வாழ்வுக்குச் செல்வம் வேண்டும். அந்தச் செல்வம் பெற வழிமுறை என்ன? அதை எப்படியெல்லாம் செலவழிக்க வேண்டும்? என்பதற்கெல்லாம் விளக்கங்கூறி, சேமிப்பின் அவசியத்தையும், ஈகையின் பெருமையையும் அழகாக எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். எளிய நடையில், இளைஞர்கள் மனத்தில் பதியும்வண்ணம் கருத்துச் செல்வம் வழங்குகிறது இந்நூல்.

## அன்றாட வாழ்வில் சுகாதாரம்:

ஆசிரியர் : சீனிவாசன்
வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
தபாற்பெட்டி எண் 617. மயிலாப்பூர்,
சென்னை-600 004

விலை : ரூ. 3.50. பக்கம்.48

சுத்தம் சுகந்தரும் என்பார்கள் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றும் சொல்வார்கள். அந்த வகையில் சுகாதாரத்துடன் வாழ்வது எப்படி? என்பதை இந்நூலில் விளக்கியுள்ளார் ஆசிரியர். மாணவர்கள் படித்துப் பயன் பெறத்தக்க பல நல்ல கருத்துக்கள் இந்நூலில் உள்ளன. பெரியவர்களும் படிக்கலாம்.

## கதைக் கொடி:

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
த. பெ. எண். 617
மயிலாப்பூர்,
சென்னை-600 004

விலை : ரூ 7. பக்கம்.92

இந்நூலை நவரத்தினம் என்று குறிப்பிடலாம். ஆம் இந்நூலில் ஒன்பது சிறு கதைகள் உள்ளன. ஒன்பது சிறுகதைகளும் ஒன்பது புகழ்பெற்ற எழுத்தாளர்களால் எழுதப் பெற்றது. கல்கி, கா. ஸ்ரீ. ஸ்ரீ. கி.வா.ஜ., த.நா. குமாரசாமி, சு. குருசாமி த.நா. சேனாபதி, ஆர். திருஞான சம்பந்தம், தி.ஜ.ர., பெ. தூரன் ஆகியோர் இந்தக் கதைகளைப் படைத்துள்ளனர். கதைகளெல்லாம் மணிகள்; காலத்தின் கண்ணாடிகள்; கருத்துப் பெட்டகங்கள்; நல்ல நூல். யாவரும் படித்து இன்புறலாம்.

## பாச வெள்ளம்:

ஆசிரியர் : பேராசிரியர் மா. சேசையா
வெளியீடு: மாணிக்கம் பதிப்பகம்
73, மந்தைவெளித் தெரு.
சென்னை-6000 28

விலை: ரூ. 7. பக்கம். 147

இந்நூலில் 25 சிறுகதைகள் உள்ளன. முதற்கதையே கற்கண்டாய் இனிக்கின்றது. மற்ற கதைகளும் அப்படியே!

ஒவ்வொரு கதையும், ஒவ்வொரு கோணத்தில் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அன்றாட வாழ்க்கையில் காணும் நிகழ்ச்சிகள், மனப் போராட்டங்கள், குமுறல்கள் எல்லாம் கதைகளில் வெடித்துச் சிதறியிருக்கின்றன.

ஆசிரியரின் தெளிவான நடை கதைக்கு உயிரூட்டுகிறது. படிப்பவரையும் தம் பக்கம் ஈர்க்கிறது. பாச வெள்ளம் — பல்சுவை நிறைந்த கதைக் கனிகள்!

பி. வி. கி.



## அண்ணலைக் கவர்ந்த அருங்குறள்

**1930-ல்** காந்தியடிகள் சென்னைக்கு வந்திருந்த சமயத்தில், அவருக்குத் திருக்குறள் பாக்களை மொழிபெயர்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார் அவிநாசிலிங்கம் செட்டியார்.

ஒரு குறளைக் கேட்டவுடன் "நிறுத்துங்கள்! இந்தக் குறள் எனது உள்ளத்தை மிகவும் கவர்ந்து விட்டது" என்று குறிப்பிட்டார். அந்தக் குறள் இதுதான்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

புதுக்கோட்டை மாவட்டத்தில் :

# 1600 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் கடந்த 1983-84 ஆம் ஆண்டில் கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (டிரைசம்) பயிற்சி பெற்ற சுமார் 1,600 இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

எந்திர வேலைகள், மின்சார வேலைகள், வானொலிப் பெட்டிகள் சீர்செய்தல், பற்றவைத்தல், தச்சு, மற்றும் கொல்லு வேலைகள், பாய் முடைதல், தீப்பெட்டி தயாரித்தல், ரொட்டி தயாரித்தல், பனைப் பொருட்கள் தயாரித்தல், போன்ற பல் வேறு தொழில்களுக்கான பயிற்சிகள் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ.200 வீதம் உதவியுடன் மொத்தம் ஆறுமாதங்காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு சுமார் 20 லட்ச ரூபாயாகும்.

நடப்பு 1984-85ஆம் ஆண்டில் சுமார் 600 நபர்களுக்கு ரூ.10 லட்சம் செலவில் இதுபோன்ற பயிற்சிகள் 6 மாதங்களுக்கு வழங்கப்பட உள்ளன. இவ்வாண்டு வழங்கப்பட உள்ள பயிற்சியின்போது நபர் ஒன்றுக்கு ரூ.275 வீதம் உதவி அளிக்கப்படும்.

வானொலிப் பெட்டி தயாரிக்குப் பயிற்சி பெற்றுள்ள 20 நபர்களுக்கு வானொலிப் பெட்டி தயார் செய்திடக் கடனுதவியும், அவர்கள் தயாரிக்கும் வானொலிப் பெட்டியை ஊராட்சி மன்றங்களுக்கு வாங்கிடவும் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 400 மாட்டு வண்டிகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளதை தச்சு மற்றும்கொல்லுப் பயிற்சிபெற்றவர்கள் மூலம் மாட்டு வண்டிகளைத் தயார் செய்து மாவட்ட ஊரக வளர்சசி முகமையின் மூலம் வழங்கவும் எந்திரக்கம்பி சுற்றும் பயிற்சி பெற்றுள்ள 15 நபர்கள் கடை தொடங்கிட வங்கிக் கடனுதவி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றோர்களுக்குத் தொடர் நடவடிக்கையாக வேலைவாய்ப்புப் பெற்றுத் தருதல் தமிழகத்திலேயே புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



**இலவசத் தையல் பயிற்சி**

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூக நலத்துறை தையற்பயிற்சி நிலையத்தில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 வயது நிரம்பிய ஆண்டு வருமானம் ரூ.3000-க்குள் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த ஏழைப் பெண்களுக்கு 1.1.85 முதல் ஓராண்டுக் காலத்திற்கு இலவசத் தையல் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ரூ.30 ஒவ்வொரு மாதமும் உதவித் தொகை வழங்கப்படும். ஆண்டு முடிவில் அரசுத் தேர்வுக்கு அனுப்பப்படுவர்.

# இந்திரா அஞ்சல் தலை




மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் பிறந்த நாளையொட்டி 19.11.'84 அன்று அவருடைய அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வெளியிட்டார்.

இதற்கான விழா தில்லியில் உள்ள தீன்மூர்த்தி மாளிகையில் நடந்தது.

சென்னை, பம்பாய் உள்பட பல முக்கிய நகரங்களிலும் திருமதி இந்திரா காந்தி அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.



# புயல் பாதித்த பகுதிகளில் போர்க்கால உதவிப் பணிகள்

**வ**ங்கக் கடலில் உருவான கடும் சூறாவளியின் விளைவாகச் சென்னை மாநகரம் 12-11-84 முதல் 14-11-84 வரை பெருத்த சேதத்துக்குள்ளானது.

சென்னையிலும், அருகிலுள்ள கடற்கரைப் பகுதிகளிலும் சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரண மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இராணுவம், கடற்படை, விமானப்படை தயார் நிலையில் வைக்கப்பட்டன.

உயர் அலை காரணமாகப் பழவேற்காடு தீவில் சிக்கியுள்ள மீனவர்கள் பலரைக் கடற்படைப் படகுகள் மீட்டன.

பேருந்துப் போக்குவரத்து, புறநகர் மின்சார ரயில் போக்குவரத்து ஆகியவை பாதிக்கப்பட்டன. பல இடங்களில் ஏராளமான மரங்கள் வேரொடு சாய்ந்து கிடந்தன. இதன் காரணமாக மின்சார சப்ளை பாதிக்கப்பட்டது. நகரின் பல சாலைகளில் முழங்கால் அளவு தண்ணீர் ஓடியது. பல இடங்களில் தந்திக் கம்பங்கள் சாய்ந்து கிடந்தன.

இந்தச் சூறாவளியால் சென்னை, புறநகர்ப்பகுதிகள், செங்கல்பட்டு மாவட்டம் பெரிதும் பாதிப்புக்குள்ளானது.

மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் ஆகியோர் நகரின் தாழ்வான பகுதிகளுக்குச் சென்று மக்களது துயர் துடைக்கும் நடவடிக்கைகள் எடுத்தனர்.

சென்னை மாநகராட்சித் தனி அலுவலர், ஆணையாளர் மற்றும் அரசு அலுவலர்கள் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, நிவாரணப்பணிகளை விரைவுபடுத்தினர்

சென்னை மாநகராட்சி, நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகள், சமூகக் கூடங்கள் ஆகியவை பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புகலிடமாக உதவின.

சென்னை மாநகரில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 55 ஆயிரம் பேர்களுக்கு, சென்னை மாநகராட்சியின் சார்பில் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

சிந்தாதிரிப்பேட்டை, கோபாலபுரம், பெரம்பூர், பேசின்பிரிட்ஜ் ஆகிய நான்கு இடங்களில் உள்ள மாநகராட்சி சமையல் கூடங்களில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்குவதற்கான உணவுப் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டன.





செங்கல்பட்டு மாவட்டம் பழவேற்காடு, மயில்கறை, பொன்னேரி வட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழக அரசு, ஹெலிகாப்டர்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடச் செய்தது. பழவேற்காடு மீனவர் குப்பம் பகுதி, கரிமணல் கிராமம் ஆகியவற்றில் ஹெலிகாப்டர் மூலம் ரொட்டி, பிஸ்கட் குழந்தைகளுக்குப் பால்பவுடர் வழங்கப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம் பழவேற்காடு ஏரிப் பகுதிகளில் பெரும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க, கடற்படையைச் சேர்ந்த இரு ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன.

புயல் வெள்ளம் காரணமாக ஏறத்தாழ ஒரு லட்சம் குடும்பங்கள் வீடு இழந்துள்ளன. 54 பேர் உயிரிழந்தனர்.

செங்கல்பட்டு மாவட்டத்திலும், சென்னை நகரிலும் புயல் வெள்ளத்தினால் ரூ.35 கோடியிலிருந்து ரூ.40 கோடி வரை சேதமேற்பட்டிருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்தன. 20,000க்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் பெரும் பாதிப்பிற்கு ஆளாகியுள்ளன.

சென்னையிலும், செங்கல்பட்டு மாவட்டத்திலும் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதங்களைப் பார்வையிட மத்திய நிபுணர் குழு 19.11.84 அன்று சென்னை வந்தது. செங்கல்பட்டு மாவட்டம், பழவேற்காடு பகுதிகளை விமானத்திலிருந்து அந்த நிபுணர் குழு பார்வையிட்டது.

நிவாரண முகாம்களில், பாதிக்கப்பட்ட மக்கள்.





தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் மற்றும் அலுவலர் களுடன் மத்திய ஆய்வுக்குழு நிபுணர்கள் 20-11-84 அன்று பேச்சு வார்த்தை நடத்தினர்.

சென்னை மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் வீசிய புயலால் ஏற்பட்ட சேதத்தைப் பழுது பார்க்க 37 கோடி ரூபாய் தேவைப்படும் என்று தமிழக அரசு மதிப்பிட்டுள்ளது.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா.நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

"கடந்த வாரம் சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் பெய்த புயல்,வெள்ளம் காரணமாக சென்னை நகரில் சாலைகள், குடிசைகள், கட்டடங்கள், மின்சாரச் சாதனங்கள், மரங்கள் ஆகியவற்றுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டன. அவற்றைப் பழுது பார்க்க மொத்தம் 20 கோடியே 58 லட்ச ரூபாய் செலவாகும்.

"அதுபோல செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏற்பட்ட சேதத்தைப் பழுதுபார்க்க 16 கோடியே,74 லட்ச ரூபாய் செலவாகும்.

"சென்னை நகரில் அந்தப் புயல்-வெள்ளத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை 17 பேர், முழுதும் சேதம் அடைந்த குடிசைகள் 29 ஆயிரத்து 800.

ஹெலிகாப்டரில் உணவுப் பொருள்கள் ஏற்றப்படுகின்றன.






பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு, ஏ. செல்லையாத் தேவர் பார்வையிடுகிறார்.

"அரைகுறை சேதம் அடைந்த குடிசைகள் 80 ஆயிரத்து 820. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு லட்சத்து, 16 ஆயிரத்து 920.வேரோடு சாய்ந்த பெரிய மரங்கள் எண்ணிக்கை 1000.

"செங்கல்பட்டு மாவட்டத்தில் பாதிக் கப்பட்ட கிராமங்கள் 367. பாதிக்கப்பட்ட குடிசைகள் 41 ஆயிரத்து 500. வீடு இழந் தவர்கள் 7 லட்சம் பேர். பொன்னேரி வட் டாரத்தில் கரிமணல் கிராமமும், பழவேற் காட்டில் 13 கிராமங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டன.

"மற்றும் நெல், வாழை, கரும்பு, எண்ணெய்வித்துப் பயிர்களும் சேதமாயின. 2 ஆயிரத்து 690 மீனவர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

"முழுவதும் சேதம் அடைந்த குடிசைக்கு 300 ரூபாயும், அரைகுறை சேதம் அடைந்த குடிசைக்கு 150 ரூபாயும், குடும்பத்திற்கு 5 கிலோ அரிசியும், ஒரு சேலையும், ஒரு வேட்டியும் உடனே கொடுக்கப்பட்டன. நோய் வராமல் இருக்க தடுப்பு ஊசியும் போடப்பட்டது.

"சேதப் பகுதிகளைப் பிரதமர் ராஜீவ் காந்தி சுற்றிப் பார்த்துவிட்டு, நிவாரணச் செலவுகளுக்காக 5 கோடியே 20 லட்ச ரூபாய் வழங்கியுள்ளார்.

"சேதம்பற்றி ஆராய வந்த நிபுணர் குழுவைச் சேர்ந்த 4 பேர் சென்னையிலும், செங்கல்பட்டிலும் சேதங்களைப் பார்த்தார்கள். சேதங்களைச் சீர் செய்யும் செலவுக்கான கோரிக்கை மனுவை அந்த நிபுணர் குழுவிடம் தமிழக அரசு கொடுத்துள்ளது. குழுவின் அறிக்கையைப் பார்த்துவிட்டு, மத்திய அரசு மேலும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.".

அனைத்திந்திய 31-வது கூட்டுறவு வார விழாவின்போது, சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில், புயல் மழையால் பாதிக்கப்பட்ட ஆயிரம் பேருக்கு இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு என். வி. என். செல்வம். ஆறுதல் கூறுகிறார்.





# தேசிய ஒருமைப்பாடு

**—அன்னை இந்திரா**

**தே**சிய ஒருமைப்பாடென்பது, நாட்டின் பிரதேச ஒருங்கிணைப்பைப் பாதுகாக்க பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பணியைப் போன்று, நாட்டின் உள்நாட்டு ஒருங்கிணைப்பைப் பாதுகாக்க, குடிமக்கள் மேற்கொள்ளும் பணியாகும்.

நாட்டின் உறுதிப்பாட்டை ஆட்டம் கொள்ளச் செய்யவும், பல்வேறு மதங்கள், மொழிகள், சாதிகள், வட்டாரங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தோரிடையே, சந்தேக வினதயை விதைக்கவும், நாட்டினுள்ளும் வெளியேயும் பல சக்திகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. உலக முழுதின் மேலும் பார்வையைச் செலுத்துங்கள். அனைத்துமில்லாவிடினும், வளரும் நாடுகளில் பெரும்பாலானவை, இதே அபாயங்களுக்கும் சிரமங்களுக்கும் உட்பட்டிருப்பது தெரியவரும்.

இந்தியர்களான நாம், தொன்மை மிக்கவர்கள். உலகம் நமது நாட்டை 'இந்துஸ்தான்' அல்லது 'பாரத் வர்ஷம்' என்றே எப்போதும் அறியும். ஆனால், நவீன நாடென்னும் முறையில், நாம் இன்னமும் மிகவும் இளையவர்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

நமது நீண்ட வரலாறு முழுதும், பெரிய மற்றும் சிறிய பற்றுகளுக்கிடையில் பிரச்னைகள் இருந்து வந்திருக்கின்றன. நமது மாபெரும் முனிவர்களும், அரசர்களும், நம்நாடு முழுதும் ஒன்றே என்று கருதியது நமது அதிர்ஷ்டமே. சங்கராச்சாரியார், குருநானக், குரு கோவிந்த் சிங் போன்ற ஒளிமிக்கவர்கள் நம்நாட்டில் பிறந்தனர். பல சமயங்களில் அரசியல் ரீதியிலும் நாம் ஒன்றுபட்டிருந்தோம். சகிப்பையும், ஒத்துழைப்பையும் வலியுறுத்திய அசோகர், சமுத்திர குப்தர், அக்பர் ஆகியோரின் காலம் இதற்கு உதாரணம்.

நாம் வெவ்வேறு அரசியல் ராஜ்யங்களாகப் பிளவுண்ட காலத்திலும் கூட, நம்மிடையே, 'நாம் இந்தியர்' என்ற உணர்வு நிலவியது. மனம் வேறுபட்டபோதெல்லாம் பொருளாதார-அரசியல் ரீதியில் சிரமங்களுக்குட்பட்டோம்.

மனது குறுகியபோதெல்லாம் நம்மிடையே பூசல்களெழுந்தன. புதிய கருத்துக்கள் புகாதவண்ணம் மனக் கதவைத் தாள்ட்டுக் கொண்டபோதெல்லாம் நமக்கு நாமே தீங்கு செய்து கொண்டோம்; அந்நியராட்சிக்குட்பட்டோம்.

வரலாற்றிலிருந்து கற்றுக் கொண்ட பாடமும், இப்போதைய வாழ்க்கையின் கட்டாயங்களும், அரசியல் ஒற்றுமையை மிக அதிகமாக வலியுறுத்துகின்றன.

நாமெல்லோரும் ஏதோ ஒரு சமயத்தைப் பின்பற்றுகிறோம். இந்தியாவின் ஏதோ ஒரு பகுதியில் பிறந்தோம். குறிப்பிட்டதொரு மொழியைப் பேசுகிறோம். ஆனால், இவற்றில் ஒன்றும், நமது இந்தியத்துவத்தில், நாம் இந்தியர்களாக இருப்பதில் குறுக்கிடக்கூடாது.

சிவில் மதம் ஒன்று தேவை என்று ஜஸ்டிஸ் பேக் கூறினார். ஆனால், நான் அதை வேறு விதமாகக் கூறுவேன். தன்னை இரு மதங்களைப் பின்பற்றச் சொல்லுவதாக யாரும் நினைக்கக்கூடாது என்பது எங்கள் விருப்பம்.


**நாம் நல்ல இந்துவாக, நல்ல முஸ்லீமாக, நல்ல கிறிஸ்தவராக அல்லது நல்ல சீக்கியராக அல்லது வேறெதாவதொரு சமயத்தைச் சேர்ந்தவராக இருந்து கொண்டே நல்ல இந்தியராகவுமிருக்கலாம்.**

குடிமக்களென்ற முறையிலான கடமைகள், நமது மத அல்லது வேறு விசுவாசத்தைக் கைவிடுமாறு கட்டாயப்படுத்துவதில்லை. நமக்குப் பிடித்த மதத்தைப் பின்பற்றலாம். பிடித்த மொழியைப் பேசலாம்; அதே சமயம், நல்ல குடிமகனுக்குரிய கடமைகளையும் சுறுசுறுப்புடன் ஆற்றலாம்.

மற்றவர் தம்முடைய சமயத்தை உண்மையுடன் பற்றி நிற்கும் உரிமையுடையவர்களென்பதை அங்கீகரித்தால்தான், நாம் நம்முடைய மதத்தை உண்மையுடன் பின்பற்றிட முடியும். ஒவ்வொரு உரிமையும், பிறருக்கும் உரித்தானது என்பதை நாம் மறக்கக்கூடாது.



# திருநெல்வே மாவட்டத்



## வ.உ.சி. நினைவு நிலையம்

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த வீட்டில், மாவட்ட நூலக ஆணைக்குழுவின் நூலகம் உள்ளது. இதில் 4056 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இவையன்றி பல்வேறு இதழ்களும் இங்கு உள்ளன.

வ. உ. சிதம்பரனாரின் வரலாறு, தமிழ்த்தொண்டு ஆகியவை நன்கு தொகுக்கப் பெற்றுக் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன.

## வயது வந்தோர் கல்வி

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் "வயது வந்தோர் கல்வியில் எவ்விதத் தாமதமும் நேராமல் விரைவு படுத்தப்படும்" என அண்மையில் கூறியதற்கிணங்க—நெல்லை மாவட்டத்தில் முதியோர் கல்விப் பணி வேகத்தோடு இயங்கி வருகிறது.

தமிழக அரசு நிதி ஆதாரத்தோடு— சங்கரன்கோவில், விளாத்திகுளம், காகலாபுரம், ஒட்டப்பிடாரம் வட்டாரங்களில் 400 வயதுவந்தோர்கள் கல்வி மையங்கள் நடைபெற்றுவருகின்றன. 6 முதல் 14 வயதுப் பிரிவினர்க்கு 82 பள்ளிசாரா [illegible] 14 எழுத்தறிவு [illegible] மையங்களும் நடை[illegible]

[illegible] மாவட்டத்தில் [illegible] கல்வியுடன் [illegible] பெற்றிருக்[illegible]



## தொழில் வளம்

பல்வகைத் தொழில் வளங்களும் நெல்லைச் சீமையில் நிறைந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்க சில பின்வருமாறு:

| | |
|---|---|
| இந்தியா சிமிண்ட்ஸ் | —சங்கர் நகர் |
| தரங்கதாரா கெமிகல்ஸ் | —சாகுபுரம் |
| சன் பேப்பர் மில்ஸ் | —சேரன்மாதேவி |
| கணபதி மில்ஸ் | —தாழையூத்து |
| நெல்லை காட்டன் மில்ஸ் | —தாழையூத்து |
| தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை | —பேட்டை |
| லட்சுமி மில்ஸ் | —கோவில்பட்டி |
| லாயல் மில்ஸ் | —கோவில்பட்டி |
| மதுரை கோட்ஸ் | —விக்கிரமசிங்கபுரம் |
| கோமதி மில்ஸ் | —வீரவநல்லூர் |
| பலராமவர்மா மில்ஸ் | —செங்கோட்டை |
| கூட்டுறவு நூற்பாலை | —நாசரேத் |
| கீதாஞ்சலி | —சங்கரன்கோயில் |
| பெல் மேன்யூபாக்சரிங் அன்கோ | —பாளையங் கோட்டை |
| பெல் பிராடக்ட்ஸ் அண்கோ | —பாளையங் கோட்டை |
| நூற்பாலை | —தூத்துக்குடி |
| துறைமுகத் திட்டம் | —தூத்துக்குடி |
| தூத்துக்குடி அல்காலிக் கெமிகல்ஸ் | —தூத்துக்குடி (டி.ஏ.சி.) |
| மதுரை கோட்ஸ் | —தூத்துக்குடி |
| ஸ்பிக் | —தூத்துக்குடி |
| சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் | —நாங்குனேரி |
| பம்பாய் பர்மா தேயிலைத் தோட்டம் | —மாஞ்சோலை |

## நிலக்கரிக்குப் பதில் எண்ணெய்

தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் நிலக்கரிக்குப் பதிலாக அதிவேக கந்தக எண்ணெயையும் உபயோகப்படுத்தலாம் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

## தருமபுரி மாவட்டத்தில்



## ஒகேனக்கல் அருவியும் அதன் மின் உற்பத்தித் திறனும்

ஒகேனக்கல் அருவி 22 அடி உயரமுள்ளது. அதன் அதிகப்படியான உயரமே மின் உற்பத்தித் திறனுக்கு ஏற்றதாக இருக்கிறது. எனவே திட்டமிடும் பொறியாளர்களும் வல்லுநர்களும் மின் உற்பத்தி குறித்து எண்ணும்போது ஒகேனக்கல் அருவி, அவர்களின் கவனத்தை அதிகமாக ஈர்க்கிறது.

காவேரி, மற்றும் அதன் கிளை நதிகளின் மின் உற்பத்தித் திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. மேகதாது (Goat's Leap) என் இடத்துக்கு அருகில் தமிழகத்திற்குள் காவே அடியெடுத்து வைக்கிறது. ஒகேனக்கல் அரு யின் அருகில் மேட்டூர் நீர்த்தேக்கம் வ கருநாடகம்-தமிழ்நாடு ஆகிய இரு மாநில களின் எல்லைக் கோடுகளை உருவாக்கியவாறு காவேரி பாய்கிறது. சிவசமுத்திரம் அதற்குக் கீழே உள்ள சிம்ஸ்புரம் ஆகிய இடங்களிலுள்ள அருவிகளும் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

கிழக்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து வேகமாகச் சமவெளியில் இறங்குகிறபோது வழி நெடுக நீர் மின் உற்பத்திக்கு அதிக வாய்ப்பு களைக் காவேரி உருவாக்கித் தந்துள்ளது. மாநிலங்கள் ஒன்றோடு ஒன்று ஒத்துழைத்தால் மின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ள வசதி கள் நிறைய இருக்கின்றன. தமிழகம், கருநாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களும் இணைந்து செய லாற்றினால் பாசனத்தைப் பாதிக்காமலே மின் உற்பத்தியை இரு மாநிலங்களும் ஏராளமாகப் பெருக்கிக் கொள்ள முடியும். கிடைக்கும் நீரைப் பயன்படுத்தி 450 மெ.வா. மின் திறனை உற்பத்தி செய்து அதன் மூலம் ஆண்டுக்கு 4,000 மில்லியன் யூனிட் மின் சக்தியைப் பெறமுடியும்.


### பனை மரம் சிறந்த மத்தூர்

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 5 லட்சம் பனை மரங்கள் உள்ளன. இவற்றில் 3½ லட்சம் பனைகள் மத்தூர்ப் பகுதியில் மட்டுமே இருககின்றன.

### ஓசூர் தொழிற்பேட்டை

ஓசூரில் தொழிற்பேட்டை அமைக்கப் பெற்றதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வெப்பதட்ப நிலை இங்கு உண்டு.

ஏறக்குறைய 1153 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டையைத் தமிழக அரசின் சிப்காட் நிறுவனம் அமைத்துள்ளது. 55-க்கும் மேற்பட்ட பெரு ரகத் தொழில்களுக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளது. 50.75 ஏக்கர் பரப்பில் 30 தொழிற்கூடங்களும் 41 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளும் தவணை முறையில் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன. தொழில், மின்னியல் தொழில் வளர்ச்சிக்காக மின்னணுவியல் 12.34 ஏக்கரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப் பெற்றுள்ளது. இதில் 12 தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்பெற்றுத் தொழில்முனைவோருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர அபிவிருத்தி செய்யப்பட்ட 22 நிலங்கள், மின்னியல் சாதன உற்புத்திக்காக சிறு தொழில் முனைவோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.



### பெரிது ! பெரிது !

இந்தியாவிலேயே பெரிய பட்டுப் பண்ணை. தருமபுரி மாவட்டத்தில் தளி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோலட்டியில் உள்ளது. 800 ஏக்கர் பரப்பளவு கொண்டது இது.

### அதிக உற்பத்தி வித்தகம்

ஓசூரில் உள்ள பட்டு முட்டை வித்தகம், தமிழ்நாட்டிலே முதன் முதலில் உருவாக்க மிகப் பெரிய-அதிக உற்பத் செய்யக் கூடிய முட்டை வித் கம் ஆகும்.

### காதிக்கு முதலிடம்

ஆண்டுக்கு 4 ஆயிரம் கிலோ பட்டு நூலை, தமிழ்நாடு காதி நிறுவனம் விலைக்கு வாங்கிக் கொள்கிறது.

### 80 ஆயிரம் பட்டுக் கூடு

அரசினர் பட்டுப்புழு அங்கா ஆண்டுக்கு 80 ஆயிரம் கிலே பட்டுக் கூடுகளை வாங் கொள்கிறது.



# முதல்வரின் நலத்தில் முன்னேற்றம்



அமெரிக்க நாட்டிலுள்ள புருக்ளின் டவுன் ஸ்டேட் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விரைந்து நலம் பெற்று வருகிறார். சென்னையில் இருந்ததை விட அவர் இப்போது மிகத் தெளிவாகக் காணப்படுகிறார்.

இத்தகவல்களை 21-11-84 அன்று அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து புறப்பட்ட பின்னர் நியூயார்க் சேருமுன் விமானம் நின்ற இடங்களிலெல்லாம் எல்லோரும் நல்லபடி உதவியதாகவும், விமானிகளும் மற்ற அலுவலர்களும் மிகச் சிறந்த ஒத்துழைப்பு அளித்ததாகவும், இலண்டனில் விமானம் இறங்கியபோது அங்கிருந்த இந்தியத் தூதர் பெரிதும் உதவியாக இருந்தாரென்றும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கூறினார்.





புகைப்படம் உதவி: திரு ஆல்பர்ட்,
-வுன்ஸ்டேட் மருத்துவ மனை, புரூக்ளின்

செய்தியாளர்கள் கேட்ட மற்ற வினாக்களுக்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் தெரிவித்ததாவது:

''மாண்புமிகு முதல்வர் அவர்களின் மூளைப் பகுதியில் இருந்த இரத்தக் கட்டி முழுவதுமாகக் குறைந்து விட்டது. வாரம் இருமுறை இரத்தம் (டயாலிசஸ்) சுத்திகரிக்கப்படுகிறது. அதனால் இப்போதெல்லாம் எந்தவிதக் களைப்பும் அவருக்கு ஏற்படுவதில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் படுக்கையிலிருந்து சாதாரணமாக எழுந்து உட்கார்ந்து கொள்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்பு அவர் தானாக எழுந்து சில நிமிடம் நின்றுகொண்டிருந்தார். தேவையானபோது டெலிவிஷன் போடச் சொல்லவும், வேண்டாதபோது நிறுத்தி விடச் சொல்லவும் அவரால் முடிகிறது. எவ்விதச் சிரமமுமின்றிச் சுவாசிக்கிறார். அவருக்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதில் எவ்விதச் சிக்கலும் இருக்காது என்று டாக்டர் பிரைட்மன் கருதுகிறார்.''

—இவ்வாறு கூறிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், ''அவர் உடல்நிலை மிகவேகமாகத் தேறிவரும் நிலையை வைத்துப் பார்த்தால் பிப்ரவரி மாதத்தில் முழுநலத்தோடு சென்னை திரும்ப முடியும்'' என்றும் தெரிவித்தார்.

அம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் கிரேயக், டாக்டர் பிரைட்மென், டாக்டர் மேயர், டாக்டர் சோமசுந்தரம், டாக்டர் இராமகிருஷ்ணன், டாக்டர் ஸ்ரீபாதராவ் முதலான மருத்துவர்களும் டாக்டர் பெரியசாமியும் மாண்புமிகு முதல்வரை நன்முறையில் கவனித்து வருவதாகவும் - மாண்புமிகு முதல்வரின் தனிச் செயலாளர் திரு மு. பரமசிவம், அவ்வப்போது அவரது உடல்நலம் பற்றித் தமிழகத்திற்குத் தெரிவிப்பாரென்றும் மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

**– இல. இராசேந்திரன்**



# தமிழகத்தில் தேர்தல்!

1985 ஜனவரி 20 ஆம் நாளுடன் பதவிக் காலம் முடிவடைவதால், இந்திய நாடாளுமன்றத்திற்கு டிசம்பரில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று 14-11-'84ல் அறிவிக்கப்பட்டது.

தமிழகச் சட்டமன்றமும் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை, தமிழக அமைச்சரவையினர், மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களிடம் தெரிவித்தனர், அதனை ஏற்று, தமிழகச் சட்டமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்துவதற்கு ஆணையிட்டார் மேதகு ஆளுநர்.

தமிழகத்தில் டிசம்பர் மாதம் 24 ஆம் நாள், நாடாளுமன்றத் தேர்தலும், சட்டமன்றத் தேர்தலும் நடைபெறும் என, தமிழகத் தேர்தல் அதிகாரி திரு. ஓசா அறிவித்தார்.

## தமிழ்நாட்டில்

## 3 கோடி வாக்காளர்கள்!

தமிழ்நாட்டில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 3 கோடியே 9 லட்சத்து 55 ஆயிரத்து 943.

இவர்களில் ஆண்கள் 1 கோடியே 56 லட்சத்து 30 ஆயிரத்து 584. பெண்கள் 1 கோடியே 53 லட்சத்து 25 ஆயிரத்து 359.



## 39,636 வாக்குச் சாவடிகள்

தமிழ்நாட்டில் டிசம்பர் 24ந் தேதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற, சட்ட மன்றத் தேர்தலின் போது மொத்தம் 39,636 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும். இவற்றில் 14 ஆயிரத்து 915 வாக்குச் சாவடிகள் ஆண், பெண் ஆகிய இருபாலரும் வாக்களிக்கும் பொது வாக்குச் சாவடிகளாக இருக்கும். பெண்களுக்கென்று தனியாக 12 ஆயிரத்து 356 வாக்குச் சாவடிகளும், ஆண்களுக்கென்று தனியாக 12 ஆயிரத்து 365 வாக்குச் சாவடிகளும் இருக்கும்.

–தமிழகத் தலைமைத் தேர்தல் அலுவலர் திரு [illegible] ஓசா, செய்தியாளர்களிடம் [illegible]

## நாடாளுமன்றத் தொகுதிகளின் வாக்காளர்கள் விவரம்

தமிழ்நாட்டில் உள்ளமொத்த நாடாளுமன்றத் தொகுதிகள் மற்றும் வாக்காளர் விவரம்:

| | | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | வடசென்னை | 5,35,768 | 4,55,328 | 9,91,096 |
| 2. | மத்திய சென்னை | 4,64,379 | 3,98,521 | 8,62,900 |
| 3. | தென் சென்னை | 5,39,395 | 4,79,401 | 10,18,796 |
| 4. | ஸ்ரீபெரும்புதூர் (எஸ்சி) | 3,97,277 | 3,90.362 | 7,87,639 |
| 5. | செங்கல்பட்டு | 3,71,009 | 3,66,320 | 7,37,329 |
| 6. | அரக்கோணம் | 3.76,949 | 3,80,716. | 7,57,665 |
| 7. | வேலூர் | 3,74,711 | 3,74,065 | 7,48,776 |
| 8. | திருப்பத்தூர் | 3,74,248 | 3,76,874 | 7,51,122 |
| 9. | வந்தவாசி | 3,80,298 | 3,82.834 | 7,63,132 |
| 10. | திண்டிவனம் | 3,72,015 | 3,65,671 | 7,37,686 |
| 11. | கடலூர் | 3,67,765 | 3,64,814 | 7,32,579 |
| 12. | சிதம்பரம் (எஸ்சி) | 3,71,093 | 3.63,282 | 7,34,375 |
| 13. | தருமபுரி | 3,92,544 | 3,87,829 | 7,80,373 |
| 14. | கிருஷ்ணகிரி | 3,64,568 | 3.59,848 | 7,24,416 |
| 15. | ராசிபுரம் | 3,91,829 | 3,97,690 | 7,89,519 |
| 16. | சேலம் | 3,87,400 | 3,79,390 | 7,66,790 |
| 17. | திருச்செங்கோடு | 5,04,507 | 4,93, 648 | 9,98,155 |
| 18. | நீலகிரி | 4,22,938 | 4,05.255 | 8,28,193 |
| 19. | கோபி | 3,74,391 | 3,59.110 | 7,33,501 |
| 20. | கோவை | 4,75,514 | 4,25,979 | 9,01,493 |
| 21. | பொள்ளாச்சி (எஸ்சி) | 3,91,207 | 3,77,227 | 7,68,434 |
| 22. | பழனி | 4,05,362 | 4,04,647 | 8,10,009 |
| 23. | திண்டுக்கல் | 4,03,621 | 4,10,199 | 8,13,820 |
| 24. | மதுரை | 4,35,527 | 4,20,787 | 8,56,314 |
| 25. | பெரியகுளம் | 4,00,196 | 4,01,280 | 8,01,476 |
| 26. | கரூர் | 4,06,222 | 4,11,109 | 8,17,331 |
| 27. | திருச்சி | 4,04,040 | 3,91,356 | 7,95,396 |
| 28. | பெரம்பலூர் (எஸ்சி) | 3,71,871 | 3,70,319 | 7,42,190 |
| 29. | மாயூரம் | 3,67,859 | 3,53,298 | 7,21,157 |
| 30. | நாகப்பட்டினம் (எஸ்சி) | 3,84,233 | 3,71,670 | 7,55,903 |
| 31. | தஞ்சாவூர் | 3,65,181 | 3.60,129 | 7,25,310 |
| 32. | புதுக்கோட்டை | 4,00,550 | 4,06,202 | 8,06,752 |
| 33. | சிவகங்கை | 3,80.781 | 4,03,236 | 7,84,017 |
| 34. | ராமநாதபுரம் | 3,96,430 | 4,14,024 | 8,10,454 |
| 35. | சிவகாசி | 4,12,610 | 4,25,408 | 8,38,018 |
| 36. | திருநெல்வேலி | 3,73,416 | 3,84.512 | 7,57,928 |
| 37. | தென்காசி (எஸ்சி) | 3,59,581 | 3,76.331 | 7,35,912 |
| 38. | திருச்செந்தூர் | 3,62,934 | 3.86,074 | 7,49,008 |
| 39. | நாகர் கோயில் | 3,70,365 | 3,50,614 | 7,20,979 |
| | மொத்தம். | 1,56,30,584 | 1,53,25,359 | 3,09,55,943 |

# பச்சை மலையில்...


உப்பிலியா புரம்-துறையூர் பகுதிகளுக்கு அருகே உள்ள பச்சைமலை வளர்ச்சித் திட்டத்துக்காக இதுவரை 64 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது.

மலைப் பகுதியில் 11 கிலோ மீட்டர் தூரம் புதியசாலை போடும் பணி தொடங்கி உள்ளது.

பச்சைமலை, திருச்சி மாவட்டத்தின் கொடைக்கானல் என்று அழைக்கப்படுகிறது. எனவே, அந்த இடத்தைச் சுற்றுலா மையம் ஆக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

துறையூர் வட்ட வைரிச்செட்டிப்பாளையம் அருகே உள்ள ஜம்பேரி ஏரியைப் பழுது பார்க்க 3 இலட்சம் ரூபாய்க்கு அரசு அனுமதி அளித்துள்ளது. பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

# திருச்சி மாவட்டத்தில்,...



## சொந்தக்காலில் நிற்க வந்ததொரு திட்டம்

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், படித்துவிட்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களின் வாட்டம் போக்கிட அன்றே சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்றார். அதுவே நமது தமிழக முதல்வரின் திட்டமான வீட்டிற்கு ஒருவருக்கு ஒருவேலை வாய்ப்பு என்ற திட்டமாகும். இதன் அடிப்படையில்தான் பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைவோர் ஒவ்வொருவரும் 18 வயதிலிருந்து 35 வயதிற்குட்பட்டும் உயர்நிலைப் பள்ளிதேர்ந்தவர்களாகவும் அதற்கு மேற்பட்டகல்வித் தகுதி மற்றும் தொழிற் கல்வி கற்றவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்கேற்ப ஒவ்வொருவருக்கும் ரூ. 25,000க்கு மேற்படாமல் தொழிற் திட்டத்திற்கேற்ப வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதற்கு வட்டி வீதம் திருச்சி போன்ற பிற்பட்ட பகுதிகளுக்கு 10 சதவீதமும் மற்ற பகுதிகளில் 12 சதவீதமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் தொழில் ஆரம்பிக்கும் இளைஞர்கள் இன்னலுறாமலிருக்க கடன் தொகையில் 75% முறையாக திரும்ப செலுத்தியவர்களுக்கு 25% அரசு மான்யமாக வழங்கப்படும். **கடன் பெற தகுதியுடையோர் இக் கடனுக்குச் சொத்து அடமானமோ முன் பணமோ கொடுக்கத் தேவையில்லை.** மேலும் தொழில் துவக்கத்தில் 6முதல்18 மாதங்களுக்குப் பின்னர் தொழிலின் இயல்பு மற்றும் இலாபம் ஈட்டலைப் பொறுத்து தவணைகள் செலுத்த வாய்ப்பளிக்கப்படும். வழங்கப்படும் கடனை 3 முதல் 7 ஆண்டுகளில் தவணை முறையில் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த மாவட்ட தொழில்மையப் பொது மேலாளர் தலைமையின் கீழ் ஒரு பணிக்குழு (Task Force Committee) அமைக்கப்பட்டுள்ளது. அதில் மாவட்ட தொழில் மையக் கடன் வசதி மேலாளர், மாவட்ட முன்னோடி வங்கி நிர்வாகிகள், சிறு தொழில் சேவை நிலைய துணை இயக்குநர் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பணிக்குழுவின் முதல் கூட்டம் திருச்சி மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் 14.10.83ம் தேதியன்று நடைபெற்றது. இந்த மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் பயனடைய ஒரு கோடி ரூபாய் கடன் உதவி வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 10.1.84ஆம் தேதி முடிய 4,018 விண்ணப்பங்கள் தொழில் மைய அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளன. இவைகளில் 1,200 விண்ணப்பதாரர்களை 12 கூட்டங்களில் நேர்முகத் தேர்வு செய்யப்பட்டு 349 நபர்கள் பல்வேறு தொழில்கள் ஆரம்பிக்க ரூ. 52,52,000 இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வயது வரம்பு பின்வருமாறு:**

| | |
|---|---|
| 18 முதல் 20 வரை | 29 |
| 21 முதல் 25 வரை | 126 |
| 26 முதல் 30 வரை | 118 |
| 31 முதல் 35வரை | 76 |
| | 349 |

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கும் தொடக்கவிழா தமிழகத்தில் முதன் முதலாகத் திருச்சி ஜமால் முகமது கல்லூரி திடலில் 11.1.84 அன்று நடந்தது.





செங்கற்பட்டு மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு கதர் விற்பனையில் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம் முதலிடம் பெற்றது. இதற்கான கேடயத்தை, 2.10.84 அன்று சென்னை குறளகத்தில் நடந்த காந்தி ஜயந்தி விழாவில், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், ஆணையர் திரு க. அரங்கநாதனிடம் வழங்கினார்.

# தஞ்சை மாவட்டத்தில்...

## சிக்கப்பட்டுச் சிக்கல் தீர்ந்தது


தஞ்சை மாவட்டத்தில் அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிக்கப்பட்டு என்ற கிராமத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக குளம் வெட்டப்படாமல், அதன்விளைவாக பிரச்சினைகளில் சிக்கல்களில் சிக்கியிருந்த அப்பகுதி மக்களின் குறை நீங்கும் வகையில், அவ்வூரிலுள்ள வெட்டுக்குளம் தற்போது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஆழப்படுத்தப்பட்டு, ஊர் மக்களுக்கு, கால்நடைகளுக்குப் பயன்படுகிறது.

4 ஏக்கர் 60 செண்ட் பரப்பளவு உள்ள குளத்தில் நான்கு கரைகளையும் பலப்படுத்தியதால், கரையில் தென்னங்கன்றுகள் நடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று இவ்வொன்றியத்தில் 30 குளங்கள் உள்ளன. இவையனைத்தும் ரூபாய் ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் ஆழப்படுத்தப்பட்டன. இதன் மூலம் 20 ஆயிரம் மனிதச் சக்தி நாட்கள் பயன்படுத்தப்பட்டன.

தஞ்சை மாவட்டத் தொழில் மையத்தின் சிபாரிசு அடிப்படையில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 2,066 பேர்கள் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று தொழில்கள் துவங்கி உள்ளனர். இதில் 2 விதவைகள் உள்பட 274 பெண்கள் தொழில்களைத் துவக்கி உள்ளனர்.



* தஞ்சாவூர் மாவட்டம் மல்லிபட்டினம், கோடிக்கரையிலும் மீன்பிடி துறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.



# தென் ஆர்க்காடு மாவட்டத்தில்

## டென்மார்க் பத்திரிகையாளர்களின் வருகை

தமிழக அரசு டென்மார்க் அரசின் நிதி உதவியுடன் மக்கள் நல்வாழ்வுத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாட்டில் தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. ''கி.பி. 2000 ஆண்டுக்குள் எல்லோருக்கும் நல் ஆரோக்கியம்'' தரும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு நல்வாழ்வு மற்றும் கிராம வளர்ச்சித் திட்டத்தை இந்த டேனிடா திட்டம் வெற்றிகரமாக அமல் நடத்தி வருகிறது.

தமிழகம், நல்வாழ்வுத் துறையில் மேலும் முன்னேறி வளம் காணப் பல்வேறு பிரிவுகள் இத்திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

**சமுதாய நலத் திட்டம்:**

கிராமப்புறங்களில் பல ஆண்டுகளாகத் தீர்வுகாண இயலாமல் இருக்கும் சுகாதாரம் மற்றும் வளர்ச்சித் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை சமுதாயத்தின் ஒத்துழைப்புடன் தீர்த்துக்கொள்வதற்கான சமுதாய நல நிதித் திட்டம் ஒன்றும் செயல்படுகிறது. சமுதாயத்தில் பிற்பட்டோர், நலிந்தோர், தாய்மார்கள், குழந்தைகள், அனாதைகள் ஆகியோரின் வாழ்க்கைத்தரம் முன்னேற அவர்களுக்கு இச் சமுதாய நல நிதித் திட்டத்தின் கீழ் முதலிடம் அளிக்கப்படுகிறது. சமூகத்தில் பின்தங்கியுள்ள இவர்களின் வாழ்வு மலர கல்வி, கலாச்சாரம், சுகாதாரம் மற்றும் பொருளாதாரத் துறை சார்ந்த பல திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.



**டென்மார்க் பத்திரிகையாளர்கள் வருகை:**

தமிழ்நாடு டேனிடா மக்கள் நல்வாழ்வுத் திட்டம் செயல்படும் முறையை நேரில் கண்டறிய டென்மார்க்கிலிருந்து 9 நபர்கள் அடங்கிய பத்திரிகையாளர் குழு ஒன்று திரு டிசிகார்டு (Dyssegaard) அவர்கள் தலைமையில் அண்மையில் தமிழகத்திற்கு வருகை தந்தது. தமிழக அரசின் கீழ் தென்னார்க்காடு மாவட்டத்தில் டேனிடா திட்டம் செயல்படும் விதத்தை நேரில் கண்டறிந்த அக்குழு வியந்து பாராட்டியது.

இக்குழு தென்னார்க்காடு மாவட்டத்தில் பயணம் மேற்கொண்ட போது, இத்திட்ட இயக்குநர் திருமதி சி. கே. கரியாலி இ.ஆ.ப. அவர்களும் உடன் சென்றிருந்தார்.

உறையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோழிப்பாக்கம் கிராமத்தில் பல ஆண்டுகளாகப் பழுதடைந்து கிடந்த உயர் நிலைப்பள்ளி ஒன்றைச் சீரமைக்கும் முயற்சிக்கு அக்கிராம மக்கள் தாங்களாகவே முன்வந்து அளித்த நிதியோடு டேனிடா திட்டத்தின் சமுதாய நல நிதியின் கீழ் ரூபாய் 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பத்திரிகையாளர் குழுவின் தலைவர், திரு டிஸ்ஸிகார்டு கோழிப்பாக்கம் கிராமப்பள்ளி மேம்பாட்டுக் குழுப் பிரதிநிதியிடம் அளித்தார். இந்தக் குழு சென்ற இடங்களில் எல்லாம் கிராம மக்கள் மிகவும் உற்சாகத்தோடு வரவேற்று உபசரித்தனர். கிராமச் சுகாதார நிலையங்களிலும், பயிற்சி நிலையங்களிலும் நலப் பணியாளர்கள் நடத்திய நல்வாழ்வு பற்றிய செய்திகளை விளக்கும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளைக் கண்ட இந்தப் பத்திரிகையாளர்கள் குழு மிகவும் பாராட்டியது. இத்திட்டம் செயல்படுகின்ற தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் கிராமச் சமுதாயம் இத்திட்டத்தில் நேரிடையாகப் பங்கு பெற்று வருவது இத்திட்டத்தின் வெற்றிக்குப் பெரிதும் துணை நிற்கிறது.

# வட ஆர்க்காடு மாவட்டத்தில்

# கூட்டுறவு விற்பனையில் தமிழகத்தில் முதலிடம்

தொகுப்பு: மா. கலைமணி உதவி மக்கள் தொடர்பு அலுவலர் வ. மாவட்டம்.

“ஓர் இனிப்பான செய்தி - இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலத்திலும் நுகர்வோர் கூட்டுறவு விற்பனைச் சாதனையில் வட ஆர்க்காடு மாவட்டம் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. தமிழகத்தில் முதலிடத்தை வகிக்கிறது. வடஆர்க்காட்டில் செயல்படும் கூட்டுறவின் பல்வேறு நிறுவனங்களை நேரிடையாகச் செய்தியாளர்களுக்கு காண்பிப்பதில் பெருமைப்படுகிறேன்'' என்ற மகிழ்வுச் செய்தியுடன் வடஆர்க்காடு மண்டலக் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு வை.பாண்டியன், செய்தியாளர்களைப்பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று சாதனைகளை விளக்கிக் கூறினார்.

வடார்க்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை தனி அலுவலர் திரு தங்கவேல் பெருமையுடன் கூறியபோது, ''பண்டக சாலை தொடங்கிய 1941-42ல் ரூ.1.74 லட்சம் விற்பனை செய்தது. இந்த விற்பனை படிப் படியாகப் பெருகி 1983-84ல் ரூ.2863.47 லட்சமாக உயர்ந்துள்ளது. இந்த மாபெரும் விற்பனைக்கு மக்களுக்குக் கூட்டுறவின் மேலுள்ள பற்றுதலும் ஊழியர்களின் நேர்மையான மனப்பான்மையும், கடுமையான உழைப்புமே காரணமாகும்'' எனத் தெரிவித்தார்.

''1982-83ம் ஆண்டிற்கு தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளில் சிறந்த தயாரிப்பு மற்றும் பதப்படுத்தியமைக்கு 'மகாலிங்கம்' பரிசு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களால் வழங்கப்பட்டது. 1983-84ல் அனைத்துக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் சிறந்த தயாரிப்பிற்கும், குறிப்பிட்ட திறனைவிட அதிகப்படியான சர்க்கரை உற்பத்தி செய்தமைக்கும் தமிழ்நாடு அரசால் தொழில்துறை ஆணையர் மற்றும் செயலர் மூலம் பரிசு வழங்கபட்டது வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்'' என்றார்.

1977-ல் துவக்கப்பட்ட இவ்வாலை 1981-82ல் 148 இலட்சமும் 1983-84ல் 162 இலட்சமும் இலாபத்தை எட்டியுள்ளது. 974 ஊழியர்கள் பணியாற்றும் இவ்வாலையில் 1982-83-ல் 19 சதவீதமும், 1983-84ல் 18.75 சதவீதமும் போனசாக வழங்கப்பட்டுள்ளது. அதுவல்லாது ஊக்கப் பரிசாக அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயல்படும் மையங்களுக்கு விவசாயிகளிடமிருந்து நேரிடையாக், பசுமையான காய்கறிகளைக் கொள் முதல் செய்து வினியோகம் செய்வதற்கு காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடார்க்காட்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2 சங்கங்கள் வீதம் 73 சங்கங்கள் செயலாற்றி வருகின்றன.

''எழிலார்ந்த ஏலகிரி' ஏழை மக்களின் ஊட்டி'' என்றழைக்கப்படும் ஏலகிரி மலையில் வாழும் மலைவாழ் மக்களிடம் கூட்டுறவுத் துறை பல சாதனைகளைப் புரிந்துள்ளது. மலைவாழ் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, தமிழ்நாட்டில் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் 6 தொடங்கப்பட்டன. அவற்றில் ஒன்று ஏலகிரி மலையில் தொடங்கப்பட்டதாகும். மலைவாழ் மக்கள் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பயிர்க் கடன்கள், நுகர்கடன்கள் மற்றும் மத்திய காலக் கடன்கள், உறுப்பினர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை வாங்கி விற்பனை செய்தல், வேலைவாய்ப்பு அளிக்கக் காட்டு மகசூல்களை குத்தகை எடுத்தல் போன்ற பணிகளை லாப நோக்கமில்லாமல் செயல்பட்டு வருகிறது.

மலைவாழ்மக்கள் வாழ்க்கை நிலையை முன்னேற்ற, பொருளாதார நிலையை உயர்த்த, வேளாண்மைத் தொழில் இல்லாத காலத்தில் வேலைவாய்ப்புத் தரவும் 50 சதவீத மான்யத்துடன் கடன் உதவிகள் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் கறவை மாடுகள் வாங்க 1976-77 முதல் 1983-84 வரை 373 அலகுகளுக்கு ரூ.4 லட்சத்து 86 ஆயிரம் மான்யமும், ஆடுகள் வாங்க 692 அலகுகளுக்கு ரூ.5 லட்சத்து 60 ஆயிரமும், உழவு மாடுகள் வாங்க 248 ஜோடிகளுக்கு ரூ. 1 லட்சத்து 95 ஆயிரமும் கோழி, பன்றி வளர்ப்புக்கு ரூ.11 ஆயிரமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

ஏலகிரியில் கிடைக்கும் பழ உற்பத்திகளைக் கொண்டு ரூ.8.62 லட்சம் செலவில் பழம் பதனிடும் சாலை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.




# ஒடிந்த குடும்பம் ஓங்கி வளர்கிறது

தொகுப்பு: வி. ஜி பிரசாத், உதவி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டத்தில் உள்ளது தும்மனட்டி கிராமம். இங்கு மளிகைக்கடை வைத்து நடத்தி வருகின்றார் திரு ஸ்ரீதரன் நம்பியார்.

இன்று வசதியாக வாழும் இவர் தனது கடந்த கால வாழ்க்கையில் துன்பம் தவிர வேறு ஒன்றையுமே அறியாதவர். இவர் செய்த அனைத்து தொழிலிலும் பெரும் நட்டமும் மனக் கஷ்டமும் மீளவே முடியாதா என்ற மன உளைச்சலில் சதா உழன்று கொண்டிருந்தார்.

இவருக்கு ஊட்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தனது நேசக்கரத்தை நீட்டி ரூ. 2 ஆயிரம் கடனுதவி என்ற பெயரில் அவரை அணைத்துக் கொண்டது. அதைத் தொடர்ந்து சிறு மளிகைக்கடை வைத்து வியாபாரம் தொடங்கினார். அந்த 2 ஆயிரம் ரூபாயை 6 மாதக் காலத்தில் கட்டினார்.

மாதம் பிறந்ததும் ஒவ்வொரு ஐந்தாம் தேதியும் வங்கியைத் திறக்கும்போது முதல் நபர் அவராகத்தான் இருப்பார். அல்லது அவரது பிரதிநிதி நின்று கொண்டிருப்பார். கடன் கட்டுவதில் அவ்வளவு கருத்தாக இருப்பார். அதேபோல அடுத்து கடன் பெற்ற ரூ. 3 ஆயிரம், 5 ஆயிரத்தையும் ஆறு மாதங்களிலும், அடுத்து பெற்ற ரூ. 10 ஆயிரத்தை ஒரே ஆண்டிலும் ரூ. 18 ஆயிரத்தை 18 மாதங்களிலும் கட்டி கடன் கட்டுவது என்றாலே என்னவென்று கேட்கும் இந்நாளில் ஓடி ஓடிக் கடனைக் கட்டும் நபர் இவர்.

அவரது நாணயம் நேர்மை காரணமாக ரூ. 2 ஆயிரத்தில் தொடங்கிய கடனுதவி தற்போது ரூ. 25 ஆயிரம் வரை வந்துள்ளது. இவரது மளிகைக் கடையும் விரிந்து பெரியதொரு கடையாக மாறியுள்ளது. இவரது குடும்பமும் ஏழ்மையில் இருந்து விடுபட்டு முன்னேறி வருகின்றது.

ஒன்றும் இல்லை என்ற அவரது நிலை மாறி இன்று வங்கியில் நிரந்தர வைப்புத் தொகையாக அவரது பெயரில் ரூ. 10 ஆயிரம் உள்ளது என்ற உயர்ந்த நிலைக்கு அவரை நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டம் உயர்த்தி உள்ளது. இவர் தனக்குமட்டும் இல்லாமல் பிறருக்கும் உதவும் நிலையில் நின்று பலருக்குப் பல உதவிகளைச் செய்து வருகின்றார்.

திரு ஸ்ரீதரன் நம்பியார் பற்றி ஊட்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளர் திரு ஆர். சந்தானம் கூறியதாவது:

திரு ஸ்ரீதரன் நம்பியார் போன்று பெற்ற கடனை நாணயமாகக் குறித்த காலத்தில் கட்டுவது எங்களைப் போன்றவர்களுக்கு மனநிறைவைத் தருகின்றது. 'இவரைப் போன்றவர்களுக்கு ரூபாய் 3 ஆயிரம் என்ன 50 ஆயிரம் வரை கடனாக வழங்கலாம். திரும்பக் கட்டி விடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

இவர் கடன் பெற்று தான் மட்டும் பலன்பெற வேண்டும் என்று நினைக்காமல் பிறருக்கும் மிகவும் உதவியாக உள்ளார் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

மேற்கண்டவாறு மேலாளர் திரு சந்தானம் தனது வாடிக்கையாளர்களைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார். அவரது பெருமையில் நமக்கும் நிச்சயம் பங்கு உண்டு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002





# தமிழரசு





# முதல்வர் உடல் நிலையில் முன்னேற்றம்



வருகையாளரிடம் கைகுலுக்குகிறார்.

அமெரிக்காவில் புரூக்ளின் டவுன் ஸ்டேட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உடல்நலம் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

அங்கிருந்து, முதல்வர் அவர்களின் தனிச் செயலர் திரு மு. பரமசிவம் இ.ஆ.ப. அவர்களும், முதல்வர் அவர்களின் தனி மருத்துவர் டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம் அவர்களும் முதல்வரின் உடல்நலத்தில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து அடிக்கடி தமிழகத்திற்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

நவம்பர் 30ஆம் நாளன்று அவர்கள் அனுப்பிய செய்தியில், "முதலமைச்சர் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இன்று இருமுறை அவருக்குப் 'பிசியோ


**தமிழரசு**

மலர் : 15 இதழ் : 12 திருவள்ளுவர் ஆண்டு 2015

16-12-1984 ரக்தாக்ஷி - மார்கழி 2




சேலம் மாவட்டம் பாப்பாரபட்டியில் தியாகி சுப்ரமணிய சிவா அவர்களின் நூற்றாண்டு விழா 26.11.84ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள், சிவா நினைவுத் தூணையும், திரு பி. எஸ். கே. லட்சுமிபதி ராஜூ அவர்கள் சிவாவின் உருவப் படத்தையும் திறந்து வைத்தனர்.

சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற (24.11.84, 25.11.84) இந்திய உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் தேசியக் குழு மாநாட்டில் மாண்புமிகு மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் திரு . சிவ்சங்கர் அவர்கள், மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





மருத்துவர், நர்ஸ் ஆகியோருடன் மாண்புமிகு முதல்வர்,

தெரபி' பயிற்சி தரப்பட்டது. மிகவும் தெளிவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறார். இரத்தத்தில் யூரியா, சர்க்கரை ஆகியவற்றின் அளவு மிகவும் குறைந்துள்ளது'' எனக் குறிப்பிட்டிருந்தனர்.

டிசம்பர் முதல் நாளன்று, அவர்கள் அனுப்பிய செய்தி வருமாறு:

''முதல்வர் இரண்டு கைகளாலும் கட்டிலின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு தானே மெதுவாக நடந்தார். படுக்கையில் அவரே ஏறி அமர்ந்து கொள்கிறார். சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு விடியோவில் படம் பார்த்தார்''.

டிசம்பர் 3ஆம் நாளன்று அனுப்பிய செய்தியில்,

''முதலமைச்சரின் உடல் நிலையில் தொடர்ந்து விரைவான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. ஊன்றுகோலின் உதவியுடன் தானாகவே கழிப்பறை சென்று வருகிறார். வழக்கமான உணவைத் தானாகவே சாப்பிடுகிறார். இரத்தத்தில் யூரியா, சர்க்கரை போன்றவை குறைந்து சாதாரண அளவில் உள்ளன. அவர் மிகவும் தெளிவாகவும் சுறுசுறுப்புடனும் இருக்கிறார். அமெரிக்காவில் உள்ள இந்திய மருத்துவர்கள் சிலர் முதல்வரைப் பார்த்து அவரது உடல்நிலை முன்னேறி வருவது குறித்துத் திருப்தி தெரிவித்தனர்'' எனக் குறிப்பிட்டிருந்தனர்.

டிசம்பர் 4ஆம் நாள் அனுப்பிய செய்தி வருமாறு:

''முதலமைச்சரின் உடல்நிலை தொடர்ந்து சீராகிக்கொண்டு வருகிறது. நேற்று அவருக்குப் 'பிசியோதெரபி' பயிற்சி அளிக்கப்பட்டது. முதலமைச்சர் தெளிவோடும் புத்துணர்ச்சியோடும் இருக்கிறார்.''

டிசம்பர் 7ஆம் நாளன்று, முதல்வர் அவர்களின் தனிச்செயலரும், தனி மருத்து



காண வந்தவர்களுக்கு இரு கரம் குவித்து வணக்கம் தெரிவிக்கிறார்.





அமெரிக்க மருத்துவமனையில் செய்தித்தாள் படிக்கிறார் மாண்புமிகு முதல்வர். அருகில் அவரது துணைவியாரும் உள்ளார்.

வரும் அனுப்பிய செய்தியில், ''பிசியோ தெரபி பயிற்சி முறையில் பத்து நிமிடங்கள் சைக்கிள் ஓட்டினார் முதல்வர்; டயாலிசிஸ் சிகிச்சை முறையைக் கண்டுபிடித்த டாக்டர் ஸ்கிரிப்னர், நரம்பியல் மருத்துவர் டாக்டர் ப்ளம் ஆகியோர் டாக்டர் பிரிட்மேனுடன் வந்து முதலமைச்சரைப் பார்த்தனர், அவரது உடல்நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்கள் திருப்தி தெரிவித்தனர். கைத்தடியின் உதவியுடன் சுமார் 50 அடி தூரம் நடந்து சென்று, தமது அறைக்குத் திரும்பினார் முதல்வர்'' என்று தெரிவித்தனர்.

ஒவ்வொரு வினாடியும் அவரது உடல்நலம் முன்னேறி வருகின்றது என்பதை இந்த அறிக்கைகள் தெரிவித்து வருகின்றன.


## போபால் விஷ வாயு விபத்து: தமிழக அரசு ரூ. 5 லட்சம் உதவி


மத்தியப்பிரதேசத் தலைநகரான போபால் நகரில், ஒரு தொழிற்சாலையில் 3-12-84 அன்று விஷ வாயு கசிவு ஏற்பட்டு அதன் காரணமாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள் அல்லவா?

அங்கு நடக்கும் நிவாரணப் பணிகளுக்காக, தமிழ்நாடு, அரசின் சார்பில் ரூ. 5 இலட்சம் உதவி வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, இந்தத் தொகையை மத்தியப்பிரதேச முதல்வருக்கு அனுப்ப, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழரசு
1-1-1985 இதழ்
•
பொதுத்தேர்தல் •
முடிவுகள்
தொகுப்பு இதழாக
வெளிவருகிறது.





இராணுவ வீரர்களுடன் மாண்புமிகு தமிழக முதல்வர்

சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன. 72 கடைகள் அடங்கிய கட்டடம் ஒன்றும் வேலூரில் கட்டப்பட்டுள்ளது. இவைகளனைத்தும் சுமார் ரூ. 37 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. ரூ. 23 இலட்சம் செலவில் மதுரையில் ஒன்றும் சிவகாசியில் மற்றொன்றுமாக இரண்டு 'ஜவான்ஸ் பவனங்கள்' கட்டப்பட்டு வருகின்றன. தஞ்சாவூரில் உள்ள ஜவான்ஸ் பவன் கட்டடத்தில் ரூ.7.75 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கான பணி முடியும் தறுவாயில் உள்ளது. மேலும் இராமநாதபுரத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்திலும் ''ஜவான்ஸ் பவனங்கள்'' கட்டப்படவுள்ளன. ரூ. 44.58 இலட்சம் செலவில் பல அடுக்குகளைக் கொண்ட முன்னாள் படை வீரர் மையம் ஒன்று சென்னையில் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது. 1983-84-வது ஆண்டில் ஜவான்ஸ் பவனம்-முன்னாள் படைவீரர் மையம் கட்ட ரூ. 14.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர்களைச்சார்ந்த பெண்களுக்கும் மற்றும் கைம்பெண்களுக்கும் புத்தகம் கட்டுதல் மற்றும் பேப்பர் வெட்டுதல் பிரிவு ஒன்று ரூ. 50,000 செலவில் அமைக்கப்பட்டு, இப்பிரிவு மேலும் ரூ. 65,000 செலவில் அச்சகமாக மாற்றப்பட்டுள்ளது.

தொழிற்பேட்டை - முன்னாள் படை வீரர் மையம் நிறுவ ரூ. 42,275 செலவில் கோயம்புத்தூர் மற்றும் சைதாப்பேட்டையில் நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன.

மாநில அரசு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நடத்தும் பலவித வேலைவாய்ப்புகளுக்கான தேர்வுகளில் முன்னாள் படை வீரர்கள் கலந்து கொள்ளப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களுக்கு ஊதியம் மற்றும் மாணவர்களுக்கு உதவித் தொகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களை நிறைவேற்ற அதிக அளவில் நிதி தேவைப்படுகிறது. நமது தாய் நாட்டைக் காக்கப் படை வீரர்கள் செய்துள்ள விலைமதிப்பற்ற பணிகள் மற்றும் தியாகங்களைக் கவனிக்கும் பொழுது முன்னாள் படை வீரர்களின் நலனுக்கு நாம் செலவிடும் தொகை மிகக் குறைந்த அளவேயாகும்.

நாட்டைக் காப்பாற்றப் பெரும் போர்களில் ஈடுபட்டு, தம் வீரத்தையும் தீரத்தையும் நிலைநாட்டி, அஞ்சாமையையும் அயராமையையும் எடுத்துக் காட்டிய வீரர்களின் வீரச்செயல்களை நினைவு கூரும் வகையில் அமைந்துள்ள கொடி நாளில் பொதுமக்கள் தங்களால் இயன்ற அளவில் பெருமளவு காணிக்கை செலுத்த இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.







முதறிஞர் இராஜாஜி அவர்களின் 107-வது பிறந்த நாளை யொட்டி சென்னை பாரிமுனையில் உள்ள இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் அவர்களும், மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம் யூசுப் அவர்களும் 10-12-84ல் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




கொடிநாளையொட்டி முன்னாள் இராணுவ வீரர்களின் நலனுக்காகத் திரட்டப்படும் நிதி வசூலை 7.12.1984 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் திரு கு. சொக்கலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார். முன்னாள் இராணுவ வீரர் நல வாரியத் தலைவர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ. ஆ. ப., நிதி பெறுகிறார்.



மகாகவி பாரதியார் பிறந்தநாளையொட்டி, சென்னை கடற்கரைகாமராசர் சாலையிலுள்ள பாரதியார் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்களும், மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய். எஸ். எம். யூசுப் அவர்களும் 11.12.84 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# முதல் குடியரசுத்தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத்



**முதல் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களின் நூற்றாண்டையொட்டி இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.**

விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக விளங்கிய டாக்டர் இராஜேந்திரபிரசாத் அவர்கள் 1884 டிசம்பர் 3ஆம் நாளன்று பீகார் மாநிலத்தில் ஸரன் மாவட்டத்தில் ஜெராத் என்னும் கிராமத்தில் பிறந்தார்.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த அவர், பள்ளிப் பருவத்திலேயே மிகச் சிறந்து விளங்கினார். படிப்பில் புலியாகத் திகழ்ந்தார். இவரது அறிவுக் கூர்மையைக் கண்டு மகிழ்ந்த ஆசிரியர்கள் ஆண்டுக்கு இரு வகுப்புகளாய் உயர்த்தினார்கள். ஆனால் பிரசாத்தின் தந்தையார் மகாதேவ் சகாயர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. மகனின் படிப்பு, வளம் குன்றிவிடும் என்று பயந்து, இரு வகுப்புகளாக உயர்த்த வேண்டாம் என்று ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார்.

பிரசாத், கல்கத்தா மாநிலக் கல்லூரியில் எம்.ஏ. படித்துக் கொண்டிருந்த சமயம். பீகார் மாநிலத்தைச் சார்ந்த மாணவர்களும்-வங்க மாணவர்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதற்காக பிரசாத் பெரும்பாடுபட்டார். அவரது முயற்சியின் காரணமாக ஒற்றுமை ஏற்பட்டது. அதனைக் கண்ட ஆங்கிலேய அரசப் பிரதிநிதியான கர்ஸான் பிரபு-வங்கத்தைப் பிரித்து, வங்க மக்களின் ஒற்றுமையைக் குலைக்க வழி தேடினார். அந்தப் பிரிவினையை எதிர்த்து வங்க மக்கள் கிளர்ச்சி செய்தனர். நாட்டு ஒற்றுமை அந்நியர்களால் குலைக்கப்படுவதை அறிந்த பிரசாத் கிளர்ச்சியில் ஈடுபட்டார். பீகார் மாணவர்களைத் திரட்டிப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தார்.

பிரசாத், சட்டக் கல்வி கற்று, வழக்குரைஞர் ஆனார். கல்கத்தா உயர்நீதி மன்றத்திலும், பின்னர் பாட்னா உயர்நீதிமன்றத்திலும் வழக்குரைஞர் தொழில் புரிந்தார்.

1918ஆம் ஆண்டில் பீகாரில் சம்பரான் என்ற இடத்தில் உழவுத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்த ஐரோப்பிய நில உடைமையாளர்களின் கொடுமையைத் தடுக்க அண்ணல் காந்தியடிகள் ஓர் அறப் போரை நடத்தினார். அவரைச் சிறையிட்டது ஆங்கில அரசு. உடனே இராஜேந்திர பிரசாத் கொதித்து எழுந்தார்..

''ஒரு காந்தியைச் சிறையில் போட்டால் லட்சக்கணக்கான காந்தியடிகள் தோன்றுவார்கள்'' என்று ஆங்கில அரசுக்கு எச்சரிக்கை செய்தபடி அறப்போரில் ஈடுபட்டார்.

அண்ணலின் போராட்டத்திற்குப் பொதுமக்களிடமிருந்து ஆதரவு பெருகுவதைக் கண்ட ஆங்கில அரசு அஞ்சி, அண்ணலை விடுதலை செய்தது. அவர்மீது தொடர்ந்த வழக்கைக் கைவிட்டது. உழவர்களின் குறைகளைப் போக்குவதற்காக ஒரு குழுவையும் நியமித்தது.

சம்பரானில் அண்ணல் நடத்திய அறப்போரில் ,தொடக்கத்திலிருந்து இறுதி வரை உறுதியான உள்ளத்துடன் நின்று உதவியவர் இராஜேந்திரபிரசாத். இதனை அண்ணல் உணர்ந்திருந்தார்.

''இராஜேந்திர பிரசாத்தின் உதவி இல்லாது போனால் சம்பரான் அறப்போரில் வெற்றி கண்டிருக்க முடியாது'' என்று தமது சுய சரிதையில் குறிப்பிட்டிருக்கிறார் அண்ணல் காந்தியடிகள்.

**தமிழ்ப்பித்தன்**



அண்ணலிடம் ஈடுபாடு கொண்ட பிரசாத், வழக்குரைஞர் தொழிலைக் கைவிட்டு, காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்துவிட்டார். அதன் விளைவாகக் கிளர்ச்சிகளில் அவ்வப்போது ஈடுபடுவதும் சிறைத் தண்டனை பெறுவதும் வாடிக்கையாகிவிட்டன.

1930ல் அண்ணல் காந்தி உப்புச் சத்தியாக்கிரகப் போரைத் தொடங்கினார். இராஜேந்திர பிரசாத், பீகாரில் சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட உப்பை விற்றார்.

1946ல் பண்டித ஜவகர்லால்நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால மந்திரி சபையில்இராஜேந்திரபிரசாத் உணவு, விவசாயத்துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தார். 1947ல் அரசியல் சாசன நிர்ணய சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1950ல் இந்தியா குடியரசு நாடாகியபோது, இராஜேந்திரபிரசாத், குடியரசுத் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவியில் பன்னிரண்டு ஆண்டுகட்கும் மேலாகப் பணிபுரிந்திருக்கிறார்.

1962ல் பதவியிலிருந்து விலகி, பாட்னாவுக்குச் சென்று, சதாகத் ஆசிரமத்திற்குத் திரும்பினார்.

இராஜேந்திர பிரசாத், பல மொழிகளைக் கற்றிருந்தார். சமஸ்கிருதம்,உருது, பாரசீகம், ஆங்கிலம், இந்தி,வங்கம் ஆகிய மொழிகளைக் கற்றிருந்தார். கன்னட மொழியைக் கற்பதில் நாட்டம் செலுத்தினார். எழுபது வயதைக் கடந்துவிட்ட பின்னரும், தம்மை ஒரு மாணவர் என்று கூறிக்கொண்டார்.

மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கிய பிரசாத், புகழ்பெற்ற எழுத்தாளராகவும் திகழ்ந்தார். பல நூல்களை அவர் எழுதியிருக்கிறார்.

1942-44ல் சிறையிலிருந்த காலத்தில் பிளவு பட்ட இந்தியா ( India Divided ) என்னும் ஆங்கில நூலையும் எழுதினார். 'பாபுவின் அடிச்சுவட்டில்', 'சம்பரான் சத்தியாக்கிரகம்' என்னும் ஆங்கில நூல்களையும் எழுதியிருக்கிறார். தமது வாழ்க்கை வரலாற்றை 'ஆத்ம கதா' என்ற தலைப்பில் இந்தி மொழியில் எழுதினார்.

இராஜேந்திரபிரசாத் எளிமையும் அடக்கமும் நிறைந்தவர்; பிறரது கருத்துக்கு மதிப்பளிக்கும் பண்புள்ளவர். இந்தியப் பண்பாட்டில் மாறாத விருப்பம் கொண்டவர். சிறந்த கல்வியாளராக விளங்கியவர். சமூக அநீதிகளை எதிர்த்தவர். பிணக்குகளையும் கருத்துவேறுபாடுகளையும் சமாளிக்கத் தெரிந்தவர். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர். சிறந்த மேதை எனத் திகழ்ந்தவர்.

இந்தியாவின் மீது சீன நாடு ஆக்கிரமிப்பு செய்தபோது அந்த எதிர்த்து, மக்கள் சக்தியைத்திரட்ட அரும்பாடுபட்ட அந்தத் தவப்புதல்வர் 1963 பிப்ரவரி28ல் மறைந்தார்.

இறுதி மூச்சு உள்ளவரை இந்தியாவின் மேன்மைக்கும் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பணியாற்றிய அந்தத் தியாகச் செம்மல் இந்தியர் அனைவரின் உள்ளத்திலும் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்று குறிப்பிடுவது பொருந்தும்.

# ஒருமைப்பாட்டை உணர்த்தும் மாநாடு



இந்திய உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் தேசியக் குழு மாநாடு சென்னை இராஜாஜி மண்டபத்தில் கடந்த 24.11.84, 25.11.84 ஆகியதேதிகளில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

மாண்புமிகு மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் திரு பி.சிவ்சங்சர் அவர்கள் குத்துவிளக்கை ஏற்றி மாநாட்டைத் தொடங்கி வைத்தார். அவர் தமது உரையில்,

''பத்திரிகையாளர்கள் சுயமாக-சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதே இந்திய அரசின் விருப்பமாகும். உழைக்கும் பத்திரிகையாளர் நலனுக்காகச் சட்டம் ஊதியக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. உண்மையைத் துணிச்சலுடன் கூறும்தைரியமும், சமூகப் பொறுப்புணர்ச்சியும் பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டியத் அவசியம். செய்திகளைத் தரும்பொழுது அந்தப் பத்திரிகையில் பணியாற்றுகிறார்கள் என்று நினைக்காமல், அந்தப் பத்திரிகையாளர் தனக்கு வேண்டிய பத்திரிகைக்கு சாதகமாகச் செய்தி தராமல் நாட்டு நடப்புகளை உண்மைச் செய்திகளை விருப்பு வெறுப்புகளையெல்லாம் மறந்து நாட்டு மக்களுக்குத் தர வேண்டும்.

''பத்திரிகைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பற்றி அவ்வப்போது அறிவிப்பதற்காக வாசகர்களிடையே அமைப்புகள் இல்லை. பத்திரிகைச் சுதந்தரத்தைப் பாதுகாக்க இந்தியப் பத்திரிகையாளர்கள் குழுவைப் பலப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் பத்திரிகைச் சுதந்தரம் ஜனநாயகப் படுகுழிக்கு அனுப்பக்கூடியதாக அது அமைந்து விடக்கூடாது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், பத்திரிகையாளர்கள் மாநாடையொட்டிச் சிறப்பு மலரை வெளியிட்டார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

''உலகில் எந்தப் பகுதியில் உள்ளவர்களையும்-விட இந்தியப் பத்திரிகையாளர்கள் மிகவும் அறிவு வாய்ந்தவர்கள். ஜனநாயகத்தை அமைக்கும் சக்திமிக்க ஒரு தூண் பத்திரிகையாகும். ஜனநாயகம் சிறப்பாக நடைபெறப் பத்திரிகைச் சுதந்தரம் என்பது தேவைதான். சோதிப்பும், சமநிலைமையும் உள்ள சுதந்திரம் வெற்றிகரமாக அமையாது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் பத்திரிகைச் சுதந்தரம் சமூகநலத்துடன் தொடர்புடையதாக இருக்கவேண்டும். பொறுப்புணர்ச்சியுடன் கூடிய பத்திரிகைச் சுதந்திரத்தையே நான் விரும்புகிறேன். நாட்டின் ஒருமைப்பாடு , ஓங்க பத்திரிகையாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.''

மாநாட்டில் பங்கேற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில்—

''பத்திரிகைத் தொழிலின் சீரிய பணியை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். இனக் கலவரம் நிலவும் இந்தச் சூழ்நிலையில் பத்திரிகைகளின் பங்கு மிக

வும் முக்கியமானது. சமூகத்திலுள்ள குறையைக் கண்டுபிடித்து வெளியிடுவதுபோலவே தங்களிடமுள்ள குறையையும் கண்டு கொள்ள வேண்டும். வகுப்புவாத சக்திகளையும், அழிவுச் சக்திகளையும் அழிக்க எதிர்க்க பத்திரிகையாளர்கள் முன்வரவேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார்கள். உடல் நலக் குறைவு காரணமாக அவர்கள் நியூயார்க்கில் இருப்பதால், அவர் சார்பிலும், அமைச்சரவை சார்பிலும் இந்த மாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்கிறேன்.

''தமிழக அரசைப் பொறுத்த வரையில் இந்த அரசு பத்திரிகை சுதந்தரத்தைப் போற்றக்கூடியதாகும். இந்த அரசைப் பற்றிய விமர்சனங்களையும் வரவேற்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

சென்னைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் திரு.ஜோசப் மாடப்பள்ளி வரவேற்றார். அவர் தமது உரையில், சென்னை பத்திரிகையாளர் சங்கத்திற்கும், தமிழக அரசுக்கும் நல்ல உறவு உள்ளது. இது எதிர்காலத்தில் மேலும் வளர்ந்து, ஒளிவீசும் என்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

பத்திரிகையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் திரு.விக்ரமராவும், பொதுச் செயலாளர் திரு ஏ.கே.ராயும், தமிழகஅரசு மிக்க பெருந்தன்மையோடு அளித்த உதவிகளுக்குத் தங்களது நன்றியைத் தெரிவித்தனர். 'இந்து' நாளேட்டின் கூட்டு ஆசிரியர் திரு எம். ராம் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் பூரண நலம் பெற்று தாயகம் திரும்ப வாழ்த்துத் தெரிவிக்கும் தீர்மானமும், பிரதமர் இந்திரா மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானமும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. சங்கப் பொதுச் செயலாளர் திரு கே.அருண், வாழ்த்துச் செய்திகளையும், இணைச் செயலாளர் திரு கே.ரங்கராஜன் நன்றியையும் கூறினர்.

சென்னை பத்மா சேஷாத்திரி அவர்கள் நடத்திய பாலபவனம் மாணவ-மாணவியர்களின் தேசிய ஒருமைப்பாடு பற்றிய பாடல்களும் நடைபெற்றன. பத்திரிகையாளர்கள் மாநாட்டையொட்டிச் சென்னையில் ஒரு பேரணியும் நடைபெற்றது. தமிழக அரசின் சார்பில் மாநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு சிறப்பான விருந்து அளிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசுத்துறை அலுவலர்களும்., பத்திரிகையாளர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

தமிழக அரசின் சார்பில் மாநாட்டின் சிறப்புப் பிரதிநிதிகளுக்குத் தஞ்சாவூர்த் தட்டுகள் வழங்கப்பட்டன. மாநாட்டின் சர்வதேச உழைக்கும் பத்திரிகையாளர் அமைப்புச் செயலாளர் டாக்டர் மாஸ் பிரைட்டை காணும் தமிழக அரசு தந்த ஒத்துழைப்பு ஆர்வத்தை வெகுவாகப் பாராட்டினார்.

இதனையொட்டி சென்னை உலகப் பல்கலைக் கழகத் தொண்டு மையத்தில் இந்திய உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் புகைப்படக் கண்காட்சியைத் தமிழக கைத்தறி மற்றும் வணிகத்துறை அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் திறந்து வைத்தார். அவர் தமது உரையில்:

பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது தமிழக அரசு உறுதியான நம்பிக்கைக் கொண்டு இருப்பதாகவும், அந்தச் சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படாமல் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பத்திரிகைகளே காண வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இரண்டு நாள் நடைபெற்ற இம்மாநாடு, தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் மாநாடாக அமைந்திருந்தது என்றால் அது மிகையாகாது.

—ஜீ. ஆனந்தன்

## உலக மொழிகள் கலைக் களஞ்சியம்

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் மொழி-இயல் ஆராய்ச்சிக் கழகம் பல தொகுதிகளைக் கொண்ட உலக மொழிகள் கலைக் களஞ்சியம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இத்தகைய கலைக் களஞ்சியம் தயாரிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். இந்தப் பணி முடிவடைவதற்குப் பல்லாண்டுகள் ஆகலாம். உலக மொழிகளில் மிகப் பெரும்பாலானவை குறித்த விவரங்கள் இதில் இடம் பெறும். உலகத்தில் 7,000 மொழிகள் பேசப்படுவதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

உருவாகிவரும் புதிய கலைக் களஞ்சியம் பல்வேறு மொழிகளின் சிறப்பு அம்சங்கள், அவற்றின் வரலாறு, அவை பேசப்படும் பகுதிகளின் பூகோளத் தகவல்கள், அவற்றில் பலவற்றின் பிறப்பு முதலிய விவரங்களைக் கூறும்.

இதை உருவாக்கிவரும் மொழி இயல் ஆராய்ச்சிக் கழகமே ஒரு தனிப்பட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், சோவியத் தேசிய இனங்கள் 130 மொழிகள் பேசுவதாகும். இந்த நாட்டில் கதைப் புத்தகங்கள் 78 மொழிகளில் வெளியிடப்படுகின்றன. வானொலி நிகழ்ச்சிகள் 67 மொழிகளில் ஒலிபரப்பப்படுகின்றன. பள்ளிப் பாடப் புத்தகங்கள் 52 மொழிகளில் வெளியிடப்படுகின்றன. இந்தக் கழகத்தில் பணி புரிவோர் சோவியத் யூனியனில் பேசப்படும் மொழிகள் மட்டுமின்றி, மேலும் 400 வெளிநாட்டு மொழிகளையும் கற்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்க செய்தி ஆகும்.


## ஏற்றம் பெறும் எண்ணெய்த் தொழில்

60 ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 1925-ஆம் ஆண்டிலேயே, இந்தியாவுக்கு சோவியத் யூனியன் ஏற்றுமதி செய்த பொருள்களில் எண்ணெயும் ஒன்று.

1927அம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவுக்குச் சோவியத் யூனியன் மண்ணெண்ணெய் வழங்கியதன் விளைவாக இந்தியாவின் சில பகுதிகளில் இந்த எண்ணெயின் விலை 30 சதவிகிதம் குறைந்தது. அதே சமயத்தில் சோவியத் யூனியனுக்குத் தேயிலை, கோகோ, வாசனைப் பொருள்கள், சணல், தோல், எண்ணெய் வித்துக்கள் முதலிய பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்தது.

1976ல் இந்தியா, சோவியத் நிபுணர்களின் உதவியுடன், எண்ணெய்ப் படிவங்கள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடிக்க விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. இந்தியாவிலும், இதை அடுத்துள்ள கரையோரக் கடல் பகுதிகளிலும் குறைந்தபட்சம் 1,260 கோடி டன் எண்ணெய், மற்றும் எரிவாயுப் படிவங்களாவது இருக்கக் கூடுமென்று மதிப்பிடப்பட்டது. பின்னர் நடைபெற்ற புவி இயல் ஆராய்ச்சிகளின் விளைவாக, இந்தியாவில் 1,500 கோடி டன் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டது. இது, இந்தியாவின் தன்னிறைவுக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கான பெரும் செல்வமாகும்.

இப்போது இந்தியாவில் எண்ணெய் உற்பத்தி அதிகரித்து வருகிறது. சென்ற மூன்று ஆண்டுகளில் இது இரட்டித்துள்ளது. 1980-81ஆம் ஆண்டில் 1.5 கோடி டன்னாக இருந்த இந்திய எண்ணெய் உற்பத்தியானது, 1983-1984ல், 2.11 கோடி டன்னாக உயர்ந்தது. 1984-1985ல் இது 2.6 கோடி டன் முதல், 2.9 கோடி டன் வரையிலான அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



சமூகக் கேடுகளை எதிர்த்துப் போராட இளைய தலைமுறையினர் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும், தைரியம் குறைவான மக்களைக் கொண்ட எந்த நாடும் அதிக முன்னேற்றமடைய முடியாது. தனது சுய மரியாதையைப் பாதுகாக்க இயலாது.

திருமதி இந்திராகாந்தி

## நீலகிரி மாவட்டத்தில் வரையாடுகள் சரணாலயம்

முன்காலத்தில் நீலகிரி தார் என்று அழைக்கப்படும் வரையாடு வெள்ளையர்களால் வேட்டையாடப்பட்டு வந்தது. 1972-ஆம் ஆண்டில் விலங்குகளின் பாதுகாப்பிற்காக வனவிலங்கு பாதுகாப்புச்சட்டம் செயல்பட்டதன் விளைவாக, அழிந்துவரும் அரிய வன விலங்குகள், உயிர்கள் பாதுகாக்கப்பட வரையாடு வேட்டையாடுதல் தடை செய்யப்பட்டது.

நீலகிரி மாவட்டத்திற்கு உரிமையான வரையாடுகளின் இனங்கள் அழிந்து விடக் கூடும் என்ற கருத்தை உணர்ந்து தமிழ்நாடு அரசு, இவ்வினத்தின் பாதுகாப்பிற்காக அவை வாழும் பகுதியை ஓர் சரணாலயமாக ஏற்படுத்த முடிவு செய்து ஓர் அமைப்பினை ஏற்படுத்தியது. அதுவே வரையாடு சரணாலயமாகும்.

5-5-1982 முதல் அவலாங்கியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இச்சரகம் 5 காவல் பகுதிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இச்சரணாலயம் உதகமண்டலத்திலிருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் உள்ளது. உதகமண்டலம் தாலுகா ஆளுகைக்கு உட்பட்ட நீலகிரி தெற்கு கோட்ட வன அலுவலரின் அதிகார எல்லைக்குட்பட்ட ஒதுக்கு காட்டிலிருந்து அவலாஞ்சிக்கு அருகில் 78.46 சதுர கி.மீ. பரப்பு கொண்டு உள்ளது.

இச்சரணாலயம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2650 மீட்டர் உயரத்தில் உள்ளது. தமிழ்நாட்டிலேயே அதிகமாக குளிர் இருக்கும் இப்பகுதி நிலையான பசுமை மாறா காடுகள், மலைத்தொடர்கள், பள்ளத்தாக்குகள் மற்றும் வற்றாத தெளிந்த நீரோடைகள் கொண்டு இயற்கை அமைப்பினைப் பெற்றுள்ளது.

இப்பகுதியில் வரையாடு தவிர, யானை கடமான், கேளையாடு, பன்றி, புலி, சிறுத்தை போன்ற விலங்குகளும் மற்றும் வியத்தகு புள்ளினங்களும் காணப்படுகின்றன.


வரையாடு சரணாலயத்தில் அண்மையில் வரையாடுகளின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கணக்கெடுப்பின் முடிவுகள் பின்வருமாறு:—

முதுகில் வெள்ளை நிறமுடைய வரையாடுகள் 36; செம் பழுப்பு நிற வரையாடுகள் 27; பெண் மற்றும் ஆண் வரையாடுகள் 496; ஒரு வயதிற்குட்பட்டது 5; குட்டிகள் 66. மொத்தம் 630.

—மு. முத்துக்காளத்தி

*கோவை மாவட்டத்தில்...*

# நலிவுற்றோர் பொருளாதார மேம்பாடு!



பி. சுப்பையா, செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், கோயம்புத்தூர்.

இந்திய நாடு வேளாண்மையைப் பெரிதும் தொழிலாகக் கொண்ட நாடு. இதில் குறிப்பாகத் தமிழகம் வேளாண்மைத் தொழிலை மட்டுமே தலையாய தொழிலாகக் கொண்டு திகழ்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை பெரும் நிலக்கிழார்கள் மிகக்குறைவு. பெரும்பாலும் குறைந்த அளவில் நஞ்சை, புஞ்சை நிலங்களைக் கொண்டவர்களே தமிழகத்தில் அதிகம் எனலாம்.

தமிழக மக்கள் தொகையில் 95 விழுக்காடு கிராமப்புறத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்குரிய சிறுசிறு நிலங்களை உழுது, பயிரிட்டு, அதன் மூலம் கிடைக்கின்ற விளைச்சலைக் கொண்டு வாழ்க்கை நடத்துகிற நிலைமை தான் அதிகமாகும். பெரிதும் விவசாயிகள் மழை நீரையே நம்பிப் பயிரிட வேண்டிய சூழ்நிலை தமிழகத்தில் இருந்து வருகிறது. மழை பொய்த்தால் விளைச்சல் குன்றி வறட்சி என்கின்ற நிலைமை உருவாகி விடுகிறது.

கிராமப்புறத்தில் சிறுசிறு நிலத்தை உழுது, பயிரிட்டு விளைச்சலைப் பெற்று வாழ்கிற நிலைமையும், இந்த நிலங்களில் வேளாண் தொழில் புரிந்து வாழ்க்கை நடத்துகின்ற நிலைமையுமே முழுமையாக இருந்து வருகிறது. இந்த வகையில் கிராமப்புற மக்களின் பொருளாதார மேம்பாட்டை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் மத்திய, மாநில அரசுக்கு ஏற்பட்டு 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்' என்கின்ற அருமையான திட்டம் உருவாக்கப்பட்டு, பாங்குறச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், படித்த இளைஞர்கள், ஆதி திராவிட, மலைவகுப்பைச் சார்ந்தவர்கள், மகளிர் மற்றும் சிறுசிறு தொழில்களைச்செய்யக்கூடியவர்கட்கு இந்தத் திட்டத்தின் மூலம் கடனும், மானியமும் வழங்க வழிவகை காணப்பட்டிருக்கிறது. ஆண்டு வருமானம் ரூ. 3,000க்குக் குறைவாக உடையவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்றவர்கள் என்கின்ற கணக்கின் அடிப்படையில்கிராமப்புறத்திலிருக்கின்ற, ஏழை எளியவர்கள், விவசாயத் தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாட்டை உருவாக்க அன்றாடம் அவர்கள் வாழ்க்கைக்கு வருவாய் கிடைக்கின்ற வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்வில் நலிவுற்றவர்கள், சிறு குறு-விவசாயிகளுக்குக் கறவை மாடுகள், வண்டி மாடுகள், உழவுமாடுகள் வெள்ளாடுகள், வாத்துகள், உயர்ரகப் பசுங்கன்றுகள் ஆகியவை வாங்க, சைக்கிள்கடை, மோட்டார், கார் ரிப்பேர் ஒர்க் ஷாப், சிறுகடை, பலசரக்குக் கடை, தேநீர்க்கடை, சலவைக் கடை, சவரக்கடை, சிறுசிறு பெட்டிக்கடை, ஒலிபெருக்கிக் கடை, பின்னுதல் போன்ற தொழில்கட்கும் தேவைப்படுகின்ற நிதியினை வங்கிகள் மூலம் கடனாகவும், பெறுகின்ற கடனில் சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடும், மிகச் சிறுவிவசாயிகளுக்கு 33 விழுக்காடும், ஆதிதிராவிடர் மலைவாழுநர்களுக்கு 50 விழுக்காடும் மான்யம் வழங்குவது என்கின்ற வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதோடு, கிராமப்புறத்திலிருக்கின்ற இளைஞர்கள், பெண் மணிகளுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சியும், சுயவேலை வாய்ப்பில் பயிற்சி பெற்றவர்களுக்குத் தொழில் தொடங்கக் கடனும், மானியமும் என்கிற வகையிலும் அளிக்கப்பட்டு வருகிறது. சுயவேலைவாய்ப்புப் பயிற்சிபெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சிக் கேந்திரத்திலேயே நிரந்தரமாக வேலையும் தரப்பட்டு வருகிறது.

மத்திய, மாநில அரசுகள் இரண்டும் ஒன்றாக இணைந்து ஒவ்வொரு வகையிலும் மானியத்தில் 50 விழுக்காடு, என்கின்ற வகையில் இரண்டு அரசும் நிதியினைப் பகிர்ந்து வழங்கி இத்திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. 1980-81-ல் இத்திட்டத்தைத் துவக்கி, கடந்த 4 ஆண்டுகளாக மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி 1984-85வது நிதியாண்டிலும் ஆக, இந்த 5 ஆண்டுகளில் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் பொருளாதார மேம்பாடு வெகுவாக உருவாக்கப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 600 குடும்பங்களுக்கு இத்திட்டம் உதவவேண்டும் என்கிற வகையில் ஆண்டுத் திட்டமும் வகுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிற மானியத்திற்கேற்ப ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டு, பயனுள்ள காரியங்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன.

கோவை மாவட்டத்திலுள்ள 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் 80-81வது நிதியாண்டிலிருந்து 83-84வது நிதியாண்டு வரை ரூ. 452 இலட்சம் மானியம் வழங்கி, ரூ. 1010 இலட்சம் கடனும் வழங்கி கிராமப்புறங்களில் வாழுகின்ற வறுமைக் கோட்டிற்குக் கீழே — வாழுகிற 50,500 குடும்பங்கட்கு வழங்கி பொருளாதார மேம்பாடு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதில் 20,000 பேர் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள், 15,000 பேர் பெண்கள். இதைப்போலவே நடப்பாண்டிலும் ரூ. 168 இலட்சம் மானியம் வழங்கி ரூ. 4 கோடி கடனும், 13,000 குடும்பங்கட்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப்பட்டு கிராமப்புற மக்களின் வாழ்வில் ஓரளவிற்குப் பொருளாதார. மேம்பாடு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதில் எவ்வித ஐயப்பாடும் எழ நியாயமில்லை. அந்த அளவிற்கு இத்திட்டத்தால் பயனடைந்தவர்கள் பிரகாசமாகத் தங்களுடைய வாழ்க்கையை அமைத்து நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பது தெளிவாகும். இந்தத் திட்டத்தோடு விவசாய உற்பத்திமேம்பாட்டுத் திட்டம் என்கின்ற திட்டமும், ஆண்டுதோறும் கோவை மாவட்டத்தில் ரூ. 80 இலட்சம் மானியம் வழங்கி வேளாண் உற்பத்தி மேம்பாட்டுப் பணிகள் பாங்குற நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோவை மாவட்டத்தில்1980-81 வது நிதியாண்டில் இருந்து1983-84 வது நிதியாண்டு வரை ஏறத்தாழ 10,000 பேருக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக 5,000-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய தையற் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கெல்லாம் தையல் இயந்திரங்கள் மானியம் விரைவில் வாங்கித் தரப்பட்டு, அந்தத் தையல் இயந்திரங்களைக் கொண்டு கிராமப்புறப் பெண்கள் ஓரளவிற்கு வருவாயினைப் பெற்றுத் திகழ்கிறார்கள்.

கோவை மாவட்டத்தில் நூற்பாலைகள் மிகுதியாக உள்ளன என்பதைக் கவனத்தில் கொண்டு பல நூற்புப் பயிற்சிக் கேந்திரங்களும், சிறுசிறு நூற்புத் தொழிற் கூடங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூற்புப் பயிற்சிக் கேந்திரத்தில் ஏறத்தாழ 1000-க்கும் மேற்பட்ட பெண்கள் பயிற்சி பெற்று, வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். குளிர்ப்பகுதியாக விளங்குகின்ற வால்பாறையில் கதர், கைத்தொழில் துறையோடு இணைந்து கம்பளி ஆடை நெய்கின்ற பயிற்சி 50 பெண்களுக்கு அளிக்கப்பட்டு கம்பளி ஆடை நெய்கின்ற தொழிற்கூடம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த 5 ஆண்டில் 65,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன என்றால், இந்த 65,000 குடும்பங்களும் தன் குடும்பத்தை நடத்துகின்ற அளவிற்கு வருவாயைப் பெறுகின்ற தொழிலை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்கின்ற குடும்பங்களில் தெளிவான பொருளாதார நோக்கும், சிந்தனை வளர்ச்சியும் ஏற்பட்டிருப்பது இந்திய நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், அனைத்து உழைப்புச் சக்திகளின் உற்பத்திக்கும் தனிநபர் வருமானத்தின் வளர்ச்சிக்கும், உதவுகின்றன.

இத்திட்டத்தால் வாழ்க்கையில் பிரகாசம் பெற்றவர்களின் உண்மை வரலாற்றுக் காவியத்தை இங்கே படைக்கின்றோம்:

பொள்ளாச்சி வட்டத்தில் நெகமம் என்ற பேரூராட்சியில் சிவசாமி வயது 31. பௌதிக இயல் இளங்கலை பயின்றவர் வாழுகிறார். இவரது தந்தை பெயர் திருமூர்த்தி (58). தாயார் பெயர் செல்வாத்தாள் (55). சிவசாமிக்கு 2 சகோதரர்கள். இவரும், இவரது சகோதரர்களும் தனது குடும்பத்திற்குச் சொந்தமான 3 ஏக்கர் நஞ்சை நிலத்தை உழுது பயிரிட்டு வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இந்த 3 ஏக்கர் நிலத்திற்கும் தனியாகப் பாசனக் கிணறு கிடையாது.

எல்லா உறவினர்கட்கும் பயன்படுகின்ற கூட்டான கிணறு ஒன்று உண்டு. பௌதிகத்தில் இளங்கலையை 1973-ல் முடித்து விட்ட சிவசாமி, பாரத வங்கியின் கள உதவியாளராக 3 ஆண்டுக்



காலம் பணியாற்றினார். இவ்வாறு பணியாற்றும்போது மாத வருமானம் ரூ. 800 வரை கிடைக்கப் பெற்றார். இவருக்கு இடமாற்றம் அளிக்கப்பட்டதால் விவசாயத்தை விட்டு விட்டு வெளியூருக்குச் செல்ல மனமில்லாததால் அந்தப் பதவியைக் கைவிட்டார்.

தனது குடும்பத்திற்குச்சொந்தமான 3 ஏக்கர் நிலத்தில் மிளகாய், வெங்காயம் ஆகியவற்றைப் பயிரிட்டு அதன் மூலம் கிடைக்கின்ற சிறிய அளவிலான வருமானத்தைக் கொண்டு குடும்பம் நடத்துகின்ற நிலைமையில் தேசீய சேமிப்பு முகவராக 1979 முதல் பொள்ளாச்சிக் கோட்டம் முழுதும் பணியாற்றி 1984 வரை ரூ. 11 லட்சத்திற்கு சிறு சேமிப்புப் பத்திரங்கள் விற்பனை செய்திருக்கிறார். இதன் மூலம் இவருக்கு மாத சராசரி வருமானம் ரூ. 1,200 வரை கிடைக்கிறது.

இவர் இவ்வாறு தேசிய சேமிப்பு முகவராகப் பணியாற்றி பொருள் ஈட்டுகின்ற தன்மையை உணர்ந்த இளைஞர்கள் பலர் சேமிப்பு முகவர்களாக மாறியிருக்கிறார்கள். குறிப்பாக இவரால் ஆனைமலைப் பகுதியில் 2 பெண்களும், உடுமலைப் பகுதியில் 2 ஆண்களும் சேமிப்பு முகவர்களாகப்பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். தேசிய சேமிப்பு முகவராக ஒருவர் பொள்ளாச்சிக் கோட்டத்தில் அரும்பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் பணிகள் மீதும் மிகுந்த நாட்டம் ஏற்பட்டது.

தனது குடும்பச் சொத்தான 3 ஏக்கர் நிலத்தைக் கொண்டு இத் திட்டத்தின் கீழ் உதவி பெற முடிவு செய்தார். நில உரிமைச் சான்றோடு கிராமநல அலுவலரின் அறிவுரைப்படி விண்ணப்பம் கொடுத்து அந்த விண்ணப்பம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திட்ட அலுவலரால் பரிசீலிக்கப்பட்டு, வங்கிக்குப் பரிந்துரைக்கப்பட்டது. தன்னுடைய தொழிலுக்குத் தேவையான வண்டியும், மாடும் தேவையென தனது விண்ணப்பத்தில் கேட்டிருந்தார். வண்டி வாங்குவதற்கு ரூ. 2000மும், மாடு வாங்க, ரூ. 2000மும் ஆகமொத்தம் ரூ. 4,000 கடன் பெற்று வண்டியையும், மாட்டையும் வாங்கி தனது உழவுத்தொழிலுக்கும், நிலத்துக்கு வேண்டிய உரங்களை ஏற்றிச் செல்வதற்கும் இவற்றையெல்லாம் பயன்படுத்தி தான் வாங்கிய ரூ. 4,000 கடனில் அவர் திருப்பிச் செலுத்த வேண்டிய ரூ. 2,600ஐ தவணைப்படி வங்கிக்குச் செலுத்தி விட்டார். இதனால் அவருக்குவண்டியும், மாடும் சொந்தமாகின்றன. அவற்றின் உழைப்பும், பயனும் இவருக்குக் கிடைத்திருக்கின்றன.

இவருக்குக் கிடைத்த மானியத் தொகை மற்றொரு வருமானமாகவே அமைந்துவிட்டது. அதோடு நிற்காமல் தான் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்திவிட்ட இவர் நெகமத்தில் உள்ள ஆடு வளர்க்கும் சங்கத்தில் உறுப்பினரானார். இந்தச் சங்கத்திற்கு இயக்குநராகவும் திரு சிவசாமி ஆகி இருக்கிறார். இந்தச் சங்கத்தில் சேர்ந்து ரூ. 4,000 கடன் வாங்கி 21 ஆடுகளைப் பெற்று அவற்றைவளர்த்துக் கொண்டிருக்கிறார். இந்த ஆடுகளுக்கு இன்ஷ்யூரன்ஸ்செய்திருப்பதாகவும், இந்த ஆடுகளைக் கால்நடை பராமரிப்புத் துறையினர் அடிக்கடி கவனித்து வருவதாகவும், தற்பொழுது தான் வாங்கிய ஆடுகள் கருவுற்றிருப்பதாகவும், இதன் மூலம் தனக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றும் தெரிவிக்கிறார்.

ஆடுகள் இறந்துவிட்டால் அதற்கு ஈட்டுத்தொகையை ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்குவதாகவும், இந்த ஆடுகளுக்கு இலவசமாக மருத்துவம் கிடைப்பதாகவும் தெரிவிக்கிறார். இந்தச் சங்கத்தில் இருக்கும் 37 உறுப்பினர்களும் இதைப்போலவே பயனடைகிறார்கள் என்று தெரிவிக்கிறார். இந்தத் திட்டத்தாலே தன்னைப்போன்றபடித்த- படிக்காத கிராமப்புற சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், வாழ்வில் நலிவுற்றவர்கள் ஓரளவிற்கு வருவாயைப் பெருக்கி, குடும்பத்தை நடத்துவதற்கு வழிபிறந்திருப்பதாகத் தெரிவிக்கிறார்.

அதோடு தனது விவசாயத்திற்குப் பயன்படுகின்ற கூட்டுக் கிணறு அவ்வளவாகப் பாசனத்திற்கு உதவியாக இல்லாததால் விவசாயப் பெருக்குத் திட்டம் என்ற திட்டத்தில் கடன் வாங்கி கிணறுவெட்டுகின்ற வேலையைத் தான் செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

## கூட்டுறவுச் சாதனை

இந்தியாவில் ஆண்டுதோறும் ரூ.5 கோடிக்கு மேல் நுகர்பொருட்களை விற்பனை செய்துள்ள நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராட்டப்படுகின்றன. 1982-83ஆம் ஆண்டில் இத்தகைய சிறப்புடன் இந்தியா முழுவதும் செயல்பட்ட நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் 22 ஆகும். இவற்றில் 11 பண்டக சாலைகள் அதாவது. 50 சதவீதம் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருவது பாராட்டப்பட்டுள்ளது. அதில்வடஆர்க்காட்டில் மட்டும் ரூ. 24.92 கோடி விற்பனை செய்து இந்தியாவில் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது. புது டெல்லி கன்னாட்சூபர் பஜார் ரூ.29.10கோடியும், பம்பாய் அப்னா பஜார் ரூ.27.12 கோடியளவிலும் விற்பனை செய்து முதலிரண்டு இடத்தை வகிக்கின்றன. ஐந்து மற்றும் ஆறாவது இடத்தை சென்னை திருவல்லிக்கேணி கூட்டுறவுச் சங்கமும், சேலம் கூட்டுறவுச் சங்கமும், 8வது இடத்திலிருந்து 13 இடம் வரைக்கும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைச் சாதனையில் இடம் வகிப்பது கூட்டுறவில் தமிழ்நாடு மாபெரும் வெற்றி பெற்றிருப்பது அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதாகும்.



# தேசிய ஒருமைப்பாட்டு வார விழா

தேசிய ஒருமைப்பாட்டு வார விழா மற்றும் மரம் நடும் விழா, சென்னைக் கலைவாணர் அரங்கில் 23-11.84 அன்று சிறப்புற நடந்தது.

அன்று மாலை 4 மணியளவில் திரு டி.கே.எஸ். கலைவாணன் இசை நிகழ்ச்சி நடந்தது. 5 மணியளவில், ஆடம்ஸ் சாலை கூவம் நதிக்கரை ஓரங்களில் மரம் நடும் விழா நடந்தது. மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் மரம் நடும் பணியினைத் தொடங்கி வைத்தார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவமணிகள் மரங்களை நட்டார்கள்.

சிறப்புக் கூட்டம் கலைவாணர் அரங்கில் நடந்தது. முன்னதாக, மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் திறந்து வைத்தார்.

கண்காட்சி சிறப்பாக அமைந்திருந்தது. திருமதி இந்திரா காந்தி அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள், தமிழக வருகையின்போது அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், அவரது பொன்மொழிகள் எல்லாம் எல்லார் மனத்தையும் கவர்ந்தன.

மேடையில் பண்டித ஜவகர்லால் நேரு, திருமதி இந்திரா காந்தியின் திருவுருவப் படம் மலர் மாலைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்க, விழா தொடங்கியது.

. மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் அஞ்சல் தலை அடங்கிய தொகுப்பினை, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குத் தலைமை அஞ்சலக அலுவலர் திரு எம்.எஸ். ரங்கசாமி வழங்கினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசினார். அப்போது அவர்-

''நாட்டின் ஒற்றுமையை வலுவோடும் உறுதியோடும் காப்போம் என்று அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்திராவின் தியாகம் ஒற்றுமையை வளர்க்கட்டும்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் மற்றும் மாசு கட்டுப்பாட்டுத்





துறை அமைச்சர் திரு எஸ்.என். இராசேந்திரன் அவர்கள் தொடக்கவுரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்:

''சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மிகவும் விரும்பினார். கடுமையான சட்டத்தின் மூலம் இல்லாமல், மக்கள் விரும்பிச் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள முன்வர வேண்டும்."

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''திருமதி இந்திரா காந்தி அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்டேன். அவை எல்லாம் வெறும் படங்கள் அல்ல; பாடங்கள். அதைப் பார்த்தால் சரித்திரம் பேசுகிறது. தேசம் ஒரு முறை ஒன்றுபட்டுவிட்டது. இனி அதை உடைக்க ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.''

எஸ்.ஐ.இ.டி, கல்லூரி அறக்கட்டளை உறுப்பினர் திருமதி பதர் சையத் ஒருமைப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

தம்முடைய குழந்தைகளிடமும், நாட்டிடமும் அன்பு கொண்ட தம்பதிகள் குடும்ப நலத்திட்டத்தைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்

திருமதி இந்திராகாந்தி

டாக்டர் ரெக்ஸ் பேசுகையில், ஒருமைப்பாடு இன்னமும் உறுதிப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி பேசுகையில், "ஒருமைப்பாட்டை வளர்க்க, சிந்தனை ஒற்றுமையை நாம் வளர்க்க வேண்டும்"என்றார்.

காவல்துறை ஆணையர் திரு சு.ஸ்ரீபால், இ.கா.ப.,பேசுகையில், "தமிழ்க் காப்பியங்களைப் படித்தால், முதலில் வரும் சொல்லே 'உலகு' என்பதாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ்ப்புலவரின் வரி ஒருமைப்பாட்டை உணர்த்துகிறது" என்றார்.

தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநர், திருக்குறளார் திரு வீ. முனிசாமி பேசுகையில்,"ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும். அதுவே திருமதி இந்திரா காந்திக்கு நாம் செலுத்தும் காணிக்கையாகும்"என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழா நிறைவுப் பேருரை நிகழ்த்தும் போது, தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழியைப் படிக்க, நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்கள் அதனைத் திரும்பச் சொன்னார்கள்.

''நாட்டின் சுதந்தரத்தையும், ஒருமைப்பாட்டையும் காத்து வலுப்படுத்த முழு மனதுடன் ஈடுபாட்டுடன் பாடுபடுவேன். ஒருபோதும் வன்மையில் ஈடுபட மாட்டேன் — சமயம், மொழி, வட்டார அரசியல், பொருளாதாரக் குறைபாடுகளைப் பொறுத்த வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும் அமைதியான முறையில் சட்டநெறி சார்ந்த வழிகளில் தீர்வு காணப்பட வேண்டும்" என்று மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் உறுதிமொழி படித்தார்

மேலும், அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

''நாட்டின் சுதந்தரத்தையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க அனைவரும் ஒற்றுமை உணர்வுடன் பாடுபடவேண்டும்.

''மண்ணிலே நட்டு வளர்க்கப்பட வேண்டியது மரம். அதைப் போல மனத்திலே நட்டு வளர்க்கப்படவேண்டியதொன்று ஒற்றுமை! ஒருமைப்பாட்டு உணர்வு என்பது உள்ளத்தைப் பொறுத்தது. மதத்தில், சமயத்தில், வேறுபாடுகள் இருந்தாலும் நமக்கு வேண்டுவது 'உள்ள' ஒற்றுமைதான்.

"பல பூக்கள் கோக்கப்படுவதற்குத் தேவைப்படுவது ஒரே ஒரு நார்தான். இதேபோல இந்திய மக்களுக்கும் ஒருமைப்பாடு என்ற நூல் வேண்டும் அந்த நூல் அறுபடக் கூடாது."

விழா முடிவில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி நவின்றார். இறுதியில், செல்வி உமா [illegible] தண்டாயுதபாணியின் நாட்டிய நிகழ்ச்சி நடந்தது.

-பி.வி. கிரி






# மக்கள்



# இயக்கம்



கூட்டுறவு இயக்கம் பரவாத ஊர்கள் தமிழ்நாட்டில் இல்லை. நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்களிலெல்லாம் இதன் அடையாளங்களைக் காணலாம். அதேபோல இவ்வியக்கத்தின் பலன்களைப் பெறாதவர், மக்களின் எந்தப் பிரிவிலும் இல்லை. ஏதாவது ஒரு வகையில் கூட்டுறவுகளின் சேவையை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் பயிர்க்கடன் பெற்று வருகின்றனர். கூட்டுறவுப் பேரங்காடிகள் இல்லத்தரசிகளுக்குத் தரமான பொருட்களைத் தருகின்றன. ஊழியர் கூட்டுறவுச் சங்கங்கள், காய்கறிக் கூட்டுறவுச் சங்கங்கள், நகையீட்டுக்கடன், சிறு தொழில் கூட்டுறவுக் கடன் போன்றவற்றில் ஏதாவது ஒன்றின் மூலம் பயனடைந்து வருகிறார்கள். இதற்குக் காரணம் இது ஒரு மக்கள் இயக்கம் என்பதுதான். மக்களுக்காகத் தோன்றிய இயக்கம். இன்னும் குறிப்பாக ஏழை எளிய சாமானிய மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக உதித்த இயக்கம்.

உலக நாடுகளிலேயே இந்தியாவில் தான் இந்த இயக்கம் மிகப் பெருமளவில் வளர்ந்திருக்கிறது. 12 கோடி உறுப்பினர்கள் கொண்ட 3.5 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குப் பணியாற்றி வருகின்றன. விவசாயிகளின் கடன் சுமையைக் குறைப்பதற்காகத் தோன்றிய இவ்வியக்கம் இன்று பரவாத மனித முயற்சிகள் எதுவும் இல்லை. தமிழ்நாட்டில் இரண்டு அல்லது மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் என்ற அளவில் சுமார் 4700 கிராம விவசாய சேவைச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் வட்டி தள்ளுபடி செய்தது அல்லது திருப்பித் தந்தது என்ற வகையில் 42 கோடி ரூபாயும், சிறு விவசாயிகளிடம் நிலுவை நின்ற மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்ட அல்லது தவணை நீடித்து [illegible]ரப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்த வகையில் 57 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 99 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

நிலவள வங்கிக் கடன்தாரர்களின் கடன் சுமையைக் குறைக்கும் பொருட்டு, 1984 செப்டம்பர் திங்களில் அரசு, சில சலுகைகளை அறிவித்துள்ளது. அதன்படி 30.6.'84 அன்றுள்ள தவணை தவறிய தொகை முழுவதையும் 31.12.1984க்குள் திருப்பிச் செலுத்துபவர்கட்கு, [illegible] தவறிய தொ[illegible] [illegible]

சி. எம். ராஜன்
திட்ட இயக்குநர்
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை

தவிரவும், 1983 - 84ஆம் ஆண்டுகளில் தங்கள் கடன் நிலுவை தவணை தவறிய தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்தியவர்கட்கு அவ்வாண்டில் வசூலிக்கப்பட்ட தவணை தவறிய தொகை மீதான வட்டியும், அபராதவட்டியும் திருப்பிக் கொடுக்கப்படும். இச்சலுகையை உறுப்பினர்கள் முழுமையாகப் பெறவும், அதன் மூலம் கடன் வசூலை அதிகப்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகமெங்கும், கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் குடும்பச் செலவிற்காகக் கடன்களை வழங்கி வருகின்றன. இக்கடன்கள் சவரன் ஒன்றுக்கு 800 ரூபாய் வீதம் நபர் ஒருவருக்கு 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் 14 சதவீத வட்டியில் வழங்கப்படுகிறது. இவ்வகைக் கடன்கள் 1979-80ஆம் ஆண்டில் 1581 கூட்டுறவு அமைப்புகள் மூலம் 9.81 இலட்சம் பேர்களுக்கு 111.42 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன. இது படிப்படியாக அதிகரித்து 1983-84ஆம் ஆண்டில் 1806 கூட்டுறவு அமைப்புகள் மூலமாக 10.43 இலட்சம் பேர்களுக்கு இதுவரை இல்லாத வகையில் 193.74 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் இக்கடன்களை 180 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 30.9.'84 வரையில் 112.64 கோடி ரூபாய் அளவிற்கு இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுக் காலமாக நலிந்த பிரிவினருக்குச் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களை மேற்கொள்ள மிகக் குறைந்த வட்டிக்கு, ஆண்டொன்றுக்கு 4 சதவீத வட்டிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண வட்டிக்கும் இச்சலுகை வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குமானியமாக அரசு வழங்குகிறது. எல்லா வகையிலும் ஆண்டு வருவாய் கிராமப்பகுதிகளில் 2,500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3;000 ரூபாய்க்கும் மேற்படாமல் உள்ளவர்களுக்கு 7000 ரூபாய் வரையில் இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்கள் 1983-84ல் வழங்கப்பட்ட 1.20 கோடி ரூபாயையும் சேர்த்து, இதுவரையில் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 30.9.'84 வரையில் இவ்வகைக் கடன்கள் 38.89 இலட்சம் ரூபாய் அளவில் வழங்கப்பட்டுள்ளது.



**முதலமைச்சரின் இலவச சத்துணவுத் திட்ட மையத்திற்காகக் கூட்டுறவு காய்கறி பயிரிடுவோர் சங்கத்திலிருந்து கிடைத்த காய்கறிகள், மைய அலுவலரிடம் வழங்கப்படுகின்றன.**

தமிழகத்தில் நகர அளவில் 133 கூட்டுறவு நகர வங்கிகள் நகர்ப்புற மக்களுக்கும் புறநகர் மக்களுக்கும் வங்கி வசதிகளை அளிப்பதோடு குறுகிய காலக்கடன்களையும் மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. இவ்வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் 1979-80ஆம் ஆண்டில் 88 கோடி ரூபாயிலிருந்து 1983-84ஆம் ஆண்டில் சுமார் 150 கோடி ரூபாய்க்குப் பெருகியிருக்கிறது. இவ்வங்கிகள் குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் ஏற்று நடத்த ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 2½கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கியிருக்கிறது. இவ்வங்கிகள் சுமார் 140 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகைகளைத் திரட்டியுள்ளன.

மத்திய,மாநில அரசுகள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள், ஆலைத்தொழிலாளர்கள் போன்றோருக்கான பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 185 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கி வருகின்றன. அன்றியும், அவர்களிடமிருந்து மாதாமாதம் சேமிப்புத் தொகைகளைத் திரட்டி வருவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இவற்றில் சேமிப்பாக சுமார் 98கோடி ரூபாய் சேர்ந்திருப்பதைப் பார்த்தால் சம்பளம் அல்லது கூலி பெறும் பிரிவினரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதில் இவை ஆற்றியுள்ள பணி எத்துணை பெரியதாகும் என்பது புலனாகும்.

படித்து வேலையில்லாத இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில்செய்வதற்கான நிதிஉதவி அளிக்கும்பொருட்டு, கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் சென்னை கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும்சேலம் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகைச் சங்கங்கள் தென்ஆர்க்காடு, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் அமைக்கப்படும். இச்சங்கங்கள் நபர் ஜாமீன் பேரிலும், கடன்களைக் கொண்டு வாங்கும் இடம் பெயராச் சொத்துக்களின் இணைப்பிணையத்தின் பேரிலும் கடன்களை வழங்குகிறது. இது போன்ற சங்கங்களை இதர மாவட்டங்களிலும் அமைப்பதற்கான வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன.

காய்கறி பயிரிடுவோருக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யவும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் காய்கறிகள் கிடைக்கவும், முதலமைச்சரின் சத்துணவு மையங்களுக்குப் பசுமையான காய்கறிகளை வழங்குவதை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாட்டில், சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் வட்டாரம் ஒன்றிற்கு ஒன்று வீதம் வாய்ப்புள்ள சில வட்டாரங்களில் இரண்டு அல்லது மூன்று வீதமும் காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 505 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 412 சங்கங்கள் விற்பனை தொடங்கியுள்ளன. இவை 1983-84ல் 38 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளையும், நடப்பு ஆண்டில் 30.9.84 வரையில் 110.30 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளையும் விற்பனை செய்துள்ளன. மாநில அளவிலான காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை இணையம் ஒன்றை அமைக்கத் தேவையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன**



மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் கூட்டுறவுப் பேரங்காடியில் ஜனதா ரகங்களைப் பார்வையிடுகிறார்.

தமிழகக் கிராமங்களில் இன்றியமையாப் பொருட்களைத் தாராளமாகவும், நியாய விலையிலும் கிடைக்கச் செய்ய. ஒவ்வொரு வருவாய்க்கிராமத்திலும் ஒரு கடை என்ற அடிப்படையில் தமிழகம் முழுவதும் கிராமங்களில் 13727 கூட்டுறவுக் கடைகளை நடத்தி, கிராம மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் விநியோகம் செய்கின்றன. கிராமக் கடைத்திட்டத்தின் கீழ் கிராமங்களில் செய்யப்பட்ட விற்பனை மதிப்பு 1978-79ஆம் ஆண்டில் 18 கோடி ரூபாயிலிருந்து, 1983-84ஆம் ஆண்டில் 120 கோடி ரூபாய் அளவிற்குப் பல மடங்கு அதிகரித்ததிலிருந்து, இந்தத் துறையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றியுள்ள அரும்பணி தெளிவாகும். இந்தப் பணியை ஆராய்ந்த புதுடில்லியிலுள்ள சமூக வளர்ச்சிக் கழகம் இத்துறையில் மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக விளங்குவதாகத் தமிழகத்தைப் பாராட்டி உள்ளது. நடப்பு ஆண்டிலும் கிராமக் கடைகளின் மூலம் 30.9.'84 வரையில் 29.25 கோடி ரூபாய் அளவிற்கு, விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி 15.8.'84 அன்று 1000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக்கடை செயல்படும் என அறிவித்தார்கள். இதன்படி கூட்டுறவுச் சங்கங்கள் 1000 குடும்ப அட்டைகளுக்கு மேலாக உள்ள நியாய விலைக் கடைகளைப் பிரித்து, 2425 புதிய நியாய விலைக் கடைகளைத் திறந்துள்ளன.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்க முடியாத பகுதிகளில் வாழும் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்கெனவே திருச்சியில் சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடி நடமாடும் கடையை நடத்தி வருகிறது. மேலும் மூன்று நடமாடும் கடைகள், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் நடப்பு ஆண்டில் தொடங்கப்பட உள்ளன.

பொதுப்பணித்துறையில் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் கூடிய வரையில், தனியார் ஒப்பந்த முறையைத் தவிர்த்து வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும், டிப்ளமோதாரர்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 1981ல் சென்னையில் அமைக்கப்பட்ட நவீன பொறியியல் பட்டதாரிகள் கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் 20.22 இலட்சம் ரூபாய் மதிப்பீடு உள்ள 40 ஒப்பந்தப் பணிகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுவதற்காகத் தனது உறுப்பினர்களுக்குக் கொடுத்துள்ளது. இதுபோன்ற மற்றுமொரு சங்கத்தை மதுரையில் வேலையில்லாத டிப்ளமோதாரர்களுக்காக அமைப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

மாநிலத்தில் 13 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 38,867 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் தமது விவகார எல்லைகளில் உள்ள எல்லாப் பழங்குடியினர் குடும்பங்களையும் உறுப்பினர்களாக்கியுள்ளன. பழங்குடியினர் நலிந்தபொருளாதாரநிலையைக் கருத்திற்கொண்டு, அரசு இப்பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடர்ந்து தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது.

மக்கள் இயக்கமாகிய கூட்டுறவு இயக்கம், ஏழை, தொழிலாளி, பாட்டாளிகளுக்காகப் பாடுபட்டு வருவது பெருமளவில் பாராட்டப்பட்டு வருவது பெருமைக்குரியதாகும்.

# நற்பணிக்குக் கிடைத்த பரிசு



இவ்வோராண்டும் செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் சமயத்தில், தமிழக அரசின் சார்பில் 'நல்லாசிரியர் விருது' வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றது. அவ்வர்று 1983-84ஆம் ஆண்டுக்கான நல்லாசிரியர் விருது தமிழகத்தில் உள்ள பல பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் சிலரைப் பேட்டி கண்டோம்:

**புலவர் ப. கி. பொன்னுசாமி**

சென்னை, புரசைவாக்கத்திலுள்ள மாநகராட்சி மகளிர் மேனிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றி வருபவர் புலவர் ப. கி. பொன்னுசாமி, இவர் தமிழாசிரியர் பணியை 1955ல் கர்நாடக மாநிலத்தின் தங்கவயலில் தொடங்கினார். பின்னர் ஆந்திரப் பிரதேசத்தின் பாகாலாவில் பணியாற்றினார். 1957ஆம் ஆண்டுமுதல், சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றி வருகிறார்.

மாணவ மாணவிகளுக்குக் கல்வி கற்பிப்பதுடன் ஒழுக்கத்தையும் கற்பித்து வருகின்றார். சமுதாயத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற வாழ்க்கைக் கல்வியையும் ஊட்டி வருகின்றார்.

மாணவர்களிடையே எழுத்தாற்றலையும், நாவன்மையையும் வளர்த்து வருவதுடன், தமிழ்ப் பற்றையும், தேசிய உணர்வையும் ஊட்டி வருகின்றார் இவர்.

மாநகராட்சி மன்றத் தமிழாசிரியர் கழகம், மாநகரத் தமிழாசிரியர் கழகம், தமிழகத் தமிழாசிரியர் கழகம், சென்னை மாணவர் மன்றம் ஆகிய அமைப்புகளில் முக்கியபொறுப்புகளை ஏற்றுத் தொண்டு செய்து வருகிறார் இவர்.



எல். வெங்கட்ராமன்

கடந்த 31 ஆண்டுகளாகப் புதுக்கோட்டை நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றிய திரு எல். வெங்கட்ராமன், தற்போது காந்தி நகர் நகராட்சிப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

காந்தியடிகளின் தீண்டாமை ஒழிப்பு, மதிய உணவுத் திட்டம், சிறு சேமிப்பு ஆகியவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவசமாகப் பலகை, பாடப் புத்தகங்கள் வழங்கவும் இவர் ஏற்பாடு செய்துள்ளார்.



கே. வி. காமாட்சி

சென்னை தியாகராய நகர், ஆர். கே. எம். சாரதா வித்யாலயா பெண்கள் மேனிலைப் பள்ளித் தலைமையாசிரியையாகப் பணிபுரிபவர் திருமதி கே. வி. காமாட்சி.

இப்பள்ளியில்பட்டதாரி ஆசிரியராகப் பணியில் சேர்ந்த இவர், உதவித் தலைமையாசிரியையாக உயர்ந்து, 1978ஆம் ஆண்டிலிருந்து தலைமையாசிரியையாகப் பணிபுரிந்து வருகிறார். பலர் பாராட்டும்படியான பணிகளைச் செய்திருக்கிறார்.

1979ஆம் ஆண்டு, இப்பள்ளியில் மேனிலைக் கல்வியை அறிமுகப்படுத்தியது. நாட்டு நலப் பணித் திட்டத்தைக் கொண்டு வந்தது, 1983-84ல் பள்ளி மாணவர்க்குரிய சேர்ந்திசைப் போட்டியில் இப்பள்ளி மாணவியர் அகில இந்திய அளவில் முதலாவதாக வந்து ஆகாசவாணி விருதைப் பெற்றது போன்ற பல பணிகளில் இப்பள்ளிக்குச் சிறப்பிடம் தேடித்தந்தவர்.

# உற்பத்தியைப் பெருக்க உதவிய வங்கிக் கடன்




இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசிக்கு அருகில் உள்ளது எ. துலுக்கப்பட்டி என்ற கிராமம். ஆதிதிராவிட மக்கள் வாழும் 200 வீடுகளைக் கொண்ட அழகிய சிற்றூர். வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட இப்பகுதி மக்கள், அண்மைக் காலத்தில் தேசிய உடமையாக்கப்பட்ட வங்கிகளின் கடன் உதவியால் நல்ல பயன்களைப் பெற்று வருகிறார்கள். காலத்தே உதவி பெற்று உற்பத்தியைப் பெருக்குகின்றனர்.

இவர்களது கழனிகளைக் கண்டு சுற்றி வருகையில் மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு எதிர் வரும் திரு. சி. பாலையா என்ற விவசாயியைச் சந்திக்கிறோம். 3 ஏக்கர் புன்செய் நிலத்திற்குச் சொந்தக்காரரான இவர், கடந்த பல ஆண்டுகளாக இரண்டு ஏக்கருக்கு மேல் பயிர் செய்ய இயலாது இருந்தாராம். கிணறும், பம்புசெட்டும் இருந்தும் வெளி வரும் தண்ணீரை முழுமையாகப் பாய்ச்ச முடியாமல் இரண்டு போகப் பயிர்களையே பயிர் செய்து வந்தாராம். ஒருநாள் சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்ற போதுதான் 'தீவிர விவசாயப் பெருக்கத் திட்டத்தை'ப் பற்றித் தெரிய வந்ததாகக் கூறினார். சிமிண்டு பைப்புகள் பதித்து, தண்ணீரை வயலுக்கு கொண்டு செல்வதன் மூலம் சிறப்பாகப் பயிர் செய்ய முடியும் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டாராம். இதற்காகும் செலவைப் பற்றிய ஐயத்தைத் தெரிவித்த போதுதான் தீவிர விவசாயப்

**தொகுப்பு :**

**டி. பி. எஸ். சுந்தரநாதன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்**

பெருக்குத் திட்டத்தின் மூலம் அரசு மான்யத்தோடு வங்கிக் கடன் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்தியன் ஓவர்சிஸ் வங்கியின் சிவகாசிக் கிளையின் மூலம் ரூ.5,000 ம் இவருக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசு மானியம் ரூ.2,500 ஆகும். ஏழு தவணைகளில் ஆறு மாதத்திற்கு ஒரு




முறை திருப்பிச் செலுத்த வேண்டும். இந்தக்கடன் உதவியைக் கொண்டு 640 அடி நீளத்திற்கு 3 அடி அகலமுள்ள சிமெண்ட் பைப் போட்டுள்ளார்.

இதுவரை இரண்டு ஏக்கரில் தான் பயிர் செய்ய முடிந்ததென்றும் கோடைக்காலத்தில் வெள்ளாமை செய்ய முடியாதென்றும் கூறினார். தற்போது சிமெண்ட் பைப்புகள் பதித்த பிறகு கூடுதலாக 1.5 ஏக்கருக்கும் சேர்த்து 3.5 ஏக்கரில் தண்ணீர் பாய்ச்ச முடிவதாகவும், 5 மணி நேரத்தில் நீர் இப்போது 2 மணி நேரத்தில் அனைத்துப் பரப்பிற்கும் நீர் பாய்கிறதென்றும் கூறினார். சிமெண்ட் பைப் மூலம் நீர் பாய்வதால், தண்ணீர் வீணாவதில்லையாம். நேரம் மிச்சமாகிறது. கரண்ட் செலவு மிச்சம். தண்ணீரும் மீதமாகிறது. தற்போது மூன்று போகமும் பயிரிட முடியும் என்று கூறுகிறார். இதுவரை மிளகாய், கடலை, பருத்தி, வெங்காயம் போன்ற பயிர்களைப் பயிரிட்டு வந்ததாகவும் இப்போது நெல், கடலை, மிளகாய் போன்ற பயிர்களை விளைவிக்கப் போவதாகவும் தன்னம்பிக்கையுடன் தெரிவிக்கிறார்.

காலத்தில் கிடைத்த இந்தக் கடனுதவி தனக்கு நம்பிக்கையைத் தந்துள்ளதாகவும், உற்பத்தியைப் பெருக்கி அதிக லாபம் ஈட்டவும் வழி வகுத்துள்ளதென்றும் கூறி நிம்மதி கொண்டுள்ளார். அரசின் கடன் உதவித்திட்டங்கள் இப்பகுதி ஆதிதிராவிட மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்துள்ளன!






## புதுக்கோட்டை மாவட்டத்தில்

புதுக்கோட்டை மாவட்டத்தில் வயதுவந்தோர் கல்வித் திட்டம் 1979ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. வயதுவந்தோர் கல்வி மையம் ஒன்றிற்கு 15வயது முதல் 35 வயதிற்குட்பட்ட கற்போர்கள் 30 பேர் விதம் இதுகாறும் செயல்பட்ட 3000 மையங்களின் மூலம் 10,000 பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். இவர்களில் 66,000 பேர்கள் பெண்களாவர். கல்வியறிவு பெற்ற இப்பெண்களில் 37,000 பேர் ஆதி திராவிடப் பெண்களாவர். இன்னும் 3,04,000 பெண்கள் எழுத்தறிவு இன்றி உள்ளனர். இவர்களில் ஒரு லட்சத்து 53 ஆயிரம் பேர் ஆதிதிராவிட மக்களாவர்.

தற்போது இம் மாவட்டத்தில் கறம்பக்குடி, மணமேல்குடி, ஆவுடையார்கோயில் ஒன்றியங்களில் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் கிராமியச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 300 கல்வி மையங்கள் நடைபெறுகின்றன. அரிமளம், அறந்தாங்கி மற்றும் திருமயம் ஒன்றியங்களில் மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் 100 மையங்கள் விதம் 300 கல்வி மையங்கள் நடைபெறுகின்றன. வயது வந்தோர் கல்வி மையங்கள் 600-ல் 473 மையங்கள் பெண்களுக்கான கல்வி மையங்களாகும்.

பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 6 வயது முதல் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கவென இம்மாவட்டத்தில் பள்ளி சாரா கல்வி மையங்கள் 47 நடத்தப்படுகின்றன.

வயதுவந்தோர் கல்வித் திட்டம் ஆயிரமாயிரம் ஏழை, எளிய மக்களுக்கு எழுத்தறிவு, எண்ணறிவு கற்பித்து வருவதுடன் நூற்றுக்கணக்கான ஊக்குநர்கள் என்ற தன்னலமற்ற சமுதாயத் தொண்டர்களையும் உருவாக்கி வருகிறது. நல் ஆசானாக, தொண்டனாக, நண்பனாகப் பணியாற்றும் இவர்கள் மதம், சாதி, இன வேறுபாடுகளற்ற ஒரு இந்திய சமுதாயத்தை உருவாக்கி வருகிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் கிழக்கு எல்லை வங்கக் கடற்கரையில் மீனவர்களுக்கென கல்வி மையங்கள் தொடங்கப் பெற்றுள்ளன. மீனவர்களின் மேம்பாட்டிற்கு என இப்பகுதி 10 கிராமங்களில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

சேவை நோக்க வயதுவந்தோர் கல்வி மையம் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களால் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப அவர்கள் தலைமையில் 22.3.84 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

கடந்த 14.10.84 அன்று புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி அரங்கில் சேவை நோக்க 125வது மையத்தினை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் துவக்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒரு வரலாற்றைப் படைத்து வருகிறது என்றால் அது மிகையாகாது!.

**கோ. தி. மோகன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)**
**புதுக்கோட்டை மாவட்டம்.**

## விண்வெளியில் இந்தியருக்கு வாய்ப்பு

இந்திய விஞ்ஞானி ஒருவர் 1986-ஆம் ஆண்டு அமெரிக்க விண் ஓடத்தில் விண்வெளி சென்று வருவார்.

இந்தியாவின் இரண்டாவது விண்வெளி வீரர் என்ற பெருமையைப் பெறும் இவரை இந்திய விண்ணாய்வு நிறுவனம் தேர்வு செய்யும். இந்திய மற்றும் அமெரிக்க விண்ணாய்வு அமைப்புகள் திட்டமிடும் விண்வெளிச் சோதனைகளில் இவர் பங்கு கொள்வார். இந்தப் பயணத்தில் இன்ஸாட் 1-சி என்ற தகவல் கோள் விண்ணில் ஏவப்படும்.

இந்தக் கூட்டு முனைவு இருநாடுகளிடையே நெடுங்காலமாக இருந்துவரும் உறவையும் அமைதிப் பணிகளுக்கான விண்வெளிச் சோதனைகளையும் வலுப்படுத்தும் என்று இந்திய விண்ணாய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தகவல்கோள் வழி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான இந்திய அமெரிக்க விண்ணியல் கூட்டுறவு 1975ல் தொடங்கியது. தற்பொழுது இந்தியாவில் தொலைக்காட்சி, தொலைத் தகவல், வானொலி, வானிலை ஆகிய துறைகளில் உடனுக்குடன் தகவல்களைத் திரட்டவும் பரப்பவும் பெரிதும் பயன்பட்டு வரும் இன்ஸாட் 1 பி-ஐப் போல, இன்ஸாட் 1சி-யும் சிறப்பாகப் பணியாற்ற வல்லது.

## நகை சிந்தும் நகைப் பெட்டிகள்

ஆபரணங்களைப் பாதுகாப்பாக வைக்க நகைப்பெட்டியைத் தயாரித்து அளிப்போரில் திரு குப்புசாமியும் ஒருவர்; இரும்புத் தகடு, ரெக்சின், வெல்வட் போன்ற 14 பொருட்களைக் கொண்டு இந்த நகைப்பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. தயாரிப்புச் செலவு அதிகரித்ததை அடுத்து, இந்தக் குடிசைத் தொழில் நசிந்து போகத்துவங்கியது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் காஞ்சிபுரம் கிளையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் உதவிக்கு வந்தன. 5,000 ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. இந்தஉதவிகளைக் கொண்டு போதிய அளவு கச்சாப் பொருட்களை மொத்தமாக வாங்கி வைத்துக் கொள்ள திரு குப்புசாமி போன்றவர்களால் முடிகின்றது. அதிகரித்து வரும் நகைப்பெட்டித் தேவையினையும் சமாளிக்க முடிகின்றது.

பிளாஸ்டிக் மோல்டிங் பிரிவு ஒன்றைத் தொடங்கவும், ஸ்கிரீன்-பிரிண்டிங் பணியைத் தொடங்கவும் திரு குப்புசாமி திட்டமிட்டுள்ளார். தற்போது இவரது மாத வருவாய் 750 ரூபாயாகஉயர்ந்துள்ளது.

## மலேரியாவை ஒழித்திட...!

மிகவும் கொடுமையான நோய்களில் மலேரியாவும் ஒன்று. இதை ஒழித்துக்கட்டி விடுவதற்கான தடுப்புமருந்தைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

உலக மக்களில் பாதிப்பேர் மலேரியா தாக்கும் இடங்களில் வசிக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இருபது கோடி மக்கள் இந்த நோயினால் தாக்கப்படுகிறார்கள்.

இந்தியாவிலும் மலேரியாவின் தாக்குதல் கடுமையாகவே இருந்து வருகிறது. 1982-ல் மட்டும் இருபது லட்சம் மக்களை இந்த நோய் கொன்றிருக்கிறது. ஆயிரம் பேரில் இருவர் இந்த நோயினால் இறக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்தும் ஆய்வில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒத்துழைத்து வருகின்றன.

## நடைபாதைவாசிகள் நிமிர்ந்து நடைபோட!



பட்டு, பருத்தி கைத்தறிச் சேலைகளுக்குப் பெயர் பெற்றது காஞ்சிபுரம்,.

மகிழ்ச்சியும், பகட்டும், நிரம்பிய இங்கு, சோகம், நிரம்பிய நடைபாதைவாசிகளும் உள்ளனர் மூங்கிலைக் கொண்டு கூடைகள், துடைப்பங்கள் செய்யும் சிறு சிறு ஆண்-பெண் குழுவினர்தாம் இவர்கள்.

வயிற்றை நிரப்புவதற்காக, நாடோடி போல் ஊர் ஊராய் அலைந்து வந்த இந்த ஆதிதிராவிடர் குடும்பத்தவருக்கு இங்குள்ள பாரத ஸ்டேட் வங்கிக் கிளை உதவ முன் வந்தது.

மூங்கில்களை வாங்கப் போதிய தொகையினை இக்குடும்பத்தினர் வங்கியிடமிருந்து கடனாகப் பெற்றனர். முதியவரிலிருந்து, சிறு குழந்தைவரை கடுமையாக உழைத்ததன் பயனாக தெருவோரங்கள் இன்று மூங்கில் பொருட்களை விற்கும் நடைபாதைக் கடைகளாக மாறியுள்ளன.

இத்தொழில் மூலம் ஒவ்வொரு குடும்பமும் தற்போது நாள்தோறும் 25 ரூபாய் ஈட்ட முடிகின்றது. வங்கி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் ஆகியவற்றின் உதவியுடன் மூங்கில் பொருட்கள் கடையொன்றினைத் தொடங்கவும் இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.



# நல்வாழ்வு தரும் சுய வேலை வாய்ப்புகள்

**தில்லை கோவிந்தன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ஈரோடு.**

வேலையில்லையே என்ற ஏக்கத்தில் வாடித் தவித்த பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பெண்கள் அரசின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தால் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

பெரியார் மாவட்டத்தில் 2,000 நபர்களுக்கு உதவி புரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆர்வமுள்ள 15,950 நபர்கள் விண்ணப்பம் செய்திருந்ததில் சுமார் 8,000 நபர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தவர். அவர்களில் 2,572 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு ரூ. 3,80,59,000 கடன் தொகை வ்ழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 30-9-'84 முடிய 1487 நபர்களுக்கு ரூ. 2,25,87,000 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

கடன் பெற்று சுய தொழில் செய்து வருமானம் தேடுகின்ற சிலரை ஈரோட்டில் பேட்டி கண்டபொழுது...

**திரு பி. சந்திரன்**

பெரியார் மாவட்டம்,ஈரோடு நகரில் வசித்து வரும் திரு பி. சந்திரன் (வயது 27) அரசு தொழில் பயிற்சிப் பள்ளியில் டர்னர் பயிற்சி பெற்று மூன்று வருடமாக வேலை கிடைக்காமல் இருந்துள்ளார்.

சுயமாகத் தொழில் செய்து முன்னேறலாம் என்ற முடிவுக்கு வந்து மாவட்டத் தொழில் மையத்தை அணுகி, பொது மேலாளரைக் கேட்டபொழுது தான் இந்தியப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் பற்றிய விவரங்களும் ... ழிமக

அரசின் தொழில் துறையின் மூல மாக இத்திட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய் யப்படுவதும் தெரிய வந்தது.

"உங்கள் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதா? கடன் வழங்கப்பட்டதா?"


"ஒரு மாதத்தில் என் விண்ணப் பம் பரிசீலனை செய்து நேர் முகத் தேர்வு செய்யப்பட்டு ஜனவரி மாதம் ஈரோடு கனரா வங்கி மூலம் லேத் பட்டறை துவக்க ரூ. 23,000 வழங்கப் பட்டது. நான் உடனடியாக ஒரு மாதத்தில் தொழில் துவங்க தள வாடச் சாமான்கள் மிஷின் ஆகிய வற்றை வாங்கி, தொழில் தொடங்கியுள்ளேன். இப்பொழுது எனது தினசரி வருமானம் ரூ. 30 முதல் ரூ. 40 வரை கிடைக்கின் றது. இதில் நான் ஒருவருக்கு வேலையும் கொடுக்கின்றேன். அவருக்கு மாதச் சம்பளம் ரூ. 300 தருகின்றேன்" என்று பெரு மிதத்துடன் கூறிவிட்டு "நானே வேலையில்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தேன். இத் திட்டத்தால் நானும் வருமானம் பெற்று மற்றொருவருக்குவேலை வாய்ப்பு அளிக்கும் அளவிற்கு வந்துள்ளேன்" என்று இந்தத் திட்டத்தைப் பாராட்டினார்.




### திரு மோகன்ராஜ்

பெரியார் மாவட்டம் நாரா யணவலசைச்சேர்ந்த திருமோகன் ராஜ் தனது 18 வயது முதல் ஈரோடு நகரில் உள்ள ஓர் சோப்பு தயாரிக்கும் கம்பெனியில் மாதம் ரூ. 250 ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்தி வந்துள்ளார். வேலை நிரந்தரமாகக் கிடைப்ப தில்லை. அவ்வப்பொழுது கஷ்டப் பட்டு வாழ்ந்து வந்துள்ளார். சுய வேலவாய்ப்புத் திட்டத் தைப் பற்றிப் பத்திரிகையில் படித்து மாவட்டத் தொழில் மையத்தை அணுகியுள்ளார். அவர்கள் இவருக்கு உதவ முன் வந்து வங்கிக்குப் பரிந்துரை செய் துள்ளனர்.

பேங்க் ஆப் இந்தியா வங்கி யினர் இவருக்குத் தொழில் தொடங்க ரூ. 14,000 கடன் வழங்கியுள்ளனர். இந்தப் பணத் தைக் கொண்டு சோப்பு தயா ரிக்கத் தொடங்கியுள்ளார். தற் சமயம் மாதம் ரூ. 12 ஆயிரம் வரை விற்பனையாகின்றது. இதில் மாதம் எப்படியும் எனக்கு ரூ. 1,000 வருமானம் கிடைக்கின்றது. எனக்கு உதவி செய்ய என்னு டைய தாய் மற்றும் மனைவி, சகோதரிகள் உள்ளனர். வீட்டு வேலை நேரம் போக மீதம் உள்ள நேரங்களில் என் தொழிலுக்கு உதவி புரிவதன் மூலம் எனக்கு மாதம் ரூ. 1,000 கிடைக்கின் றது. நிம்மதியுடன் வாழ்கின் றோம் என்று கூறுகின்றார் திரு. மோகன்ராஜ்.





### திருமதி லீலாவதி

பெரியார் மாவட்டம், ஈரோடு, வீரப்பன் சத்திரத்தில் வசிக்கும் திருமதி லீலாவதி (வயது 25) சிலோனிலிருந்து தமிழகம் வந்து 10 வருடம் ஆகின்றது. இங்கு இவரது கணவர் கடைகளுக்குச் சென்று வேலை பார்த்து வரு கின்றார். மாதம் ரூ. 150 வரு மானம். குடும்பம் நடத்த வழியில் லாமல் தவித்த இவர், அருகில் உள்ளவர்களின் அறிவுரைப்படி மாவட்டத் தொழில் மையத்தை அணுகி சுய வேலைவாய்ப்புத் திட் டத்தின் மூலம் கடன் கேட்டு விண்ணப்பித்தார். இவர் எஸ். எஸ். எல். சி. வரை படித்தவர். இவரது விண்ணப்பத்தைப் பரி சீலனைசெய்து கனரா வங்கிக்குக் கடன் வழங்கச்சிபாரிசு செய்த னர். கனரா வங்கியினர் இவ ருக்கு ரூ. 25,000 கடன் வழங்கி னர்.

இப்பணத்தைக் கொண்டு கோன் ரீவைண்டிங் தொழில் துவங்கினார். ஈரோட்டிலுள்ள சைசிங் மில் மற்றும் பவர்லூம் மில்களில் உள்ள குறை, கோன் களை விலைக்குப் பெற்று வந்து பிரித்துப் புதிதாக நூலைச் சுற்றி புதிய கோன்கள் தயார் செய்து விற்று வருகின்றார்.



ஈரோட்டில் கோன் விற் பனைக்கு நல்ல மார்க்கெட் உள்ளது என்கின்றார். இரண்டு பெண்களை வேலைக்கு வைத்துக் கொண்டுள்ளேன். அவர்களுக்குத் தினசரி ஒருவருக்கு ரூ. 5 விதம் கூலி தருகின்றேன். கூலி போக எனக்குத் தினம் ரூ. 30 மீதப்படு கின்றது. மாதம் ரூ. 900 கிடைக் கின்றது. கட்டட வாடகை ரூ. 150 போக ரூ. 750 கிடைக்கின் றது. இதில் வாங்கிய வங்கிக் கடனுக்கு, மாதம் ரூ. 200 கட்டி னது போக ரூ. 550 மீதப்படு கின்றது. இப்பொழுது நிம்மதி யாக வாழுகின்றேன் என்று கூறு கிறார் திருமதி லீலாவதி.






### திரு பி. கிருஷ்ணமூர்த்தி

ஈரோடு நகரில் வசிக்கும் திரு. பி. கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ்சி. வரை படித்து 4 வருடமாக வேலை இல்லாமல் ஆட்டோ ஓட்டப் பயிற்சி பெற்று கடந்த ஒரு வருடமாக வாடகை ஆட்டோ ஓட்டி வயிற்றைக் கழுவி வந்துள் ளார். இத்திட்டம் அறிவிக்கப் பட்டத்தைப் பத்திரிகையில் படித்தவுடன் மாவட்டத் தொழில் மையத்தை அணுகி விண்ணப்பித் துள்ளார். இவருக்கு உடனடி யாக உதவி புரிய இவரது விண் ணப்பத்தைப் பரிசீலனை செய்து ஈரோடு பஞ்சாப் நேஷனல் பேங் கிற்குப் பரிந்துரை செய்துள்ள னர். வங்கியினர் இவருக்குக் கடந்த மார்ச் மாதம் ரூ. 25,000 கடன் வழங்கியுள்ளனர். இதனைப் பெற்ற திரு கிருஷ்ணமூர்த்தி ஓர் ஆட்டோவைச் சொந்தமாக விலைக்கு வாங்கி அவரே ஓட்டி தினசரி ரூ. 35 முதல் ரூ. 40 வரை வருமானம் பெற்று வரு கின்றார். வாடகைக்கு ஆட்டோ எடுத்து ஓட்டி வரும் பொழுது தினசரி ரூ. 15 வரு மானம் பெற்று வந்தார். இப் பொழுது அதிகமாக ரூ. 25 கிடைக்கின்றது. நிம்மதியாக வாழுகின்றேன்" என்று கூறுகின் றார் கிருஷ்ணமூர்த்தி.

பெரியார் மாவட்டம், நாரா யணவலசு கிராமத்தைச் சேர்ந்த திரு. சேகர் எஸ். எஸ். எல். சி. வரை படித்து விட்டு வேலையில் லாமல் இருந்துள்ளார்.

சுய வேலைவாய்ப்புத் திட் டத்தைப் பற்றி அறிந்தவுடன் சம்பந்தப்பட்ட துறை அலுவ லரை அணுகி விண்ணப்பித்து பேங்க் ஆப் இந்தியா மூலம் ரூ. 12,500 கடன் பெற்று மாவு மில் ஒன்று அமைத்துள்ளார். இதன் மூலம் இவருக்குத் தினசரி ரூ.20 வருமானம் கிடைக்கின்றது. இவ் வருமானத்தைக் கொண்டு என் தாய் தந்தையைக் காப்பாற்ற எனக்கு வழி கிடைத்துள்ளது. "எந்த வேலையும் கிடைக்காமல் தவித்த எனக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டம், வாழ வழி வகுத்து கொடுத்துள்ளது" என்று பெருமையுடன் கூறினார்.





# பொய் சொல்லக் கூடாது பாப்பா

அவன் சிறுவன்; இளம் கன்று; பயமறியாதவன். மானெனத் துள்ளி வீட்டை வலம் வந்தவன். தந்தை வீட்டில் இல்லை என்பதை உணர்ந்தான். வக்கீல் அப்பா ஆபீஸ் அறை வந்தான் பார்ப்போமே என்று நினைத்துக் கொண்டு மெதுவாக உள்ளே நுழைந்தான். அறைக்குள் இருந்த கண்ணாடி பீரோக்களில் இருந்த கனமான புத்தகங்கள் அவனைக் கவரவில்லை. மேசை மீது இருந்த இரண்டு பேனாக்கள் மட்டும் அவனை ஈர்த்தன.

'இரண்டுமா அப்பாவிற்கு? எனக்கும் ஒன்று இருந்தால் என்ன?' என்று மனம் நினைக்க, கரம் அவைகளில் ஒன்றை எடுத்துச்

தந்தை வந்தார்; தம் அறைக்குச் சென்றார். மேசை மேலிருந்த பேனாவைக் காண வில்லை. வீடு முழுவதும் தேடியும் கிடைக்க வில்லை; மிக்க சினம் கொண்டார்.

சிறுவன் அந்தப் பக்கம் ஓடி வந்தான்; அவனை நிறுத்தி தந்தை அதட்டிக் கேட்டார்; ''மேசை மீதிருந்த பேனாவை எடுத்தாயா?'' ''இல்லையே''! தந்தையின் கோபம் அவனைப் பொய் சொல்ல வைத்தது. ஒரு வேளை அன்புடன் கேட்டிருந்தால் உண்மையைச் சொல்லியிருப்பானோ என்னவோ!

பொய் என்றும் நிலைப்பதில்லை. பேனாவை எடுத்து மறைத்து வைத்ததைத் தந்தை அறிந்தார். கோபம் குமுறிக் கொந்தளிக்கச் சிறுவனை நன்கு புடைத்துவிட்டார்.

சிறுவன் அழுதுகொண்டே அம்மாவிடம் ஓடினான். மகனின் உடலெல்லாம் சிவந்து வீங்கியிருப்பதைக் கண்ட அன்னைக்கு மனம் பதைத்தது. கண்கள் நீர் சொரிய, ''பொய் சொல்லலாமா? பொய் சொன்னதால்தானே அப்பா அடித்தார்?'' என்று சொல்லிக் கொண்டே வீங்கியிருந்த இடங்களில் எல்லாம் மருந்து தடவினார். சிறுவன் எண்ணிக்கொண்டான்: ''பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னதற்குக் கிடைத்த தண்டனை நியாயமே!''

''இன்று எனக்கு என்ன ஏற்பட்டுவிட்டது? நம் அருமை மைந்தனிடம் இப்படி நடந்து கொள்ள எப்படித் துணிந்தேன்?'' என்று எண்ணி எண்ணித் தனிமையில் தந்தையார் வருந்தியதைச் சிறுவன் அறிய நியாயமில்லை.

'பொய் சொல்லக்கூடாது; அதற்குத் தண்டனை நியாயமே' என்று அச்சிறுவயதிலும் உணர்ந்தவர் நமது மதிப்பிற்குரிய நேருஜியே ஆவார். மகனை நையப்புடைத்து அதற்காக மனம் வருந்தியவர் நேருஜியின் தந்தையான மோதிலால் நேரு. அருமைச் செல்வனைப் பொய் சொல்லக்கூடாது என்று அறிவுரை கூறி ஆறுதலளித்தவர் அன்னை சொரூபராணியார்.

—நன்றி : 'ஜவகர்லால் நேரு'

## வெற்றி உங்கள் கரங்களிலே..!

உருண்டோடும் மணித்துளிகள்
உணர்த்துவ தென்ன!
உலகத்தின் வரலாற்றை
நடத்துவ தென்ன!

அறிந்துகொள்ள வேண்டுமிதை
அன்பொடு நன்கு!
ஆற்றலுடன் செயல்புரிவீர்
அரும்புகளே இன்று!

பறந்துவிடும் காலமிதைப்
பயன்ப டுத்துவீர்!
பாடி ஆடி உள்ளமிதைப்
பண்ப டுத்துவீர்!

விடிந்தவுடன் கடமைகளை
முறைப்ப டுத்துவீர்!
வெற்றியுங்கள் கரங்களிலே
உணர்ந்து கொள்ளுவீர்!

—சின்ன மாணிக்கம்





## இந்தியாவில் முதல் சுரங்க ரயில் போக்குவரத்து!

மேலை நாடுகளில் சுரங்க ரயில் போக்குவரத்து சர்வ சாதாரணமாக நடந்து வருகின்றது. இப்போது இந்தியாவில், முதன் முதலாகச் சுரங்க ரயில் போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.

கல்கத்தாவில், சுரங்க ரயில் போக்குவரத்து 24.10.84 முதல் ஆரம்பமாகியது. எஸ்பிளேனேடு ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஆயிரம் பயணிகளை ஏற்றிக் கொண்டு அது புறப்பட்டது.

குளிர்பதன வசதி செய்யப்பட்ட நான்கு பெட்டிகளைக் கொண்ட இந்த சுரங்க ரயில் 4 கி.மீ. தூரத்தில் உள்ள பவானிபூர் ரயில் நிலையத்தை 7 நிமிடங்களில் சென்றடைந்தது.

உலகில் சுரங்க ரயில் போக்குவரத்தைக் கொண்ட பெருநகரங்களில் கல்கத்தா 82-வது நகரமாகத் திகழ ஆரம்பித்துள்ளது. நகரில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்த சுரங்க ரயிலில் உயர் ரயில்வே அதிகாரிகள் பயணம் செய்தனர்.

சுரங்க ரயில் போக்குவரத்து துவக்கப்பட்ட முதல் 3 மணி நேரத்தில் கிட்டத்தட்ட 10,000 பேர் அதில் பயணம் செய்தனர்.

நவம்பர் மாதம் 7-ந் தேதியிலிருந்து பெல்காகியா மற்றும் டம்டம் ரயில் நிலையங்களுக்கு இடையே சுரங்கரயில் இயங்க ஆரம்பிக்கும்.

## வளரும் சுற்றுலா



சர்வதேச சுற்றுலாப் பயண வளர்ச்சியில் இந்தியா முன்னணியில் உள்ளது.


உள்நாட்டு சுற்றுலா மூலம் ஒற்றுமையை வளர்த்தல், சர்வதேச சுற்றுலா மூலம் நமது மக்களின் வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தை வளர்த்தல் ஆகிய இரண்டு நோக்கங்களில் இந்திய அரசு செயல்படுகிறது.

1951-ல் இந்தியாவுக்குச் சுற்றுலா மூலம் கிடைத்த வருமானம் ரூ 7.7 கோடி. 1982-83-ல் வருமானம் 1130 கோடி ரூபாய். வெளிநாட்டுப் பயணிகளுக்கான வசதிகளும் கணிசமாக அதிகரித்துள்ளது.

## மணிப்பூர் அன்னாசி

சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஆண்டுதோறும் 75,000 டன் அன்னாசி உற்பத்தி, இதில் 33 000 டன் ஏற்றுமதி என, நாட்டின் மிகப் பெரிய பழச் சாகுபடி மாநிலமாக மணிப்பூர் உருவெடுத்துள்ளது.

சமவெளிகளிலும், மலைப் பகுதிகளிலும் வளரும் அன்னாசி, சத்துமிக்கதாகவும் கனிமச் செறிவு கொண்டதாகவும் திகழ்கின்றது. கடல் மட்டத்துக்கு 120 மீட்டர் உயரத்திலுள்ள ஆண்டுதோறும் 100 சென்டி மீட்டருக்கு மேல் மழை பெறும் மணிப்பூர், அன்னாசி சாகுபடிக்கு மிகவும் ஏற்றதாகத் திகழ்கின்றது.



அன்னாசியில் ஜெயண்ட் கியூ, குயின் ஆகிய ரகங்கள் பிரபலமானவை. கியூ ரகம் இரண்டு முதல் ஐந்து கிலோ வரை எடை உள்ளது. தாமதமாகப் பழுக்கக்கூடியதும் 'குயின்' ரகம் மேசையில் வைக்கக்கூடிய பழமாக புகழ் பெற்றது.

வடகிழக்கு மாநிலங்களுக்கு மட்டுமின்றி, தொலை தூர மாநிலங்களுக்கும் அன்னாசிக் கன்றுகளை மணிப்பூர் வழங்கி வருகின்றது.

சர்வதேச சந்தைகளில் ஒரு டன் அன்னாசிக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கிடைக்கின்றது.



# நலிந்தோர் நல்வாழ்வு பெற...

**நீ**லகிரி மாவட்டத்தில் உள்ள முது மலை வனவிலங்குச் சரணாலய வனப் பகுதியில் உள்ளது பொக்காபுரம்.

இந்தக் கிராமத்தில் எந்தவித விவசாயத்திலும் ஈடுபடாத வளர்ச்சிப் பணிகளும் அதிகம் இடம் பெறாத ஒரு பழங்குடி மக்கள் வாழும் சுக்கிராமம்.

அங்கு மேய்ச்சல் தொழில், தேன் எடுத்தல், விறகு வெட்டுதல் போன்ற தினக்கூலி தொழிலையே நம்பி இருளர் இன இளைஞர் ஜடயன் தனது மனைவி மற்றும் ஐந்து குழந்தைகளுடன் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தார்.

அவர் இவ்வாறு அல்லல்பட்டு வந்த நேரத்தில் உதகமண்டலம் பாரத ஸ்டேட் வங்கி பொக்காபுரம் கிராமத்தைத் தத்தெடுத்து அவர்களுக்குக் கடனுதவிகள் வழங்கி வாழ்வில் நலிந்தவர்களுக்குக் கைகொடுக்க முன் வந்தது.

அரசின் நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் திரு ஜடயன், வங்கியில் இருந்து ரூ. 3 ஆயிரம் மதிப்புள்ள கறவை மாடு ஒன்றைக் கடனாகப் பெற்றார்.

தினசரி ரூ. 5கூட வருமானம் இல்லாமல் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு வந்த திரு ஜடயன் தற்போது பால் விற்பனை மூலம் தினசரி ரூ. 20 வரை வருமானம் கிடைக்கிறது. இதன் மூலம் குடும்பத்தையும் நடத்தி எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் கடனைத் திரும்பி செலுத்தி இத்திட்டத்தின் மூலம் மேலும் பல கறவை மாடுகளைக் கடனாகப் பெற்று எதிர்காலத்தில் ஒரு நிலையான வருமானமும் நம்பிக்கையும் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும், தற்போது தன் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளதாகவும் கூறும் திரு ஜடயன் மிகுந்த உற்சாகத்துடன் வாழ்கிறார்.

தொகுப்பு:

**வி. ஜி பிரசாத்,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
(செய்தி), உதகமண்டலம்,
நீலகிரி மாவட்டம்.

## பார்த்தோம் படித்தோம் !

'தமிழரசு' நவம்பர்—1 இதழில் முதல்வரின் அட்டைப்படம் வெளியிட்டு, தமிழக மக்களின் உள்ளம் அறிந்தும் வாசகர்களின் விருப்பமறிந்தும் செயல்பட்டு வரும் தமிழரசுக்கு நன்றி.

—ஜி. டி. ராஜா, பாலாஜி,
கீழப்பழுவூர்.

அரசின் சாதனைகளை அறிய உதவும் ஒரே ஏடான 'தமிழரசின்' பணி என்றும் இனிதே தொடர்க!

—ம. மாலா,
மதுரை.1.

**ம**க்களின் எண்ணங்களுக்கு ஏற்ப, அன்னை இந்திராவின் உருவத்தை வண்ணத்தில் அட்டைப் படத்தில் வெளியிட்ட 'தமிழரசு' இதழ் பாராட்டுக்குரியது. இதழினுள்ளே வெளியான அன்னையின் படங்கள் நெஞ்சை நெகிழவைத்தன.

—ஆர். சி. வைரராஜ்
கீழப்பழுவூர்

16.11... தமிழரசு இதழ், அன்னையின் புகழ் பரப்புவதைக் கண்டேன். இதுவரை பார்த்திராத படங்கள் தொகுப்பில் இடம் பெற்று இதயம் கவர்கின்றன. புலவர் தமிழ்ப்பித்தனின் கவிதாஞ்சலி, கண்ணீரஞ்சலியாக நெஞ்சை உருக்கியது. பி.வி. கிரியின், தூய அன்னையின் புகழ் போற்றிப் பாடிய பாடல் எளிய இனிய ஆழமான கருத்துக்களுடன் அமைந்துள்ளது.

—கவிஞர் பல்லவன்
திருக்கழுக்குன்றம்

'பார்த்தோம்—படித்தோம்' பகுதிக்கு தங்கள் கருத்துக்களை எழுதும் வாசகர்கள், அஞ்சல் அட்டையில் மட்டும் எழுதினால் போதுமானது. அத்துடன் தங்கள் முழு முகவரியையும் குறிப்பிட வேண்டும்.

எழுத வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

# 1985 ஆம் ஆண்டுக்குரிய அரசு - பொது விடுமுறை நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | செவ்வாய் | - புத்தாண்டு நாள் |
| ,, | 14 | திங்கள் | - பொங்கல் திருநாள் |
| ,, | 15 | செவ்வாய் | - திருவள்ளுவர் திருநாள் |
| ,, | 16 | புதன் | - உழவர் திருநாள் |
| ,, | 26 | சனி | - குடியரசு நாள் |
| மார்ச் | 22 | வெள்ளி | - தெலுங்குப் புத்தாண்டு |
| ஏப்ரல் | 3 | புதன் | - மகாவீரர் பிறந்தநாள் |
| ,, | 5 | வெள்ளி | - தூய வெள்ளி |
| ,, | 13 | சனி | - தமிழ்ப் புத்தாண்டு |
| மே | 1 | புதன் | - மே தினம் |
| ஜூன் | 20 | வியாழன் | - ரம்ஜான் |
| ஆகஸ்ட் | 15 | வியாழன் | - விடுதலை நாள் |
| ,, | 27 | செவ்வாய் | - பக்ரீத் |
| செப்டம்பர் | 18 | புதன் | - விநாயகர் சதுர்த்தி |
| ,, | 26 | வியாழன் | - மொகரம் |
| அக்டோபர் | 2 | புதன் | - காந்தி பிறந்த நாள் |
| ,, | 22 | செவ்வாய் | - ஆயுதபூஜை |
| ,, | 23 | புதன் | ,, |
| நவம்பர் | 11 | திங்கள் | - தீபாவளி |
| ,, | 26 | செவ்வாய் | - மிலாடிநபி |
| டிசம்பர் | 25 | புதன் | கிறிஸ்துமஸ் |

## நோயைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு உதவி

தமிழகத்தில் பல மாவட்டங்களில் நெற்பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சி மற்றும் கொள்ளை நோயை அழிக்க ரூபாய் ஒரு கோடி நிதி உதவி தமிழக அரசு அளித்துள்ளது. ரூ.58.2 இலட்சம் குருத்துப் பூச்சியை அழிக்கவும், ரூபாய் 42.78 இலட்சம் நெல்லில் கொள்ளை நோயை அழிக்க பூஞ்சான மருந்தினை 50,000 எக்டேரில் அடிக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழகத்தில் வட கடலோரப் பகுதிகளில் அண்மைக் காலங்களில் பெய்த மழையால் பொதுவாகச் சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்கள் பயன் பெற்றுள்ளன. சோளம், ராகி போன்ற மானாவாரி சிறுதானியங்களும், பயிர் வகைகளும் மழையால் பெரும் பயனை அடைந்துள்ளன.

இவ்வாண்டு துவரை, உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறு வகைகள் சுமார் 4.49 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. புதிய இரகப்பயறு வகைகளை அதிகரிக்கும் பொருட்டு சுமார் 1 கோடி மதிப்புள்ள மினிக்கிட்டுகள் உழவர்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படும் என்றும் வேளாண்மை இயக்குநர் கூறினார். இந்த வகையில் சுமார் 400டன் பயிறு விதைகள் 2 கிலோ மற்றும் 4 கிலோ மினிகிட்டுகளில் வழங்கப்படுகின்றன.

இவ்வாண்டு தமிழகத்தில் பஞ்சு பற்றாக்குறையைப் போக்க அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்ய விவசாயிகளை அரசு பலவகைகளில் ஊக்குவிக்கிறது. பஞ்சு உற்பத்தியைச் சுமார் 5 இலட்சம் பேல்களுக்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் செயல்படும் அரசின் சிறப்பு நெல் கொள்முதல் திட்டத்தின் மூலம் ஊக்க போனசாக 1.66 கோடி ரூபாய் மதிப்புள்ள இரசாயன உரங்கள் இதுவரை உழவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

# சாந்தோம் உவர் நீர் மீன் பண்ணை




**ஆர். சீனிவாசன்,**
**இணை இயக்குநர்,**
**மீன்துறை, தமிழ்நாடு அரசு.**


சென்னை சாந்தோம் உவர்நீர் மீன்பண்ணை, அடையாறு முகத்துவாரம் அருகே 1959-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தில் உவர்நீர் மீன்பண்ணை அமைப்புக்காகப் புதுடில்லி இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் இம் மீன் பண்ணையினைத் தேர்ந்தெடுத்து, திட்ட நடவடிக்கைகள் 1-4-'74 முதல் தொடர்ந்து இப் பண்ணையில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இப் பண்ணையின் மொத்தப் பரப்பளவு 8 எக்டேராயினும் நீர்ப்பரப்பு 3.44 எக்டேராகும்

இப்பண்ணையில் 1.14 எக்டேர் பரப்புள்ள ஒரு மீன் வளர்ப்புக் குளமும், 1.5 எக்டேர் இயற்கை மீன் வளர்ப்புக் குளமும் (Wild Fish Culture) ஒவ்வொன்றும் 0.1 எக்டேர் அளவில் எட்டு நாற்றங்கால் குளங்களும் உள்ளன.

அடையாறு முகத்துவாரத்திலிருந்து மதகுகள் வழியாகவும் இயற்கையான கசிவுகளின் மூலமாகவும் உவர் நீர் இக்குளங்களுக்கு வருகிறது. அக்டோபர் முதல் மார்ச் வரையிலான ஆறு மாத காலம் பொதுவாக அடையாறு முகத்துவாரம் திறந்திருந்து எஞ்சிய காலங்கள் மண் மேடிட்டு அடைந்துவிடுகிறது. பண்ணையிலுள்ள குளங்களின் தலைமட்டம் அடையாறு ஆற்றின் நீர் மட்டத்தைவிடத் தாழ்ந்து இருப்பதனால் குளங்களில் கசிவு மூலமாக நீர் மட்டம் நிறைந்துள்ளதாலும் நீரை முற்றிலும் வடிக்க முடியாத நிலையுள்ளது. எனினும் கோடை கால வரட்சியினால் ஆற்றின் நீர் மட்டம் குறையும் பொழுது குளங்கள் காய்ந்து போவதும் உண்டு.

நீர் வடிக்கக்கூடிய குளங்களில் உவர்நீர் மீன்வளர்ப்பு எளிது மட்டுமல்லாமல், கீழேகுறிப்பிட்டுள்ள வகைகளில் நல்ல பயன்களையும் அது அளிக்கிறது:

* குளங்களின் தரையைக் காயவைத்து, உழுது, மண்ணின் வளத்தினை மேம்படுத்துவதோடு விஷ வாயுக்களை வெளியேற்றி ஒவ்வொரு அறுவடைக்கும் குளத்தைத் தரமாகத் தயார்படுத்த முடியும்.
* குளத்தை வடிகட்டுவதனால் இராலை உண்ணக்கூடிய பிற உயிரினங்களையும், உணவு மற்றும் பிராண வாயுவிற்குப் போட்டியிடும் தேவையற்ற பிற உயிரினங்களையும், அப்புறப்படுத்த முடிகிறது. மேலும் வடிகட்ட முடியாத குளங்களில் தேவையற்ற மீன் இனங்களை ஆழிப்பதற்கு விஷமிடுதலும் அக்குளங்களில் விஷத் தன்மை நீங்கி, நீரில் பழைய இயல்புகளைப் பெற்ற பிறகு அதனால் இரால் குஞ்சு இருப்பு செய்வதற்குக் காலதாமதம் ஏற்படுவதும் தவிர்க்கப்படுகிறது..
* அதிகமான இயற்கை வளத்தினால் உண்டாகக்கூடிய 'ரோட்டிபர்'(Rotifer) போன்ற விலங்கின நுண்ணுயிர்களால் நேரக்கூடிய பாதிப்பைத் தவிர்க்கும் வகையில் தண்ணீரை அவ்வப்போது வடிகட்டி தூய்மையான உவர்நீர் புதிதாக விட முடியும்.

சாந்தோம் உவர்நீர் மீன் பண்ணையில் தண்ணீரை வடிக்க இயலாத நிலை காரணமாக மேற்சொன்ன நற்பயன்களுக்கு வழி இல்லாததால், விசேடமான பராமரிப்பு முறையைக் கையாள வேண்டியதாகிறது. நீரை வடிக்க இயலாத சூழ்நிலையில் அமையப் பெற்ற சாந்தோம் உவர்நீர் மீன் பண்ணை போன்ற பண்ணைகளில், வர்த்தக ரீதியில் இரால் வளர்ப்பு செய்யும் நோக்கத்துடன் இப்பண்ணையிலுள்ள 1.14 எக்டேர் பரப்பளவு கொண்ட குளம் ஒன்றில் பரிசோதனை முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுவாக உவர்நீர் மீன் பண்ணைகளில், ஒரு எக்டேருக்கு 50,000 வெள்ளை இரால் குஞ்சுகள் 30,000கருப்பு இரால் குஞ்சுகள் இருப்பு செய்வது நடைமுறையிலுள்ளது. அவ்வாறு இருப்பு செய்வதன் மூலமாக சராசரி 15 முதல் 20 கிராம் வெள்ளை இரால்களும், 35 முதல் 40 கிராம் கருப்பு இரால்களும் 100 முதல் 120 நாட்களுக்குள் வளரும் என எதிர் பார்க்கப்படுகிறது. மேற்சொன்ன முறைப்படி தமிழ்நாடு மீன்துறையினால் பல்வேறு, இரால் மீன் வளர்ப்புப் பண்ணைகளில் இரால் வளர்ப்பு கையாளப் பட்டதில் வெள்ளை இரால் சராசரியாக 12 கிராமுக்கு அதிகப்படாமலும் வருடாந்திர மொத்த இரால் உற்பத்தி ஒரு எக்டேருக்கு 500 கிலோவுக்குக் குறைவாகவே அறுவடை செய்யப்படுகிறது.

வெள்ளை இரால் உறபத்தியினை அதிகரிக்க அதிக அளவில் இரால் குஞ்சுகள் இருப்புச் செய்து பின்வருமாறு சிறப்பான பராமரிப்பு முறைகள் கையாளப் பட்டன.

**குளம் தயாரிப்பு :**

1982-83-இல் தமிழ்நாட்டில் நிலவிய கடும் வறட்சியின் காரணமாக, சாந்தோம் உவர்நீர் மீன் பண்ணையில் பரிசோதனைக்கெனத் தேர்ந்தெடுத்த குளம் முழுவதும் காய்ந்து போனதால் வண்டல்மண் அகற்றப்பட்டது.

ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர்-83-ல் மழை, மற்றும் அடையாறு ஆற்றில் கசிவினால் குளங்களில் நீர் நிரம்பியது. மிக அதிக அளவில் நூல் பாசி அடர்த்தியாக வளர்ந்தமையினால் மூன்று முறை அகற்றப்பட்டது. ஆயினும் நூல் பாசியின் வளர்ச்சி கட்டுக்கடங்காமல் நிலைக்கவே இரசாயன முறையினால் அகற்றுவதற்கு ஆக்டிவேடட் அலுமினியம் 20 சதவீதம், ஆக்டிவேடட் சிலிகான் 80 சதவீதம் கலவையினை எக்டேருக்கு 50 கிலோ வீதம் நீர்ப் பரப்பு முழுவதுமாகத் தெளிக்கவே நூல் பாசிகள் அழுகியது. மிதந்த அழுகிய நூல் பாசி அகற்றப்பட்டது. பின் நுண்ணுயிர்ப் பாசிகள் உற்பத்தியாக எக்டேருக்கு 50 கிலோ யூரியா 12.5 கிலோ சூப்பர்பாஸ்பேட் 4:1 விகிதத்தில் முதல் மாதத்தில் இருவார இடைவெளியில், குளத்தில் உரமிடப்பட்டது.

இரால் குஞ்சுகள் இருப்புச் செய்தபின் திட்டமிட்ட இருவார



இடைவெளியில் 25 கிலோ யூரியா மற்றும் 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிடும் முறை அறுவடை வரை தொடரப் பட்டது.

இயற்கை உரம் அதிகமானால் குளங்களில் விலங்கின நுண்ணுயிர்கள் மிக அதிக அளவில் உற்பத்தி ஆகி பிராணவாயு குறையக்கூடும். எனவே இயற்கை உரமிடுவது இப் பரிசோதனையில் தவிர்க்கப்பட்டது.

**இரால் மீன்குஞ்சு இருப்பு:**

1.14 எக்டேர் குளத்தில் வெள்ளை இரால் எக்டேருக்கு 70,000 என்ற அளவில் இருப்புச் செய்ய, அடையாறு முகத்துவாரத்திலிருந்து 80,000 வெள்ளை இரால் குஞ்சுகள் சேகரிக்கப் பட்டன. அதே குளத்தில் கட்டப் பட்ட ஹாப்பாவில் அக்குளத்தின் தட்பவெப்ப நிலைக்கு இரால் குஞ்சுகள் பக்குவப்படுத்த இரண்டு நாட்கள் வளர்க்கப் பட்டன. பின்னர் குளத்தில் இருப்புச் செய்யப்பட்டன. இருப்புச் செய்யும் பொழுது இரால் குஞ்சுகளின் அளவுகள் நீளம் 25 மி.மீ. எடை 0.2 கிராம் மேலும் குளத்தில் எதிர்பாராத அளவில் பாசிகள் வளருமேயாயின் அதனைக் கட்டுப்படுத்த 500 பால்கெண்டை மீன் குஞ்சுகளும் இருப்புச் செய்யப்பட்டன. இவற்றின் அளவு 20 மி.மீ நீளமும் 5 கிராம் எடையும் ஆகும்.

**உணவும் உணவிடும் முறையும்:-**

இரால்களுக்கு உணவு அவற்றின் மொத்த எடையைக் கணக்கிட்டு அந்த எடையில், முதல் மாதத்தில் 15-சதவிகிதமும் இரண்டாவது மாதத்தில் 10 சதவிகிதமும் மூன்றாவது மாதத்தில் 10சதவிகிதமும் அளவாகக் கொடுக்கப்பட்டது. உணவு மாலை நேரங்களில் குளத்தைச் சுற்றி 20 இடங்களில் 30 செ.மீ. ஆழத்தில், தட்டுகளில் தினசரி வைக்கப்பட்டது. உணவுக் கலவை வருமாறு:-

அ. திலேப்பியா மீன் (வேக வைத்தது) 40 சதவிகிதம்.

ஆ. அரிசித் தவிடு 32சதவிகிதம்.

இ. கடலைப் பிண்ணாக்கு 20 சதவிகிதம்.

## பாராட்டுக்குரிய பெண்மணி



"சமுதாய சேவைக்குக் கிடைத்த பரிசு இது!'' என்று பெருமையுடன் கூறுகிறார் திருமதி எம். கிருஷ்ணவேணி. 1984ஆம் ஆண்டில்சுதந்திரதினத்தில் ஊர்க்காவல் படைக்கான குடியரசுத் தலைவர் விருது இவருக்குக் கிடைத்திருக்கிறது. இவர் சென்னை மருத்துவக் கல்லூரி அலுவலகத்தில் முதுநிலைத் தட்டச்சராகப் பணிபுரிகிறார்.

இவர் 1964லிருந்து ஊர்க்காவல் படை பெண்கள் பிரிவில் இருந்து வருகிறார். பள்ளியில் படிக்கும் காலத்திலேயே இவர் சாரணியர் பிரிவிலும், விளையாட்டுகளிலும் பரிசும் பாராட்டும் பெற்றிருக்கிறார். 44 வயதான இருவருக்கு ஐந்து குழந்தைகள் உள்ளன.

பெரிய குடும்பப் பொறுப்பில் இருந்துங்கூட இவர் சமுதாயப் பணிகள் செய்வதில் சளைத்ததில்லை. நோயாளிகளை மருத்துவமனையில் சேர்த்தல், அவர்களுக்கு வழிகாட்டல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். வேலை நேரம் போக மற்ற நேரங்களில் இப்படி எதாவது ஒரு தொண்டு செய்து வருகிறார். இதிலெல்லாம் இவர் நேரம் காலம் பார்ப்பதில்லை.

இவர் பலமுறை இரத்ததானம் செய்திருக்கிறார். வெள்ள நிவாரணப் பகுதிகளிலும் சேவை செய்திருக்கிறார். 1981-ல் பாட்னாவில் நடந்த அனைத்திந்திய ஊர்க்காவல் படையின் விளையாட்டுப் பந்தயத்தில் இவர் கலந்து கொண்டுள்ளார். முதலுதவி பயிற்சி பெற்றுள்ள இவர் துப்பாக்கி சுடும் பயிற்சியிலும் தேர்வு பெற்றுச் சான்றிதழ் பெற்றுள்ளார்.

'எனக்கு எங்கே நேரமிருக்கிறது?' என்று சொல்லாமல், ஐந்து குழந்தைகளையும் கவனித்துக் கொண்டு, வேலையையும் பார்த்துக் கொண்டு, இப்படி சமுதாயத் தொண்டிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுவரும் ஒரு பெண்மணியை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்?

— கிரிஜா

ஈ. பெல்லட் (Pellet) செயற்கை மீன் உணவு 8 சதவிகிதம்.

**நீரின் இயல்புகள்:**

தாவர நுண்ணுயிர் அளவுகளைத் தேவையான நிலையில் வைப்பதற்காக இருவார கால இடைவெளியில் யூரியா, மற்றும் சூப்பர்பாஸ்பேட் உரமிடப் பட்டது. வளர்ப்புக் காலங்களில் நீரின் இயல்புகள் பின்வருமாறு இருந்தன:-

அ. தட்பவெப்ப நிலை °சி 24 முதல் 28.5

ஆ. கார அமிலத் தன்மை (பி,எச்) 8 முதல் 8.4

இ. உப்புத் தன்மை 12 முதல் 22

ஈ. பிராண வாயு (பி.பி.எம்.) 4.8 முதல் 14.4

உ. மொத்த காரத்தன்மை (பி.பி.எம்.) 66 முதல் 146

ஊ. நுண்ணுயிர் தாவர உற்பத்தி 1.92 முதல் 4.80 மி. கி. கி./மீ$^3$/நாள்.

நீரில் கரைந்துள்ள பிராண வாயு, இரவு மற்றும் அதிகாலை நேரங்கள்ல் குறையாமல் இருக்க மிகக் கவனத்துடன் காற்று அழுத்தி இயந்திரம் மூலம் சரி செய்து வரப்பட்டது.

**அறுவடை:-**

110 நாள் வளர்ப்புக்குப் பின்பு 19-1-'84 அன்று மாண்புமிகு மீன்துறை அமைச்சர் திரு கலைமணி அவர்கள் மற்றும் மீன்துறை இயக்குநர் அவர்கள் முன்னிலையில் அறுவடை துவங்கப்பட்டது. இரால் மீன் பிடிப்பதற்கு 10 மீனவர்களைக் கொண்டு மணிவலை மூலமாகத் தினசரி காலை 6 மணி முதல் 11 மணி வரை அறுவடை நடைபெற்றது. குளத்தின் நீரைக் குறைக்க இயலாமையினால் அறுவடை 15 நாட்களுக்கு நீடித்தது. அறுவடை செய்த வெள்ளை இராலின் சராசரி அளவு நீளம் 110 மி.மீ., 10 கிராம் எடையும் இருந்தது. கருப்பு இராலின் அளவுகள் நீளம் 135 மி.மீ., 16.6 கிராம் எடை. மொத்தம் 771.200 கிலோ வெள்ளை இராலும் 6·800 கிலோ கருப்பு இராலும் அறுவடை செய்யப்பட்டது. வெள்ளை இரால் குஞ்சுகள் சேகரித்து இருப்புச் செய்யும் பொழுது அவற்றுடன் சிறு அளவில் கருப்பு இரால் குஞ்சுகளும் இயற்கையில் கலந்திருக்கக்கூடும். எனவே கருப்பு மற்றும் வெள்ளை இரால் சேர்த்து 778.000 கிலோ அறுவடை செய்யப்பட்டது. ஒரு எக்டேருக்குக் கணக்கிடும் பொழுது இரால் அறுவடை அளவு 682.450 கிலோவாகும். இதனுடன் 776 மி.மீ./173 கிராம் எடையுள்ள பால் கெண்டை 93.700 கிலோ அறுவடை செய்யப்பட்டது.

**உயிர்ப்பு விகிதம்**

இராலின் பிழைப்பு விகிதம் 97.25 சதவிகிதமும் பால் கெண்டையின் பிழைப்பு விகிதம் 93 சதவிகிதமும் ஆகும். இந்த உயரிய உயிர்ப்பு விகிதம் கீழ்க் கண்ட சிறப்பு பராமரிப்பு முறைகளைக் கையாண்டதால் கிடைத்தது:-

அ) செயற்கை உரமிட்டும், தொடர்ந்த நீரியல் ஆராய்ச்சியினால், நீரில் கரைந்த பிராணவாயு குறையாமலிருக்க அதிகாலையிலும், மேகமூட்டமான சூழ்நிலையிலும் காற்று அழுத்தக் கருவி வைத்து பிராணவாயு அளவு குறையாமல் கவனிக்கப் பட்டது.

ஆ) மாதிரி வலை வீச்சு செய்து இரால்களைச் சேகரித்து அவற்றின் வளர்ச்சியினை அறிந்து அதற்கேற்றாற் போல் உணவு அளவுகளில் மாற்றம் செய்யப்பட்டது.

இ) இரால்களை உண்ணக்கூடிய மீன்களும, உணவு மற்றும் பிராணவாயுக்குப் போட்டியிடும் பிற உயிரினங்களும் குளத்தில் நுழையாமல் பராமரிக்கப்பட்டது.

ஈ) திருட்டுத்தனமாக மீன் பிடிப்பு நிகழாவண்ணம் இரவு பகலாகப் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப் பட்டது.

**விற்பனை:-**

பிடிக்கப்பட்ட இரால் மற்றும் மீன்கள் தமிழ்நாடுமீன் வளர்ச்சிக் கழகத்திற்கு விற்கப்பட்டது. வெள்ளை இரால் கிலோ ரூ.22/- முதல் ரூ.23/- வீதமும், கருப்பு இரால் கிலோ ரூ. 40/- வீதமும், பால்கெண்டை கிலோ ரூ. 7.50 வீதமும, மொத்தம் பிடிக்கப் பட்ட மீன்கள் ரூ. 16,404/-க்கு விற்கப்பட்டன.

## பொருளாதாரம்

**இரால் வளர்ப்புக்கான பொருளாதார விபரங்கள்:**

| | | | ரூ. | பை. |
|---|---|---|---|---|
| * | 1. | 80,000 வெள்ளை இரால் குஞ்சுகளின் விலை 1000க்கு ரூ. 30 வீதம் | 2,400 | 00 |
| * | 2. | 500 பால்கெண்டை மீன்குஞ்சுகளின் விலை 1000க்கு ரூ, 30 வீதம் | 15 | 00 |
| * | 3. | உரங்களின் விலை | 266 | 00 |
| * | 4 | 2 காவலர்களுக்கு நாளொன்றுக்கு நபருக்கு ரூ. 11 வீதம் 120 நாட்களுக்கு | 2,640 | 00 |
| * | | தீவனம் | 5,962 | 50 |
| * | | அறுவடைச் செலவினம் | 1,500 | 00 |
| | | மொத்தம் ரூ. | 12,783 | 50 |

* இரால் மற்றும் பால் கெண்டை மீன்குஞ்சுகள் அலுவலகப் பணியாளர்களைக் கொண்டு சேகரிக்கப்பட்டதாலும் பாதுகாப்புப் பணி மற்றும் அறுவடைப் பணிக்காக அலுவலகப் பணியாளர்களே பயன்படுத்தப் பட்டதாலும் இவற்றிற்கான கிரயம் மதிப்பிட்டுக் கொடுக்கப் பட்டுள்ளது.

வெள்ளை இரால் விற்பனை மூலமும், கருப்பு இரால் விற்பனை மூலமும், பால்கெண்டை விற்பனை மூலமும் மொத்த வருவாய் ரூ. 16,404. அதில் நிகர லாபம் ரூ. 3,620.50 ஆகும்.

இருப்பு செய்த இரால் குஞ்சுகள் 25 மி.மீ. நீளமும், 0.2 கிராம் எடையும் உள்ளதாக இருந்தாலும் ஆழ்ந்த திறமையான பராமரிப்பு முறைகளினாலும் வளர்ப்பு காலமான 110 நாட்களில் 97.25 சதவிகிதம் வெள்ளை இரால் பிழைப்பு விகிதம் காண முடிந்தது. கூடுதலான எண்ணிக்கையில் இருப்பு செய்ததனால், செயற்பாட்டில் செலவீனம் கூடுமாதலாலும், பிழைப்பு விகிதம் கணிசமாகக் குறையக் கூடுமாதலாலும், வளர்ப்புக் காலத்தை மேலும் நீட்டித்து, இரால் ஒன்றினை 10 கிராம் எடைக்கு மேல் வளர்க்கவில்லை. வளர்ப்புக் காலத்தை நீட்டித்து இரால்களைப் பெரிதாக வளர்ப்பதில் உண்டாகக்கூடிய செலவினம் அந்த இராலை விற்பனை செய்யக்கூடிய விலைக்கு ஈடாக இருக்காது. அறுவடை செய்யப் பட்ட இராலை நேரே ஏற்றுமதியாளர்களிடம் விற்பனை செய்யும் பட்சத்தில், இன்னும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய முடியும். மொத்த வருவாய், நிகர லாபம் இன்னும் கூடுதலாகும். சராசரியாக இராலை கிலோ ரூ 30-க்கு விற்பனை செய்தால் மொத்த வருமானம் ரூ. 23,930 அடைந்து நிகர லாபம் ரூ. 11,150 ஆகக் கூடும்.

இந்த மாதிரியான குளங்களில் ஆண்டிற்கு இரண்டு அறுவடை செய்து. ஆண்டிற்குத் தோராயமாக ரூ. 22,300 நிகர லாபம் அல்லது எக்டேரில் ஆண்டிற்கு ரூ. 19,560 பெற முடியும். நீரை வடிக்க முடியாத உவர்நீர்ப் பண்ணையில், இரால் வளர்ப்பது தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ரீதியில் சாத்தியமாவது மற்றும் அல்லது கூடுதலான வருமானமும் கிடைக்குமென்பது மறுக்க முடியாததாகும்.

# ஊட்டச்சத்துக்குறைவினால் குழந்தைகள் பார்வை இழப்பதைத் தடுக்கும் திட்டம்

## இம்பாக்ட் தென் இந்தியா



ஊட்டச்சத்துக் குறைவினால் குழந்தைகள் பார்வை இழப்பதைத் தடுக்கும் திட்டம் ஒன்று மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் துவக்கி வைக்கப்பட்டது.

'இம்பாக்ட் இந்தியா' அமைப்பின் மூன்றாவது திட்டமான இதனை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் 7.8.84 அன்று துவக்கி வைத்தார்.

பார்வையிழப்பைத் தடுக்கும் திட்டத்தில், முதற்கட்டமாக 5 பெரிய அரசு மருத்துவமனைகளில் இதற்கான சிகிச்சைப் பிரிவுகள் துவக்கப்படும் என அவர் அறிவித்தார்.

பம்பாய் பார்வையற்றோர் ராயல் காமன்வெல்த் கழகத்தின் ஆசிய இயக்குநர் டாக்டர் ராஜேந்திர டி.வியாஸ் பல்வேறு அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் இந்தத் திட்டமானது வெற்றி பெறப் பொதுமக்களும் அதிகாரிகளும் பெரிதும் உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே ஊட்டச்சத்துக் குறைவதால் நோய்களை எதிர்க்கும் சக்தி குறைந்து மரணமடைந்து விடுகின்றன. பல குழந்தைகள் இரண்டு கண்களிலும் பார்வை இழந்து குருடாகி விடுகிறார்கள்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 50,000 குழந்தைகள் இவ்வாறு இரண்டு கண்களிலும் பார்வை இழந்து அவதிப்படுகின்றனர். ஒரு கண்பார்வை மட்டுமோ அல்லது சிறிதளவு பார்வை இழந்தவர் ஆகியோரின் எண்ணிக்கை ஒரு லட்சமாகும். தமிழ் நாட்டில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் 5000க்கு மேற்பட்ட குழந்தைகள் பார்வை இழந்து அவதியுறுகின்றனர்.

தமிழக அரசு, குழந்தைகளின் நலனுக்காகப் பல அரிய திட்டங்களை மேற்கொண்டு பல்வேறு நன்மைகள் செய்து வருகின்றது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டத்தின் கீழ், இரண்டு முதல் நான்கு வயது வரையுள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டம் உள்பட ஆறு மாவட்டங்களில் குழந்தைகள் நலம் பராமரிக்கப்படுகிறது. மதுரை, திண்டுக்கல் போன்ற நகரங்களில் மத்திய அரசு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு குழந்தைகள் நலப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

குழந்தைகள் நலனுக்காக வேறெந்த நாட்டிலும் அல்லது இதர மாநிலங்களிலோ இத்தனை திட்டங்கள் செயல்படுவதில்லை. மதுரை மாவட்டத்தில் இன்னும் ஊட்டச்சத்துக் குறைவினால் பல குழந்தைகள் பார்வை இழக்கின்றனர். மதுரை மாவட்டத்தை முன்னோடியாக வைத்து, இந்த மாவட்டத்தில் ஊட்டச்சத்துக் குறைவினால் பார்வை இழப்பதைத் தடுக்கும்வகையில் இத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.

ப. சாமிநாதன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்.

# இறவை நிலக்கடலைக்கு சிறந்த அடியுரம்

# விஜய்

# 14-28-14




இறவை நிலக்கடலைக்குத் தழைச் சத்துடன் அதைப்போல் இரண்டு மடங்கு மணிச் சத்தை அடியுரமாக இடவேண்டும் என்று விவசாய இலாகா சிபாரிசு செய்துள்ளது. இவ்வாறு சிபாரிசுப்படி அடியுரமிடச் சிறந்தது விஜய் 14-28-14.

இதை இங்கு தெளிவாகக் காணலாம்:

| ஏக்கருக்கு | தேவைப்படும் சத்துக்களின் அளவு (கிலோ) | | | விஜய் உரத்தின் அளவு |
|---|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் | |
| அடியுரம் | 7 | 14 | 21 | விஜய் 14-28-14 50 கிலோ + பொட்டாஷ் 25 கிலோ |

சமச்சீர் உரமிட

விஜய்




நிலக்கடலை சாகுபடி பற்றிய புத்தகத்தைப் பெற, எங்களுக்கு எழுதுங்கள்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

VIJAY

MFL-1431

## நூல் நயம்

### துறைதோறும் திரு. வி. க.

பதிப்பாசிரியர் : வளன் அரசு.

வெளியீடு : கதிரவன் பதிப்பகம்.
1-ஆ, நெல்லை
நாயனார் தெரு,
பாளையங்கோட்டை,
நெல்லை-627 002.

பக்கங்கள்: 101. விலை ரூ. 6

"தொண்டு செய்வாய்! தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித் தெழுந்தே!''

—பாவேந்தர் பாரதிதாசனின் இந்த அறைகூவலுக்கோர் அரிய இலக்கியமாகத் திகழ்ந்தவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க.

தமிழ் உரைநடையின் மறுமலர்ச்சி, மேடைத்தமிழின் சிறப்பு, பாத்துறையின் நலம், பதிப்புக்கலை, தொழிலாளர் இயக்கம், பெண்ணுரிமைக்கான உழைப்பு, சமயப்பொதுமை நோக்கு, சீர்திருத்தக் கொள்கைகளின் தாக்கம் என்று பல்துறையிலும் முறையாகப் பங்கேற்றவர் திரு.வி.க.

இந்நூல், பத்துக் கட்டுரைகளைத் தன்னகத்தே பெற்றுள்ளது. இராயப் பேட்டை முனிவராகத் திகழ்ந்த திரு.வி.க அவர்களை இலக்கிய அறிஞராக பெருமை மிகு மனிதராக-சிந்தனையாளராக-தொழிலாளர் தலைவராக-சமயச் சான்றோராக-உரையாசிரியராக - உரைநடை ஆசிரியராக-சொற்பொழிவாளராக—பாவலராக-இதழாசிரியராக இந்நூல் ஆய்ந்துள்ளது.

தமிழுக்கு ஏற்றம் தந்த தமிழ்முனிவர் திரு.வி.க. பல்துறைச் செல்வராகத் திகழ்ந்தமை ஒவ்வொரு கட்டுரை வழியும் மிக அழகாகத் தெளிவாக விளக்கப் பட்டுள்ளது.

இந்நூலைப் படிக்கும் எல்லோருக்கும் தாங்களும் அவரைப்போல் பல்கலைச் செல்வராக மிளிர்ந்து புகழ் மணக்க வாழ வேண்டும் என்ற பேரவா துளிர்ப்பது உறுதி.

### கோழி வளர்ப்பு

ஆசிரியர் : ர. சண்முகம்.

வெளியீடு: புத்தகப் பூங்கா.
29, நல்லண்ண முதலி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014.

பக்கங்கள்: 179. விலை ரூ. 11

"செய்யும் தொழிலே தெய்வம்; அதில் திறமைதான் நமது செல்வம்''என்ற எண்ணம் அனைவருக்கும் எளிதில் வருதல் வேண்டும்.

'கோழி வளாப்பு' என்ற இந்த நூல், கோழிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்துச் செய்திகளையும் மிக அழகாகச் சொல்லிச் செல்கின்றது.

வருமானம் தரும் வளமான தொழில் கோழி வளர்ப்பு என்பது உண்மைதான். கோழிகளையும் முட்டைகளையும் பயன் படுத்துவோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது; கோழிப்பண்ணை ஒன்று சிறிய அளவிலாவது வைத்துப் பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே பரவி வரும் நிலையம் இன்று காணப்படுகின்றது. இந்நிலையில் இதுபோன்ற நூல்கள் பெரிதும் பயனளிக்கும் வகையில் வெளி வருவது பாராட்டத்தக்கது.

கோழிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையை இந்நூல் மூலம் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

முட்டை உற்பத்தித்திறன் நம் எண்ணம் என்றால் அதற்கெனத் தனித் தேர்வு உண்டு; இறைச்சிக் கோழி வேண்டு மென்றால் அதைத் தேர்ந்தெடுக்கும் முறை வேறு உண்டு.

கறையான்களும் எறும்புகள் போன்றவையும் கோழிக்குஞ்சுகளின் உடல் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகின்றன என்னும் செய்தி வியப்பாக உள்ளது.

முட்டைகள் பாதுகாப்புப் பற்றியும் இந்நூலில் பேசப்படுகின்றது.

கோழி வளர்க்கும் இத் தொழிலில் இந்நூலின் துணைகொண்டு எவரும் ஈடு

படலாம். ஆர்வமும் உழைப்பும் முயற்சியும் உடைய அனைவரும் இதனைப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேறலாம்; வளமான வருமானத்தைப் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

## திருக்குறள் பொருள் விளக்கம்

ஆசிரியர் : சாமி. சிதம்பரனார்,

வெளியீடு: ஸ்டார் பிரசுரம்,
72, பெரியதெரு
திருவல்லிக்கேணி,
சென்னை—600 005.

பக்கங்கள் 447 விலை ரூ. 25.

மக்கள் வாழும் வகைபற்றிப் பேசும் திருக்குறள், உலக மலரிலிருந்து ஊறி எழுந்த தேன் துளியாகும்.

தமிழ் வேதமாய குறளுக்குப் புகழ் மிகு பதின்மர் உரை தவிர, அறிஞர் பலர் அவ்வப்போது எழுதி வரும் அரிய பல உரைகளும் உண்டு. அவற்றுள், இவ்வுரையாசிரியரின் உரை, பரிமேலழகர் உரை போன்றது. எந்த ஒரு பதத்துக்கும் பிறர் உதவியின்றிப் பொருள் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது தனிச் சிறப்பு.

நூல் 5 பதிப்புகள் வெளிவந்துள்ளமையே இவ்வுரையின் சிறப்பையும் எளிமையையும் தெள்ளிதின் புலப்படுத்தும்

ஒவ்வொரு குறளுக்கும் பதவுரை, கருத்துரை இரண்டும் எவருக்கும் நன்கு புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளன.

திருக்குறள் கருத்துகளைப் படித்துத் தெளிவு பெற விரும்பும் எவரும் இவ்வுரை நூலைப் படித்துப் பயன் பெறலாம். மேலும் பல ஆய்வுக் கட்டுரைகளை இதன் வழி எழுதவும் வாய்ப்புண்டு.

—டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

## அன்புதாசனின் மருத்துவக் கட்டுரைகள்

வெளியீடு : இமயப் பதிப்பகம்
20, பெருமாள் தெற்கு வீதி.
நாகப்பட்டினம்-640001.

விலை: ரூ. 7. பக்கம்: 140.

நோயற்ற வாழ்வு வாழவும்; நோய் வருமுன் காக்கவும் இந்நூல் பயன்படும்.

அம்மை நோய், கழுத்தில் உண்டாகும் கட்டிகள், எழுதுபவர்களுக்கு வரும் நோய், டைபாய்டு, அல்சர், நாய், தேள் கடி, பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை - இப்படி ஐம்பது விதமான நோய்கள் பற்றிய கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

நோய்கள் வருவதற்கான காரணங்கள், அறிகுறிகள், அவற்றைப் போக்கும் வழிமுறைகள் அனைத்தையும் இந்நூலில் அழகுற விளக்கியுள்ளார் ஆசிரியர் அன்புதாசன். எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய நல்ல நூல் இது.

## 'தமிழரசு'- சந்தா விவரம்



தமிழ் இதழ்—

ஓர் ஆண்டிற்கு ரூ. 18/-

அரையாண்டிற்கு ரூ. 9/-

விவரங்களுக்கு :

சர்குலேஷன் மானேஜர்,
" தமிழரசு "
சென்னை - 600 002.



## மதங்களும் மகத்துவங்களும்

ஆசிரியர் : அம்மன் சத்தியநாதன்

வெளியீடு : மயிலவன் பதிப்பகம்
7, எம்.கே. அம்மன் கோவில் வீதி,
சென்னை-4.

விலை: ரூ. 7. பக்கம்: 112

எல்லா மதத்தவரும் ஒரே குடையின் கீழ் வாழுகின்ற மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. நாம் இந்தியர். எம்மதமும் சம்மதம் என்பதே நமது கொள்கை. நம் நாட்டில் விளங்கிவரும் ஒவ்வொரு மதத்துக்கும் வரலாற்றுப் பெருமை உண்டு. அவற்றையெல்லாம் தெளிவாக, விளக்கமாகத் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

இந்து மதம், புத்த மதம், சமண மதம், இஸ்லாமிய மதம், சீக்கிய மதம், கிறிஸ்தவ மதம், பார்சி மதம் என்று மதங்களின் மகத்துவங்களை விளக்கிடும் ஆசிரியர், கடைசியில் "மதப்பற்று வெறியாகக் கூடாது" என்ற தலைப்பில் அருமையான கருத்துக்களைக் கூறுவது இந்நூலுக்கே முத்தாய்ப்பாக விளங்குகிறது.

—பி வி. கிரி



# வளர்ச்சி பெறும் திருச்சி மாவட்டம்...



திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கென்று ஓர் வரலாற்றுப் பெருமையுண்டு. சத்துணவுத் திட்டம் என்ற புத்தம் புதிய திட்டத்தை, பசியால் கத்தும் குழந்தைகளின் சித்தம் மகிழ்ந்திட முத்தமிழ் நாட்டில் முதலில் தொடங்கிய நகரம் திருச்சிராப்பள்ளிதான்! அத்திட்டம் இன்று எட்டுத் திசையும் புகழ் பரப்பி வருகிறது.

சுயவேலை வாய்ப்புத் திட்டம் -இளைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் திட்டம்- "தன்கையே தனக்குதவி" என்ற பழமொழியை வாழ்வில் வழிகாட்டியாக்கும் திட்டம். இத்தகைய திட்டத்தையும் முதலில் தொடங்கி வைத்த இடம் திருச்சிராப்பள்ளி தான்!


### தன்னிறைவு பெறும் கிராமங்கள்

இம்மாவட்டத்தில் உள்ள சிறிய, பெரிய கிராமங்களில் வாழும் மக்களின் அன்றாடத் தேவைகள் ஒருங்கிணைந்த முறையில் செயலாற்றிட தமிழ்நாடு அரசு தன்னிறைவுத் திட்டத்தினை அறிவித்து கிராமங்களின் வளர்ச்சிக்கு அடிகோலியது. இத்திட்டத்தின் கீழ் 31 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய இம்மாவட்டத்தில் மூன்று கட்டமாகப் பிரிக்கப்பட்டு முதல் கட்டமாக 5 ஊராட்சி ஒன்றியங்களும், இரண்டாவது கட்டமாக 10 ஊராட்சி ஒன்றியங்களும், 3-வது கட்டமாக 16 ஊராட்சி ஒன்றியங்களும் பணிகள் முடிக்கப்பட்டன.

இக்கட்டங்களில் ஒவ்வொரு கிராமத்திலும். 1) இணைப்புச் சாலைகள், 2) சிறுபாலங்கள், 3) ஆதிதிராவிடர்கள் காலனி மயானப்பாதை, 4) சிறுபாசனக் குளங்கள் மேம்பாடு, 5) ஊரக மருந்தகம், 6) தாய் சேய் நல விடுதி, 7) பள்ளிக் கட்டடங்கள். போன்ற வளர்ச்சிப் பணி வேலைகள் செய்யப்பட்டன.

| வேலை விவரம் | செலவீடு (ரூபாய் லட்சத்தில்) | பணிகள் எண் |
|---|---|---|
| இணைப்புச் சாலைகள் | 593.56 | 3058 |
| சிறுபாலங்கள் | 405.33 | 2738 |
| ஆதிதிராவிடர்கள் காலனி மயானப்பாதை | 12.63 | 360 |
| சிறுபாசனக் குளங்கள் மேம்பாடு | 31.73 | 397 |
| ஊரக மருந்தகம் | 21.44 | 31 |
| தாய்சேய் நல விடுதி | 54.51 | 81 |
| பள்ளிக் கட்டடங்கள் | 254.91 | 413 |

**மா. விசுவநாதன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**



1982-83 ஆம் ஆண்டில் ரூ. 24.92 கோடி அளவிற்கு விற்பனை செய்து, நுகர்வோர் கூட்டுறவு விற்பனையில் இந்தியாவில் மூன்றாவது இடத்தையும், தமிழகத்தில் முதலிடத்தையும் பெற்ற வட ஆர்க்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு, 20-11-84 அன்று வேலூரில் நடைபெற்ற அனைத்திந்தியக் கூட்டுறவு வார நிறைவு விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இ. எஸ். டேனியல் குணாநிதி, இ.ஆ.ப. கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.

## திருநெல்வேலி மாவட்டத்தில்



# தன்னிறைவுத் திட்டப்பணிகள்

சீங்கரன்கோவில் நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. 1981ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி இந்நகரின் மக்கள் தொகை 42,084 ஆகும். இந்நகரின் பரப்பளவு 11ச.கி.மீ.ஆகும். தமிழ்நாடு அரசு 1982-83-ஆம் ஆண்டுத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு 25லட்சம் ரூபாயில் ரூ. 23.35 லட்சம் மான்யமாகவும் ரூ. 1.65 லட்சம் கடனாகவும் வழங்கப்பட்டு தன்னிறைவுத் திட்ட வேலைகள் கீழ்க்கண்டவாறு செய்து முடிக்கப்பட்டன.


**இரா. வீராசாமி,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.


### குடிநீர் வசதி

இந்நகராட்சிப் பகுதியில் கோடை காலத்தில் கோட்டை மலையாற்றிலிருந்து வரும் குடிநீர் அளவு குறைவதால், குடிநீர் விநியோகம் சரியான முறையில் கொடுக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 2,80,000 செலவில், தண்ணீர் தலைமை இடத்தில் 2 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து 10 குதிரை வேகத்தில் மோட்டார் அமைத்துத் தினமும், 16,00,000 லிட்டர் தண்ணீர் இந்நகராட்சிப் பகுதிக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சிப் பகுதிகளில் நான்கு இடங்களில் மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, அதில் 1 குதிரைவேகமுள்ள மோட்டார் அமைக்கப்பட்டு வெளிச் செலவுக்கான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1. அம்பேத்கார் நகர் தெரு, 2. கழுகுமலை ரோடு 3. சங்கர் நகர் 2ம் தெரு 4. மாதா கோவில் தெரு.

### சாலைகள் அமைத்தல்

இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகள் செப்பனிடப்பட்டும், புதுரோடுகள் அமைக்கப்பட்டும் இத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 10 வேலைகள் செய்யப்பட்டன. அமைக்கப்பட்ட தார்தளத்தின் நீளம் 7.6 கி.மீ. இதற்கான செலவுத் தொகை ரூ. 5,43,966 ஆகும்.

### சிறுபாலங்களும், வடிகால்களும் அமைத்தல் :

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மழைநீர் ஓடை மற்றும் தடுப்புச் சுவர் கட்டும் வேலைகள் 12 செய்யப்பட்டன. இதற்கான மொத்தச் செலவுத் தொகை ரூ. 4,71,654 ஆகும்.

### ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும், இடுகாடுகளுக்கும் பாதை அமைத்தல் :

இத்திட்டத்தின் கீழ் பல ஆண்டுக் காலமாகச் செப்பனிடப்படாத கீழ்க்கண்ட வேலைகள் 58,801 ரூபாய் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பட்டாத்தூர் மயானப்பாதை அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானப் பாதை அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

அருந்ததியார் மயானத்தில் எரிப்பு செட், தங்கும் விடுதி அமைத்தல்.

ஆதி திராவிடர் மயானத்தில் எரிப்பு செ.., தங்கும் விடுதி அமைத்தல்.

### பள்ளிக்கூடங்கள் கட்டுதல், தாய் சேய் நல விடுதி:

இத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் புதிதாக 3 பள்ளிக் கட்டடங்கள் ரூ. 2,80,925 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணசாமி நகரில் (கக்கன் நகரில்) இரண்டு பள்ளிகள் கட்டுதல். மேலும் தாய் சேய் நல விடுதிகள் ரூ.1,74,480 செலவில் கக்கன் நகரிலும் மாட்டுத் தொழுவிலும் கட்டப்பட்டுள்ளன.

### பொதுச் சுகாதாரம்

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கழிப்பிட வசதிகள் இல்லாத பகுதிக்குத் தண்ணீர் வசதியுடன் கூடிய 8 அறைகள் கொண்ட நவீனக் கழிப்பிடங்கள் 5 இடங்களில் கட்டப்பட்டுள்ளன. பழைய கழிப்பிடங்கள் நவீன கழிப்பிடமாக 2 இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

சாலை மின் விளக்குகள் அமைத்தலுக்குப் பதிலாக,இதர விளம்பரத்திற்கும் சேர்த்து ரூ. 12,623 செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மாட்டுத் தாவணிப் பகுதியில் சுகாதாரப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு செய்வதன் பொருட்டு 10 பிளாக்குகள் (20 வீடுகள் )ரூ. 45,000 செலவில் கட்டப்பட்டுள்ளன.

குடிநீர் வழங்கல், சாலைகள் அமைத்தல், சிறுபாலங்களும் வடிகால்களும் அமைத்தல், ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடு காடுகளுக்கும் பாதை அமைத்தல், பள்ளிக் கூடங்கள் கட்டுதல், பொதுசுகாதார வசதிகள், தாய்சேய் நல விடுதிகள், சாலை மின் விளக்குகள் அமைத்தலுக்குப் பதிலாக இதர விளம்பர அயிட்டங்களுக்கும் பயன்பட்டது, சுகாதார ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்தல் ஆகிய பணிகளுக்கு ரூ. 25,55,963 செலவு செய்யப்பட்டுள்ளது. இவை பொதுமக்களின் அன்றாடப் பயன்பாட்டில் உள்ளன.





# ஒற்றுமை உணர்த்தும் ஒப்பற்ற விழா


வெ. சுபாஷ் உதவி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை.


**1984**ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ஆம் நாள்.


டெல்லிக்கு அருகிலுள்ள 'மெஹராலி' என்னும் சிற்றூர் விழாக்கோலம் பூண்டிருந்தது. வண்ணப் பூக்களால் ஊரெங்கும் அலங்காரம். எங்கும் பூ மணம். ஊரே ஒளி வெள்ளத்தில் பிரகாசித்தது. அன்றுதான் அங்கு 'பூல் லாலன் கீ காயர்' என்னும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை விளக்கும் விழா நடந்தது.

மாமன்னர் அக்பர் காலத்திலிருந்தே நடைபெற்றுவரும் இந்த அற்புத விழா மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் அனைத்து மாநிலங்களும், பங்கு பெற்றன:

அக்பர் காலத்தில் அழகுமிகு மண்டபமாகத் திகழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த இடம் பூக்களாலும், வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவில் அக்பர் வேடமிட்ட ஒருவர் ராஜ மரியாதைகளுடன் மண்டபத்தில் உள்ள கூட கோபுரம் ஒன்றில் வந்து அமருகிறார்.

மேடையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரும், மத்திய அமைச்சர்களும் வந்து அமருகின்றனர். விழாவைத் தொடங்கி வைத்த மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் நாட்டு மக்களிடையே ஒற்றுமையின் அவசியத்தையும், ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையையும் விளக்குகிறார். பின்பு பல்வேறு மாநிலங்களும், தங்கள் சிறப்புமிகு கலைக் குழுக்களுடன் முன்னே இருவர் பூ வேலைப்பாடுகளுடன் கூடிய இரு பங்காக்களை தாங்கிச் செல்ல, மேடையில் கலைக்குழுக்கள் தங்கள் திறமை அனைத்தையும் காட்டிமுன்னேயுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசப்படுத்துகின்றனர்.

இதோ! தமிழகத்திலிருந்து சென்ற, அண்மையில் மறைந்த புகழ்பெற்ற கிராமியக் கலைக் கலைஞர் திரு ஓம் பெரியசாமியின் கலைக் குழுவினர் எழுப்பிய இசை ஒலி அனைத்து மக்களையும் நிமிர்ந்து உட்காரச் செய்தது



பின்பு அனைத்து மாநில பங்காக்களும், கலைக் குழுக்களும் ஒன்றன்பின் ஒன்றாக அந்த ஊர் வழியாகச் சென்று முதலில் மகுதி ஒன்றிற்குச் சென்று ஒரு பங்காவை வைத்து வணங்கினர். அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காளி கோயில் ஒன்றிற்குச் சென்று மற்றொரு பங்காவை வைத்து வணங்கி ஒருங்கே கலை நிகழ்ச்சி நடத்தினர்.

இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்கும் இந்த விழா, அக்பர் காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது என்று அறிகின்றபோது நமக்கெல்லாம் பெருமிதம் ஏற்படுகின்றதல்லவா?



[1984-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் நாள் ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு, ஆசிரியர்களிடையே நடைபெற்ற கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இது. 6.9.84 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடந்த விழாவில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் பரிசு வழங்கினார்.]

## மாண்புமிகு முதல்வரின் வாழ்க்கைக் கல்வித் திட்டம்

—கா.பெ. சந்திரசேகரன்,

பள்ளியில் பயிலும் போதே
பணிகளின் நுட்பம் சேரும்!
உள்ளமும் உடலும் கல்வி
ஊக்கமும் ஒருங்கியைந்து

தெள்ளிய பயனைக் காட்டும்,
தன்கையே தனக்கும், வாழ
அன்னியே வழங்கும் வன்னல்
ஆக்கிடும் கல்வித் திட்டம்!

எல்லாரும் கல்வி கற்பார்!
எங்கெங்கும் கலைகள் ஓங்கும்
எல்லாரும் பணியில் தேர்வார்!
எப்போதும் வேலை கிட்டும்!

எல்லாரும் எல்லாருக்கும்
எல்லாமும் இயலும் வண்ணம்,
இல்லாரே இல்லை என்னும்
வாழ்க்கைக்காம் கல்வித் திட்டம்!



## வனவளம் காப்போம்!

வனத்தையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது இந்தியாவிற்கு ஏதோ புதிய திட்டம் அல்ல. அசோகர் காலத்துக் கல்வெட்டுகளிலேயே இவற்றின் அவசியம் உணர்த்தப்பட்டு இருக்கிறது. இந்திய இலக்கியங்களிலும் இவை வலியுறுத்தப்பட்டு இருக்கின்றன.

இந்தியாவில் 45 ஆயிரம் வகைத் தாவரங்கள் உள்ளன, இவை பல்வேறு சூழ்நிலைகளில் வளர்கின்றன.

பனி சூழ்ந்த காஷ்மீர் ராஜஸ்தானில் வெப்பக் காடுகள், லடாக்கில் குளிர்ந்த பிரதேசக் காடுகள் உள்ளன. இப்படிப் பல்வேறு வெப்பதட்ப நிலைகளை இந்தியா கொண்டுள்ளது.

தாவரங்கள் விலங்குகள் ஆகியவற்றுக்கு நீண்ட பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு உயிர்க்கோளப் பாதுகாப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. 1973-74ஆம் ஆண்டு யுனெஸ்கோ, இந்தத் திட்டத்தை உருவாக்கியது. வாழும் வளங்கள் எந்த ஒரு இடையூறுமின்றி வளர, சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் மன்னார் வளைகுடா மத்தியப் பிரதேச மாநிலத்தில் கன்கா, அசாமில் மன்னால், கஜிரங்கா உத்தரப் பிரதேசத்தில் உத்தர்கண்ட், நந்தா தேவி, அந்தமானின் வடக்குத் தீவுகள் மேற்கு வங்காளத்தில் சுந்தர்பான், ராஜஸ்தானில் தார்பாலை வனம், குஜராத்தில் ரான்கட்ச், மேகாலயாவில் நோக்ரெஞ்ச் ஆகிய இடங்களில் இந்த திட்டத்தின் கீழ், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீலகிரி நம்தபா, நந்தாதேவி, உத்தர்கண்ட் ஆகியவற்றுக்கான பரிந்துரைகளை நிபுணர்கள் அளித்துள்ளனர். இதில் மத்திய அரசு முக்கிய அங்கம் வகித்துள்ளது. இந்த இடங்களில் சுற்றுப்புறச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்தத் திட்டத்தில் அப்பகுதிகளில் வாழும் மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. அப்பகுதி மக்களின் ஆதரவு இல்லாவிட்டால் இந்தத் திட்டம் நீண்ட காலவெற்றி பெற முடியாது. ஆகவே அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## வெளிநாட்டவரை வியக்கச் செய்த தமிழகக் கணிதமேதை

ரகமி

**(டிசம்பர் 22ந் தேதி "கணித மேதை" ராமாநுஜத்தின் 98-வது பிறந்தநாள் ஆகும். அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.**

நமது தமிழ்நாட்டில் பிறந்து அறிவிற் சிறந்த மேதைகளாக விளங்கியவர்களுள் சிலரை மேநாட்டவர்கள் அவர்களது திறமையைப் பாராட்டி கௌரவித்ததுண்டு. அவர்களுள் 'கணித மேதை' ராமாநுஜன் ஒருவராவார்! 1986 டிசம்பரில் அவருக்கு நூற்றாண்டு தொடங்க இருக்கிறது.

கும்பகோணத்தில் ஒரு ஜவுளிக்கடையில் ஸ்ரீநிவாஸய்யங்கார் சாதாரண குமாஸ்தா; மாதச்சம்பளம் ரூ.20. அவருடைய மனைவி கோமளத்தம்மாள். மிக்க



வறுமையான குடும்பம். சொற்ப வருமானத்தில், மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வந்த இத்தம்பதிகளுக்கு நீண்டகாலமாகக் குழந்தை பிறக்காததினால் குடும்பத்தினர் நாமக்கல்லிலுள்ள நாமகிரித்தாயாரை வேண்டிக் கொண்டதன் பலனாக இவர்களுக்கு ஈரோட்டில் 1887 டிசம்பர் 22ல் (சர்வஜித் ஆண்டு, மார்கழி 9 ஆம் தேதி) ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு வைத்த பெயர் ராமாநுஜன்! ஆனால் தாயார் செல்லமாகக் கூப்பிட்டதோ 'சின்னசாமி' என்ற செல்லப்பெயரில்.

ஐந்து வயதான ராமாநுஜன் கும்பகோணத்திலுள்ள ஒரு திண்ணைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கி, பின்பு காங்கேயன் பிரைமரி பள்ளி படிப்பு முடித்து, தனது 11ஆம் வயதில் குடந்தை டவுன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பள்ளியில் மற்ற எல்லாப் பாடங்களையும் விட கணிதத்தில் மட்டும் தீவிர கவனம் செலுத்தினார். மூன்றாம் பாரம் முடிவதற்குள் "லோனியின் கோண" நூலைமுடித்ததோடு, நான்காவது பாரத்தில் 'திரிகோணமெட்ரி' யில் ஆர்வம் காட்டி கணிதமேதை 'கார்' என்பவரின் "தூய கணித மஞ்சரி" யை வெகு எளிதில் கற்று முடித்தார்.

ராமாநுஜன் தனது 16 ஆம் வயதில் மெட்ரிகுலேஷனில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று, கும்பகோணம் அரசினர் கல்லூரியில் எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்தார். கல்லூரியில் அவரது கணிதத் திறமையைப் பாராட்டி, மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் அவருக்கு "ஜூனியர் சுப்பிரமணியம் உபகாரச் சம்பளம்" கிடைத்தது. இருப்பினும் அவர் சிரமத்துடன்தான் படித்துவந்தார். பள்ளியிலிருந்தே கணக்குப் பாடத்தில் வெகு தீவிரமாக இருந்த ராமாநுஜன், கல்லூரியிலும் கணித பாடத்தில் ஊக்கம் காட்டினாரே தவிர இதர பாடங்களில் கவனக் குறைவாகவே இருந்தார். இதனால் அவர் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. வருத்தத்தோடு சென்னைக்கு வந்த அவர் பச்சையப்பன் கல்லூரியில் மீண்டும் எஃப்.ஏ. வகுப்பிலேயே சேர்ந்தார்.

கல்லூரியில் அவரால் சம்பளம் கட்ட முடியவில்லை. ஆனால் ராமாநுஜத்தின் கணிதத் திறமை கல்லூரி முதல்வரான ஜே.ஏ.ஏட்ஸ் துரையைப் பெரிதும் கவர்ந்தது. மாணவன் ராமாநுஜத்தின் நிலைமையைக் கண்ட ஏட்ஸ் துரை அவருக்கு அரைச் சம்பளம் கட்ட சலுகை காட்டியதோடு அதையும் அவரே மறைமுகமாகவும் கட்டி வந்தாராம்! ராமாநுஜத்தின் கணிதத்திறமையைக் கல்லூரியிலுள்ள இதர பேராசிரியர்கள் பெரிதும் பாராட்டியதோடு, சிற்சில சமயங்களில் கணித வகுப்பையும் ராமாநுஜத்தையே நடத்தும்படி ஊக்கமளித்தனர்.

கல்லூரியில் இறுதித் தேர்வின்போது மீண்டும் அவருக்கு உடல்நலிவு ஏற்பட்ட காரணத்தினால், மறுபடியும் தேர்வில் தேறவில்லை. பின்னர் உடல் நலமானதும் அவர் விடாமுயற்சியுடன் எஃப்ஏ தேர்வை பிரைவேட்டாக எழுதினார். இதில் கணக்குப் பாடத்தில் மட்டும் சதம் வாங்கி, மற்றப் பாடங்களில் 'பாஸ்' மார்க்குகள் வராததனால் மூன்றாம் தடவையும் அவர் தேறவில்லை. மேலும் வருத்தமடைந்து, தனது கல்லூரிப் படிப்பிற்கு முழுக்குப் போட்டார். இருப்பினும் அவர் தனக்குத் தெரிந்த கணக்கு வழிமுறைகளை மட்டும் விவரமாக நோட்டுப் புத்தகங்களில் குறித்துக் கொண்டே வந்தார்.

ராமானுஜத்திற்கு 22 வயதாகிவிடவே பெற்றோர்கள் அவருக்கு ஜானகி என்ற 9 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்வித்தனர். திருமணத்திற்குப் பின் வேலை தேடும் படலம். திருக்கோயிலூரில்'டெப்டி கலெக்டராக' இருந்த ராமசாமி ஐயர் ஒரு கணித மேதை. அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட ராமானுஜன் அவரிடம் தனது கணிதக் குறிப்புகளைக் காட்டித் தனக்கு எங்கேயாவது ஒரு வேலைக்கு சிபாரிசு செய்யும்படி கேட்க, அவரும் ராமானுஜத்தின் திறமையைப் பாராட்டி, சென்னை அகௌண்ட்ஸ் ஜெனரல் அலுவலகத்தில் மாதம் 20 ரூபாய் சம்பளத்திற்குக் குமாஸ்தா வேலைக்கு ஏற்பாடு செய்தார்.


1911ல் ராமானுஜன் வேலையிலிருந்து கொண்டே இந்திய கணித சஞ்சிகையில் ''பெர்நௌலியன் எண்கள்'' என்ற சிறப்புக் கட்டுரையை வெளியிட்டார். இது பல கணித மேதைகளை வியப்பில் ஆழ்த்தியது. அகௌண்ட்ஸ் ஜெனரல் அலுவலகத்தில் சுமார் 40 நாட்கள் வேலை செய்தவர், ''மெட்ராஸ் போர்ட் டிரஸ்டில்'' உத்தியோகத்திற்கு ஆட்களை எடுப்பது தெரிந்து அங்கு மாதம் 30 ரூபாய் சம்பளத்திற்கு மாறிவிட்டார். வேலையிலிருந்துகொண்டே மாலைவேளைகளில் கல்லூரி மாணவர்களுக்குக் கணிதப் பாடம் 'பிரைவேட்' சொல்லிக் கொடுப்பதன் மூலம் மேலும் ரூ.25 கிடைத்தது.

இங்கிலாந்து 'கேம்பிரிட்ஜ் காலேஜ்' கணிதத்துறைப் பேராசிரியர் ஜி.எச். ஹார்டி என்பவர் மேநாட்டுப் பத்திரிகைகளில் சில கடினமான கணக்குப்புதிர்களைப் பிரசுரம் செய்து அவற்றிற்குரிய சரியான விடையையும் கேட்டிருந்தார். இதற்கு உலகிலுள்ள எந்தக் கணித மேதையினாலும் விடை அளிக்க முடியவில்லை. இது விஷயம் ராமானுஜத்திற்குத் தெரியவே, உடனே அவர் அக்கணக்கிற்குச் சரியான விடையை எழுதியதோடு, மேலும் 120 கணித சூட்சமங்களையும் குறிப்பிட்டு, பேராசிரியர் ஹார்டி பெயருக்கே அனுப்பி தமது கடிதத்தில் தமது வறுமை நிலையையும் குறிப்பிட்டுள்ளார்.



ராமானுஜத்தின் கணிதப் புலமையைக் கண்டு வியப்படைந்த ஹார்டி அவரை உடனே இங்கிலாந்து நாட்டிற்கு வரும்படி சிறப்பு அழைப்பு அனுப்பினார். மெட்ராஸ் போர்ட் டிரஸ்ட் அதிபரான பிரான்ஸிஸ் ஸ்பிரிங்க், தங்களது அலுவலகத்தில் உலகம் வியக்கும் நபர் ஒரு சாதாரண குமாஸ்தாவாகப் பணியாற்றுவதைக் கண்டு தீவிரமாக யோசித்து ராமானுஜத்தை உலகக் கணித மேதை அரங்கில் பிரபலமடையச் செய்யப் பெரிதும் அக்கறை எடுத்துக்கொண்டார்.

இச்சமயம் சிம்லாவிலிருந்து சென்னைக்கு வந்த இந்திய வானிலை ஆராய்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் ஜில்பாட் வாக்கரிடம் பிரான்சிஸ் ஸ்பிரிங்க், ராமானுஜத்தின் கணிதமேதையை எடுத்துக் கூறியதோடு, அவருடைய கணிதக் குறிப்புகளையும் காட்டினார். வியப்படைந்த வாக்கர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் பிரான்சிஸ் டூயூஸ்பரிக்கு ராமானுஜத்திற்கு பல்கலைக்கழகத்தின் மூலம் உதவிகளைச் செய்ததோடு, அவரைக் கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக் கொள்ளுமாறு கடிதமும் எழுதினார்.




திருமதி ஜானகி ராமானுஜன்

உடனே பல்கலைக் கழக சிண்டிகேட் அதனை ஏற்றுக் கொண்டு ராமானுஜத்திற்கு மாதம் ரூ.75 உதவித்தொகை அளித்து, 1913 ல் பல்கலைக்கழக கணித ஆராய்ச்சி மாணவராக அவரைச் சேர்த்துக் கொண்டது. அதனால் அவர் மெட்ராஸ் போர்ட் டிரஸ்ட் குமாஸ்தா வேலையிலிருந்து விலகினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஈ.எச்.நெவில், 1914 ஐனவரியில் சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவு நிகழ்த்தப் புறப்பட்டவரிடம் ஹார்டி, சென்னையில் ராமானுஜத்தைச் சந்தித்து அவரை எப்படியாவது இங்கிலாந்துக்கு அழைத்து வரும்படி சொல்லியிருந்தார்.

சென்னைக்கு வந்த நெமில் ராமானுஜத்தைச் சந்தித்து அவருடைய கணிதக் குறிப்புகளைப் பார்வையிட்டார். வியப்புற்று ராமானுஜத்தை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று கணித ஆராய்ச்சி நடத்தினால் கணித உலகமே பயனடையும் என முடிவு செய்து ராமானுஜத்தையும் நேரடியாகவே அழைத்தார். ஆனால், ராமானுஜம், வைதீகத்தினால் கடல் கடந்து செல்லக்கூடாதென்ற எண்ணத்தினாலும், தனது பெற்றோர்கள் சம்மதிக்கமாட்டார்கள் என்பதினாலும் முதலில் லண்டனுக்குச் செல்ல மறுத்துவிட்டார். இருப்பினும் நெவில் ராமானுஜத்தினிடமுள்ள கணித மேதைத் தன்மையை அவரிடமே எடுத்துக் கூறி லண்டனுக்குச் செல்லும் தைரியத்தையும் ஊட்டினார். பெற்றோர்களிடம் கலந்தாலோசித்துக் கூறுவதாக வாக்களித்தார் ராமானுஜன்.

இதற்கிடையில் இங்கிலாந்திலிருந்து 1914ல் பிரான்சிஸ் ஸ்பிரிங், சென்னை கவர்னராக இருந்த லார்ட் பெட்லண்டு பிரபுவுக்கு சிறப்புக் கடிதம் எழுதி, ராமானுஜத்தை இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்புவதற்கு ஆகும் செலவை சென்னை அரசாங்கமும், பலகலைக்கழகமும் சேர்ந்து உதவினால், கேம்பிரிட்ஜில் ராமானுஜன் தங்கிக் கணித ஆராய்ச்சி நடத்த மிக்க உதவியாக இருக்குமென்று குறிப்பிட்டார். கவர்னர் லார்ட் பெட்லண்டும், தன்னாலியன்ற உதவிகளைச் செய்ய உறுதியளித்தார். சென்னைப் பல்கலைக் கழகமும் அதனை ஏற்றுக் கொண்டது. தம் மகன் வெளிநாடு செல்ல மறுத்த ராமானுஜத்தின் பெற்றோர்கள், கடைசியாக, பயணத்திற்கு அனுமதித்தனர்.



1914 மார்ச் 17 ல் ராமானுஜன் சென்னையிலிருந்து கிளம்பி யு.எஸ்.எஸ். நேவேசா கப்பல் மூலம் இங்கிலாந்திற்குப் பயணமானார். பல ஆங்கிலேயர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தோடு வந்து ராமானுஜத்தை வழியனுப்பி வைத்தனர். சுமார் 27 நாட்கள் கப்பலிலேயே பயணம் செய்த ராமானுஜன் ஏப்ரல் 14ல் லண்டன் மாநகர் போய்ச் சேர்ந்தார். அங்கு அவரைப் பல கணித மேதைகளுடன் கேம்ப்ரிட்ஜ் கல்லூரி சார்பில் பேரர்சிரியர் நெவில் முன்னின்று வரவேற்றனர். பின்னர் டிரினிட்டி கல்லூரியில் ராமானுஜன் சேர்ந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.900 உபகாரச் சம்பளம் பெற்றார். பேராசிரியர்கள் ஹார்டியும் லிட்டில்வுட்டும் மிக்க மகிழ்ச்சியோடு ராமானுஜத்திற்கு பிரிட்டிஷ் கணித நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தனர். அதிலும் அவர் தமது திறமையை வெளிப்படுத்தினார்

ராமானுஜத்தின் பெருமையைக்கண்ட ஹார்டி இதர மொழிகளிலும் அவர் புகழடைய வேண்டும் என எண்ணி அவருக்கு பிரெஞ்சு, லத்தீன், ஜெர்மன் மொழிகளையும் கற்றுக் கொடுத்தார். இதனால் எல்லா நாடுகளிலும் ராமானுஜத்தின் கணிதமேதை பிரதிபலித்தது. மேநாட்டில் கணிதத் துறையில் எவருமே கண்டறியாத பல கணித நுணுக்கங்களை ராமானுஜத்தின் ஆராய்ச்சி மூலம் கண்ட இங்கிலாந்து, ஐரோப்பா ஆகிய நாட்டு கணிதமேதைகளும், பத்திரிகைகளும் ''ஓர் அற்புத இந்தியக்கணித மாமேதை'' எனப் பாராட்டினர்.

இங்கிலாந்தில் ராமானுஜன் சொந்தமாக தானே சமைத்து வந்தார். பிரதி மாதம் இந்தியாவிலிருந்து தனக்காகத் தயாரித்துக் கப்பல் மூலம் டின்களில் அடைக்கப்பட்ட அரிசி சத்துமாவையே சாப்பிட்டுக் காலம் கழித்து வந்தார். 1916-ல் கேம்பிரிட்ஜ் கல்லூரி, கணித ஆராய்ச்சிக்காக அவருக்கு பி.ஏ. பட்டத்தை அளித்தது. மிக்க பெருமையுடனிருந்த ராமானுஜத்தின் உடல்நிலை திடீரென்று காசநோயினால் பாதிக்கப்பட்டு அங்குள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தீவிர சிகிச்சைகள் செய்தும் வியாதி குணம் அடையாமல், ராமானுஜத்

தின் உருவத்தையே துரும்பாக மாற்றி விட்டது.

அந்நாளில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தி லுள்ள உலக விஞ்ஞானிகளை கௌர விக்க வேண்டிய பொறுப்பிலிருந்த ராயல் சொசைடியினர் 1918-ல் ராமானுஜத்தைத் தங்களது மன்றத்தில் 'பெரும் புலவராக' தேர்ந்தெடுத்தனர். அடுத்து கேம்ப்ரிட்ஜின் டிரினிட்டி கல்லூரியில் ஆண்டொன்றுக்கு ரூ. 3,750 சம்பளத்தில் புலவராக நிய மிக்கப்பட்டார். மேநாட்டில் ராமானுஜத் தின் திறமையைப் பாராட்டியதால் மிக்க பெருமை கொண்ட சென்னைப் பல் கலைக் கழகமும் அவருக்கு ரூ. 3,750 கௌரவ சன்மானம் அளித்து கௌரவிக் கும் என்ற விஷயத்தையும் அவருக்குத் தெரிவித்தது. நன்றி தெரிவித்துப் பதில் எழுதிய அவர் தனக்களிக்கப்படும் தொகை யில் ரூ. 60 தனது தாயாருக்கும், மிகுதியை ஏழை மாணவர்களுக்கு உதவும்படியும் தெரி வித்திருந்தார். உடல்நிலையின் காரண மாக ராமானுஜன் தாயகம் திரும்ப விரும்பி 1919 பிப்ரவரி 27ல் லண்டனைவிட்டுப் புறப்பட்டார். துறைமுகத்தில் கேம்ப் பிரிட்ஜ் அதிகாரிகள், பேராசிரியர்களான ஹார்டி, நெமில் ஆகியோர் மாலை சூட்டி வாழ்த்தி ''மீண்டும் லண்டனுக்கே வந்து விடுங்கள்!'' எனக் கூறி அனுப்பினார்கள். மேநாட்டில் பல பட்டங்களும், சன்மானங் களும் பெற்று ஒரு மாதம் கப்பலில் பயணம் செய்துவந்த கணிதமாமேதை ராமானுஜன் மார்ச் 27ல் பம்பாய் வந்து சேர்ந்தார். அவரை அவருடைய தாயாரும், தம்பியும் நேரில் சென்று வரவேற்றனர். சென்னையிலும் அவருக்கு மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

மருத்துவ சிகிச்சைக்காகச் சில நாட்கள் தனது சொந்த ஊரான கும்ப கோணத்தில் தங்கியிருந்து, பின்னர் சென்னையில் சேத்துப்பட்டில் தங்கி இருந் தார். 1920 ஏப்ரல் 26ஆம் தேதி காலை 10.30 மணிக்கு ஹாரிங்டன் சாலையிலுள்ள 'குடியா' மாளிகையில் உலக கணித மாமேதை ஸ்ரீநிவாசராமானுஜன் கால மானார். அப்போது அவருக்கு வயது 32. மனைவி ஜானகி அம்மாளுக்கு வயது 20. இத்தம்பதிகளுக்குச் சந்ததி ஏற்பட வில்லை. தற்போது சுமார் 85 வயதான ஸ்ரீமதி ஜானகிராமானுஜன் மிக்க எளிமை யோடு சென்னையில் வாழ்ந்து வருகிறார். கணித மாமேதை ராமானுஜத்தின் பூத உடல் மறைந்தாலும், அவரது கணிதப் புகழ் என்றும் ஒளி வீசிக் கொண்டே இருக் கிறது.

ஆதாரங்கள் : ஸ்ரீமதி ஜானகி ராமானுஜன் மற்றும்
Professor
**SRINIVASA RAMANUJAN**
Commemoration Volume.

## முதல் - கடைசி அட்டைப்படச் செய்திகள்

மாண்புமிகு முதலவர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பூரண குணம் பெற வேண்டி சென்னையிலுள்ள நேரு விளையாட் டரங்கில செவ்வுடை தரித்த பெண்கள யாகம் நடத்தினார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி கோமதி சீனிவாசன், மாண்புமிகு நிதியமைச்சரின் துணைவியார் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் மற்றும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்ற இந்த யாகத்தை அருள்மிகு பங்காரு அடிகள் நடத்தி வைத்தார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த யாகத்தில்— அருள்மிகு ஆதி பராசக்தி படத்தின் எதிரே மேடையில் ஒரு தாய்க் கலசமும், 6 பெரிய கலசங்களும், 108 சிறு கலசங்களும், 108 விளக்குகளும், 308 சங்குகளும் வைக்கப்பட் டிருந்தன. அக் கலசங்களில் புனிதநீர் வைக்கப் பட்டிருந்தது.

அம் மேடைக்குக் கீழே 'வேள்விக் குண்டம்' அமைக்கப்பட்டிருந்தது.

மாண்புமிகு முதல்வர் நலம்பெற வேண்டி, யாகம் செய்து முடித்த பின் அந்தக் கலசங்களும் அன்னதானமும் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டன.

மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதி பராசக்தி திருக்கோயிலில் 19-1-1984 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழைகளுக்கு உணவளித்ததை இந்த இதழ் முதல் அட்டை யும், 1-7-1982 அன்று திருச்சி மாவட்டம் பாப்பாகுறிச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவசச் சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்ததைக் கடைசி அட்டையும் சித்திரிக்கின்றன.

85351
ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



